உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

தெல்லிப்பழை

வித்துவான் சிவானந்தையரவர்கள்

இயற்றிய

புலியூர்ப்புராணம்.

இஃது

தெல்லிப்பழை

க. த. பவளநாயகி அம்மையார்

விரும்பியவாறு

ஏழாலை.

ஐ. பொன்னையபிள்ளையால்

தமது
மல்லாகம்
திருஞானசம்பந்தர் அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

தாது—சித்திரை.
1936

உரிமை பதிவுசெய்யப்பெற்றது.

MADRAS-1

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

தெல்லிப்பழை

வித்துவான் சிவானந்தையரவர்கள்

இயற்றிய

புலியூர்ப்புராணம்.

இஃது

தெல்லிப்பழை

க. த. பவளநாயகி அம்மையார்

விரும்பியவாறு

ஏழாலை.

ஐ. பொன்னையபிள்ளையால்

தமது

சுன்னாகம்

திருஞானசம்பந்தர் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

தாது—சித்திரை.

1936

உரிமை பதிவுசெய்யப்பெற்றது.

மறைமலையடிகள் நூல் நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1

உ

சிவமயம்

முகவுரை

புலியூர் என்பது சிதம்பரத்துக்குரிய வேறொரு பெயர். சிதம்பரம் விராட் (உலக) புருடனுக்கு இருதயத்தானம் எனப்படும். பிண்டமாகிய சரீரத்தில் இடப்பக்க நாடியாகிய இடைக்கும் வலப்பக்க நாடியாகிய பிங்கலைக்கும் நடுவிலுள்ள சுழுமுனை நாடியும், பிரமாண்டத்திலுள்ள இப்பரதகண்டத்தில் இலங்கைக்கும் இமயமலைக்கும் நடுவிலுள்ள தில்லையும் (சிதம்பரமும்) சிவபெருமான் ஆனந்தநிருத்தம் செய்யும் தானங்களாம்.

சரீரம் பிரமபுரம். சரீரத்தினுள்ளேயிருக்கும் இருதயஸ்தானம் தகரமாகிய புண்டரீகவீடு. இருதயஸ்தானத்துள்ளே இருக்கும் பிரமமாகிய சிவம் ஆகாசம். புறத்தும் இப்படியே பிரமாண்டம் பிரமபுரம். பிரமாண்டத்தினுள்ளே இருக்கும் தில்லைவனம் புண்டரீகவீடு. தில்லைவனத்தில் நிருத்தஞ்செய்யும் சிவம் ஆகாசம். இவ் ஆகாசம் பூதாகாசம்போற் சடமாகாது சித்தேயாம். ஆதலால் சிதம்பரம் எனப்படும். இச்சிதம்பரம் எக்காலத்தும் நீக்கமின்றி விளங்கும் தானமாதலால் இத்தில்லையும் சிதம்பரம் எனப் பெயர்பெறும். அதுபற்றியே சிதம்பரம் மற்றெத்தலத்திலும் சிறந்ததென்று வேதம் முதலிய நூல்கள் எடுத்துக் கூறுநிற்கும்.

இத்தகைய சிதம்பரத்திலே இந்நூலாசிரியர் பச்சையப்பன் கலாசாலை எனப்படும் ஆங்கில வித்தியாசாலையில் தமிழ்ப்பண்டிதராகச் சிலகாலம் இருந்து கற்பித்துவந்தனர். அப்பொழுது நடராசப்பெருமானையும் சாயங்காலங்களிற் சென்று தரிசித்துவரும் வழக்கம் உடையரா யிருந்தனர். அக்காலத்திலே நடராசப்பெருமான்மீது கொண்ட ஆர்வத்தினால் புலியூர் யமக அந்தாதியென ஓர் அந்தாதி பாடினர். அதனை சிதம்பரத்தைவிட்டு யாழ்ப்பாணத்திலே தமதூரில் வந்திருந்தபோது தமிழறிஞரும்சைவசித்தாந்தப் பிரசாரகரும் சட்டநூலறிஞருமாய் விளங்கிய தமது அரியநண்பர் ஸ்ரீமான்- க. தம்பையபிள்ளை யவர்களுக்குக் காண்பித்தனர். அதனை நோக்கிய பிள்ளையவர்கள் இவருடைய பாடற்றிறமையைவியந்து இத்தலத்தின்மேல் ஓர்புராணம் பாடின் அது தாங்கள் பிறந்ததிசைக்குப் பெரும் புகழாகுமென்று வேண்

டிக்கொண்டமையால் அதற்கு உடன்பட்டு இந்நூலாசிரியர் இதனைப் பாடினர். அதனை அவையடக்கத்துள்

"நலமுறு பன்னூ லாய்ந்து நயந்திடு முணர்வி னோடு
மலைவறு சைவ நூலின் வாய்மைநன் குணர்ந்த சீரான்
குலமுறு குடிக ளோங்கிக் குலவிய வீணா கானத்
தலமுறு செல்வி யாளுந் தம்பைய மகிபன் கேட்ப"

பாடினேன் என்று கூறியிருத்தலால் அறிந்துகொள்க.

புராணத்தை இவர் பாடும்பொழுது இதற்கு முதனூலாகக் கொள்ளப்பட்டவைகள் சூதசங்கிதையும் வாசிட்டலிங்கமும் பவிடியோத்தர புராணமும் காந்தமும் என்பனவாம். அதனைப் பாயிரம்நோக்கி உணர்ந்துகொள்க. இப்புராணத்துள் நாட்டுப்படலம் முதலியன ஒழியப் பத்தொன்பது படலங்களாக வகுத்துப் பாடியதாக இந்நூலாசிரியர் பாயிரத்துட் கூறியுள்ளார். ஆயினும் அவற்றுள் இருபடலங்கள் பிழையற எழுதப்படாமையினாலே பதிக்காமல் விடப்பட்டன. அதற்குக்காரணம் பூரணமாக இந்நூலை எழுதிமுடிக்குமுன் அவர் தேகவியோகமாயினமையே போலும்.

இந்நூலாசிரியரின் கல்விப்பெருமையும் மதிநுட்பமும் இயல்பாயமைந்த கவித்திறமையும் இந்நூலின்கணுள்ள செய்யுட்களை உற்று நோக்குவார்க்கு நன்கு புலப்படுமாதலின், யாம் அவற்றை எடுத்துக்காட்டுதல் மிகையாகும். ஆயினும் செய்யுட்களை நயம்படப் புனைந்துபாடும் ஆசிரியரின் மதிநுட்பத்தைப் புலப்படுத்துமாறு ஒரு செய்யுளை ஈண்டு எடுத்துக் காட்டுதும்.

"ஆம்பல் பற்பல வொருகையிற் பற்றின ரழிப்பார்
தேம்பப் புண்டரீ கம்பல வொருகையிற் சிதைப்பார்
சாம்பு மெல்லியர் மகளிரென் றுரைப்பது சழக்கோ
நாம்பு கன்றது பொய்யுரை படுங்கொலோ நவிற்றீர்"

இச்செய்யுளில் உழத்தியர்கள் பற்பல ஆம்பல்களை ஒருகையாற்பற்றி அழிப்பார்கள். அதுமாத்திரமோ புண்டரீகங்கள் பற்பலவற்றையும் ஒருகையாற் பற்றி அழித்துவிடுவார்கள். இங்ஙனம் ஆம்பல்களையும் புண்டரீகங்களையும் அழிக்கும் வலியோர்களாகிய உழத்தியர்களை மெல்லியர்கள் என்று கூறுவது பொய்யோ, அல்லது நாம் புகன்றது பொய்யுரையாமோ சொல்வீர். என்னும் பொருளில் ஆம்பல் புண்டரீகம் என்பனவற்

றை முறையே தொனியானே யானைகள் எனவும் புலிகள் கான வும் பொருள்பட வைத்து அதனுனே பெண்களுக்கு வலிமை யைக் கற்பித்து அதனுனே பெண்களை மெல்லியர் என்றுகூ றும் வழக்கைப் பொய்யெனக் கற்பித்துக் கூறியது மிக இன்பம் பயத்தல் காண்க.

இந்நூலைப் பூரணமாகப் பாடிமுடித்தும் அச்சிட்டு வெளிப் படுத்துதற்கு முன்னமே இந்நூலாசிரியர் தேகவியோகமாகி விட்டனர். இந்நூற்பிரதியை அவர் அக்காலத்தே தம்பைய பிள்ளையவர்களிடம் கொடுத்திருந்தார். பிள்ளையவர்களும் காத் திராப்பிரகாரம் தேகவியோகமடைந்து விட்டமையினுலே இது காறும் இது வெளிவாராதே போயிற்று. இப்பொழுது பிள்ளையவர்களுடைய மனைவியாராகிய பவளநாயகியம்மையார் தமது நாயகராகிய பிள்ளையவர்களின் ஞாபகார்த்தமாக இந்நூலை அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்தி யுள்ளார்கள். இதனுல் அம்மையாருடைய நாயகபக்தியும் தமிழபிமானமும் எத்துணை என்பது தெரியக்கிடத்தலின் அதனை யாம் எடுத்து இன்னு மொருகாற் கூறல் மிகையாகுமெனே விடுக்கின்றும். ஆயினும் அவர்கள் இதனைப் பதிப்பித்து வெளிப்படுத்தி, தமிழுலகிற்குப் பெரும்பயன் அளித்ததற்காக அவரும் அவர் குடும்பத்தாரும் பல்லாண்டு வாழுமாறு கடவுளைப் பிரார்த்திக்கின்றேம்.

இந்நூலாசிரியர் இயற்றிய வேறு நூல்கள், தருக்கசங்கிரக உரைகள் முதலியன:

இந்நூலை அச்சிடும்போது இன்றியமையாத திருத்தங் களை வேண்டுங்காலங்களிற் செய்துதவிய சுன்னுகம் காவிய பாடசாலைத் தமிழ்த்தலைமையாசிரியரும் வித்துவானுமாகிய பிரஹ்மஸ்ரீ சி. கணேசையர் அவர்களுக்கு நாம் என்றும் நன் றிபாராட்டும் கடப்பாடுடையேம்.

ஏழாலை | ஐ. பொன்னையா
தாது ௵ சித்திரை ௴

செப்புசிவா னந்தத் திகழ்பெய ரோனே
அனையோன் செய்த வப்புரா ணத்தை
அனையதம் மைய வண்ணா றனக்கொரு
ஞாபக மாக நிலவ வவன்மனை
யருந்ததி யென்று பெருந்துதி செய்யுந்
தவள வாணகைப் பவளநா யகியெனு
மம்மையா ருதவிய பொருள்கொண் டச்சிற்
பதித்தே யுதவினன் படியோர் புகழ்தர
ஏழாலை யூர்வா ழிருந்தவத் தோன்றல்
சைவசி காமணி தமிழ்நா லறிஞன்
சிவனடிக் கன்பு செய்திடும் பெரியோன்
பொன்னைய பிள்ளைப் புலவன் றானே.

☞ இதனைப்பதிப்பித்தோர் நூல் விரைவில் வெளிவரவேண்டுமென்று விரும்பியமையினால், இந்நூலிலுள்ள அச்சுப்பிழைகளைக் காட்டிப் பிழைதிருத்தம் போட்டுக்கொள்ள முடியவில்லை. அன்பர்கள் அவற்றைத் திருத்திப்படிக்குமாறு வேண்டப்படுகின்றனர். இதிற் சேர்ப்பதற்காக எழுதப்படும் அரும்பத உரை இரண்டாம்பதிப்பிற் சேர்க்கப்படும்.

உ

சிவமயம்

நூலாசிரியர் வரலாறு.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் சுந்தரமூர்த்திசுவாமிகள் என்னும் இருஆசாரிய மூர்த்திகளது திருப்பதிகங்களில் இடம்பெற்ற பெருமையினையுடைய இலங்கையின் வடபாகமாயுள்ள யாழ்ப்பாணத்திலே, நற்குலக்குடிமக்கள் மிகுந்துவாழும் தெல்லிப்பழையில், விழுமிய அந்தணர்குலத்தில் விளங்கிய சபாபதிஐயரவர்களது அருந்தவப் புதல்வராயுள்ளார் இந்நூலாசிரியர். இவரது இயற்பெயர் சிவானந்தையர் என்பது.

இவர் உரியபருவத்திலே வித்தியாரம்பம் செய்யப்பெற்று, தம் நாட்டுக்கவிஞர் ஒருவரிடம் ஆரம்பக்கல்வி கற்றுவந்தனர். பின்பு, ஏழாலைச் சைவவித்தியாசாலையிற் சேர்ந்து, அவ்வித்தியாசாலைத் தலைமையாசிரியராயும், வடமொழி தென்மொழிகளிற் பெரும் பாண்டித்தியம் பெற்றவராயும் விளங்கிய சுன்னைக் குமாரசுவாமிப்புலவர் அவர்களிடம் இருமொழிகளையும் முறையாகக் கற்றுவந்தனர். இவரது *நுண்மதித்திறனைக்கண்ட புலவரவர்கள்; தம்மாணாக்கர் பல்லோருள்ளும் இவர் பிற்காலத்தில் பெருந்திறமைபெற்ற புலவராய் விளங்குவார் எனமதித்து, தாம் அவ்வித்தியாசாலையை விட்டு நீங்கியபின்னரும், தம் வீட்டிற்கு இவரை வரவழைத்து, தருக்கம் வியாகரணம் சப்தம் முதலியவற்றையும் சைவசித்தாந்த சாஸ்திரங்களையும் நயம்படக் கற்பித்துவந்தனர். இவரும் தம்ஆசிரியர் மனங்கோணாது சகலதுறைகளிலும் ஊக்கத்தோடுகற்று மிகவல்லவராய் விளங்கினர்.

பிறகு, இந்தியாவிற்குப்போய், அங்குள்ள வியாகரண பண்டிதர்களிடம் கலந்து, தாம்கற்ற வடமொழிநூல்களில் தமக்குத்தோன்றும் ஐயப்பாடுகளைப் போக்கிக்கொண்டனர். திருவாவடுதுறையாதீனத்துக்குப் போய், அங்குள்ள புலவர் பெருமக்களால் உபசரிக்கப்பட்டனரென்றும், இவரது வாக்குவல்லபத்

தையும் கவிச்சாதுரியத்தையும், வடமொழி நூலில் இவருக்குண்டான திறமையுங்கண்ட ஆதீனத்தார், இவருக்கு வித்துவான் பட்டங் கொடுக்கப் பெற்றுக்கொண்டனரென்றுங் கூறுப. இராமநாதபுரம் சென்று அச்சமஸ்தானாதிபதியிடம் சன்மானமும் பெற்றனர்.

அப்பால், சிதம்பரத்தையடைந்து அங்குள்ள பச்சையப்பன் கலாசாலையில் ஆசிரியராயமர்ந்து நெடுங்காலங் கல்விகற்பித்துவந்தார். அப்போது இவரது தந்தையார் இவரை இல்வாழ்க்கையிற் புகுத்தக்கருதி அனுப்பிய திருமுகத்தின்படி தம் சுயநாடாகிய யாழ்ப்பாணத்தையடைந்து, தந்தையாரது அனுமதிப்படி இல்வாழ்க்கையை மேற்கொண்டனர். அக்காலத்தில் தருக்கசங்கிரகத்தின் உரைகளாகிய நியாயபோதினி பதகிருத்தியம் என்பனவும், அன்னம் பட்டீயம் என்னும் உரைக்குரையாகிய நீலகண்டீயமும், இவரால் புதிதாக மொழிபெயர்க்கப்பெற்றன. சனிதுதி, நவக்கிரககவசம் என்பனவும் இவரால் இயற்றப்பெற்ற நூல்களாம்.

சட்டநூலறிஞர் க. தம்பையபிள்ளையவர்கள் ஒருவரையே இவர் தம் ஆருயிர்நண்பராகக் கொண்டிருந்தார். அதனை, அவையடக்கத்துள்வரும் "தோட்டுணையென என்னோடுதொட்டு நண்புடைய தோழன்" என்னும் அடியினால் விளக்கியுள்ளார். இருவருக்குமிடையிலுண்டாய நட்பின் தன்மை, "நவிற்றொறு நூனயம்போலும் பயிற்றொறும், பண்புடையாளர் தொடர்பு" என்னும் திருக்குறளுக்கு ஓரிலக்கியமா யமைந்துள்ளது. இருவரிடத்துமுள்ள அறிவின் ஒற்றுமையே அத்துணை ஆழ்ந்த நட்புக்குக் காரணமாயது.

வித்துவானவர்கள் சிதம்பரத்திலிருந்து மீண்டு வந்தபின் தாம் நடராச தரிசனஞ்செய்யுங்காலங்களில் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களும், சிதம்பரத்தின் சிறப்பும் போல்வனவற்றைப் பிள்ளையவர்கட்குஅடிக்கடி எடுத்துக்கூறி அளவளாவுவதுண்டு. சிதம்பரத்தில் இருந்தகாலத்தில் தாம் பாடிய புலியூர்யமக அந்

சாதி என்னும் நூலையும் படித்துக்காட்டுவர். இயல்பாகவே கடவுள்பத்தியில் திளைத்திருந்த பிள்ளையவர்களது உள்ளம் இவரது இக்கூட்டுறவினால் நடராசமூர்த்தியில் தீவிரமாக அழுந்திய அத்தன்மை கண்டன்றோ "நாட்டுநீங் கனகமன்று ளுடைக நயந்தார்க் கன்பன்" என்று அங்ஙனம் அவரது மனநிலையினைச் சுட்டிக்கூறினார். பின்னர், பிள்ளையவர்களது விருப்பத்திற்கிணங்கி "புலியூர்ப்புராணம்" என்னும் இச்சிறந்த நூலையும், திருக்குறள் முதற் பத்ததிகாரங்களுக்குப் புத்துரை ஒன்றையும் இயற்றினார். தசகாரியம் எனப்பெயரிய நூலொன்றும் இவரால் பரிசோதித்து வெளியிடப்பட்டது.

இவர் நாளொன்றுக்கு நூறு கவிக்குமேற் பாடுவதில் திறமைவாய்ந்தவரென இவரிடம்கற்ற மாணாக்கர்கள் கூறுகின்றனர். இவரது செய்யுட்கள் ஒழுகிய ஓசையும் விழுமிய பொருளுமுடையவாய்க் கேட்போர்க்கு இன்பம் பயப்பனவாகும். இன்னும் இவருக்கிருந்த ஞாபகசத்தி எவரிடமும் காண்டலரிது. தேவாரம்முதலிய திருமுறைகளில் அழுத்தமான பற்றுடையவர். அவற்றுள்ளும் ஒன்பதாந் திருமுறையாகிய திருவிசைப்பாப் பதிகங்களில் இவருக்கிருந்த ஆராமையோ பெரிது. பஞ்சாட்சரசெபம் இவரது நாவைவிட்டு ஒருபோதும் நீங்காது.

இவர்தமது நாற்பத்துமூன்றாம் வயதில் சென்ற நளவருடம் மார்கழி மாதம் மூன்றாந் திகதி இவ்வுலகவாழ்வையொருவிச் சிவபதமடைந்தனர்.

தெல்லிப்பழை
தாது ௵ சித்திரை.

வித்துவானவர்களின் மருகன்
பண்டிதர் ப. இரத்தினசாமிஐயர்.

உ

சிவமயம்

தெல்லிப்பழை சட்டநூலறிஞர்

திரு. க. தம்பையபிள்ளையவர்களின்

ஜீவியசரித்திரம்.

புலியூர்ப்புராணமென்னும் இந்நூலை இயற்றுவித்த தம்பையபிள்ளையவர்கள் யாழ்ப்பாணத்துத் தெல்லியம்பதியைச் சார்ந்த மாவிட்டபுரத்தில், "வீங்குபுகழ்க் காராளர் குலமலைமேற் சுடர்விரித்து" விளக்குமெய்திய பழங்குடியில், அன்பும் அறனும் பெருக்கி அதிகாரமுந் தலைமையுமுடையராய்ப் புகழ்படவாழ்ந்த தம்பவுடையாரின் மகன் கனகசபைப்பிள்ளையின் ஏகபுத்திரனாக, யுவ ஆண்டு ஆவணித் திங்கள் பிறந்துள்ளார். சிறுபராயத்திற் தந்தையார் இறந்துவிடவே, இவரது அன்னையார் தமது தனிப்புதல்வன்மேற் பெரிதுஞ் சிரத்தையுடையராய் நன்னெறியில் வளர்த்துவந்தார். குமாரக்கடவுள்மீது அளவற்ற பற்றுடையாராகிய இவரது தாயார் தாம் தேவாலயத்திற்குச் செல்லும்போதெல்லாம் இவரையும் கூட்டிச்சென்று ஆலயவழிபாட்டிற் பழக்கிவந்தார்.

அவர்க்கு தக்கபராயத்திற் தமது வீட்டிற்கு அணித்தாகவிருந்த சைவவித்தியாசாலையில் வித்தியாரம்பஞ்செய்வித்து, தெல்லிப்பழை ஆங்கிலபாடசாலையிலும, சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கலாசாலையிலும், முறையேகல்விபயிற்றுவித்தனர். இளமையில் அவர் கல்வியில் அதிக ஊக்கங்கொண்டிலர். எனினும் நூற்பொருளை நேரே கிரகிக்கும் நுண்ணறிவு இவரிடத்துத்தானே யமைந்துகிடந்தமையின் கல்வியிலும் பின்னடைந்திலர். கல்லூரிகளில் இவர்கற்கும் நாட்களிற் கணிதப்பயிறசியில் மிகவும் வல்லுநராய் விளங்கினரென்பர். நூற்பொருளைக் கற்றுணர்வதிலும் தர்க்கித்துத் தெளிவதிலேயே இவரதுமனம் இயல்பாகச்செல்லும். இதுவே இவர்பிற்காலத்துத் தர்க்கத்திற் திறமையுடை

யாராய், நியாயவாதத்தில் முதன்மைபெற்று விளங்கியதற்குக் காரணமாம். தம்மோடு தோழமைபூண்ட சிறுவர்களுடன் வாதிப்பதையும் இவர் ஓர்விளையாட்டாகவே கொள்வர். கற்குஞ் சிரமமின்றி விஷயங்களைத் தர்க்கித்தறிவதில் விருப்பமிருந்த இவருக்கு, எவற்றையுந் தம்மோடெதிர்த்து வாதாடுவதில் வன்மையுடையராய இந்நூலாசிரியரவர்களை ஏற்ற நண்பராய் அமைந்தனர். ஐயரவர்களிடத்து அமைந்திருந்த மதிநுட்பமும் ஆராய்ச்சி வன்மையும் இவரைக் கவரவே, அவரோடு விளையாடுவதிலும் வாதிப்பதிலுமே இவர் தமது நேரத்தைப் பெரும்பாலும் போக்குவர். ஐயரவர்கள் கூட்டுறவினாலேயே தனது மகனின் கல்வி தடைப்படுகின்றதெனக் கருதிய இவரது அன்னையார் ஐயரவர்களிற் தீராப் பகைமைகொண்டு, பலவாறு கடிவதுமுண்டு. எனினும் அவரின் சீற்றத்தை இருவரும் பொருட்படுத்தினாரல்லர்.

இவர் மிகச்சிறுவராக இருந்தகாலத்து ஓர் நாள் பட்டினம் என வழங்கும் யாழ்ப்பாணத்திற்குச் செல்லப் புறப்பட்ட தமது சிறியதந்தையாரொடு தாமும் வருவதாக வலிந்து கூடிச் சென்றனர். அன்று, பெருஞ்சாமு சித்தரும், யாழ்ப்பாணத்துக் குருபரம்பரைகட்கெல்லாம் மூலமானவருமான கடையிற் பெரியாரென்னுஞ் சிவஞானச்செல்வர், தமதடியார் கூட்டத்தோடும் வீதிவழியாற் சென்றுகொண்டிருப்பவே, இவர் திடீரென வண்டியினின்றுங் குதித்து எக்கருத்துமின்றி அக்கூட்டத்துள் நுழைந்தார். திருவருள்வள்ளலாகிய அப்பெரியார், தமது வாயினின்றும் ஒரு பலாச்சுளையை இவர்வாயுள் உமிழ்ந்துவிட்டனர். அறியாக்காலத்து நிகழ்ந்த அத்திருவருட்செயலே தமது பிற்காலச் சமயஞானத்திற்கு வித்தாயது என்பதே பிள்ளையவர்களின் கருத்தாகும்.

இவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் **F. A.** பரீட்சையிற் தேறியபின் சட்டநூற் பயிற்சிக்காகக் கொழும்புநகர் சென்றனர். அந்நாட்களில இவர் கல்வியிலூக்

கங்கொள்ளாமையாற் பெரும்பொருள் செலவானதுமன்றிப் பல அல்லல்களும் உழக்கநேர்ந்து மனமடிவுகொண்டனர். அதனால் இவர் இராமநாதபுரம் சமஸ்தானத்தில் ஓர் உயர்ந்தஉத்தியோகத்தினைக் குறித்து இந்தியாசென்றிருந்தார். சென்றவழியில்இவர்கொண்டுசென்ற கைப்பொருளும் கள்வராற் கவரப்படவே செய்வதொன்றுமறியாராய்த் திகைத்துச் "சென்றநெறி மாறி யொருதெய்வநெறி சேர்வார்" போல் இராமேஸ்வரப் பெருமானது சந்நிதானத்தை அடைந்தார். அன்று தனது ஏழைமைகழிந்த கடைநாளெனவும், ஏழைமைக்கழிவின் கடைநேரத்திற் தனக்குக் கிடைக்கப்பெற்ற இராமநாதப்பெருமானின் தரிசனத்தினாலேயே அவரது பிரமகத்தி நீக்கும் அருட்கோலத்தினுண்மை தனக்குச் சிறிது தோன்றியதெனவும், அந்நாளே தனது அனுபவத்திற் கடவுளுணர்ச்சி சிறிதுமுகிழ்க்கத் தொடங்கிய திருநாளெனவும், தான் நன்மையையடையும் பொருட்டே அங்குசெல்ல நேர்ந்ததெனவும் பிள்ளையவர்கள் கூறுவர். அந்நிகழ்ச்சியின்பின் இவர் வேறு எவ் உத்தியோகங்களிலும் அமரும் விருப்பிலாராய்ச் சட்டநூற் கல்வியிற் கருத்தூன்றி நியாயதுரந்தரரானார்.

இவர் தனது மாமன் மகளாகிய பவளநாயகியம்மையாரை மணந்து இல்லறவாழ்வில் ஈடுபட்டுத், தாம் ஈட்டிய பொருளினை ஐம்பகுதியாகக் கூறுசெய்து, தமது தலைமுறையார்க்கு ஆற்றவேண்டிய பிதிர்க்கடன்களை ஆற்றியும், ஆலயங்களை அமைத்துத் தேவப்பிரதிஷ்டைகளைச் செய்தும், முகமலர்ந்து இனியனகூறி விருந்தினரை உபசரித்தூட்டியும், சுற்றத்தாரைப் பேணியும், தனக்கு வேண்டியவற்றை முடித்தும், அறநெறி நின்று தனதில்வாழ்வை ஆற்றித் தனதில்லறத்தின்பயனாக அருந்தவநாயகி, சிவநாயகி யெனுமிரு பெண்குழந்தைகட்குத் தந்தையாயினர்.

நூலறிவினோடு உலகியலறிவிலும் பேரனுபவம் படைத்த இவரது இன்னுயிர் நண்பர் சிவானந்தையர் அவர்களும் இவர்

தமது இல்லறவாழ்வைச் சிறப்பாக நடத்துவதற்கமைந்த நல்லமைச்சராயினர். ஐயரவர்கள் இல்லறத்தார்க்குரிய நல்லறங்களை அறிவுறுத்துவதோடு, பிள்ளையவர்களைத் தமிழ்க்கல்வியிலும் சமய உணர்விலும் ஈடுபடுத்துவதிலும் நாட்டமுடையரானார். ஐயரவர்கள்; இவரிடத்து இயல்பாயமைந்த தமிழ்க்கல்விப்பற்றையும், சைவப்பற்றையும் வளர்த்துவருவதில் ஓர் செவிலித்தாய் போன்றார். தமக்கு ஓழிவான நேரங்களிலெல்லாம ஐயரவர்களும் பிள்ளையவர்களும் தமிழ்நூற் சுவையிலும். .சைவசித்தாந்த ஆராய்ச்சியிலுமே மூழ்கியிருப்பர். புலியூர்ப்பெருமையினையும, தில்லைக்கூத்தரின் திருவருட்பெருக்கையும் பேசும்பொழுதெல்லாம், இருவரின் உணர்வும் அப்பெருமானின் திருவடிகளில் ஒன்றுபட இவர்கள் அனலிடைப்பட்ட மெழுகென உருகுவர்- அதனாலேயே அப்பதியின் பெருமையினைப் பைந்தமிழின் விழுமிய அழகு தோன்றப் பாடல் வேண்டுமெனுங்கருத்து இருவரிடத்துமெழுந்தது.

நூற்பொருளை ஆராயுமிடத்து ஐயரவர்களும் பிள்ளையவர்களும் ஒரு பொருளைப்பார்க்கும் இரு கண்களைப்போல் விளங்கினர். எப்பொருளினுண்மையையும் இயற்கையறிவால் நேரே பற்றியறியும திறமை பிள்ளையவர்களிடத்தும், அதனை இலக்கண இலக்கியத் துணைகொண்டறியுந்தன்மை ஐயரவர்களிடத்தும் மிக்கிருந்தன. இவ்வாற்றால் இவர்களிருவரும் எவ்வித ஆராய்ச்சியிலும் ஒருவர்க்கொருவர் இன்றியமையாதவரானார்கள். இவர்களாற் பெரிதும் விரும்பி ஆராயப்பட்ட நூல் திருக்குறள். பிள்ளையவர்கட்குத் திருக்குறளில் நிரம்பிய அறிவுண்டு. இவர் திருக்குறட்பாக்களிற் புதைந்து கிடக்கும் நுண்பொருள்களைத் துருவிப் புதிது புதிதாகப் பொருள்கண்டுமகிழ்வர். இலக்கண இலக்கியத் துணைகொண்டு பலபடஆராய்ந்து தான் காணும்பொருளினை, இவர் எவ்வித ஆராய்வுமின்றி இலகுவாகக் கூறுவதைக் கேட்டு, ஐயரவர்கள் இவர் பொருள்காணும் முறையை வியப்பர். பண்டைக் காலத்துத் தமிழ்ப்புலவர்களிற் காணப்பட்ட வீரம் அஞ்சா நெஞ்சம் முதலிய குணங்கள் ஐயரவர்களிடத்து அ

மைந்திருந்தன. இசைபயில்லாதாரைப்பாட இவர் ஒரு போதும் ஒருப்படுவதில்லை. தகாதாரொருவர் தம்மைப் பாடும்படி ஐயரவர்களைக் கேட்பாராயின், அவர் இசைபாடுவதுபோல் வசை பாடி விடுப்பர். இதனாலும் பிறவற்றாலும் ஐயரவர்கட்குப் பெரும்பகைமையும் பல வழக்குகளும் ஏற்படுவதுண்டு. அக்காலங்களிலெல்லாம் ஐயரவர்கட்குத் தோட்டுணைபோறற் பெரும் பாதுகாப்பாய்ப் பிள்ளையவர்கள் அமைவர். தமக்கும் தம்போன்றார்க்கும் பிள்ளையவர்கள் பெரும் பாதுகாப்பாயிருந்த அருமைப்பாடு தோன்றவே,

"வலியழிந்தடங்குநள்ளார்வனம்புகப்புறந்துரந்து
கலிவாரிஇகட்டார்வைகுநன்பலநல்குசீரான்"

எனப் புலியூர்ப்புராணத்து வரும் அவையடக்கத்துள் ஐயரவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். புராணத்தைப் பாடிமுடித்த சில நாட்களின்பின் ஐயரவர்கள் காந்திராப்பிரசாரம் நோயுற்று, அவர்களைப்பார்க்கச் சென்றிருந்த பிள்ளையவர்களிடம், கையெழுத்துப்பிரதியிலிருந்த இந்நூலினை எடுப்பித்துக் கொடுத்து அவர் தம்மருகிலிருக்கும்வரையிற் தமக்குமவர்க்கு மிருக்குமாயினை ஆற்றூர் போலவரை அனுப்பிவிட்டுத் தாம் அகன்றுறைந்து பாடிய

"கருங்கடற்பாவையாயகடுந்துயர்ப்பிறவிநீங்கி
வருங்கரையாமெய்வீட்டின்கவலையும்பெறுவேனெனா
நெருங்குறுமார்வத்தாண்டநெடுமதிற்புலியூர்ச்செல்வ
ரருங்கதைபுராணஞ்செய்வானறிவிலேன்முயன்றவாறே"

எனுஞ் செய்யுளின் பயனை அடையவிரைவார்போலப் புலியூர்ச் செல்வரின் திருவடிகளை அடைந்தனர். இவரது பிரிவாற் பிள்ளையவர்கள் பெரிதும் மனம் நொந்தாரேனும் "உறங்குவது போலுஞ் சாக்காடுறங்கி விழிப்பது போலும் பிறப்பு" என்னுமுண்மையை உணர்ந்து ஆறினர்.

பிள்ளையவர்கள் நூலறிவில் மட்டுமன்றி, உலகியலறிவிலும் உத்தியோகத்திலும் பெருந்திறனுடையராகவே விளங்கினார். இவரது நியாயதுரந்தரத்திறமையும், வாதிக்கும் ஆற்ற

னும், மக்களின் மனதை ஆராயும் நுண்ணறிவும், இவர் தனது வேலையைத் தொடங்கியகாலத்திலேயே யாவர்க்கும் புலப்படலாயின. இளமையிலேயே, இவர் இந்நாட்டுப் பெரிதுந் தகுதிவாய்ந்தவரென்று பலராலும் மதிக்கப்பட்டார். இவர் வழக்குகளை எவ்வித ஆயத்தமுமின்றி நடாத்தும் இயற்கைஅறிவும், பெருஞ்சிக்கலான வழக்குகளையும் இலகுபடுத்தி விளக்கும் ஆற்றலும்படைத்து விளங்கினர். இவர் குறுக்குவிசாரணையால் ஒருவழக்கின், உண்மை, பொய்மைகளைத் தெரிக்குந் சிறப்பு எவர்க்கும் இறும்பூதுபயக்கும். சாட்சிகளைக் குறுக்கு விசாரணைசெய்யுமிடத்து, அவர்களிடமிருந்து தாம் நினைத்த வாய்ப்பிறப்பை வலிந்து பிடுங்காது, அவர்களின் இயல்பிற் கேற்பக்கூறவிடுத்து, அவற்றிலுள்ள உண்மை பொய்மைகளையும் பொருத்துதல் பொருந்தாமைகளையும் எடுத்துக்காட்டும் அரும் பெறல் நுட்பம், இவரிடத்தமைந்ததுபோற் பிறரிடத்து இயற்கையாயமைந்ததில்லை. இவர் வழக்குகளை நடாத்துமிடத்து, தன்பக்கத்து வெற்றியினையே நாட்டமாகக்கொள்ளாது, வழக்கின் உண்மையினை ஆராய்ந்து நீதிபதிக்கு விளக்குவதிலேயே முனைந்துநிற்பர். அதனாலிவர் பலபிரபலநீதிபதிகளின் நன்குமதிப்பையும், பெரும்பாலும் தனது வழக்குகளில் வெற்றியையும் பெறுவர். மிகவிரிந்த பொருட்டொகுதியையெல்லாம் சிலவற்றில் வைத்து நுனித்தறியுந்தன்மை இவர்க்குப்பெரிதுமுண்டு. இவர் ஒருமுறை அரு. அரு. சோமசுந்தரச்செட்டியாரின் வழக்குத்தொடர்பாக, பிரபலநியாயவாதிகளுள் ஒருவரான எலியெற் என்னும் ஆங்கிலத்துரைமகனைக் கொழும்பில் ஏற்படுத்தச்சென்றபோது, அன்று தனக்குஅரை மணித்தியால ஒய்வுநேரமே உள்ளதென்றும், அச்சிறு நேரத்திற்குள் தான் அப் பெரும்வழக்கை விளங்கிக்கொள்ள முடியாதாகையால் அதில் ஏற்படமுடியாதெனவும் அவர் மறுக்கவே, பிள்ளையவர்கள் தான் அதனை மிகச் சிறுபொழுதில் தெளிவாக விளக்கிவிடுவதாகக்கூறி உடன்படச் செய்து, அவர் குறிப்பிட்ட நேரத்திலுங் குறைந்தநேரத்தில் அவ்வழக்கு முழுவ

தையும் புலங்கொள அறிவுறுத்தவே, அத்துரைமகன் இவரது ஆற்றலைமெச்சிப் பெரிதும் வியப்புற்றனர். இன்னோர் வழக்கில் மறுபக்கத்துச் சாட்சியினை விசாரணை செய்யுமிடத்துப் பிள்ளையவர்கள் கேட்ட கேள்வியொன்றினை நீதிபதியவர்கள் தான் விளங்கிக்கொள்ளும் நோக்கமாக "இக்கேள்வியை ஏன் கேட்கின்றீர்" என வினவ, பிள்ளையவர்கள் அக்கேள்விக்கு அவன் இன்னவாறு விடையிறுப்பான் என்று கூற, நீதிபதி அது உங்கட்கு எப்படித்தெரியுமென வியந்து வினவினர். அதற்குப் பிள்ளையவர்கள் இதற்கு அவனது விடை இன்னதாயிருக்குமெனவும் தனது அடுத்தகேள்வி இன்னதெனவுங் கூறி அதன் உண்மையை அறியவேண்டின் தான் கேள்விகள் கேட்டபின் இருந்துபார்க்கும்படியுங் கூறினர். இவர் கேட்ட கேள்விகட்குச் சாட்சி, இவர் முன்னர்க் குறிப்பிட்டவாறே விடையிறுத்தானாக, நீதிபதி, மக்களின்மனதைத் துருவியறியும் இவரது ஆற்றலை அறிந்து அதிசயித்தனர். இவர் தம்மிடத்துவரும் வழக்குகளிற் பெரும்பாலனவற்றைத் தாமே தீர்த்துச் சமாதானப்படுத்திவிடுவர். எவர்பக்கமுஞ்சாராது நடுநின்று உலகஇயல்பினை எடுத்துக்காட்டும்வகையில் அவர்களும் இவரது சொற்கமைந்து சமாதானமுறுவர். கோட்டிற்சென்று வீணாகத் தமது பணத்தைச் செலவழியாது இவராற் சமாதானப்படுத்தப்பட்டார் பற்பலர். ஏழைகட்கும் உதவியற்றோர்க்கும் இவர் பெரும் ஆறுதலாக இருந்துவந்தார். யாரையாயினும், கையிற்பணமில்லாது முட்டுற்றுத் தம்வழக்கிற் தோல்வியுறும் நிலையிற் காண்பாராயின், இவர் தாமாகவே அதனை எடுத்து நடத்தி அவர்களின் முட்டினைத் தீர்ப்பார். ஆபத்து நேரத்தில் ஒருவரைக் காப்பாற்றுந்தயாளகுணம் எல்லாவற்றிலும்மேலாக இவரிடத்துச் சிறந்துவிளங்கியது. தமதுபகைவரேனும் ஆபத்துட் சிக்குவராயின் அவரைக் காப்பாற்றப் பின்வாங்கார் தாம் எதிர்பாராவண்ணம் இவரது உதவியைப் பெறுவதாற் பகைவரும் இவர்வசப்படுவர். பொதுமக்கட்கிவர்மீதுள்ள அன்பும், நம்பிக்கையும், மிகப்பெரிது. அதனால்

மதுவிலக்கு அரசாங்கசபைத்தெரிவு முதலிய பொதுநலசேவைகளில் இவர் ஈடுபடுங் காலங்களில் அவர்கள் தம்முழுமனதோடும் இவர்வழியே நிற்பர்.

பிற்காலத்தில் இவர் தனது உத்தியோகமுயற்சியை மிகவுஞ்சுருக்கித் தமிழ்மொழியையும் சித்தாந்த நெறியையும் வளர்ப்பதிலேயே நேரத்தின் பெரும்பாகத்தைக் கழித்தனர். இவர் தாம்செல்லும் கோடு, வாசிகசாலை, முதலிய இடங்களிலெல்லாம், தம்போன்றாரோடும் பிறரோடும் பெரும்பாலும் இவற்றைக்குறித்தே பேசுவர். அதனால் ஆங்கிலமொழியிலேயே அதிகம் பயிற்சியுடைய அவர்களும் தமிழின்சிறப்பையும் சைவத்தினுயர்வினையும் சிறிது சிறிதாகச் சிந்தித்தற்கு இடமுண்டாயிற்று. இவர் தமிழ்மொழியின் தனியியல்பு, தமிழ் மக்களின் பெருமை முதலியவற்றைத் தம் விரிவுரைகளிற் பொருந்துமிடங்களிலெல்லாம் எடுத்துக்காட்டி அதனைப் பெரிதும் வற்புறுத்தி வருவர்.

கல்லாதார்க்கும் எளிதில்விளங்க விரிவுரை நிகழ்த்தும் நாவன்மையும், சொல்லினிமையும்இவரிடத்துச்சிறப்பாக அமைந்தன. பலபுதிய கொள்கைகள் மக்களிடையிற் பரவுதற்கு இவரது விரிவுரைகள் வாயிலாக விளங்கின. சில ஆராய்ச்சிக்காரரிடத்தும் ஆராய்ச்சிநூல்களிடத்துமன்றி, யாழ்ப்பாணத்திலுள்ள பெரும்பாலார்க்குஅருகிமறைந்திருந்த பல உண்மைகளெல்லாம், இவரது இயற்கைஅறிவினாற் சனங்களிடையே பரவத் தொடங்கின. எவர்க்குஞ் சுவைக்கவிரிவுரை நிகழ்த்துஞ் சொல்வன்மையாலும், தமிழ்ச்சுவையையும் சித்தாந்த நுண்பொருள்களையும் எடுத்துவிளக்குஞ் சிறப்பினாலும் இவர் எவ்வெச்சபைகளிலும் முதன்மைபெற்று விளங்கினார். இவர் அவைகட்குத் தலைமைவகிக்குமிடத்து, பலரது விரிவுரைகளையும் ஞாபகத்தில் வைத்து, அவற்றின் சாரங்களை ஒன்றாகத் தொகுத்துக் கூறுவது, கேட்போர்க்கு ஆர்வமும் இனிமையும் பயக்கும். திருக்குறளிற் புதைந்துகிடக்கும் நுட்பங்களை இவர் வி

ளக்குகையில் அஃதொரு புதுச்சுவைபெற்றுத் தோன்றும். அதனால் திருக்குறளை ஆராயும் ஆர்வம் யாழ்ப்பாணத்திலுள்ள பலரிடத்தும் எழுவதாயிற்று. அந்நோக்கமாகத் திருக்குறள் வகுப்புச் சிலகாலம் நடைபெற்றது. மக்கட்கின்றியமையாத ஒழுக்கத்தைப் பொதுப்படக் கூறுமுகத்தாற், சமரசமாயிற்குஞ் சைவநெறியை நிலைநிறுவும் பெருநோக்குடன் வள்ளுவர் குறளை இயற்றினரென்பது ஐயரவர்களதும் பிள்ளையவர்களதும் ஆராய்ச்சியாற் துணியப்பட்ட முடிபாம். இவர்க்குத் திருக்குறளிலிருந்த நுண்ணறிவினை நேரே கண்டறிந்த சிலர் இவரைத் திருக்குறட்புலியெனக் கூறுவதுமுண்டு.

இவர் இவற்றோடு அரசியலறிவையும் மக்களிடையிற் புகுத்திவந்தார். இவர் அவற்றை எடுத்துக்கூறும் வகையிற், கேட்போர்க்குத் தேசியத்தில் ஒரு கிளர்ச்சியும் புத்துணர்வும் பிறக்கும். அரசியற் துறையிலும், தமிழறிவும், சைவஉணர்வும் இவரது விரிவுரைகளால் விரவிஒன்றுபடலாயின. தமிழறிவு சைவஉணர்வோடொப்பவே அரசியற்துறையிலும் இவரது அறிவு விரிந்துவிளங்கியது. பழங்கொள்கைகளினாற் தேசமுன்னேற்றந் தடைபடாமலும், புதுக்கொள்கைகளினாற் பெரும் புரட்சிகளேற்படாவாறும், தேசிய இயக்கங்களையும் சமயஇயக்கங்களையும் பாதுகாத்துச் சமாதானமுறையிற் தம் ஊரவரை முன்னேற்றுவதில் இவர் இணையற்றவர்.

பிற்பகுதியில் இவருடைய மனம் சிவஞானபோதம், சித்தியார், தேவாரம், திருவாசகம் முதலிய அருள்நூல்களிற் தோய்ந்துகொண்டிருக்கும். இவர் அவற்றிற் சில சிறந்த செய்யுட்களை மனநெகிழ்வுடன் படிப்பது மிகவும் உருக்கமாகவிருக்கும். இளமைதொடக்கம் சித்தாந்த சாத்திரங்களையும், பன்னிரு திருமுறைகளையும், திருக்குறளையுமே இவர் பெரும் ஆர்வத்துடன் ஆராய்ந்து கற்றார். சித்தாந்த நுண்பொருள்களை விளக்குமிடத்து, இவர் அவற்றைத் தமது அநுபவமுறையுடன் ஒட்டியே விளக்குவர்.

இவர் கோயிற் திருப்பணிகளைச் செய்விப்பதிலும், பல தலங்கட்குஞ் சென்று அவ்வத்தலங்களில் விளங்கும் மூர்த்தி காரத்தினை நேரே அறிவதிலும், பெரிதும் ஆர்வமுடையர். சாவகச்சேரியில் வேலைபார்த்த காலத்துத் தாமீட்டிய பொருள் கொண்டு அங்கு அழிந்துபட்ட சிவாலயத்தைப் புதிதாக அமைப்பித்துப் பிரதிஷ்டை செய்வித்தார். அவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் வாரிவனநாதரில் இவர் வைத்தபற்று அளவிடற்கரிது. அவ்வூரார் அக்கோயிலை நடத்தும் அதிகாரத்தை இவரையே ஏற்கும்படி எவ்வளவு கூறியும், இவர் அதற்குடன்படாராய் அதற்குரியாரொருவரிடம் அப்பொறுப்பை விட்டனர். தெல்லிப்பழை காசிப்பிள்ளையார்கோவிற் திருப்பணியிற் பெரும்பாலனவும் கும்பாபிடேகமும் இவராலேயே செய்யப்பட்டன.

இவர் இந்தியாவிற்கு இடையிடையே சென்று பாடல் பெற்ற பலதலங்களையும் தரிசித்து மீள்வர். சிதம்பரத்தில் அனவரததாண்டவம் புரியும் நடராசவடிவத்தில் இவர்க்கிருந்த கவர்ச்சி மிகப்பெரிது. இவர் யாழ்ப்பாணத்தாரால் மட்டுமன்றி இந்தியாவிற் சிறந்து விளங்கிய பலஅறிஞர்களாலும் அன்பு பாராட்டப்பட்டார். அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருங்காலங்களில், அவர்கட்குவேண்டிய வசதிகளை ஏற்படுத்தியும், யாழ்ப்பாணத்திருந்த பேரறிஞர்களின் பெருமைகளை எடுத்துக்கூறியும், நூற்பொருள்களை அவர்களொடு கலந்து அளவளாவியும், அவர்களைத் தம் வீட்டிற்கழைத்து உபசரித்தும் அனுப்புவர். அவ்அறிஞர்களும் இவரை யாழ்ப்பாணத்து அறிஞர்களுள் ஒருவராகமதித்து அன்புசெய்தனர்.

இவர் பண்டைமுறைப்படி "மூவாறு குடியடிமை யேவல் செய்யும்" பழங்குடிப் பிறப்பினராயிருந்தமையின், அப்பிறப்பின் தொடர்பாற் பலகுடிகளை யுடையராயும், பெருஞ்செல்வராயும் விளங்கினர். இவரெவ்வுயிரையும் தம்முயிர்போல் மதிக்குந் தரத்தினரன்றி, மக்களைத் தம் அடிமையென நினைக்குந்

தன்மையரல்லரேனும், இவரைத் தம் தலைவனெனக்கொண்டு வாழ்ந்த குடிகட்கெல்லாந் தாயினுந் தயவுடைக்காரராய்த், தான் அவர்கட்குச் செய்யவேண்டிய கடமைகளை வழுவாது ஆற்றி வந்தார். தம் சீரிய அறிவினாலும் உயரிய குணங்களாலும் மற்றோரால் இவர் எங்ஙனம் விரும்பப்பட்டனரோ, அங்ஙனமே உலகோடொட்டி வாழுந்தன்மையாலுந், தங் கீழ்ப்பட்டார்க்கு நிலவினைக்காலும் முழுமதியென்னப்பெய்யும் பெருந்தண்ணளியாலும், மற்றையோராலும் விரும்பப்பட்டாராய், யாழ்ப்பாணத்துப் பழங்குடிப்பிறந்து யாவற்றானுஞ் சிறந்து விளங்கிய பெரும்பிரபுக்களு ளொருவராகப் போற்றப்பட்டார்*.

தாம் வயோதிபபருவத்தினை அடையுமுன் ஒருமுறை இமயம்வரையிற் செல்லவேண்டுமென்பது இவரதுவிருப்பமாக இருந்தது. தமது ஐம்பத்திரண்டாவதுவயதில் ஓர்கால் அவ்வெண்ணந்தோன்றவே, இவர் ஆனிஉத்தரத் திருநாட்குத் தில்லைக்குச்சென்று, திருவருட்கூத்தரை வணங்கிக்கொண்டு அங்குசெல்வதாகத் தீர்மானித்தார். ஆனிஉத்திரத் திருநாட்குத் தாமும்வருவதாகக்கூறிய தனது மனைவியாரையும் அழைத்துச் செல்லவேண்டியிருந்ததால், அவ்வெண்ணந் தடைபட்டுத்தில்லைக்குச்சென்று திரும்பவே நேர்ந்தது. அம்பலத்தரசின் ஆனந்தநடனங்கண்டு இல்லந் திரும்பியதும் இவர்க்குச்சுரநோய் தொடங்கியது. இவர் பெரிதுந் தொடர்புபட்டொழுகிய அருட்பெரியாரொருவர் அங்குவந்து இவரை நோக்குங்கால், இவர் இவ் உடம்மைவிட்டு நீங்குவாரென்னுங் குறிப்புத் தோன்ற வைப்பார்போல், அப்பொருள்குறிக்கும் ஒரு திருப்புகழ்ச்செய்யுளைப் பாடினர். பிள்ளையவர்களும் அக்குறிப்பினை உணர்ந்தார்போற் தம்வாழ்க்கையில் நடந்தேறிய சம்பவங்களனைத்தையும் அப்பெரியார்க்குக் கூறித், தம்மைப் பிறவிக்கடலினின்றும் கரையேற்றும்படி வேண்டுபவர்போல, அவரது திருவடிக்கீழ் வீழ்ந்து வணங்கினார். அவர் தமது கரங்களால் இவரதுதலையினை உயர்த்தி அமைதியாகப் படுக்கையிலிருக்கும்படி செய்

துசென்றனர். இவர் இரண்டொருநாட்களில், 1927-ம் ஆண்டாகிய பிரபவ வருடம் ஆடிமாதம் ஞாயிற்றுக்கிழமை பன்னிரண்டுமணியில் பூராநட்சத்திரத்தில், கனகமன்றுளாடுங் கருணையங்கோலந் தனது கண்ணிலுங் கருத்திலும் நிறைந்து நிற்பச் சிவபதமடைந்தார்.

உ
சிவமயம்

உரிமையுரை.

ஸ்ரீமத். க. தம்பையபிள்ளையவர்கள்

இந்நூல்
காலஞ்சென்ற தெல்லிப்பழை சட்டநூலறிஞர் க. தம்பையபிள்ளையவர்களின் ஞாபகார்த்தமாக அவர்களுக்கு அர்ப்பணஞ் செய்யப்பட்டது.

தெல்லிப்பழைக் காசிப்பிள்ளையார்கோயில் மண்டபத்தில்
புலியூர்ப்புராணம் அரங்கேற்றப்பட்டுழிச்
சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்
தமிழ்ப்பகுதித் தலைவரும் தமிழ்ப்பேராசிரியருமான

திரு.எஸ். சோமசுந்தரபாரதியாரவர்கள் எம்.ஏ.பி.எல்.

பாடியது

பாம்பும் வேங்கையும் பத்திசெய் தோங்குமூர்
வேம்பன் சோழரை வெற்றிகொண் டோன்பணி
பூம்பு னத்தில்லைப் பொன்சிறு மன்றுளா
டாம்பற் றோலணி யம்பர வாடையன் 1

செந்த மிழ்த்திருக் கோவைகொள் செம்மல்நம்
பந்த மறுப்பவன் பத்தர்தம் மரபினில்
வந்த தம்பைய வள்ளல் வழக்கறச்
சிந்தை வாய்மை சிறந்துயர் செல்வவான் 2

தெல்லித் தொல்பழை தேம்பழத் தோர்மரம்
நல்ல வர்துணை நாளுயர் புகழினன்
தில்லை மான்மியம் செந்தமி ழிற்றர
வல்லை யென்ன; சிவாநந்த வாய்மையன் 3

சொல்லின் செம்பொருட் டோய துறைகளில்
எல்லை கண்டவன் ஈழத்துக் கபிலன்றன்
நல்ல நட்பறம் நாட்டித் தமிழினில்
தில்லை மான்மியம் செப்பித் தி[illegible]த்தனன் 4

ஆக்கி யோனு மதையாக்குவித் தோனுமன்
நீக்கி நித்திய வாழ்வினை நேரத்தன்
பாக் கியமதை பாரினுக் குதவலென்
றாக்கித் தாதுவை காசியி லொன்பதில் 5

தவளத் தண்பிறை சடையன்றன் முதல்மகன்
கவள மாக்கொழுக் கட்டையன் கோவிலில்
பவள நாயகி பண்புயர் சால்பினள்
இவள ருட்பய னேற்று மரங்கினில் 6

புலியூர் மான்மியம் போற்றப் புவியெலாம்
பொலிக நெல்லொடு பூவையர் கற்பறம்;
நலிக தீமைகள்; நல்லன [illegible];
வலியும் வெற்றியும் வாய்மையும வாழ்கவே 7

உ

சிவமயம்

புலியூர்ப்புராணம்

காப்பு

தனைத்தொழிற் படுக்கு மாண்மை தனக்கலாற் பிறர்க்கி லாமை
யனைத்துயிர்த் தொகையுங் காட்சி யமைதியிற் கண்டு தேற
முனைத்தகு கூர்வாய்த் தோட்டி முழுவலிப் பாச மேந்தி
வினைத்தொடர் பறுக்குஞ் செங்கை வேழநா யகன்றாள் போற்றி

வேறு

திருக்கோட்டுப் பிறைமேனிச் செக்கர்வான்
பொழிநிலவு திரண்டொதுங்க
மருக்கோட்டு மிருட்பிழம்பு வளைந்ததென
நீலமணி மாலை யென்னப்
பெருக்கோட்டு முகமதப்பாய் வண்டினிரை
செவிப்புடைப்பாற் பெயர்ந்து சூழத்
தருக்கோட்டு சோலைவாத கலைத்துணைமர்
சிவக்களிற்றின் சரணம் போற்றி

கடவுள்வாழ்த்து

சபாபதி

உலகுதொறும் பிறந்துழல்வீ ரனுசன்மி
னென்றுங்கு மொருமை வீடு
விலகலறத் தனதுதிரு வடிக்காட்சி
புணர்க்குமென விளம்பி யாங்கு
மலகினலம் படுமபயம் வரதமிரு
கைப்படுத்தோ ரடிமேற் றூக்கி
யிலகியபொன் மன்றுணட நவில்வானை
மனக்கோயி லிருத்தி யுய்வாம்

அருள்பழுக்கும் விழிபோற்றி யரும்புநகை
முகம்போற்றி யடிகண் டாருக்
கிருள்பழுக்கு மலங்கழுவி யின்பவீ
டெளிதளிக்கு மெண்ணம் போற்றி
தெருள்பழுக்கு மெய்யன்பர் சிரஞ்சூட்ட
வுயர்ந்தெடுத்த திருத்தாள் போற்றி
பொருள்பழுக்கும் பூங்கனகப் பொதுவுடையார்
திருநடனம் போற்றி போற்றி

சிவகாமியம்மை

அளிக்குமகார்க் கப்பனிவ னம்மெனநன்
கறிவுறுப்ப வன்னை யென்னத்
தெளிக்குமுறை காட்சியினு நலம்படைப்பப்
பொலம்படைத்துச் சிறக்கு ஞான
வெளிக்குணட நவில்வாரை யுயிர்காணத்
தானோக்கி விளங்கக் காட்டும
துளிக்குமது மலர்க்குழலா டிருவடியெம்
முடிக்கேற்றித் தொழுது வாழ்வாம்

திருவேறு மலர்க்கமல முகம்போற்றி
விற்புருவச் செவ்வி போற்றி
யுருவேறு கருணைபொழி விழிபோற்றி
நகைகோட்டு மொளிவாய் போற்றி
மருவேறு மலர்க்காந்தட் கரம்போற்றி
மின்னுருவ மருங்குல் போற்றி
கருவேறு முகிற்கூந்தற் சிவகாம
வல்லிபதக் கமலம் போற்றி

தக்ஷிணாமூர்த்தி

பொருவிறந்த கல்லாலின் புடையமர்ந்து
நால்வருக்கும் புகல லாகா

தொருவுபொருட் டிறமுறையா னுரைத்தருளி
வினைக்கோட்பட் டுழல்வோர் யாருங்
கருவிறந்து கரையேற வுருக்காட்டுங்
குருமரபு காசி னிக்கு
மருவுநெறி தந்தவர்த மடிக்கமல
முடிக்கமல மருவ வைப்பாம் ௫

கற்பகவிநாயகர்

வேறு

வீங்கற் பகநாக மொருமூன்றின் விடாதி றைஞ்சிப்
பூங்கற் பகநாகம் புவிபாதலம் போற்றி செய்ய
வோங்கற் பகனாகம் புலிதாழ்ந்தெழு மூருட் டோன்றி
யாங்கற் பகநாக மகஞ்சேவக மாக வுய்ப்பாம் ௬

வேறு

அடுத்திரப்ப வேண்டுவன தருமெனினுங்
கற்பதரு வடைந்து வேண்டின்
விடுத்தலரும் புத்தியொடு சித்தியுந்தந்
தனியாமை விளக்கி யாங்கு
மடுத்தறுகு தொழுமடியர் வணங்கநறுங்
கற்பகமா மலர்நீ ழற்கீழ்
வடுத்தவிரு மனையிரண்டுந் தந்தமரு
மழகளிற்றை வழுத்தி வாழ்வாம் ௭

வைரவக்கடவுள்

வேறு

அண்டத் தவர்தந் தலைக்கெல்லா
மாமா றெழுந்து மயன்றலைக்
கொண்டத் திருமான் முதலமரர்
குருதிப் பலிகொண் டிருண்டமணி
கண்டத் தவர்தம் புகழ்நிறவுங்
காரி நிறக்கஞ் சுகமேனித்

தண்டத் தலைவன் றிருவடிக்கீழ்க்
குடியா மடிமைத் தலைநிற்பாம் அ

சுப்பிரமணியக்கடவுள்

வேறு

போற்று மாமறை யாவையும் புரியுமெய்ப் பொருடான்
றோற்று மெவ்வகை விகாரமும் பெறுமெதனுந் துணிவு
தேற்றி யாங்கென்று மிளமையிற் றீர்வுறுச் செவ்வேள்
காற்று ணைக்கிரு கைகுவித் திருவினை கடிவாம் கூ

வேறு

அறுமுகக் கமலம் போற்றி யாறிரு நோக்கம் போற்றி
குறுநகைச் செவ்வி போற்றி குன்றுறழ் மணித்தோள் போற்றி
நறுமலர்ச் செங்கை போற்றி நகுகதிர் வடிவேல் போற்றி
மறுவறு குமரப் புத்தேண் மலர்க்கழல் போற்றி போற்றி க0

திருநந்திதேவர்

வேறு

மாத்துறு துளவ மாலை மாயவ னாதி யோர்க்குட்
பூத்தபே ரருளுக் கேற்பப் பொருபடை கொள்ளா தென்றும்
வேத்திரப் படைகை யேந்தி வெள்ளியங் கயிலை மேவிக்
காத்தமர் நந்தி பொன்னங் கழற்றுணை கருத்துள் வைப்பாம் கக

ஆசிரியரகத்தியனார்

உருள்பெருந் தேர்க்கச் சாணி யொப்பவ ருடைத்தா லிந்தத்
திருநில முருவு கண்டு சிறிதுமங் கவரை யெள்ளா
தொருவுதல் வேண்டு மென்றுங் கொலிகடல் பூமி விந்தந்
தருமிகைப் பாடு போக்குந் தமிழ்க்குறு முனிதாள் போற்றி கஉ

வேறு

அருந்துகட லினும்பயன்றாக் காதாக்கு
முதவிபெரி தாகு மென்றும்

பொருந்துசமம் படப்புணர்க்கும் பூமியினுங்
காலத்தாற் புணர்க்கு நன்றி
யிருந்ததிறம் பெரிதென்று பமர்புக
ழும்புவிக்கீ ழிருத்தும் வெற்பிற்
றிருந்துமடக் கம்பெறுந்தன் சிறுதோற்றப்
பெரியமுனி திருத்தாள் போற்றி ௧௩

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்

வேறு

விரும்பு மம்மையு மப்பனுந் தாமெனல் விளங்கச்
சுரும்பு சூழ்மலர்க் கருங்குழ லம்மையார் துணர்த்தே
னரும்பு கொன்றையஞ் சடைமுடி யாரொடு மணுகிக்
குரும்பை மென்முலைப் பாலரு மகவையுட் கொள்வாம் (௧௪)

திருநாவுக்கரசு நாயனார்

பர்ண்டி லூர்தரு பரமனோ டாருயிர்ப் பகுதி
யாண்ட கோவொடு மம்மையே யென் றறிவுறத் தாங்கு
வேண்டு மாறெலாந் திருவடித் தொண்டுளம் விழைந்த
பூண்ட சீர்த்திவா கீசர்பொற் பதமலர் போற்றி ௧௫

சுந்தரமூர்த்தி நாயனார்

வேறு

அரவ முடியார் தோழமைகொ ளளகை வேந்த னழுக்கறுப்பப்
பரவை மனைக்குத் தூதாகப் பானா ளிரவிற் செலப்பணிந்துங்
கரவு தவிரும் பலவுரிமைக் கருமஞ் செய்யக் கண்டிரந்தும்
தெரிவை பாகர் தோழமைகொள் செல்வத்தோழர்பதம்பணிவாம்

மாணிக்கவாசக சுவாமிகள்

வேறு

அருமறை யெழுதா தோது மாதியம் பகவன் றானே
பொருணயஞ் சொற்சி றப்புப் பொருந்துபல் சுவையுங்கண்டு

திருமணிக் கடகக் கையாற் றிருந்து நாலெழுதச் செய்தார்
மருமலர்க் கமல பாதம் வைகலும் வழுத்தி யுய்வாம் கஎ

சண்டேசுரர்

வேறு

அரிக்குமகா ருயிர்க்கொருதி யத்தனா னெனயார்க்கும்
தெளிக்குநெறி யெனத்தனது திருத்தாதை தாளெறிந்து
துளிக்குமது மலரிதழித தொடைமுடித்தார் தாளடைந்து
களிக்குமறை யவரிருதாட் கமலமலர் கைதொழுவாம் கஅ

தில்லைமூவாயிரவர்

வேறு

பூவார் கமலப் பொகுட்டுறையும் புத்தே ளெடுமான் முதற்றேவ
ரோவா திறைஞ்சப் பொற்பொதுவு ளுறைவார் தம்மு ளொருவரென
மேவா வமருஞ் சிறப்புடையார் வேதமுடிவிற் பயின்மனத்தோர்
மூவா யிரவ ரந்தணர்த முளரி மலர்த்தாண் முடிக்கணிவாம் ககூ

ஏனை நாயன்மார்

வேறு

மறைதேட மாதேட மதுப்பெருக்கு மலர்க்கமலத்
திறைதேட மறைந்தபிரா னெழுந்தருளி வரப்பெற்று
நறைமேவு மலர்ப்பாத நடங்கண்டு ஞானவீட்
டுறைவாரை நினைந்துருகி யுள்ளன்பு பெருக்குவாம் உ0

கடவுள்வாழ்த்து முற்றிற்று

ஆக செய்யுள் உ0

அவையடக்கம்

வேறு

வலம்படு வடமொ ழிக்கண் மக்கள்கற் றறிந்து தேற
நலம்படு புலியூர்ச் செல்வ நகரமான் மியநன் காய்ந்து
புலம்பட மொழிபெ யர்த்துப் புராணநூன் முறைமை போற்றி
நிலம்படு தென்மொ ழிக்க ணீசெய்து தருக வென்று க

கலிகெழு கடல்சூழ் ஞாலங் கங்குலும் பகலு நாடப்
பொலிபிர தாப வெய்யிற் புகழ்நில வோடு பூப்ப
வலியழிந் தடங்கு நள்ளார் வனம்புகப் புறந்து ரந்து
நலிவொரீஇ நட்டார் வைக நன்பல நல்கு சீரான் ௨

அங்கையிற் புகுது மாயி னடுத்தவர்க் களிக்கு மென்னுஞ்
சங்கையி னழி யென்னத் தடமணிக் கடக மென்னச்
செங்கன கழும்பல் வேறு திருமணி களுங்க லந்து
மங்கல மருவச் சுற்றி வைகுபூங் கமலக் கையான் ௩

வாட்டுணை பொருவ நீண்ட மடவியர் கருங்கண் வண்டு
பாட்டளி யொடுங்க லந்து பயில்வுறு குவளைத் தாரான்
நாட்டுபூங் கனக மன்று ளுடைக நயந்தார்க் கன்பன்
தோட்டுணை யெனவென் னேடு தொடருநண் புடையதோழன் ௪

நலமுறு பன்னூ லாய்ந்து நயந்திடு முணர்வி னோடு
மலைவறு சைவ நூலின் வாய்மைநன் குணர்ந்த சீரான்
குலமுறு குடிக ளோங்கிக் குலவிய வீறு கானத்
தலமுறு தில்லை யாளுந் தம்பைய மகிபன் கேட்ப ௫

கருங்கடற் பரவை யாய கடுந்துயர்ப் பிறவி நீங்கி
வருங்கரை யாமெய் வீட்டுள் வைகவும் பெறுவே னென்ன
நெருங்குறு மார்வந் தூண்ட நெடுமதிற் புலியூர்ச் செல்வ
ரருங்கதை புராணஞ் செய்வா னறிவிலேன் முயன்ற வாறே ௬

நன்றுதீ தென்று கொண்டு நயத்தலும் வெறுத்த லானுங்
குன்றவிற் கூத்தர்க் கில்லை குணங்குற்றங் கொளாம லன்பென்
றொன்றுகொண் டுவப்பர் மற்றவ் வுள்ளன்பாற் செயுமென் னூலு
மின்றுநன் றுவந்து கொள்வார் யானவர் பொருட்டஞ் சேனல் ௭

அல்லதூங் கொடிய நஞ்சு மமுதமாச் செய்து கொண்டார்
நல்லதாத் தீய தெல்லா நயந்துகா லுவந்து கொள்ள

வல்லவர் மன்ற மர்ந்தார் வழுத்தியான் செயுநூல் குற்ற
மில்லதாச் செயாரோ யானிங் கெதன்பொருட் டஞ்சுகேனே அ

பொன்னய நன்று கொண்டப் பொன்னுரை புறம்பொ ருந்துங்
கன்னயங் கொண்டு நோக்கார் கடனறி காட்சி மிக்கா
ரன்னது கடப்ப மன்று ளாடுவார் புகழ்ந யங்கொண்
டென்னுரை நயமு நோக்கா ரியற்படு கல்வி சான்றோர் கூ

வழுக்கொண்டு புகன்று பின்னை வழுவமை தியுங்கொண் டாங்கு
மழுக்கொண்ட புலியூர்க் கூத்தன்வான் முறைப்புராணத்தன்னுட்
குழுக்கொண்ட வென்சொற் குற்றங்கொள்ளினுங்குணமாக்கோட
லிழுக்கன்று மரபே யாகு மிலக்கணப் புலமை யோர்க்கே க0

அவையடக்கம் முற்றிற்று

ஆக செய்யுள் க0

நாட்டுப்படலம்

பாயவவப் பகைகடிந்து பயிலொழுக்க வல்லாணந்
தோயவடுத் தருள்வாய்மை தொகுபுகழ்பல் பொருட்டான
மாயபடை புடைசூழ வரும்பொறையா சனத்தமர்ந்து
தூயவற மரசாளுந் தொன்மையது சோணாடு க

மடியாது கால்பலவும் வாயப்ப விரைந்தோடித்
தடியாவும் புகுந்தளைந்து தன்பாணி யாற்றழுவி
முடியாத புனற்பொன்னி முழுதோம்பப் பழுதகன்று
படிமேவு நலநதழைக்கும் பான்மையது சோணாடு உ

உறவிசையும் பிறவிகதி யுதவுமூ ரொடுங்காட்சி
பெறவிசையுங் கதியளிக்கப் பெறுமூரு மகந்தழுவிப்
பிறவியற முயன்றுபொறி பெரிதடக்கி யுளமயருந்
துறவியரை நகையாடுந் தூய்மையது சோணாடு ந

மருட்பகைமா லையன்றோ டறைதேட மறைந்தரு
மிருட்படுநஞ் சணியுமிடற் றெம்பெருமா னெஞ்ஞான்று
மருட்படுமைந் தொழிற்றிறமா யமைபுநட நவின்றமரப்
பொருட்படுமெய்த் தவம்புரிந்து பொருந்துவது சோணாடு ௪

நிறமண்டு பலபகடு நெடுங்களத்துப் புகவுகைத்திட்
டறமண்டு கதிர்த்தலைதா ளறக்கதிர்வா ளொடுதடிந்து
புறமண்டு கருமள்ளர் போர்புரிவ தலதுபகை
மறமண்டு மள்ளர்செய்போர் வயாநாடு சோணாடு ௫

வண்டுழாய்த் தொடைமுடிக்கு மணிமவுலி மறைக்கிழவ
னண்டர்கோன் கநதருவ ரமரர்முனி வரரியக்கர
மண்டுமனக் குறைதீர வணங்கிவழி வழியடிமைத்
தொண்டுபடும் பலதளிகள் சூழ்நாடு சோணாடு ௬

ஆறுடைத்தண் பணைவளமு மலைவளமு மகன்கானக்
கூறுடைத்தாம் பெருவளமுங் குன்றகத்துப் பலவளமும்
வேறுடைத்தாம் பலவளமு மேன்மேலு மெலிந்திரக்குஞ்
சோறுடைத்தென் றுலகோதுந் தொன்மையது சோணாடு ௭

ஆங்குயிர்போ மான்கன்றுக் காகவருங் குலமகவை
யோங்குதேர்க் காலினெரித் துயிர்போக்கும் பெருநீதி
வீங்குபுகழ்ச் சோழர்பலர் மெலிவுகத்தம் மேம்புயத்துத்
தாங்கிமுறை செய்தளிக்குந் தன்மையது சோணாடு ௮

மழைவறந்து பலநாடும் வறங்கூர வருங்காலும்
தழைதருகா விரிபுரந்து தலையளிக்கும் பயிர்வளமும்
விழைதருமப் பயிர்வளத்தான் மேலோங்குங் குடிவளமும்
பிழைதபமேன் மேலோங்கும் பெருமையது சோணாடு ௯

வானாடர்க் குணவுதவு மகச்சாலை பலமல்கித் .
தேனாடு மலர்பொதுளுஞ் சிவதீர்த்தம் பலசெறிந்தங்

காணாத வாழ்வுதவு மரன்றானம் பலவமைந்து
மேனாட்டுக் கில்லாத மேன்மையது சோணாடு ௰

வேறு

நீறு பூசு நிமல னுருவென
வீறு மஞ்சு விரிதிரை மேய்ந்துபுண்
ணாறு வேழத் துரியுவன் மேனிமே
லேறு கோல மெனவிருண் டார்த்தவே ௧௧

அளைபு கூஉ மெருண் டடைப்ப வரிக்குரால்
விளைய நீர்த்துளி வேட்டபுட் பாட்டொடு
களிசி றைப்புடைத் தாட னயம்பட
வளியெ ழுந்து மலர்க்கிளை சூழுமே ௧௨

வடித்த வாலொளி மஞ்சு கறுத்தெழீஇத்
தடித்து வாள்விதிர்ப் பத்தடந் தாழைதான்
பிடித்த வாளொடு பேர்வின்றி நேரெழும்
பொடித்த தாங்கழற் கோபம் புலிக்குமே ௧௩

கணைந்த பூழீஇயெழு கார்நிரை கண்டுழித்
தணைந்த மங்கையர் தன்மை குயில்கொள
மணைந்த மங்கையர் மாட்சிமைக் கொண்டரோ
வணைந்த வூர்த மணிமயி லாடுறும் ௧௪

கூர்ந்த வெண்ணிறக் கோலக் குலமுகி
லார்ந்த வாழி யணிநிற மாகலா
னோர்ந்த தூய நிலைப்பெரு மாந்தர்க்குஞ்
சார்ந்த கோலந் தழைப்பது தக்கதே ௧௫

அரவ மிஞ்ச வகன்விசும் பாறெழீஇப்
பரவி யோங்கு பசுமுகில் பார்மக
ளாரமி சைக்கொள வும்ப ரெடுத்திடா
விரவு பூந்துகில் மேல்விரித் தொக்குமே ௧௬

வெடித்து விண்ணம் விழுமென மேலெழீஇ
யிடித்த காரொலி கேட்டொறு மேங்குவ
அடித்த ளைப்படச் சோர்ந்துயிர் வீவன
படித்த லைப்படு பாந்தட் குலமெலாம் கஎ

வைய மங்கை மணிக்குயம் போலெழு
சைய மால்வரைத் தண்குவ டெய்தபு
மையன் மால்கரி வண்கை நிரைத்தெனத்
துய்ய தாரை சொரிந்தன தூமுகில் கஅ

கருமு கிற்குலங் காண்டொறுங் கோடலவ்
வருவ ரைக்க ணரும்பவிழ்த் தோங்குவ
வுருமி டிக்கஞ் சுறுதணர்ந் தம்பர்போம்
பரும ணிப்படப் பாந்தளொப் பாமரோ கசு

கூடு காரொளிக் கொண்டல் கரியவன்
பாடு சையம் பறம்பு படர்சிறை
யூடு போழ்ந்தரிந் தங்குறப் போஞ்சத
கோடி யொக்குங் குளிர்மழைத் தாரையே உ0

மாக மேறி வளரு மணிவரை
வேக யானையும் வெங்குர லோடுவீழ்
மேக மாலையும் வேற்றுமை காட்டுறா
நாக வாழ்க்கை நயக்கு மிரண்டுமே உக

கருவி வானங் கதழுறை சிந்தவீ
ழருவி மாலை யகன்வரைத் தாழ்சுனை
மருவி வீழ்வன மாசுணக் கூட்டந்த
முருவொ டுங்கி யளைபுக லொக்குமே உஉ

மோது வெள்ளரு வித்திரை முற்படு
தாது ராகந் தமனியம் பன்மணி
போது மாலை படப்புடை போக்குவ
வோது கம்பல மொப்பவில் வீறுமே உங

தெய்வ வேழங் கறுத்த திறமென
மைவ ரைக்கட் கறுத்து மழைபொழி
தூய்ய காரது தொல்லுருப் பெற்றென
மெய்வெ ளுத்து விளங்கின விண்ணெலாம் ௨௪

சோல மைத்துங் குறிப்ப வெளுத்துமவ்
வால முண்டஞ் சமுதம் பொழிந்தும்விண்
மேல மன்று விரிந்து விளங்குகார்ச்
சீலஞ் சித்தர்தஞ் சீலமொ டொக்குமே ௨௫

வேறு

தாழ்வரைச் சுனைக டோறுந் தத்துவெள் ளருவி யோடு
காழ்படு கோட்டு வேழக் கருமதக் கலுழி நைமிக்
கூழ்படக் கலக்குந் தோற்ற மொலிதிரைக் கங்கையூடங்
காழ்படு களிந்தக் குன்ற மளித்தநீ ரனுக லொக்கும் ௨௬

திருமணிக் குழைய ளிப்பச் செருந்திதேங் கமழு ஞாழல்
வருமணி முழுது நல்க மணிமருண் மலர்ப்பூங் காயாக்
கருமையஞ் சனம ளிப்பக் கண்ணடி கோங்கு காட்ட
வருகடற் கொழுநற் புல்ல மணவணி கொள்ளும் பொன்னி ௨௭

சுடர்ப்படு திலக மின்னத் தொகுமணி வளைபு லம்பத்
தொடர்ப்படு தாமந் தாழச் சூழற லளகஞ் சோர
வடற்கயல் விழிபு ரட்டி யாரமு மகிழு நாறக்
கடற்கொழு நனைமு யங்கக் காவிரிக் கன்னி செல்லும் ௨௮

குழையுட ஞாரந் தாங்கிக் கோழரைக் காஞ்சி பூண்டு
விழைதகு வண்டொ லிப்ப மேதகு பவளச் செவ்வாய்
கழைமணி மூரல் பொற்பக் காந்தளஞ் செங்கை வீசித்
தழைகடற் கொழுநற் புல்லத் தண்புனற் பொன்னி சாரும் ௨௯

வங்கிய ஞிமிறி யம்ப மகரயாழ் வண்டு பாடப்
பொங்குபல் லியமுந் தண்பூம் பொழிற்படு தேனி யம்பத்

தங்கிய தும்பி யீட்டஞ் சதிபடு கானங் கூட்ட
வங்கடற் கொழுநன் றேள்வேட் டாங்கெழுந் தேகும் பொன்னி

கொலைபடு சுறவுக் கோட்டுக் கொழுமடற் றாழை யோடு
குலைபடு சினைவ ருக்கை குடமுழா கொண்டு சூழ
நிலைபடு பாட லககா னிரைசிறு சின்ன மேந்த
வலைகடற் கொழுநற் காண்பா னெங்கெழும் பொன்னி யாறு ௫௧

குடிஞைவின் கிழிக்குங் கோட்டுக் குன்றகத் தெதிர்ம ழுந்து,
துடியொடா குளிய டுப்பத் தொகைப்படு நாரை யன்றில்
மடிவொரீஇ வயிரி யம்ப மணிக்கடற் கொழுநற் புலலக
கடிமணக் கோலங் கொண்டு காவிரிக் கன்னி செல்லும் ௫௨

கந்திசா மரைய சைப்பக் கடுக்கைபொன் மாலை நாற்ற
நந்துபூம் பாளைத் தெங்கு நகுமுத்த வடக்தொ குப்பப்
பந்தியிற் பொலியுங் கிள்ளை பரம்புதோ ரணமி ரைப்பச்
சிந்துவாங் கொழுநற் புல்லத் திசைப்புனற் பொன்னி செல்லும்

குருவளர் மலர்ப்பூந் தோன்றி கொழுஞ்சுடர் விளக்க மாட்டத்
திருவளர் போது புல்லிச் செறிந்தபா சடைப்பூங் கஞ்சங்
கருதிரைத் தடாக நீராஞ் சனமுறை தவாதெ டுப்பப்
பொருகடற் கொழுநற் புல்லப் பொன்னியாங் கெழுந்து போகும்

தடவரை வேங்கைப் போது தமனியந் தண்முத் தத்தோ
டிடமுடி விளங்க லொப்ப விருப்பையம் போதோ டேய்த்து
மடவியர் மெய்ச்சு ணங்கின் மாதளி ரொடும டுத்துங்
கடமலி சுரங்க டந்து காவிரி கடுகப் போமால் ௫௩

களிக்கரு வண்டு நெல்லிக் கனியும்வெவ் வேறு புல்லித்
தளிக்கெழுந் தமருங் காந்தள் சார்கரு வட்டு மற்றும்
பளிக்குவட் டும்பி டித்த பாவையர் செங்கை யொப்பத்
தெளிக்குநீ ரும ருங்குந் திரைக்கையா லொதுக்கிச் செல்லும்

நீடலி னிருண்ட கூந்த லீரா மகளிர் செங்கை
யூடலி னுடைந்து வீழு மொளிவளை சிதறி யாங்கு

மோடலின் முறித்துச் சிந்தி யொலிதிரை யுகுப்ப வெங்குங்
கோடலி னிதழ்க்கொ ளக்கிக் குறுகுமக் குமரி தீர்த்தம் ௩௭

தானமார் பழுவட் கோடுந் தடக்கையுஞ் சார்த்திட் டாங்கு
மேனலங் கதிர்பு ரட்டி யிலங்குவேய் முளைப தித்துக்
கூனவி ரவரைப் பைங்காய்க் குலையொடு கொளக்கொ ளுத்திக்
கானக முழுது லாவுங் காவிரிக் கலுழி தீர்த்தம் ௩௮

கற்சுனைக் காவிப் பூவுங் காணமர் தளவப் போதும்
பொற்கொடி யார்மு கத்துப் பொலிவிழி நகையி ரண்டும்
விற்பட விளங்க லொப்ப விரைமலர்க் கமலத் துய்த்து
வெற்பிடைப் பிறந்த பொன்னி விளைவயன் மருதஞ் சாரும் ௩௯

உறுமணி வரன்றி யோடு மொலிதிரைப் பொன்னி யூடு
நறுமலர் மேயப் புக்க நள்ளிரு ணிறங்கூர் மேதி
மறுவறு புண்ட ரீக முண்டு மணிவரைப் பொழிந்த பைங்கார்
தெறுகதிர்க் கனலி காயச் சென்றுபுக் காட லொக்கும் ௪௦

சிந்துரச் செவியுங் கோடுஞ் செறிந்தொரு வழிக்கி டந்தாங்
குந்துதா மரைய டைக்க ணுறுசுவைக் கதலி யேந்து
நந்துறு கனிபு ணர்த்து நவ்வியஞ் செவிபு ணர்த்தாங்
கந்தில்வேய்ம் பாளை யுய்த்து மகன்புனற் பொன்னி யேகும் ௪௧

கண்ணனு மயனுஞ் செய்ய கனலியும் வலாரி யோடு
புண்ணியப் புனலென் றுன்னிப் பொருந்தவந் தாட லொக்கும
நண்ணிய பூவை கோங்கு நறைபடு செருந்தி காஞ்சி
வண்ணமா மலர விழ்த்து வாரியுண் மயங்கு காட்சி ௪௨

புலியடி யுகிரோ டொன்றிப் புணர்ந்துறும் பொலிவு பொற்பப்
பொலிதரு வாழைப் பைங்காய்ப் பூங்குலை ஞாழற் போதுண்
மலிவுறக் கான லெங்கும் வயின்வயி னிறுவிப் போந்து
கலிகெழு நெய்தல் வேலி காவிரி கலக்கு மன்றே ௪௩

நத்தமுந் துகிரு முத்து நளிசுடற் கொழுந னேந்தி
வைத்தெதிர் கொண்டு தாழ்ந்து வரைதிரைக் கையிற் றூங்க

முத்தவெண் ணகையார் கொங்கை முகட்டிடு துகிலோ டொப்பத்
தத்துநீர்ப் புளின மேறித் தாழ்வீழ்ந் தேகும் பொன்னி ௪௪

முத்துறழ் மணல்ப ரம்பி மொய்த்தெழு புளின மெல்லா
மத்தனார் கைலை யொப்ப வதுதழீஇ யொழுகும் பொன்னி
வைத்தவக் கைலை வெற்பின் வைகிய பண்ணை மாட்சி
நித்தமுங் கண்டோர் யாரு நினைப்பமே னிமிர்ந்து தோன்றும்

நாகவேந் தன்று வைக்கு நந்தன வனம்பு ரப்ப
மாகமேற் றிரைசு ருட்டி மண்ணிடைத் தன்னை யுய்ப்ப
வேகதந் தத்தார் கொண்ட வியலுரு வெனவி சைந்து
காகமேற் பறப்ப நெய்தல் காவிரி கலந்து செல்லும் ௪௬

மின்னுமிழ் நறுவீ வேங்கை மேதகு கோங்கங் கொன்றை
துன்னிய பிடவ ஞாழல் தொகுமலர்ச் செம்பொ னெல்லாம்
பொன்னியென் றுரைக்கு நாமப் பொருள்புலப் படுத்தல போலத்
தன்னிரு கரையு நீத்தந் தலைத்தலை யொதுக்கி யேகும் ௪௭

மைம்முகில் பருகிக் கால வரும்பெரு வாரி நீத்த
மிம்மென விழிந்து சென்றவ் விருங்கட லியையப் புல்லி
யம்மணி நீரொன் றாகி யமைந்ததிங் கியார்க்கு மன்பாற்
றம்மினந் தழுவி வைகுஞ் சால்புமே தக்க தன்றே ௪௮

பூவிரி பொழிற்சோ ணாடு புணருடன் றுலகம் போற்ற
மேவிவண் பொன்னி நாமம் விளக்குசெம் பொருண்மேல் வீற
நாவலர்க் குரைக்க லாகா நலந்தழீஇ யொழுகு நன்மைக்
காவிரிப் பெருமை யாவர் கட்டுரைத் திடவல் லாரே ௪௯

குறிஞ்சி
வேறு

ஒன்ற முந்திய வுரிப்பொரு ளவற்றினு முயர்வா
லென்று முற்படு புணர்ச்சிகைக் கொண்டமைக் கேற்ப

மன்ற மேம்படு மைவனைத் தினையுளு மாட்சி
குன்று றுநடு நாயக மாயது குறிஞ்சி ரு0

தெளிக்கும் பல்பொறிச் சித்திரம் பூத்தழல் சிறப்ப
வளிக்கு முற்படு மணம்பிடித் தறிந்துள மறுகக்
களிக்கும் பூநறுந் தற்றுமபியஞ் சுமநலங் கலந்து
துளிக்கு மஞ்சசூ ழடுக்கல்வேங் கைக்குலந் தொகுமே ருக

பூக்கு நாகமும் புகர்முக நாகமும் புகமே
ஊக்கு நாகமு முழல்கரு நாகமு மொன்ற
மேக்கு நாக முந் தழீஇப்பல நாகமேல் விறக்கு
மாக்கு மொற்றுமை யுள்வழி யெவர்கலந் தமரார் ருஉ

காக்கும் பைம்புனக் கிளிமயில் கொடிச்சியர் கடிவார்
போக்கு மாற்றங்க ணவின்றனர் புடைபடப் போகார்
தூக்கு தட்டையுந் தழலையுங் கைக்கொண்டு துரப்பார்
தேக்கு தங்கிளை யெனப்புறம் புகாமையுட் செறிந்தார் ருங

வேங்கை யென்றுகொ லாரழற் கொழுந்தென வெருவிப்
பாங்கு பூத்துகு கணிமலர் கைப்படப் பற்று
தோங்கு மாமழை யுடுத்தெழு மாமலை யுச்சி
தூங்கு மாலைவெள் ளருவிநீர் கருமந்தி தாவும் ருச

தீத்த ழைத்தகட் சினப்புலி கைப்படச் செறித்துக்
கோத்த கோட்டியம் போன்மெனக் குன்றவர் குறிப்ப
மீத்த லைப்படு வேய்முலை யுட்புகு மேகம
பூத்த வேங்கைமேற் றுரைநான் றெழுகமேற் பொலியும்

இலங்கு பொன்னலம் பூத்துகு கணிமல ரிசைப்ப
வலங்கு ஞாயிறு பளிங்குமே கலையகத் தலரத்
துலங்கு மண்டல ஞாயிறு சூழ்நலந் தொகுப்ப
விலங்கல் யாவையும் பொருவன தடவரை மேரு ருசு

வேறு

முழைசூழுந் தாழ்வரைவாய் முரட்புலிப்போத் துளமழியப்
புழைவீழும் பனைக்கைமமாப் பொரும்பூசல் புறநோக்கக்
கழையேறி வெய்ங்கானங் கனல்கதுவக் கண்டுகரு
மழைதாழக் காருக மகிழ்தூங்கு மலைச்சாரல் ௫௭

வழிவிலங்கி ஞாயிறுதாழ் வரைநடப்பக் கழைகிளைத்துக்
குழிபடத்தாழ்ந் திருடூங்குங் கோலநெடு விடரளையுட்
கழிமடப்பே டுளமகிழக் கங்குலெனக் கடும்பகலும்
விழிபடைத்துக் குரால்கலந்து விளையாடும் வெற்பெல்லாம் ௫௮

வரையருவி முடியிழிந்து வழிந்துவர மணிப்பாந்தள்
தரையருவக் கீழிந்து சார்வதெனத் தலையெடுத்துக்
கரைபொருநீர் குதிப்பொழிந்து கற்சுனையிற் புகக்கண்டு
புரையளையுட் புகுந்ததெனப் புலந்தழுங்கும் புனமஞ்ஞை ௫௯

தர்முமழை புகையாகத் தழல்படுவெய் வனங்கதுவி
வீழுமழல் கொடிச்சியர்கை விசைக்கவணை வெடித்தகல்விண்
போழுமுழு மணிபுனஞ்சூழ் புள்ளோப்பு நலம்புணர்ப்பச்
சூழுமடுக் கத்தெண்கு துடிதுடித்துத் துள்ளிவிழும் ௬0

விரையேறு மலர்த்தோன்றி விளக்கேறும் வாட்போக்கி
யுரையேறு புகழீங்கோ யொழுகுமணிப் புனலருவி
திரையேறு மணிகொழிக்குந் திரிசிராப் பள்ளிமுதல்
வரையேறு கலந்தழுவி வளர்குறிஞ்சி வளஞ்சிறிதோ ௬௧

பாலை

வேறு

உளம்படு புணர்ச்சிப் பின்ன ருறுமுறைப் பிரிவு கொண்டு
களம்படு பொலிவுக் கேற்பக் காமரு புணர்ச்சி கொண்டு
வளம்படு மலைக்கு றிஞ்சி மரீஇப்புறஞ் சூழ்ந்து மாறாத்
தளம்படு வளங்கள் சாலத் தழைப்பது பழிப்பில் பாலை ௬௨

தாங்கருந் தாக வெப்பந் தணியவுண் டுளங்க ளிக்கத்
தீங்கனி யுருக்கு நல்கி செறிந் திருந் தாறிச் செல்ல
நீங்கரு நிழல்படுக்கு நெறிப்படு வார்க்கு வாகை
யோங்குதாள் வருந்தா தேகக் கூர்ம்பரற் குவிக்கும் பஞ்சு ௬௩

அழன்றெழு பரிதி வெப்பத் தாற்றரு புலர வீழ்ந்து
கழன்றெழு கள்ளிச் செய்பொன் கடுவளிச் சூறை யுந்தச்
சுழன்றெழுந் தெங்கும் வீழுந் தோற்றமச் சுரஞ்சூழ் போந்து
நிழன்றெழு கானல் யாற்று நீரறத் தூர்ப்ப தொக்கும் ௬௪

அரம்படு நிம்பங் கான லறற்கலங் கூட்டு மம்பொன்
சிரம்படு கள்ளி காட்டுஞ் செழுந்தழல் சுரந்தி ருத்து
முரம்படு சூறை யூது மொலிக்குழ லொக்கு மோவாக்
கரம்படு மழற்கோற் காட்சி கதிரவன் படும்பொற் கொல்லன் ௬௫

வேறு

புறத்தவரு னினுந்தமது புல்லியலூண் புனிதமென
நெறிப்படுவார் பொருள்பறித்து நெடும்பதியுட் புகுந்தலைத்து
மறத்துறைநில் லாமறவர்க் கறிவுகொளுந் துவபோன்று
சிறைப்புறவம் பரன்மடிக்குஞ் செவ்வியது திருந்துசுரம் ௬௬

கரிகடுக்கும் புயலுழுங்கக் கனன்மண்டு கடுஞ்சுரத்து
ளெரிதெழுந்து படர்விண்மீ னகல்விசும்பு சுடர்கொழுந்த
விரிதழன்மேக் கெழுந்துசுட வெம்பிவிழு வனபோலப்
பொரியுமரை நெட்டுருப்பை பூவுதிர்க்கும புறமெல்லாம் ௬௭

பார்வேட்ட வீட்டுநெறி பாழ்ஞ்சபயக தொறுநாடுஞ்
சீர்வேட்ட நினைவினர்போற் செறிகானற் றடைநதேகைப்
போர்வேட்ட வில்லெயினர் புடைதொடர்ந்து சுழன்றிளைத்து
நீர்வேட்ட நாப்புலர்செந் நிலஞாளி தொடர்ந்தோடும் ௬௮

தொடிபடுதோ ளெயிற்றியர்கண் சூழ்புருவ நலங்காட்டி
வடிபடுவாய்ப் பகழிகொடு மரம்புகுந்தோ றகங்குழைப்பக்

கொடிபடுபோர் முடித்தெயினர் குழுநீவி குலமுன்றிற்
றுடிபடுத்துப் பலிநிரப்பத் தொகுவென்றி சுரம்பயக்கும் ௬௯

அன்பேறப் புணர்கொழுந ரகன்றவழி யணங்கனையார்
வன்பேற விருந்தறழீஇ வயங்குழை மைக்கேற்பத்
துன்பேறு பிரிவேகொள் சுரஞ்சூழ்ந்து புறங்கிடப்ப
இன்பேறு மாமாய னிருப்பேறு மலர்ப்புறவம் ௭0

மாவேறு மலர்க்காயா மருங்கேறி வளரேறு
சேவேறு கண்ணனொடு செறிந்தடர்க்கும் திறங்காட்டும்
பூவேறு குருந்தேறிப் புறம்பொளிந்து பொலிபூவை
காவேறு குருந்தொசிக்குங் கண்ணனுருக் கவின்கூட்டும் ௭௧

சுரிகுழலாய்ச் சியர்கடையுந் தொறங்காழித் தயிர்குழறத்
திரிதருமத் தொலிகேட்டுச் சிறுபுலியென் றுளமழுங்கப்
புரிபடுநா மணிபுணர்தாட் புனிற்றாகன் றழைத்திரங்க
விரிகதிர்மண் டலந்தோன்றி விடியுமிருண் மழைக்கங்குல் ௭௨

புடையடுக்கு மிதணேறிப் பொதுவர்நடைப் பொலிவுடனே
விடைநடக்கு நடையழகும் வேறாகக் காணாது
தொடைமடுக்குங் கருங்கூந்தற் றொறுவியர்தந் துணைக்கருங்கட்
கடைமயக்க விடைதழுவல் கண்டுவப்பார் கானெல்லாம் ௭௩

துள்ளியசிற் றான்கன்று தொறுவத்துட் டொழுவியர்கைக்
கொள்ளுமணிப் பாற்குடந்தாய் கொழுஞ்செருத்தலெனக்குறித்துத்
தள்ளியிடித் துடைத்தோடத் தடம்புறவந் தொறுஞ்சாயும்
வெள்ளியபால் வழுக்கேறி விழுந்தழுங்குங் குறியமுயல ௭௪

வீங்காலம் புயல்பருகி விண்ணேற மெய்சோர்ந்து
தாங்காது தணந்தமருந் தையலார் தண்ணாறுதம்
நீங்காது பொழியவுந்தா நெட்டுயிர்த்துத் தளர்வேறப்
பூங்கானத் திறும்பூது புறப்புகுதும் புன்மாலை ௭௫

வேறு

காய மெங்கணுங் கறுத்ததிர்த் தெழுவகார் மாலை
யாயர் வேய்ங்குழற் கான்குலந் தொகுமந்தி மாலை
மேய சேமணி விளைவிக்கு மகளிர்க்கு மாலை
பாய கொன்றைகள் பரப்புவ பொன்மலர் மாலை எசு

திருவிற் றீர்கலாத் தொறுவியர் மருங்குல்போற் செங்கை
பருமத் தோடமு குறத்தழீ வைகலும் பயிலு
முருவச் செங்கைபோ லுயர்குடஞ் சுட்டின முவப்ப
மருவுற் றோங்கிய தொழுவமுங் கன்றுலி மாறு எஎ

வாங்கு பூங்கதிர் வரகொரு புறம்புக மலியும்
தூங்கு காயவ ரைக்குல மொருபுறஞ் சூழும்
வீங்கு சாமையுந் துவரையு மொருபுறம் விரவும்
பாங்கு சொன்னலும் பயற்றொடு மொருபுறம் பரவும் எஅ

ஆயர் மங்கையர் பலரொடும் பலவுரு வமைந்து
மாயன் முற்பக லாடிய வண்ணமுண் மதித்து
நேய மேம்படு பொதுவியர் நெஞ்சக நெகிழப்
பாய பூவைகள் பற்பல பசுமலர் பரப்பும் எகூ

நீண்ட பல்கனி நிரைநெடுஞ் சடையென நெருங்க
வீண்டு தண்ணிழல் வளம்விழைந் தாங்கம ரேறு
தூண்டு வெள்விடை புடையடுத் தமர்நலந் தொகுப்பப்
பாண்ட ரங்கனிற் கொன்றைநின் றவிழ்ப்பன பல்பூ அ0

மதும ணங்கெழு மாதவி வகுளநீண் மௌவல்
புதுவ ளம்படு பிச்சியா திப்பல பூவு
முதுவ ணம்பல மூக்கொடு மோநதெனை முகிழ்க்கும்
கதுமெ னச்சுரும் பலம்புபன் மலர்குமிழ்ங் கானம் அக

மாயன் வெண்டிரைப் பாற்கடல் வளமெலா மறந்து
மேய தன்னிடந் தணப்புறு தமர்நலம் விரும்பக்

காய முற்படு நறுஞ்சுவைப் பாறயிர் கடையுந்
தூய வெண்ணெயுங் கொண்டது முல்லையஞ் சூழல் ௮௨

கள்ளு லாந்தொடைக் கடுக்கைவே ணியர்திருக் காட்டுப்
பள்ளி யின்னொடு மதிற்றிரு நெடுங்களப் பதியோ
டுள்ளு நம்பெரு மான்றளி பற்பல வுவப்பக்
கொள்ளு முல்லைசெய் பெருந்தவ முரைப்பருங் குரைத்தே ௮௩

மருதம்

வேறு

முந்துமுறை யழிபிரிவான் முனிந்தூடன் முறைதழுவி
நந்துமுறை மைக்கேற்ப நல்லார்க ணண்பொருவா
வுந்துமுறைப் படுபிரிவா லுகந்திருத்த லுறுமுறைமை
தந்துபொலி வளமுல்லை சார்ந்தமருந் தடமருதம் ௮௪

பாருரு மன்னர்முதற் பலர்வாழ்வுந் தன்வாழ்வு
மேருரும் பெருவாழ்வே யெனுந்துணிவு மேற்கொண்டு
சீருரு மூவுலகுந் திருவூரப் புரந்தாளுந்
தாருரு முடிவேந்தன் றலையளிக்கப் படுமருதம் ௮௫

யடங்காத பெருவென்றி மகவேந்தன் றலையளிக்கு
மிடங்காணென் றவன்பொருட்டா விரும்புவியு ளணையுமுற
வடங்காது மனங்குழைப்ப வகன்குளமுந் தடங்காவு
முடங்காய பழனமும்புக் குவந்தணையுங் காவேரி ௮௬

வேறு

விழிகளா யிரம்ப டைத்த வேந்தனுக் குவகை வீங்கப்
பழிதபு பழன மங்கை பலவிழி படைத்திட் டாங்குச்
சுழிமலிந் தலைமேல் வீசச் சுருட்டுநீர்த் துறைக ளெங்கும்
பொழிமதுப் புண்ட ரீகம் புதுமலர் பலவி ரிக்கும் ௮௭

வேறு

திருநுதலார் புனல்குடையுஞ் சிறுவளைக்கைப் புனற்பறைக்கு
வெருவருபுள் ளரவமெழ வெள்வாளை வெடித்தேறிப்

பருவமுட மடற்றெங்கம் பழமுதுப்ப மலர்குதட்டுங்
கருநிறங்கூர் பேதிமிளங் கரையேறும் புனல்வாவி ௮௮

வேட்டணுசுந் தங்கரும வினைமுடித்து வேறுவார்
கூட்டரவு பொருவைகலங் கொளப்பொலிமூ தூர்தோறு
நாட்டுதிரு மடந்தையுமுண் ணயக்குமனைக் கிணற்றுழ்ந்து
பூட்டைபுனன் முகந்தேற்ப புறம்போந்து துலாம்பொலியும் ௮௯

வேறு

பருவநோக் கியவேல் வேந்தர் பகைநினைந் திருந்த பான்மை
பொருவவண் குரண்டம் பல்ல புனற்றுறை பொருந்த வைகும்
வருநெறி புணரா தன்னூர் மாட்டெழுந் தழியு மன்னர்
தருபடை யெனமேற் றுள்ளிச் சாலவாய்ப் படுவ தண்மீன் ௯௦

வேறு

கனைத்துவண் டிமிரு மாம்பல் கடமே முதல காட்டி
மனைக்கிழத் தியரி னீங்கி வரைவிலார் மனையை நோக்கித்
துனைத்தடம் பரிந்தே ரூருந் தொடுகழன் மைந்த ருள்ள
மனைத்தையுங் கவரும் பொற்பா னகன்பணை விளங்கித் தோன்றும்

களம்படு கழைக்க ரும்பு கானற்பூங் கதிர்வேல் காட்டத்
தளம்படு கந்தி வெண்பூஞ் சாமரை யெடுத்த சைப்பக்
குளம்படு கமலப் போது கொழுஞ்சுடர் விளக்கங் காட்ட
வளம்படு மருத மங்கை வைகலு மாசி ருக்கும் ௯௨

உவர்ப்புன லுண்டு கொண்மூ வுமிழ்தரு நறுநீ ருண்டு
துவச்சுவை படுநீ ராகத் தாந்தரு தன்மை யெல்லாம்
நவத்தெழுந் துலவுங் கொண்மூ நன்றுகண் டுவப்ப நல்க
நிவப்பபோல் விண்டு மூவு நெருங்குழப் புடைக்காய்த் தெங்கு

ஆங்குழு மள்ள ரார்க்கு மாவங்கேட் டஞ்சு நீர்நாய்
பாங்கெழுந் துகளக் கம்புள் படர்சிறைக் குருகு தாரா
தீங்குரா ஞார யன்னஞ் சிறையடித் தெழுமு ழக்கம்
வாங்குநீர்த் திரையொ லிக்கு மாறுமா றுகி மன்னும் ௯௪

வேறு

பருகு வன்னநண் பொரீஇயவர் பாத்தையிற் பிரிவு
திருகு நெஞ்சகந் தீயெழக் குடைதலிற் சிகைத
யுருகு தையலா ரிமவெலா முள்ளுறுநைடக் தொல்கக்
குருகி யங்குவ கோளிணர்ப் பொதும்பரங் கூட்டம் கூரு

நந்து காவிரி நதிபல கால்பட நடந்து
முந்து பன்மத குட்பட விராய்ப்புற முற்றச்
சிந்து பூம்புனல் கழனியும் பழனமுஞ் செய்யும்
வந்து முற்றிய காட்சிகண் டெழுந்தனர் மள்ளர் கூசா

நாற்றி சைப்படு பலவகைச் செல்வமு நயப்பப்
போற்று மேழியஞ் செல்வமொன் றேயெனப் புகன்று
தேற்று மாண்பெனத் திசைதொறுங் கொழுமுகஞ் செறிய
வேற்றி னத்தொடு பகடுகைத் துழுதன ரெங்கும் கூஎ

திருந்து கீழ்த்திசை நின்றுமேற் றிசைசெலச் செறித்தும்
பொருந்து சீர்வட திசைநின்று தென்றிசைப் புணர்த்து
மருந்து கண்மயக் கறுமனத் துழவர்சா லமைத்து
வருந்து மாறுழி யேற்றொடு கடாநிரை மறிப்பார் கூஅ

ஏறு மேதிபு மினம்பட நுகம்பிணைத் திழுப்பக்
கூறு முட்படு கோல்வலங் கைப்படக் கொண்டார்
வீறு மேழிமற் றிடக்கையிற் பிடித்தனர் விளாவிச்
சேறு செய்துழு மள்ளர்செய் யெங்கணுந் தெளிப்பார் கூகூ

வரம்பு பட்டுழி யாவையுஞ் சிறப்பது மதித்தார்
நிரம்பு தண்பணைப் படுமணி யரித்தனர் நிரைத்துக்
குரம்பு யர்த்துவர் கங்கரிந் தொழுக்குவர் குன்று
துரம்ப டுப்பராங் குழுதொழின் முற்றுமவ் வுழவர் க00

மற்று மொப்புர வில்வழி யானவும் வரம்பு
முற்றி நிற்பினுஞ் சிறப்புறு தென்பது முன்னரிப்

பற்று மேற்றொடு பகட்டினம் பூட்டுவர் பரம்பு
சுற்றி யூருவர் களமர்செய் வினைவகை துணிந்து ௧0௧

பரம்பு செக்கெனும் வெண்மணலும் பசுமுளைப் படுத்து
வரம்பி லன்பொடு புரந்தரன் றிருமுடி வாழ்த்தி
நிரம்பு சேறுபட் டழுங்குசெய் யெங்கணு நெருங்கக்
கரம்ப யின்றுறு களமர்வித் தினர்மனங் களிப்ப ௧0௨

கலங்கு நீர்ப்படு தெளிவுகண் டனர்புறங் கவிழ்த்து
மலங்கு நென்முளைக் களவள வாகநீ ரடைத்தும்
குலங்கொ ளாள்வினை மள்ளர்நா டொறுநலங் கொளுவிப்
புலங்கொள் பூம்பயிர் புரந்தனர் தம்மகார் பொருவ ௧0௩

கலவிப் பட்டுடைந் துளமகிழ் மடந்தையர் காம
நிலவப் பூத்தவர் மதிமுகக் காட்சிமை நீடி
யுலவப் பட்டவெண் முளைப்பயிர் வெண்ணிற மொருவிப்
புலவிப் பட்டவர் மெய்யெனப் பசந்தெழீஇப் பொலியும் ௧0௪

நிறுத்த பூங்கதிர் நீலமா மணிக்குல நிகர்ப்பக்
கறுத்த பைமபயிர் சுருள்விரித் தமன்றிருள் கான்று
வெறுத்த நோக்கினர் வேரொடும பறித்தனர் வேறு
செறுத்தொ றும்பதித் தோம்பினர் வினைவகை தெரிவார் ௧0௫

பட்ட பாத்தியுள் வெறுத்தெழு பைம்பயிர் பறித்துக்
கெட்ட பைம்பயிர்ப் பாத்தியுள் வெறுத்தெழீஇக் கிளைப்ப
மட்டு நாறுவாய் மள்ளர்நட் டுவகையுண் மலிவார
நட்ட காலையி லுவகைமற் றியாவரே நண்ணார் ௧0௬

அடர்வ ளம்படு நாட்டமர் குடிவள மழிவுற்
றிடர்ப டும்படி விளைத்தெழு குறும்புபோன் றெழுந்து
சுடர்ம ணிப்பசும் பாந்தளங் குழுவொடு துணையப்
படர்ப யிர்க்குல மடர்ப்பன பசுங்களை பலவும் ௧0௭

மண்டு செய்ப்படு வான்பயிர் வளர்க்குமம் மள்ளர்
பூண்ட கங்குழைக் கும்பதிக் குல முதலாக்
கொண்ட யாவையுங் கொளும்பத மறிந்தனர் கூறக்
கண்டு மற்றவை யாற்றுக்கா லாட்டியர் கடிவார் க0அ

உருப்ப டப்பொலி பசுங்கிளை களையவந் துறுமப்
பொருப்ப டப்பொலி புணர்முலை யவர்முகப் பொலிவு
திருப்ப டப்பொலி செய்யகந் தெழுந்துயர் செந்நெற்
கருப்ப டப்பொலி முழுமதி யடுத்தமை கடுக்கும் க0கூ

ஆம்பல் பற்பல வொருகையிற் பற்றின ரழிப்பார்
தேம்பப் புண்டரீ கம்பல வொருகையிற் சிதைப்பார்
சாம்பு மெல்லியர் மகளிரென் றுரைப்பது சழக்கோ
நாம்பு கன்றது பொய்யுரை படிங்கொலோ நவிற்றீர் கக0

அலங்கு மாம்பலைப் புண்டரீ கத்தொடு மமைப்பா
ரிலங்கு புண்டரீ கத்தொடு குமுதமு மிசைத்துக்
கலங்க வைப்பரக் காரிகை யார்தடங் கரங்கள்
விலங்க விட்டவை யாவையு முண்டுகொல் விளம்ப கக௧

மடுத்த மாண்பொடு வருத்தயர்ப் பணைவுறு வரம்புட்
படுத்த சொன்னயம் படப்பொலி காண்டத்துட் பதிகந்
தொடுத்த னீக்குவர் புறபட நெடுஞ்செய்யுட் டொகுப்ப
வெடுத்து மற்றவர் மடவிய ரெனப்பட விழுக்கே கக௨

பவள வாய்ச்சிறு பிறைநுதற் கடைசியர் பலருங்
குவளை சைவல மணிச்சகீள் பங்கயங் கொன்றார்
துவளும் வள்ளையும் புன்முதல் யாவையுந் தொலைத்தார்
தவள வாண்மதிக் கதிரவாய்க் கிளர்ந்தது சாலி ககங

கட்டெ டுத்தசை வலத்தொடு பங்கயங் கழுமி
மட்ட விழ்ந்துக்க விழுந்துறு மருமலர் வஞ்சி

பிட்டி டைக்கவி னெண்ணுறிநல் லார்குழ லெழிலும்
வட்ட வாண்முகப் பொலிவுங்கொண் டமைந்தசீர் மாணும் ௧௧௪

விண்ட தாமரை மலர்களைத் தெறியமேல் விழுந்து
மண்டு செய்ப்படு கதலியம் போதொடு மலியத்
தொண்டை வாயுழத் தியர்கருங் குழல்படச் சொருகுங்
கொண்டை மேலணி வனநினைந் துழவருட் குழைவார் ௧௧௫

ஊடு மங்கையர் கொழுநர்தந் தோட்கலப் புன்ன
நீடு பங்கயக் களைகளைக் கிலையொடு நிமிர்ந்து
கூடு மாண்பெனப் பறித்தெறி பங்கயக் கூட்டம்
கோடு பைங்களை யொடுகிடந் தருகலங் குலவும் ௧௧௬

வளைந்து வெங்கதிர்ப் பரிதியின் முகட்டிடறீஇ வாட்டக்
களைந்த பங்கய மித்திரன் பகைவலி காட்டு
மளைந்த வெங்கதிர் காயவிழ்ந் தழிவுறு மாம்பல்
விளைந்த காலையி லரிபகைப் பெருவலி விளக்கும் ௧௧௭

சென்ற நாளெலாங் கொடும்பவம் புரிதரு தீயோர்
நன்று செய்வது மொருபக லயப்பரோ நலிய
நின்று பைம்பயிர் வாட்டுமப் பசுங்களை நிலம்புக்
கொன்று தம்முரு வொழிந்தபூம் பயிர்வளர்த் துயர்க்கும் ௧௧௮

ஆன்ற செய்ப்படு பசுங்களை முழுவது மகற்றி
மான்ற ளைப்படு கண்ணியர் வைகலும் வளர்ப்பச்
சான்ற பூங்கதிர் தலைநிறீஇ யுமிழ்ந்தது சாலி
தோன்று சாலிபூங் கதிருமிழ்ந் திடுவது துணிவே ௧௧௯

மீன்ற லைப்படு விண்மதி பொழிகதிர் விழுங்கத்
தான்ற லைப்படு மாறென நிமிர்ந்தெழு சாலி
கான்ற பூங்கதிர்க் காய்பழுப் பத்தலை கவிழ்ந்து
தோன்று கின்றது களமருக் குவகையுட் டுளும்ப ௧௨௦

விளைந்து முற்றிய செய்யெலாங் கிளையொலி விரவத்
துளைந்த காமநெஞ் சொடுகாந் தன்பர்முன் றோன்றித்

தளைந்த நாணொடு தலைகவிழ் தையலார் தகைய
வளைந்த தண்கதிர் நெல்லரிந் தடுக்குவர் மள்ளர் கஉக

அமையக் கூர்ங்குயங் கொளுவினன் கரிந்தன ரடுக்கி
யிமையக் குன்றமுங் கயிலையென் றிருநில மியம்புஞ்
சிமையக் குன்றமு மென்னநாள் கோணெறி செலாதுட்
குமையச் செந்நெலும் வெண்ணெலும் போரெனக் குவித்தார்

அன்று கைத்தமு தமைத்தவர் களம்புகுந் தமைப்ப
இன்று கைப்பது நன்றெனத் துணிந்துளா ரென்னச்
சென்று கைத்திடு பகட்டொடு கடாநிரை சேர
நன்று கைத்தனர் மள்ளர்போர் சிதைப்பது நயந்தார் கஉ௩

ஏற்றி னத்தொடு கடாநிரை யிடம்புரிந் தியலப்
பாற்றி னம்பறந் தறிகலாப் போர்வரை பலவு
மாற்றி வண்களம் பரவுறத் தூவுவர் மள்ளர்
தூற்றி வைகளைந் தெறிந்தனர் சொன்மலை தொகுப்பார் கஉ௪

ஆறு கூறுசெய் தொன்றுகொற் றவர்பொருட் டளித்து
வேறு மற்றவை தெய்வமு மொக்கலும் விருந்துங்
கூறு தென்புல வாணருந் தாங்களுங் கொளக்கொண்
டேறு பாண்டிலுய்த் தேற்றின ரூர்தொறு மிகப்பார் கஉ௫

அரும்பு நெல்வள மிவ்வகை விளைத்துமுன் னமர
விரும்பு பல்கனிப் பொழில்வளங் கவர்ந்துமுன் விழைவாற்
கரும்பு டைத்தருங் கட்டிசெய் துள்ளகங் களித்தும்
வரும்ப யன்கொளப் பொலிவது தடம்பணை மருதம் கஉ௬

அந்தி வெண்பிறைச் சடைமுடி யமலனா ராரூர்
முந்து மாவடு தண்டுறை வீழியே முதலா
வந்த பற்பல சிவநகர் தழீஇயமர் மருத,
நந்து மாட்சிமை சிறிதுரைத் தனநெய்த னவில்வாம் கஉ௭

நெய்தல்

வேறு

ஊடியு முணர்ந்துங் கூடா தொழிந்தவர்க் குறும்பி ரக்க
நீடிய முறைமைக் கேற்ப நெறிப்படு மூடல் கொண்டு
பீடியல் வளம்ப ழுக்கும் பெரும்பணை மருதஞ் சூழ்ந்து
நாடிய நயம்ப டைக்கு நளிகடல் நெய்தல் வேலி கஉஅ

நலிவொரீஇப் பரவர் மாதர் நயப்பவெள் வளையு முத்து
மொலிகடற் றிரைமே லோச்சி யுணங்குமீன் கவர்புள் ளோப்பு
மலியுமுப் பழப்ப ரப்புள் வாரிநீர்த் திரைபு காது
பொலிமடல் பலவிரித்துப் புடைபட நெருங்கும் பெண்ணை கஉகூ

நெட்டிலைச் சுறவக் கோடு நிரைபட நிலவி நட்டு
மட்டறத் தூங்கும் பல்காய் மணிச்சிறு கரக மேந்திக்
கட்டுளி யரும்பப் பல்பூக் கைக்கொடு கைதை நிற்ப
வட்டவாய் வளையி னீர்தூய் வருணனை வழுத்து மவாரி கங0

செழுந்தழற் குன்ற மாய சிவன்முடி தேடு மன்னம்
விழுந்துபொய்ச் சான்றாய் முன்ன மேவரு முறைவா ருள்ள
மழுந்துநண் பாகி யொன்றா யமர்தரு நலனு மொக்குங்
கொழுந்தளிர் காலுங் கைதைக் குருமலர் பொலியுங் கோலம்

அன்னமா மயனை நாடி யாலிலைத் துயிலு மாயன்
முன்னியங் கொருங்கு வைக முற்றிய வண்ண மொக்கும்
புன்னைவெண் மலர்ப்பூங் கைதை பொருந்துழிப் பொருந்துங்காட்சி
பொன்னமர் நறும்பூந் தாதுப் புனைந்தபொன் னுடை போலும்

கேடக மாமை வாளை கெழீஇயவாள் கயன்மீ னம்பு
பாடமை யிறவம் வார்விற் பரிதிரை சுறவ மும்பல்
மாடமர் கலந்தே ராக வலைபடுப் பவரா ளாக
வாடமர்க் களமே போலு மலைகட லுழுவக் காட்சி கஙங

கழியிருட் குழுவோ டொக்குங் கனைகடற் கானற் காட்சி
பொழிநிலா விரிவ தொக்கும் புதுமதிக் கூட்டம் போலுஞ்

சுழிபடு திரைநீ ரெற்றுஞ் சுரிவளைத் தொகுதி யெல்லாம்
விழிபடு தாள ராசி விண்படு மீனொ டொக்கும் ௧௩௪

அறைகடற் றிரைமு ழக்க மடங்கமீன் படுப்போர் கைச்சாப்
பறைபடு பெருமு ழக்கம் பகலிர வறாது முந்நீர்த்
துறைபடு நந்தங் கானற் றுறைபடு முத்தந் தோற்ப
நறைபடு புன்னை காலு நகுகதி ரரும்பு முத்தம் ௧௩௫

வேறு

கரைகலக்கும் புனல்சுவற்றிக் காருமணர் பிரித்தமைத்து
வரைகலப்பக் குவிக்குமுப்பு மறுவலுமம் மணிக்கடனீர்த்
திரைகலப்ப நெகிழ்ந்தொன்றுந் திறஞ்சிறிது பிரிந்துழியுந்
தரைகலக்கும பழநண்பு தழீஇக்குழையுந் தரம்பொருவும் ௧௩௬

அளித்துவக்கு நயமொன்று மறியாது பொதிந்துபிறர்க்
கீர்ளிக்குநர்கைப் பொருள்பறித்தாங் குவரிகரந் துழிநோக்கிக்
குளித்துவளை மணித்தரளங் கொடிப்பவளங் கொண்டுமுந்நீர்
நெளித்தலறி விழப்பரவர் நிரையடுப்பக் கரைதொகுப்பார் ௧௩௭

மலைகடுக்கும் புயப்பரவர் மறுபுலம்போ நெடுவங்க
மலைகடற்பூம் புனலழுவத் தாங்ககன்று மறைதொறு
நிலைபடக்கண் டுயிர்தாங்கு நேரிழையார் முகக்கமலங்
கொலைபடுவேல் விழியுருக்குங் கொழுங்கடலுண் மறைவொக்கும்

கலிதங்கு நெடுஞ்சிந்துக் கலங்கிவிழுந் திரைத்தலறப்
பொலிவெங்கும் படுமற்சம் புரண்டெழுந்து புடைதுள்ள
வலிதங்கு மீழமும்பல் வனக்கலிங்க மும்வவ்வி
மலிவங்கங் கொணர்ந்திறுப்ப வளமல்குங் கழிப்பாக்கம் ௧௩௯

மண்பாவு சாய்க்காடு வளமுல்லை வாயினகர்
பண்பொலிவு மறைக்கானம் பல்லவனீச் சரமாதி
வண்புகழ்சேர் சிவநகர மரீஇயமரு நெய்தல்வளந்
திண்புவிய லுரைப்பரிது திணைமயக்கஞ் சிலபுகல்வாம் ௧௪0

திணைமயக்கம்

வேறு

அளிபடு புனப்புள் ளோப்பு மரிவையர் கவண்மா ணிக்கங்
கிளிமுகம் பழுக்குந் தேமாங் கிளைபரன் முரம்பிற் கீண்டு
களிமய லெருத்தம் பூக்குங் கானகக் காயாக் கொன்று
வெளிபெறக் கானற் றாழை மின்னென முகிழ்க்கும் வெண்பூ

வரைத்தினைக் குரற்பி டிக்கை வளவயல் வாழை காலு
நிரைக்குலைப் புலிக்கால் கோப்ப நெடுபடு குறுங்கான் புல்லு
விரைக்கொழுந் தவரைப் பூங்காய் விழுக்குலைப் பிடிப்ப மூக்கோத்
துரைப்படு கதலி கான்ற வுயர்குலைப் புலிக்கா லோங்கும் கசஉ

அழற்சுரச் சினைமாப் போழு மகன்வய லரம்பை யம்பூத்
தழற்படு செவ்வேற் சூர்மாத் தடிவது கடுக்கு மாங்கு
நிழற்படு கானங் கோழி நெடும்புன மயிலோ டாடல்
சுழற்படு கூறி ரண்டுந் தொக்கபுள் ளுருவந் தோற்றும் கசந

மட்டவிழ் பொய்கை காட்டும் வட்டவாய்க் கமல வுள்ளம்
மொட்டவிழ் புறவ முல்லை முகைச்சொன்றி முழுது குப்பச்
சட்டநீ ளவரை தண்பூந் தமிர்தவா துருப்புச் சாரல்
விட்டெழீஇப் படர்கோ டற்கை விழுந்துமேன் மேற்குழைக்கும்

மன்றலம் பிண்டிச் செம்பூ மலிதழல் வளைய ளர்ப்பக்
கன்றழன் முரப்பு வேலி கவின்படு முருங்கை யம்பூ
நன்றுகு பொரிதொகுப்ப நறும்பனைக் கதலி பூக்கும்
வென்றிவேல் புடையி லங்க வெறிபடு மலிக்கல் வேங்கை கசரு

கொடிபடு கான்று றந்து குன்றுகூ ழவரை கிள்ளை
கடிதரு கருவி காய்ப்பக் கருங்கிளி புனம றக்கும்
தடிதுறந் தரம்பை நாகத் தடஞ்சினை தழுவச் சாய்ந்து
வடிநெடு வைவேல் பூப்ப மடங்கன்மா மறக்கும் வேட்டம் கசசு

செழுங்குரம் பணையச் சாயுஞ் செந்நெற்றாள் புறவம் பூக்கும்
கொழுங்கொடி யவரைப் பைங்காய்க்கூர்ங்குயங்கொளுவப்பண்ணை

விழுங்குலைக் கதலிப் பைங்காய் விழுக்குலைத் தாறு மேவித்
தழுங்கழிக் கைதை வெண்பூந் தடற்றுவாள் தடியச சாரும
தடவரை நாகம் பூக்குஞ் சக்கரச் சாணை பூட்டி
நடவுறக் கானற் கைதை நகுமலர் வாள்பி டிப்பத்
திடமுற முரப்பு வேலிச் செழுஞ்சினைப் பாட லக்காக
கடல்புக நறும்பூந் தூண்டிற் கணம்படுத் தழகு காட்டும் கசஅ

உருப்பொலி முரம்பி னெங்கு முயர்சினைக் குரவ மீன்ற
திருப்பொலி பாவைக் கனபாற் செழுமலர் கானக் கொன்றை
குருப்பொலி செம்பொன் கூட்டக் கோழிணர் நெய்தற் புன்னை
தருப்பொலி முத்தஞ் சூட்டுஞ் சால்பொரு மருங்கு சாரும கசகூ

விராவுவெஞ் சுரத்து நிம்ப மேதகு வணப்பி டாமேற்
பராவுபூஞ் சுவணை முற்றும் பச்சிலை யாமப டுத்தாங்
கராவிநன் றுகுப்ப நோக்கு மருவிசூழ் சாரற் குன்ற
முராவுபூங் காந்தட் செங்கை யோவற நீட்டி யேற்கும் கரு0

மடுக்குமைந் திணையின் மாட்சி வருதிணை மயக்க மாட்சி
யெடுத்துரை செய்பு மாட்சி யெவர்வலா ரினியந் நாட்டின்
நடுப்படப் பொலிந்து நாளு நாகரூர் சமழ்ப்ப வோங்கும்
விடுப்பரும் புலியூர் மாட்சி மேவர விளம்பு கிற்பாம் கருக

நாட்டுப்படலம் முற்றிற்று

ஆக செய்யுள் கஅக

நகரப்படலம்

ஆற்று மாதவச் செல்வர்கை தொழுமுக்க ணமலன்
வீற்றி ருந்தன தளியெலாங் கோயிலோ வேறு
தேற்று கின்றில முலகெலாந் தன்னையே தெளிந்து
போற்று கோயிலென் றுரைசெயப் பொலிவது புலியூர் க

பரக்கும் பண்ணவர் துறக்கமுந் துவாரகைப் பதியு
மிரக்க நந்தாழ்ச்சிகொண் டேக்கறா வுத்தம்புக ழிழப்ப
நிரக்கும் பத்தியு முத்தியு நினைந்தவா நிகழ்த்திப்
புரக்குங் கற்பகந் தழீஇயருள் பூப்பது புலியூர் ௨

அருநலங்கெழு துறக்கநா டழுக்கறுத் தழுங்கத்
திருநலம்பதி சிவபுரச் சிறப்பெலாஞ் சிறுக
விருநிலங்களி தூங்கவந் தழல்விழி யிறைவன்
பொருவருந்திரு நடநவின் றுறைவது புலியூர் ௩

அருந்து முண்டிமற் றமரருக் கம்புலி யளிப்ப
வருந்து மந்தர மசலமா மாட்சிமை மருவத்
திருந்து மாதவற் காலிலைப் பள்ளியே சிறப்பப்
பொருந்து பாற்கடல் புணர்நலம் பூப்பது புலியூர் ௪

தேவந்தன் பொற்பதி யவிழ்த்த நற்பதி விழைவார்
றுந்த ழீஇயமர் வெறுங்கங்கை தரும்பயன் றாழப்
போந்து மூழ்கினர் பெறுவது கேட்டுளம் புழுங்கப்
பூந்தி ளைச்சிவ கங்கைநீர் தழீஇயது புலியூர் ௫

வேறு

திருமலி மார்பன் றாமரைக் கிழவன்
றேவர்கோ முதற்பலர் சென்று
கருணையங் கடலைக் காண்பமென் றென்று
காத்திருந் துழறிருக் கயிலை
யிருவினைக் கோட்பட் டுழலுமூ வுலகு
மெளிதுகண் டின்பவீ டெய்தப்
பெருவெளிக் கேகின் றுடுவார் புலியூர்ப்
பெருநகர் நிகர்க்கவும் பெறுமே ௬

அந்தில்வந் திறந்தார்க் கருங்கதி யளிக்கு
மவிமுத்தம் பிறந்தவர்க் காரூர்
நந்துமவ் விரண்டு நல்வினை யின்றி
நண்ணுறு வருணைமா நகருஞ்

சிந்தனைசெய் தார்க் களிப்பது காட்சி
தீர்ந்துழிச் சிந்தனை செறியா
திந்தவா றன்றிக் காட்சியாந் திரைக்கே
யெளிதுறக் கதிதரும் புலியூர் எ

பற்பல வுலகும் பற்பலவுடலும்
பற்பல நெறிகளும் பயின்று
முற்பகன் முயன்ற பெருந்தவப் பேறாய்
முடியுமப் பேரின்ப முத்தி
பொற்பொது வுடையார் திருநடக் காட்சி
பொள்ளென வுயிர்க்கெலாம் புணர்ப்ப
நிற்பது புலியூ ரன்னது கடுக்கு
நெடும்பதி யாதுகொ னிலத்தே அ

பன்மணிப் பதக்க நடுப்படப் பொலியும்
பருமணி சிறப்புறும் பான்மை
யென்னநன் னிலத்துச் சிவனுறு நகர
மெவற்றினு மாட்சியெய் துதலாற்
சொன்மலி நாக நகரமோ ரிரண்டுஞ்
சூழ்ந்துமேல் கீழுறத் துவன்றி
யின்னகர்க் காவ னகரமென் றெவரு
மிசைத்தரு நீர்மையெய் திடுமே கூ

தேவர்வந் தடுப்பர் செகமுழு தமைக்குந்
திறம்பெறு திசைமுகத் தேவன்
மேவவந் தடுப்பன் முராரிவந் தடுப்பன்
வேண்டிய வரம்பெறு விழைவா
லாவவின் னவரு ரிந்நகர்க் குவம
ருருவ தெங்ஙன மப்பாற்
சேவமர் கொடியோன் சிவபுர மென்றே
தெரிந்துரை செயத்தகுஞ் சிறப்பால் க0

மேம்படு வானத் தருவினுக் கென்றே
மேதக வெனநனி வினவிப்
பூம்பொழில் விண்ணோ ரூர்புகப் போந்து
பொதுண்டுறப் பசுங்குயில் புறத்துத்
தாம்பரி சமரர் தையலார் நோக்கிச்
சதமகன் குயிலுருச் சமைந்து
போம்படி யசுரர் விளைத்தபோர் நினைந்து
புலம்புவ ரிருகணீர் புரள ௧௧

வேறு

திருமதி பொலியுஞ் செவ்வி தேத்தடைக் குலஞ்செ றிப்பக்
கருமழை தழைதொ குப்பக் கட்டுளி மாரி காட்டக்
குருமலர் நாளுங் கோளுங் கொளுவப்பூம் பொதும்பர்க் காட்சி
யிருவிசும் பாக விண்ணாட் டேழையர் மருள்வ ரென்றும் ௧௨

பொருவரு செந்தார்க் கிள்ளை பூந்தடப் பணிலங் கஞ்சக்
குருமலர் கோட்டுக் கோத்த கூனிருற் கொற்ற நேமி
தருநிரை பொலியுஞ் சோலை தன்வயிற் றழுவித் தோன்ற
றிருமகள் குடியா முண்மை செவ்வனந் தேற்ற லொக்கும் ௧௩

ஆழுநீர்த் தடத்து வாளை யதிர்பட வெடித்துத் தாக்க
வீழுமாந் தழைமு றித்து விழக்குடம் பொருவ ருக்கைத்
தாழுநீள் சினைப ழுக்குந் தடம்பழ மழுந்தப் புக்குப்
போழுமுப் புடைக்காய்த் தோற்றம் பூரண கும்பம் போலும்

வயம்படு சுடர்வி ளக்க மணம்படு கஞ்ச மாட்ட
நயம்படு தளவு குக்கு நறுமுறை சொன்றி கூட்டக்
கயம்படு திரைநீ ராட்டக் கமலப்பா சடைச லாவ
லயம்படு கஞ்ச மங்கைக் கயினிநீர் சுழற்ற லாமால் ௧௫

தண்டலைக் குடம்பை சேர்ப்பத் தடம்படு கமலத் தண்பூக்
கொண்டெழுந் தகல்விண் கூடுங் குருகுச்சிறை யெகினப் புள்ளு

மண்டுபூந் தடங்கஞ் சத்துள் வளர்நந்தும் பகைமறந்து
முண்டக மதிய மாறி முத்தமிட் டாட லொக்கும் ௧௬

வென்றியுந் திருவும் வாய்ப்ப வேழவில் வேந்து தம்மை
நன்றுவாம் பரியாய்ப் பூட்டு நயமுணர்ந் தாங்குக் கிள்ளை
மன்றலம் பூங்கொம் பாட மலர்மணந் திசைது ழாவத்
தென்றலந் தேர்வந் தூரச் சிறைவிரித் தெழுந்து லாவும் ௧௭

வரிக்குயில் வாய்பு தைப்ப மதலைபொற் றூம நாற்ற
விரித்தபூந் தோன்றி யெங்கும் வெந்தழல் விளக்க மாட்ட
வரித்தொகை கீதம் பாட வயங்குநீ லால வட்டம்
பரித்தெதிர் மஞ்ஞை யாடப் பசும்பொழிற் படரும் பைங்கார்

ஆணிப்பொற் றகட்டுப் பூவு மலங்குகட் டளைக்க லாக்கம்
பூணிக்குங் கனியுங் கொண்டு பொதுண்டசம்பகம்போய்ப்புல்லிப்
பேணிப்பொன் றருவார் வீழப் பிடாப்படர்ந் தலர விழ்க்கும்
வீணிற்சிந் துறுவார் வெல்ல வேறுநின் றவிழ்க்கும் வேங்கை

கடுக்கைபொன் கவிழ்க்க நீலங் காஞ்சிநன் றவிழ்க்கும் புன்னை
மடுத்தவெண் முத்தங் காலு மாணிக்க மாது ளங்கம்
படுத்துநின் றுகுக்கும் விண்சூழ் பசும்பொழிற் கற்ப வேந்தும்
விடுப்பருந் தண்பூஞ் சோலை விழைவண வெறுப்ப வீறும் ௨௦

நலமலி புலியூர்ச் செல்வ நகர்வளஞ் சொலப்பு குந்து
சிலபல பொதுவிற் சொற்றுஞ் செறிபுற நகர மென்றும்
குலவிடை நகர மென்றுங் கூறு முண் ணகர மென்றும்
புலமலி மூன்ற வற்றுட் புறநகர் புகலு கின்றாம் ௨௧

புறநகர்

வேறு

குறுகிடை யூறொரு கோட்டு வேழமே
தெறுகுவ தின்சுவை செழிப்பி னல்கலும்

மறுவறு வேழமே யெனம திக்துளம்
பெறுசெருக் கினபல பெருங்கை வேழமே உஉ

கோட்படு வினைகண்மேற் கொண்ட மன்னருக்
கேட்படு தாமலா தெறுழி லாமையிற்
பூட்கையென் றொருபெயர் பூண்ட காரண
மாட்சியின் விளக்குவ மதக யம்பல உ௩

கந்தெலா மாய்ப்பன கணையம் வீழ்ப்பன
நந்துதந் நிழல்சுளி நலத்தி னோங்குவ
முந்தவெம் போர்பயின் முறைமை காட்டுவ
பந்தியிற் பொலிவன பருஉக்கை யானையே உ௪

தமைநினைக் தன்றுகோல் சதம கன்கரி
யமைவுறு சமழ்ப்பினா லாகம் வெண்ணிறஞ்
சமைவுறு மென்னவிண் டலம ளாவுறக்
குமைவுறு வாரணக் குழாங்கை நீட்டுமே உ௫

நம்முரு வெடுத்தன னாரணப்பிரான்
மைம்மலி பொழிற்றிரு மதுரை மாநகர்க்
கெம்மையே நடாத்தினன் யார்க்கு நாதனென்
றெம்மருங் கும்பரி யெழுந்து துள்ளுவ உ௬

அனந்தமா யோங்குவிண் ணகமெ லாமொரு
தினந்தனி லளப்பன தினக ரன்பரி
மனந்தனி பிற்பட மற்றிவ் வாம்பரி
யினந்திசை யளப்பன விமைக்கு முன்னமே உ௭

வடவையென் றொருபெயர் வழங்க லென்னென
விடமென வூழியின் விராவு மங்கியைக்
கடன்மிசை நோக்குறக் கடலெ னச்செல
றிடமென வுணர்ந்தபோற் றிரையின் வாம்பரி உ௮

உருக்கொடு திசையெலா முலவுங் காலினை
நெருக்குறப் பிணித்தென நிமிரும் வாம்பரி
வருக்கமுட் பிணித்தன மந்தி ரந்தொறும்
வெருக்கொள முழங்கொலி விராவுந் திக்கெலாம் ௨௯

கலனைமேற் றம்புறங் கலந்த வீரர்மே
னிலவுவ துணர்கிலா நிலைமை தேர்ந்தபோற்
கலவிய வீரர்மேற் கலத்த றேர்குறு
பலபுர விகணனி பாய்வ பஃறெரு ௩௦

நெருங்குதேர் போந்தொறு நின்று நோக்குவார்க்
கொருங்குதோன் றுதன வோடு முன்னியோ
சுருங்கல விரைவினிற் சுழன்று போவன
மருங்குறக் கோத்தன வட்ட வாழியும் ௩௧

முற்படு தேருகு முழும ணித்திரள்
பிற்படு தேர்ப்பரி பெயர்ந்த ழுத்துறப்
பொற்பொடி யொடுவிராய்ப் புவியின் மாந்தர்தங் ௩௨
கற்படுத் திடாவகை கவினும் வீதியே

வேறு

நெடிதுநின் றிளையார் நோக்க நெறிப்பட நடந்து செங்கைப்
பிடிகடந் தெழுந்து துள்ளிப் பெருநிலப் பூழி போர்த்திட்
டடிபடுந் தோறும் வாசி யாசைமுற் றவும ளந்து
கடிதுசென் றகல்விண் கூடுங் கந்துக மெண்ணி லாத ௩௩

ஓம்புபல் வல்லிவீழ வுதைத்தெழு மரங்க டாங்கத்
தாம்பயின் றடங்கா துள்ளத் தருக்கொடு கடிது தாவித்
தேம்படு பொழில்வ ளாகச் செந்துக ளுடலம் போர்த்துப்
போம்வழி தெரியா தோடும் பூமுகத் தும்பி பல்ல ௩௪

கட்டிருள் வலிய ழிக்குங் கதிர்க்குலங் கண்ம ழுங்க
விட்டொளிர் மணியும் பொன்னும் விழைவன திருவி ராவ

வெட்டுமா திரப்ப ரப்பு மிருவிசும் புடனா டங்க
வட்டமா மாழி சுற்ற வையக நடந்தி யங்கும் ௩௫

நெடியவான் களம்பு குந்து நிரைபடு தலையுந் தாளுங்
கொடியவாள் கொண்டு கொய்து குலமலைக் கூட்ட மொப்பப்
படிமிசைக் குவைசெய் தார்ப்பப் பகடுகைத் துளங்க ளிப்ப
மடிவொரீஇப் போர்தொலைக்கு மள்ளரு மளப்பி லாதார் ௩௬

வேறு

செம்பொனாற் றிருந்தச் செய்து செறிமலை மணிகுயிற்று
மம்பொனங் கொடிஞ்சித் திண்டே ரகன்விசும் பளாவி நிற்ப
வம்புவி மேரு வொக்கு மமராங்க மாவா ரொப்பா
ரிம்பர்மற் றிஃதி யங்கு மஃதென்று மியங்கா தன்றே ௩௭

மாற்றல ரிரு ளென்பு வளர்தடி வழும்ப தாகக்
கூற்றுவன் றாத ருள்ளங் குதுகலித் துவகை வீங்கப்
பாற்றினங் கவலைகூரப் படர்நரி களிப்ப ஞாட்பிற்
சேற்றினுட் குளிக்குந் திண்காற் றேர்நிலை பல்ல மாதோ ௩௮

மலையெனச் சயந்த னங்கள் வருவன மறுகு தோறு
மலையென வாசி பல்ல வணுகுவ கண்டு தேம்பி
யிலைநமக் குயிரிங் கென்பா ரிருபுற மொதுங்கிச் செல்வோர்
நிலைபுற நிற்பர் போகு நெடுநெறி யெங்ங னென்பார் ௩௯

விந்தைபெண் மகளென் றுள்ளம் விழைவுறு ரீண்டை வீர
ரந்தில்வான் புகுந்த பின்ன ரடுக்குமவ் வரம்பை மாதர்க்
கெந்திறத் திசைவு கூடா தென்றுளம் வெருவ நிற்பார்
நந்துறு கால வேற்கு நயனங்க ளிமைத்தல் செய்யார் ௪௰

பிணம்பல நெருங்கு காட்டுட் பித்தனின் றாடல்செய்வான்
மணங்கமழ் தும்பை சூடி வருபய னென்னை யென்பா
ரிணங்குதிண் புயத்து வன்மை யிலன்கொலோ காலற் கென்று
மணங்குறு பாசந் தண்ட மாக்குமப் பயனென் னென்பார் ௪௧

திண்சிலை தண்டங் கூர்வேல் செழுங்கணை முதலாச் செப்பு
மொண்டிறற் படைகண் முற்று மொருங்கலங் கார மாகி
மண்டுறும் பகைவ ரோச்சும் வான்படை யிவர்மெய்ப் படிற்
கண்டுகுன் றெறிந்த மண்ணாங் கட்டியிற் கழியு மன்றே ௪௨

மாற்றலர் முடிவ ணங்க வரிசிலை வணக்கி நிற்ப
ரேற்றவர் சிரங்கண் மண்மே லிலங்கனு முருள மான்றே
ராற்றலி னுருட்டி நிற்ப ரடுபோராட் டண்ட மேந்திக்
கூற்றுவ னெதிர்வந் தாலுங் குலைந்துள மயரார் வீரர் ௪௩

சொலத்தகு வீரர் யாருஞ் சூழ்ந்தவ ரிடமுஞ் சொல்லு
நலத்தகு பரிமா வாதி நாற்படைத் தொகுதிக் கென்றும்
வெலத்தகு கருவி செய்வார் மேவிடம் பலவுங் கொண்டு
வலத்தவிர் புறத்த டுக்கு பாகர் வகுப்பார் யாரே ௪௪

இடைநகர்

கிளிபடு கிளவி நல்லார் கேள்வரோ டாடு மாட
மளிபடு தண்பூஞ் சோலை யனங்களு நச்சும் வாவி
களிபடு தரும மோங்குங் காமரு தானம் யாவுந்
தெளிபடு துறக்க நாட்டைத் தினந்தொறு மருட்டு மன்றே ௪௫

முடப்பிறை தவழக் கங்கை முடிமிசை முடுகி யோடக்
கடப்பருஞ் சூலந் தாங்கிக் கவின்றன மாட மெல்லாம்
விடப்பணி யணியு மோவி விமலனைப் பொருவு மாங்குப்
படப்புகு மனமவ் வீசன் பணிமுடி துருவல் போலும் ௪௬

வான்றொட நிமிர்ந்த கோல மணிகெழு மாடத் துச்சித்
தான்றனி யேகுந் திங்கள் சார்வது கண்டு தங்கை
யென்றுதந் நிழல்கா ணுமை யிருந்துகில் கொண்டு வீசி
மான்றன ரழுது சால வருந்துவர் சிறும காரே ௪௭

குளிர்மதி கண்ட ஞான்றே கொழுமணி மாடந் தோறு
மொளிர்மதிக் காந்தம் பல்ல வுகுத்தவெள் ளருவி யாலுந்
தெளிபுனல் வானக் கங்கை செறிசிறப் பாலு மங்கண்
விளிவறு வேனில் வெம்மை விராவுவ தமையா தென்றும் ௪௮

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1

தாம்பயின் மாட மேலாற் சார்முகிற் சாலத் தோடு
காம்படு பணைத்தோ ணல்லார் கருங்குழன் மயங்கு மேனுந்
தேம்படு மொழியார் மேனி செறியுமம் மழைமின் போலா
தோம்புபல் காலம் வைகு மொளிமின்னுக் குழுவு போலும் ௪௯

நகல்படப் பொலிந்த செய்ய நன்மணி நள்ளி ராவிற்
பகல்படப் பொலியு மாடப் பத்தியிற் பதித்த முத்த
மகல்படப் பகலுஞ் செய்யு மகனிலா வங்க ணீல
மிகல்பட விருள்கான் றென்றாழ் வெயினனி கரக்கு மன்றே

மழைபடு மாடம் யாவு மணிபடு குன்றம் போலுங்
குழைபடு கொடிகள் யாவுங் கூடுவேய்க் குழுவு போலும்
புழைபடு நெடுங்கை வேழம் புகுகரு மேகம் போலுந்
தழைபடு மருவி யாங்குச் சார்தெருப் பலவும் போலும் ௫௧

கன்னிவண் மாட மேலாற் கலந்துறக் கண்டு கன்னி
துன்னுவ துத்தி ரத்தின் றொடர்பினு லுத்தி ரம்வந்
தன்னமா டத்த டுக்கு மாங்கமர் கும்ப நோக்கிப்
பொன்னவிர் கும்பஞ் சாரு மெவரினம் புணர்க லாதார் ௫௨

ஏழுல கடுக்கி யன்ன வெழுநிலை மாடத் துள்ளால்
வீழுமத் துணைவர் நெஞ்ச மெல்லியர் விழிவே லொன்றோ
போழுவ தந்ந லார்தம் புணர்முலைக் கோடி ரண்டுந்
தாழுறப் போழ்ந்து புண்செய் தன்மைய வாகுஞ் சாற்றின் ௫௩

விழிமுகஞ் செங்கை கொங்கை மேதகு புயநி தம்ப
மொழிதகு மங்க மாக முற்படு மதனன் சேனை
பழிதபு கருவேட் கென்றும் பகழிவின் முரசமாதி
யொழிவற வேறு கோட லுரைத்தகு மிகையென் றோர்ந்தே

மணிபடு செவ்வா யென்று மருந்தெடுத் தூட்டு மாதர்
இனிமுலை மைந்தர்க் கென்றுஞ் செவ்விள நீர ளிக்கும்

பணிமுடிப் பரமன் காயப் படுமதன் சாய கப்பாய்ந்
தணிமணி மாலை மார்பர்க் காக்குநோ யறிய கில்லேம் ௫௫

தழுவிய கொழுநர் மார்பந் தணந்தமர் தைய னல்லார்க்
கழுகுயி லிரக்கங் காட்டு மயற்படு மாடத் துள்ளாற்
செழுமணிப் பூவைக் கென்றுந் தெரிவைய ருரைக்கு மாற்றம்
விழுமமிக் கியற்ற வேறு விரிசிறைக் குயில்கள் வேண்டா ௫௬

வரைபடக் கவினுங் காட்சி மாதங்கத் திழியு மாண்பும்
புரைபடு நெடுங்கை நீங்கிப் புறம்புகு பொலிவும் புல்லி
விரைபடு மளியி ரக்க மேம்பட வீதி யெங்குந
தரைபடத் திரைசு ருட்டித் தானநீ ராறு பாயும் ௫௭

வெங்கதிர்ப் பரிதி வட்டம் விழுத்தங்கத் திட்டை கூட்டு
மங்கலச் சுண்ணம் பொங்கல் வளர்கதிர்க் கற்றை மாட்டு
மங்கலை மார்தஞ் செங்கை யணிவெள்ளி யுலக்கை கூட்ட
றிங்கள்வந் துலாவிற் கூடுந் திருநலந் திருந்தக் காட்டும் ௫௮

திருந்துவெண் பளிங்குச் சோதிச்செய்குன் றஞ்சிவணுஞ் செவ்வி
பொருந்துநாற் கோட்டு வேழம் பொருவுமப் பொற்றை புல்லிக்
கருந்தடந் தோகைச் செங்கட் களிமயில் கவினுங் காட்சி
பருந்துசூழ் வயிர வாட்கைப் பண்ணவர் வேந்து போலும் ௫௯

வேறு

அலங்கு மாமதி யொருபுறஞ் சுடநமிழ்ந் தணுகக்
குலங்கொள் செங்கதிர்ப் பரிதிமற் றொருபுறங் கூட
விலங்கு சங்கமு நேமியு மிருகையி னெடுத்து
வலங்கொண் மாயவன் பொருவன மரகத மாடம் ௬௰

நிறையுந் தெண்டிரை சுருட்டுநீர்க் கங்கையு நிலாக்கால்
பிறையு மாமுடி கலந்துறச் சூலவேல் பிறங்க

மறையுந் தேடருக் கண்ணிறை புலியுற வந்தாங்
கறையுந் தூமணிப் பவளமா டங்கலந் தலங்கும் ௬௧

இலங்கு லாமுழு மணிக்குலம் பங்கய நிகர்ப்ப
வலங்கு மாமர கதம்பதி கக்குல மமரப்
புலங்கொள் வெண்பளிக் குச்சுவர் நீர்த்திரை பொருவக்
கலங்கு வெண்டிரைக் கயமென மாளிகை கவினும் ௬௨

மடம யிற்பொரு சாயலார் மணிமுலை மதமாத்
தடம ணிப்புயத் திளையர்கைப் படுத்தெதிர் தடுப்பத்
திடமு றக்கழுத் தொடுகிடந் திமைப்பவுஞ் செறிக்கும்
வடம றப்புவி வீழ்வவு மாமணி மாலை ௬௩

சுரந்த காமநோய் மைந்தர்நெஞ் சழலெழத் துளைக்கு
மரந்தை நீங்கவந் தருங்கனி வாய்மருந் தளிப்ப
நிரந்த கன்னியர் முகத்தழ கழிந்தவு நிரைப்பப்
பரந்த பேரெழில் படைப்பவுந் தூமணிப் பவளம் ௬௪

இலவ வாய்மட மங்கையர் மைந்தரோ டியற்றுங்
கலவி நாடக மணியரங் கழகுறு காட்சி
நிலவு கார்நிறத் தெழினிவாங் கியதிற நிகர்ப்ப
வுலவு மாமுகி றழீஇப்பல மாடமே லோங்கும் ௬௫

களிக்கு மங்கயற் கண்ணியர் கலைநலங் கவரத்
தெளிக்கு நீரொளி மாடத்துண் மைந்தரைச் சினந்து
சுளிக்கு நாணொடு புறந்தரு வார்புறந் தொடரப்
பளிக்குப் பித்திகை நிழன்முக மெதிர்கண்டு பனிப்பார் ௬௬

கொற்றவார் கொடிக் கூட்டமு மாளிகைக் குலமும்
பற்றி நின்றிடை தடுக்குமென் றல்லது பஃறே
ரொற்றை யாழியொ டெழுபரி பூண்டமைக் குலக
மற்றி யானவகொல் காரண நெறிப்பட வகுக்கும் ௬௭

வேறு

இந்நகர்ச் செல்வரில்லு ளிரப்பவர் தாமே சென்று
பொன்னொடு மணிகை வாரிப் போடுவ தல்ல தன்னா
ரின்னது கொடுப்ப தென்று மின்னது மறுப்ப தென்று
மென்னுமிங் கறித றேற்றா ரிதுகொடை மடமே போலும் ௬௮

கொடுப்பவர்ப் புகழு மாறு குறிக்கொளிற் கோடற் கங்ங
ணடுப்பவ ரிரக்கு மாறு மகனமர்ந் தீயு மாறும்
விடுப்பது மறியோ மங்ஙன் விரவுவோ ரிருவர் கூட்ட
மடுத்துள தோற்ற நோக்கின் வருசெல்வ ரிருவர் போலும் ௬௯

அளவொன்று படாத செல்வி யரும்பொரு ளனைத்தும் வாரி
யளவொன்று படாத செல்வ ரகன்மனை மீண்டு செல்வ
ரளவொன்று படாரே யாயி னந்நகர்க் கெந்த ஞான்றுங்
களவென்றல் பொருளொன் றில்லாக் கட்டுரை போலு மன்றே

உணவுபா லடிசி லூறு முடுப்பது செம்பட் டாடை
யணவிய விருந்த ராவா ரடுத்தவர் யாரு மாவார்
குணமலி யில்லா ளோடல் கொண்டுற நனியு ணர்த்தும்
வணமொரு விருந்து தேடி வருந்துவ தென்று மின்றே ௭௧

மலைவள மொருபான் மேவ வனவள மொருபான் மன்ன
வலைவள மொருபா லாக வகன்பணை மருதத் தென்று
நிலைவள மொருபா னேர நிமிருமந் நியமவீதி
தொலைவற நிலமோர் நான்குந் தொக்கன தோற்றங் காட்டும் ௭௨

கருதிய பொருள்கைக் கொள்வான் கைப்பொருள் சிறிது மில்லா
தொருவரை நினைந்து போகி யுறுபொருள் கொண்டு மீண்டு
வருபொழு தங்கு நோக்கும் வான்பொருள் காணா ராகி
யொருதலை யன்றிப் பல்வே றுழைதொறு முழிதர் கிற்பார் ௭௩

கொண்டவர் கொண்டு மீளுங் குவைப்பொருண் மலியு மோர்பான்
ண்டுற மாற்று மாறு வருபொருண் மலியு மோர்பாற்

கண்டவர்க் கையமென்றுங் காட்டுமக் காமர் வீதி
பண்டைவல் வினைவந் தேகும் படிவமும் பொருவு யன்றே ௭௪

நிரம்புபன் மலரு மாற்று நேரிழை மகளிர் யாரு
மரம்பையர் குணம்பெற் றோரோ வல்லதம் மலைவ் வானம்
பரம்புகா வுதவு மாண்பு படைத்தவோ பாங்கர்ச் சூழும்
வரம்பில்வண் டவரு யிர்ப்ப வயினெறுறு மிரிவ யன்றே ௭௫

குழைபிலாற சன்ன வீரங் குயின்மணித் தொடியோ டுத்தி
தழையொளிக் கடக மாதி தருமவ ரெடுத்துக் காட்டு
மிழையொளிக் கன்றி வானத் தேதுடுக் கணங்கள் விண்ணு
ணுழைகதி ரெதிருங் கோல நோக்கிலை யாக்குங் கொலலோ ௭௬

மேக்குயர் கிடுகு தோற்றும் விரிதிரை விராவத் தூக்கித்
தேக்குமம் பலங்க ளுள்ளாற் செறிதரச் சேர்த்து வைகி
யாக்குமம் பரங்கண் மாற்று மவர்பல வடுக்காங் கோடி
போக்கறத் தருவ ரென்றும் புந்தியின் மற்றொன் றுன்னார் ௭௭

பொத்துமிவ் வீதி யெங்கும் பொலிநவ மணிகண் டன்றோ
வத்தகு மளகைக் கோமா னஞ்சின னொதுங்கி வைகு
மெத்திய செம்பொன் னோக்கி வேந்தனுஞ் சமழ்ப்பின் மூழ்கு
மித்தகு நகர்சொல் வார்யா ரினியக நகரி சைப்பாம் ௭௮

அகநகர்

நொச்சியி னுகப்பு முற்று நுனித்துணர்ந் தகழி யீண்டு
நச்சிவந் தடைந்த தேயோ நவின்மதி லகழி யாரு
மச்சுற வாழ்த னோக்கி யடைந்ததோ வென்றெல் லோரு
மெச்சமின் றெடுத்துக் கூற வியையுமவ் விரண்டு மென்றும் ௭௯

தனைத்திரைக் கடலின் வீழ்த்த சதமக னாரைச் சாட
நினைத்துமை நாகம் விண்மே னெடிதெழுந் ததுவு நேருங்
கனைத்துவண் டிமிரும் பல்பூக் கஞுனறவக் கிடங்கின் வான
மனைத்துமுற் றளக்குங் கோலத் தடுக்குமம் மதிலின் மாட்சி ௮௰

பண்டைநா ளுலக மூன்றும் படைத்தவை பால்வீ ழாமை
யண்டுற நிறுவ நாப்ப ணம்மலர்க் கிழவன் கோத்த
தண்டமே பொருவு நாகந் தடம்புவி சாரும் வானங்
கொண்டுற நடுவு போய குருமணிக் கோல நொச்சி அக

தொடிபட வளைந்து சுற்றிச் சுவணமு மணியுங் கொண்டு
படிவரு பாணி சோரப் பல்குகங் கணமடுத்து
மடிவறச் செங்கை தாழ கைகளுங் கலப்பப் புல்லிக்
கடிமதி லவனி யோர்க்குக் கடகமாங் காட்சி காட்டும் அஉ

ஓவியந் திருந்த மிஞ்சி யுடங்குறத் தழீஇப் பிணைந்து
மேவிய பகைஞ ருள்ளம் வீழுறப் புறந்த கைந்து
வாவியப் புரிசை சால வலியுறத் திருத்து மாண்பாற்
காவிய லிங்க மாட்சி கண்படக் காட்டு ஞாயில் அங

மண்ணுளோர் நோக்கு மாறு வகுத்தசித் திரவ னப்பு
விண்ணுளோர் தமக்கும் வேறு விதம்பட விதித்திட் டாங்குக்
கண்ணகன் கிடங்கு போர்த்துக் கணைத்தலை கிழாத் தோன்றி
நண்ணுறப் புரிசைநாஞ நலம்படு நிழல்வி ரிக்கும் அச

வேறு

விண்ணகத் தடுக்குஞ் சிவபுர நகர்க்கு
விழைவினிந் நகர்மக ளெழுந்து
நண்ணுவ தொக்கு நனிமதிற் பொலிவு
நாற்றிசை நகரங்க ணம்மோ
டெண்ணவும் படுமோ வெனத்திசை நோக்க
வெழுந்தவக் கோலமே யெய்க்கும்
வண்ணமா மணிமிக் கிழைத்த கோபுரங்கள்
வான்றொட நிமிருமம் மாட்சி அரு

அன்றனை யடக்கு மத்திறங் காண்டு
மகத்திய னெனவகன் விந்த

மன்றவா னென பூத்த தோற்றமுற் றிலகு
மணிமதி லம்மதின் மருங்கு
தன்றமைபே ரகழி கடன்முன மயின்ற
தொல்பகை மனஞ்சுடச் சூழ்ந்தக்
குன்றினை யடுத்த கோலமுங் காட்டிக்
குறிப்பவர் மனங்கொள்ளை கொளுமே அசு

பண்ணகத் தமர்வார் வானகத் தெய்த
வகுத்தவல் லேணியின் மாட்சி
திண்ணிய மதில்கைக் கொளுமதற் ககழி
சிறிதிளைத் திடுவதோ செகத்தோர்
வண்ணமா நாக ரூர்புக வமைந்த
வழியெனப் பொலியுமவ் விரண்டும்
பண்ணவர் நாகர் மேலொடு கீழ்போம்
படிசமைந் தனவுமாம் பகரின் அஎ

வேறு

மேற்படு மந்தரம் விரவ லொப்பது
பாற்படு சுதைமதில் பரவு மச்சுதை
யாற்படு வெண்ணிற மடைந்த போக
மோற்படு பாற்கட லொப்ப தாகுமே அஅ

திருப்பலர் கடைவழிச் சேர்ந்த தோற்றம்போ
லுருப்பொலி நாரியர் பலருங் கூடுவார்
தருப்பல பிறங்கெனச் சாரும் பூம்பொழில்
மருப்பொலி கிளைதொறு மலர்வி ரிக்குமே அகூ

ஒன்றல பரிகிரை யொருங்கு தோன்றுபு
நின்றெனப் பரிகிரை நெடிது லாவரும்
மன்றயி ராவண மன்றிப் பல்கரி
யொன்றிய வெனப்பல வும்ப லோங்குமே கூ0

மடுக்குமப் பாற்கடன் மதிக்க வுன்னின
ரடுத்தனர் மால்பல ரண்ணு வாரெனக
தொடுத்துள பூந்தொடை துவளு மார்பினர்
வடுத்தவிர் பற்பலர் மைந்தர் வைகுவார் ௬௧

அணிகெழு மக்கட லகத்துப் பற்பல
மணிபடு மியல்பென மணிக டோன்றல
கணிதமின் மதியது காட்டும் பண்பெனப்
பணிலமவ் வுழிப்பல பதித்து றங்குமே ௬௨

மடுத்துற மதித்தொறும் வருமருங்கெலா
மெடுத்திடுந் தொறுமிரீஇ யென்ன லாகுமால்
படுத்தவெண் சுதைபொலி பரம்ப வெங்கணும்
வடுத்தவிர்ந் திலகுவ மாடப் பத்தியே ௬௩

மருவும் மந்தரம் வழுக்கி வீழ்தலும்
வெருவர மாயவன் விராவு கூர்மமா
முருவொடு பலவிடத் தோங்கி யாங்கவண்
வருபெரு மாளிகைகண் மலிந்து வைகுமே ௬௪

வேறு

நெடியவ னொப்பது நெடுமதி லம்மதி னேரெய்துங்
கடகளி றொப்பது கருமுகில் பரிகங் கயமொக்குங்
கொடுமுத லைக்கிவ ணுவமை படைப்பது கொடுவன்மீன்
விடுபடை யொப்பது நெடுமதி னடுவரு வெய்யோனே ௬௫

சூர்வரு சுறவெதி ரஞ்சுபு கடகரி சூழ்பரிகத்
தியார்வரு வாரென நின்றவ ரஞ்சுற வேகாதே
னீர்பரு குங்கரி நேர்வரு சுறவின நேர்நோக்கி
யார்களி றிதுசுற வாகுவ திஃதென வறிவோரே ௬௬

இடிபடு வானக மெங்கும் விழுங்குவ தெனவங்காந்
தொடிபட வாயெனடி தகழ்நடு விறவேசச் சிப்போய்
வெடிபடு மிப்பொழு திப்பொழு தேநடு விண்ணென்ன
வடிபட நெட்டக முலைபட மோதுவ தருமகரம் ௯௭

முந்த வியங்குற நெட்டகழ் தட்பது முழுமீனை
நந்த விழுங்குவ தல்லது மாமதி னண்ணுரா
லந்தி லவர்க்கிவ ணடையல ரென்ப தறிந்தன்றோ
விந்த நகர்ப்பகை வர்க்கினி தடையல ரென்கின்றார் ௯௮

பொறிபடு சிங்க மெழுந்தடு மொருபுடை போங்கரியே
வெறிபடு வெம்புலி யூறு பரித்திரள் விட்டுடுமே
குறிபடு மாட்பொறி வாட்படை கொண்டெதிர் கொட்புறுமே
யறிகரி னன்னவரிந்நக ருட்புக லடையலரே ௯௯

வேறு

இந்நகர் தனது பகைவரைப் போடி
யென்பது தகாதென வெண்ணி
யன்னவர் மகளி ராவதென் றறைந்தாங்
கவிர்மணிப் பாவையும் பந்து
முன்னுறத் தூக்கும் பற்பல வாயின்
முழுமதி லகழியென் றுரைப்போ
ரென்னுமங் கறியார் வரையிலா மகளி
ரிருக்குமத் தெருச்சிறி திசைப்பாம் ௧௦௦

பரத்தையர் வீதி

ஒருதன மளிப்பார்க் கவரெதி ரளிப்ப
தோரிரு தனங்களே யூங்குத்
தருவது முத்த மாயிடி னவர்தாங்
தருவன பற்பல முத்த

மிருநிலத் தணைந்தோர் யாவரையு மருட்டி
யிளையந் துறத் தவமெலாங் கவரும்
பெருநலத் தாரென் றவனியோ ரிவரைப்
பேசுவ தறிவிலாப் பிதற்றே க0க

கொங்கையின் மொத்துண் டுள்ளக நோகுங்
கொழுநரைத் தடங்கரங் கொண்டு
தங்குற வணைத்துச் செங்கனி வாயிற்
றருமருந் திராப்பகற் றந்து
பொங்குவெஞ் சிந்தைத் தாபமு மதனன்
போர்வலி முழுவதும் போக்கு
மங்கைய ரல்லா லவனிமே லெவரே
யறிதரி னல்லவ ராவார் க0உ

அவர்திரு முகமஞ் சைக்கரை வருகென்
றழைக்குமத் திருமுக மாகு
மவர்துணைப் பதமே யாடவர் புகுதற்
ககம்விழை பெரும்பத மாகு
மவர்மணிச் சொற்க மடைந்துள கொழுந
ரடைதரு சொற்கமு மாகு
மவர்திறத் தெய்தா வின்பமற் றனைவயங்
கவையருந் துறக்கத்து மாமோ க0ங

விழிகளோ ரிரண்டு மொழிவறத் தருமவ்
விடத்தினுண் மயங்குறு விரதர்
மொழிதரு மமுத முழுச்சுவைக் குள்ள
முழுதழிந் துருகுவர் முடிகு
மழிவறு கணிகை மாதரார் கொங்கை
யடிகளிற் றிணுக்குள மசையார்
கழிபெருஞ் சிறப்பின் மருங்குவஞ் சியங்
காண்டொறுங் கலங்குவர் கழுதின் க0ச

இப்பொது மடவார் மனைதொறும் புகுந்தங்
கிராப்பக றேற்றுரு மைந்தர்க்
கப்பெரு வீதி தொறுஞ்சில மடவா
ரணிசெய்ய தணிந்தவ ணுறுவார்
துப்புறு மணிவெண் ணிறத்தன புனைந்து
தொடர்குவர் தொடுகழன் மைந்தர்க்
கொப்பறு புகழோ டுறுபிர தாப
மொருங்குவந் தெதிர்கொள லொப்ப க0௫

மலிபொருள் படைத்தா ரேவலும் பொருளான்
மன்னுவ ரிப்பொது மடவார்
கலிதிரைக் கடலுங் கானமுங் குன்றுங்
கடந்துசென் றீட்டுகைப் பொருளீந்
தொலிகெழு வொருவர்க் கொருவர்முற் படநின்
றேய்வுறு தேவலு முஞற்றி
நலிவுற மைந்தர் நாடொறும் வழுத்த
நளினையின் வதிவரெஞ் ஞான்றும் க0௬

கைப்பொருள் களவிற் கவருத றீமை
கடும்பழி கைப்பொரு டருவோர்க்
கிப்பொரு டருவோ மெனமொழிந் தியா
திருப்பதும் பெரும்பழி யெனலா
மப்பொருள் வலிதி னழிக்குமம் மைந்தர்க்
களவையில் போகமிக் களிக்கு
மிப்போது மடவார்க் கெய்துவ தென்று
பேழல கரும்பெறு விசையே க0௭

இம்மட மானார் கருவிழி சிவக்கி
னெறாழ்வலி மைந்தருக் கென்று
மம்மனஞ் சுழலக் கறுப்பது முகமே
யவர்கனி வாய்துடித் திடுமேல்

விம்மலுற் றிரங்கு மாடவர் நெஞ்சம்
வெடித்திடும் விராவுவெம் புருவங்
கொம்மெனக் கோட்டின் மதனவே ளெடுத்த
கொழுங்கழை கடிதினிற் கோரும் க0அ

சுழித்தலை சுருட்டுங் காவிரிப் புனனீர்
தூவியன் னத்தொடு துவளுந்
தொழித்தளி முரலும் புறநகர்ச் சோலைத்
தோகையோ டாடியெய் சோர்ந்தும்
பழித்தகங் கொழுந ரில்லற மடவார்
பார்த்தழக் கொழுநர்தோள் பயின்றும்
வழித்தலை நெருங்க வளைவினா ரூர்தேர்
வருவன போவன மலிவ க0௯

இருந்துழி யிருந்தெப் பொருள்களு மீட்டி
யெங்கணு முயன்றுறு தெய்தப்
பொருந்துபே ரின்பம் புணர்க்குமம் மடவார்
போக்கொடு வரவறப் பொலிந்த
பெருந்தெரு வளநாம் பேசுவ தெளிதோ
பேரற வெற்றையும் பெருக்கு
மருந்தவச் செல்வத் தமைந்தவே ளாள
ராதியர் தெருவள மறைவாம் கக0

வேளாளர் வீதி

வேறு

அங்க முழுதுஞ் சுமந்தளித்தற் கமைந்து கிடந்த வவ்விரண்டு
பங்க மிலாயு மலர்க்கிழவன் பதத்திற் றோன்றும் பண்பினரேற்
பொங்கு வரிவிற் போரரசன் புயமும் புகழும் பொலிந்தோங்க
வங்க முழுதுந் தலையளிக்கு மங்க மாத லவர்க்கரிதோ ககக

கெழுமும் படைகள் பலவுயிருங் கெடுமாறொருகையெடுத்தோச்ச
வொழுகுந்தனிக்கோல்கொளுமரசர்க்கொருவாவின்பழுயிர்க்குதவ

வுழவண் படையங் கொருகைக்கொண் டோவாதென்றுமுயர்த்தெடுத்துத்
தழமற்றொருகைக்கோல்கொளுவண் சாருமுறப்பாந்தகைமையரோ

என்று மிவர்தா மரசருக்கே யிறைநல் கிடுவ ரென்றுரைப்பார்
மன்ற வறியா ரெவர்வரினு மாற்று நீந்து வருமவருக்
கொன்று மிறைநல் காரிவரே யொழியாதளிக்கும்பெருஞ்செல்வர்
சென்றங் கிறைநல் குவரென்றல் சிறிதும் பொருந்தா வழக்காமே

பலிபே ரறங்க டலைநிமிர்ந்து வருநாட் களிப்பான் முன்மருவ
வொலியோ வாமுந் நீருலக மொருங்கு திரண்டு பின்வரத்தாஞ்
சலியா தென்று மேர்ப்பின்போந் தலைவ ருழவே தலையென்னப்
பொலிவார்புகழ்சால்வேளாளர்பொருந்துந்தெருக்கள்பலபொருந்தும்

துறவோர்விருந்தர்பொருந்தொக்கலொருகுவோர்யார்க்குஞ்சூழ்ந்தருந்து
முறவோ ராய வேளாள ரோவா தெடுப்ப தோராயின்
மறவா துலகம் புகழுமவர் மருவும் வீதி வகுப்பார்யார்
பெறவார்வல்லாரெனுஞ்செல்வப்பெருக்கார்வணிகர்தெருப்புகல்வாம்

வணிகர் வீதி

ஈட்டும் பொருள்வந்தொருகணத்துளெய்தும்பின்னரெய் துகணத்
தோட்டம் பெறப்போ மல்வணிக ருதுந்தேர்ந தன் மீறு வூதியங்க
ளூட்டும் வகைமற் றிஃதறியார் நவிலும் பொருள்க ணனியீட்டி
வீட்டிற்குவிப்பாரவைபோங்கான்மெலிவாரவர்க்கென்விளம்புவதே

வரவிற் கேற்ப வழங்கிடுவார் வழங்கும் போதே மலியறத்தின்
புரவிற்கேற்பப்பொருள்பெறுவர்பொய்ம்மைசிறிதும்புகன்றறியார்
விரவத்தொகுத்தல்பொருளொன்றேவிழைபோரறமுஞ்சேர்த்தொகுப்ப
ரிரவும் பகலு மீட்டறத்தா லின்பு வீடு மெளிதடைவார் ௧௧௭

கொடுப்பார்பொருளொன்றிலராவர்கொடாதேபோற்றுமவர்பழிவந்
தடுப்போ ராவ ரிவ்வணிக ரீந்துப் பொருளு மளித்தடைவின்

மடுப்போ ராகி யவைமீட்டும் வாரிக் குளித்து வசைகடிவார்
கடுப்போர் செல்வ ரிவரெனவோ ரேழை யவர்கற் றறியாரே

எவ்வெப் பொருளு மாற்றுமவ ரிவரே யிவர்பாட் டெப்பொருளும்
வவ்வப் புகுமப் பெருஞ்செல்வர் மலிவு மிவர்த மனையெல்லாம்
பவ்வப் புடவிக் கென்னுமொரு பண்டா ரம்போன் றளகேசன்
றெவ்வப் பொருள்கண் மலிந்தென்று நவிற்சிறக்கும் வணிகர்தெரு

எல்லாப் பொருளும் பகர்வணிகர்க் கெடுத்துப் பகரும் பொருட்டிறங்கள்
வல்லா ரெவர்கொண் மாற்றலர்தம் மண்ணுண் டவர்கு வானளித்து
வெல்லா தவரி னவர்தொழிலே விழைவிற் புரியும் வேன்மன்னர்
பல்லோ ரிருக்கு மணிவீதி பலவா மவற்றுஞ் சிலபகர்வாம் ௧௨௦

அரசர் வீதி

வேறு

கொள்வன திறையே மன்னர் குடிதருங் கறையுங் கொள்வ
ரள்ளனீர்ப் புடவிக் கென்று மவர்தர லனந்த மாகு
முள்ளுறக் குடிகட் கென்று முளுற்றுத னலமே யூங்கவ்
வள்ளலந் தடக்கை வேந்தர் மாயமும் வல்லார் போலும் ௧௨௧

ஐம்பெருஞ் சுற்ற மேயங் கவர்தமுஞ் சுற்ற மாகு
மைம்பெருங் குழுவே யங்க னவர்தருங் குழுவு மாகு
மும்பரும் விழையுஞ் செல்வத் தவர்ப்புறக் கொடைக ளேக்கும்
வெம்படை வல்ல ரிந்த மேதினிக் கில்லை யென்றும் ௧௨௨

தம்பகை யாய வேந்தர் தடநகர் கவர்வா ரிந்த
வெம்புய வேந்த ரென்று விளம்புமவ் வறிவி லாதார்
நம்புமிவ் வழிந்த போக நகர்கவர்ந் தவர்க்கும் மன்ன
ரும்பர்த முயர்ந்த போக முதவுவ துணரார் போலும் ௧௨௩

தம்மைநன் றுகைத்து வாகை தடம்புயஞ் சாத்து மன்ன
ரம்மையி னுள்ள திந்த வகனக ராகு மென்னச்

செம்மையிற் காட்ட லேப்பபத் தேவரூர் நோக்கிவாவு
மய்மணி மாண்றே ஏறு மரசிளங் குமரர் பல்லோர் ௧௨௪

ஆங்கமை சத்தி மூன்று மருட்படு தொழிலோ ராறு
நீங்கருங் குணமோர் மூன்று நெறிப்படத் தழீஇய வேந்தர்
பூங்குழை யழக ழிக்கும் பொருகயற் கருங்கட் பூவை
பாங்குறத் தழீஇய முக்கட் பண்ணவ னிகர்ப்ப ரன்றே ௧௨௫

பொன்னகர் நாளும் வெள்கப் பொலிமணி மாட வீதி
மன்னவ ரிருக்கை யாவும் வகுத்துரை செய்யு மாட்சி
யென்னுமங் கறித றேற்று மினியவர் யாவ ருக்கு
முன்னவ ரிருந்து வாழு முழுமணி வீதி சொல்வாம் ௧௨௬

அந்தணர் வீதி

அருமறை யோதச் செய்த லம்மறை யோத லீதல்
வருமுறை யேற்றல் வேட்டல் மகம்பல வேட்பச் செய்த
லொருவரு மிவரொவ் வாமை யொலிகட லுலகுக் கெல்லாந்
திருவுடை யாரென் றுன்றே: தெளித்தசொற் சிறப்பாத் தோற்றம

நிரப்புற மெலியு மாந்தர் நெஞ்சகந் தேற்ப யாவுங்
கரப்பற வீந்து வப்பர் கண்டுதா மொருவர் பாற்சென்
றிரப்புறு துவப்பா லேற்ப ரெறிதிரை யுலகுக் கெல்லாம்
வரப்பறு செல்வ ரென்ன வகுத்தமை வாய்மை மாதோ ௧௨௮

ஓதியு மளித்தும் வேட்டு முவந்துதாம் புரியு மூன்று
நீதியிற் பிறருந் தம்போ னெறிப்படச் செயநி றுத்து
சாதிமை வேந்த ராதிச் சாதிகண் மூன்றுந் தாங்கா
வேதியர் விழுப்ப நாட்ட வேறுகா ரணம்வேண் டாவே ௧௨௯

இன்னவர் புரியும் வேள்விக் கிருவிசும் பென்று மோங்கு
மன்னது சால வோங்கி னகன்மழை யாக்க மோங்கு
மன்மழை யாக்கங் கண்டு வளம்பல மலியு மாயின்
முன்னவர் சிறப்பு முற்று மொழிதருந் தரத்த தாமோ ௧௩0

ஓமவான் குண்டத் தென்று முறைபுகை யோகத் தாறுஞ்
சேமவா னட்டி ரோறுஞ் செறியதீ தீபமை யூட்டக்
கோமள மின்னு ரென்றுங் குறித்தடு புகைக்கோ ளாலுந்
தூமம்விண் வண்ண மென்னத் தொகுவது மறையோர் வீதி

வேறு

தமக்குப் பயன்பட் டிறுமாக்குஞ் சனமொன் றறியார் போலாது
தமக்கும் பிறர்க்கும் பயன்படுமச் சால்பே யென்றுந் தலைநிற்பார்
தமக்குப் பெருமை நோக்காநந் தலைவர் பதப்பூ சனைக்கண்ணுந்
தமக்கும் பிறர்க்கும் பயன்படுவோர்சாருநெருக்கடவப்பலவே

வேதமுடிவிற்பொருண்முழுதும்விரித்துத்தெளிக்குமெய்யறிஞர்
காத லுதவுஞ் சித்தாந்த நயமுற் றுணர்த்து நன்முனிவர்
பேத முறைபக் குவமபெரிதும் பேணித்திக்கை புரிகுவ
ரோது மடமொன்றில்லாதா ருறையு மடங்க ளலப்பிலவே

வேறு

திருக்கநூற் றிறத்தின் பொருட்டிறங் காட்டுந்
தகையரு மப்பொருட் சார்பாய்ப்
பெருக்கமுற் றமைந்த சொற்றிற முணரப்
பிறங்குநூற புணர்ப்பொடும் பிறழா
தொருக்குநெஞ் சினருக் கிலக்கண முணர்த்து
முவருமிவ் வுலகினுக் கிறுகண்
செருக்குறத் தருவா ரெனநனி விரவுஞ்
சீரிட முலப்பில செறியும் ௧௫௪

கவியொடு கமகன் வாதிசீர் வாக்கி
கவின்பெறத் தத்தமிற் கலக்குஞ்
சவிமணிப் பட்டி மண்டபம் பலவுஞ்
சாருவ சார்ந்தவர் தாக
மவிவுற வெவ்வே றமைத்தநீ ரளிக்கு
மவ்விடம் பலவவ ணுறுகுங்

குவிவுறு பலவே றுணவுமங் கருத்தக்
குறித்தசத் திரம்பல குழுமும் க௩௬

வேறு

மூவடிக்கா மொழிநகா மொருமூன்று மறமுதலாமொழியுமூன்று
மேவடிக்கா மனைமூன்றும் விரவுமவர் பின்னடிக்க மேவும்வீடே
காவடிக்காமலர்முகிழ்க்கும்பொன்னகருமெந்நகருங்கண்டுபோற்ற
மாவடிக்காப்பகன் னிவெபாமெணிப் பவளச்சடைமுடியார்வதியுங்கோயில்

வேறு

ஓம்புமறை முறைபழக்கு மோங்காரம் விளங்காங்கு
மாம்பொழியுங் கருங்கொண்மூ வடித்துறங் கும பெருநொச்சி
தாமபுறழ்த் தோட் சிவகாமி கண்களிப்ப நடநவிலும்
பூம்பவளச் சடைமுடியார் பொற்கோயில் புடைசூழும் க௩௭

மன்றனுகப் புகுமிடப ராசிபல வோவென்ன
மூனறுறழ மூன்றாக முற்றுமணி வீதிதொறுந்
தோன்றியெழு நாட்குழுவுஞ் சுடர்க்கோளு நெடிதயிர்ப்ப
வான்றமதிற் றலைதழுவி யமரிடபம் பலபயிலும் க௩௮

கண்முத்தங் கவிழ்த்தழுவார் கைகுவித்துக் கடிதுவப்பார்
மண்முத்தங் கொளவிழுந்து வணங்குவார் வாய்தழும்பப்
பண்முத்தங் கொளும்பாடல் பலர்பயினறு நெருக்குறுவார்
விண்முத்தங் கொளுமேரு விற்கூத்தர் சந்நிதிக்கே க௩௯

தோட்டுமலர் நறுந்தொடைய றாக்குகருப் பூரமகில்
கூட்டுபனி நீர்சாந்தங் குலவுநிவே தனங்கூட
நாட்டுபிற வுந்தந்து நயந்துபலர் பணிபுரிவா
ராட்டுகந்து மன்றமரு மையர்திருச் சந்நிதிக்கே க௪0

பொருபுலிக்கட்காய்ப்பொற்றைபொறிப்புலிக்காற்பழப்பொருப்பு
திருமலிமுட் புறவருக்கைச் செழும்பழப்பூஞ் சிகரவரை

பருவமலி இளிமுகப்பூம் பழுக்குன்றம் பலதொகுப்ப
வருகளிற்றுப் படிமருங்கு மண்புதைக்கும் வான்புதைக்கும்

போந்தலங்கும் பெருநொச்சி புறம்புல்லும் பரிசேடம்
காந்துசுடர்ப் பொன்மன்றங் கதிர்ப்பரிதி யதனைவென்
சேந்தவிரா டகவுருவச் சிவஞ்செம்பொற் றிருமன்று
ஞாந்துதித்துக் கைகுவிப்ப நடநவிலுந் திருமூர்த்தி ௧௪௨

கூனந்து மதிச்சடிலக் குழகர்திரு நடக்காட்சிப்
பானந்து முயிர்க்களிக்கப் பரமானந் தப்பரவை
வானந்து மணிமன்ற மருங்கணுக வைத்தாங்குத்
தேனந்து மந்தாரத் திருக்கூவம் புடையமரும் ௧௪௩

மாமாரி வளங்கடுப்ப மணிப்பவளச் சடைக்கங்கை
தூமாரி பொன்னிதழித் தொடைதுவற்றுந் தேமாரி
பூமாரி சொரிந்தடியார் போற்றிசைக்கும் பாமாரி
காமாரி முன்னன்பர் கண்மாரி யொடுங்கலக்கும் ௧௪௪

ஆமறுகு முடிக்கணியு மத்திமுகன் முதற்றேவர்
தாமறுகு கயமுமுசி தரப்புனைவார் சபைமருங்கு
பூமறுகு வினையகலப் போற்றிசைத்துப் புடைசூழ்வார்
போமறுகு தொறுமமரும் பூந்தளிக டவப்பலவே ௧௪௫

கட்டுசடை நிறுவியதுங் களங்கறுப்பக் கண்ணுதல்கை
தொட்டதுங்கீ ழிந்நாளுந் தொன்றூறுந் தொழவிருந்து
விட்டதுநான் காலமென விராயன்பர் விழைந்திசைப்ப
வட்டொளிவிட் டழகெறிக்கு மான்றிருமூ லட்டானம் ௧௪௬

கருப்படுத்துக் காத்தழித்துக் கரப்பமறைத் தருள்கொழிக்கும்
விருப்படுத்து மன்றமர்வார் விளையாட்டா மைந்தொழிலுந்
திருப்படுத்து வெவ்வேறுச் செயுந்தான மைந்தேயா
பொருப்படுத்துப் பொலிவனபோற் பொலியுமணிப் பொருளைத்தும்

வருங்கரும முழுதழித்து வலந்தழுவத் தருமெனினு
மருங்கரும முழுதாக்கு மருணலமுந் தழீஇயடுத்து
நெருங்குமடி யார்மனத்து நினைந்தவெ லாம்நிரம்பத்
தருங்கருணைக் கற்பகம்விண் சமழ்ப்பவொரு புறந்தயங்கும்

வரையெறியும் வச்சிரவேன் மகவேந்தன் வளநகரு
முரையெறியுங் கருநாக ருவந்துறையுந் திருநகருங்
கரையெறியும் பெருவேலைக் காசினியுங் களித்தாடத்
திரையெறியும் பவமெறியுஞ் சிவகங்கைத் திருத்தீர்த்தம் ௧௪௯

அருள்பழுக்குஞ் சிவகாமி யம்மையமர் திருக்கோயி
லருள்பழுக்கும் பொருணுண்குந் திறந்திறைக்குங் களஞ்சியமே
யிருள்பழுக்கும் பவக்கடல்வீழ்ந் திளைத்திரங்கு மெவ்வுயிரு
மருள்பழுக்கு மணநிரப்ப வந்துமுகந் துவப்பாசே ௧௫௦

எந்தியெழு மிசைமகதி யாழ்முனியுந் தும்புருவுஞ்
சீந்துநெடு வேற்கருங்கட் சிவகாமி திருமுன்பு
போந்துதுதி பலபாடப் புகுவார்பைம் பூங்கிளி
தாந்துதிக்குந் தமிழ்ப்பாட றனக்கழிந்து தகைமையப்பார்

மடங்கலிலா வெண்பட்டும் வைத்தோம்பற் கொருமருங்கு
மிடங்கெழும லின்றெனப்பொன் னிரசதமிவ் வுலகமெலா
மடங்கவிலைக் கொளுமணிக ளடியுறையாப் பலர்தொகுப்பார்
தடங்கழைத்தோட் சிவகாம சௌந்தரியார் சந்நிதிக்கே ௧௫௨

அண்டர்பலர் நெருக்குறுவா ரகிதலத்தோர் நெருக்குறுவார்
மண்டழுவு மாந்தர்பலர் வந்தடுத்து நெருக்குறுவார்
விண்டொடுகோ புரவாயில் விழாக்கால மிதுவென்று
கண்டபிற நகர்மாந்தர் கணித்துரைப்பத் தினங்கவினும் ௧௫௩

எத்திறத்து மிந்நகரத் தியன்முழுது மெடுத்துரைக்குஞ்
சத்திபெற வெளிதேயோ சதகோடி நாக்கொண்டு
வித்தகர்பல் லோர்சொலினும் விஞ்சுமெழி னகர்கடந்தாம்
பொத்திபவே ரருடெளிக்கும் புராணமினிப் புகல்கிற்பாம்

நகரப்படலம் முற்றிற்று

ஆக செய்யுள் ௩௩௫

நைமிசாரணியப்படலம்

அடங்க வண்டர்கோ மான்பதம் பிணித்தகத் தடக்கி
யிடம்ப டுஞ்சிறு நெறிபுறங் கடிந்தென்று மிறுகத்
திடம்ப டப்பொலி பத்திவே லிக்குலஞ் செறித்து
மடங்க லுட்புக வராதது நைமிச வனமே க

அலைவு றக்கொடு வரிபுகா தங்கையி னமைத்து
நிலைமை மேவுறக் கயிற்றிடைப் பிணித்துமந் நெடுமை
மலைவ கன்றபல் வரிப்பொறி நோக்கியுண் மகிழ்ந்துங்
கலைவ ளர்த்திடப் படுவது நைமிசக் காடு உ

மண்டு மாத்துரந் தேயமா மலரினம் வாய்ப்பக்
கொண்டு சந்தகில் கருப்புரங் குங்குமங் கூடத்
தண்டு சூழ்பல கனிமுறை தந்துமா தவரை
யண்டர் போற்றிடப் படுவது நைமிசா ரணியம் ௩

அவமு றப்புலந் தொறும்புகுந் துள்ளக மழியார்
பவமு றச்சிறு நெறிதொறும் புகுந்துளம் பதையார்
தவந யம்படு வேடர்பா ரையுங்கொளச் சாரார்
கவலை முற்றவு மசழ்வ துநைமிசக் காடு ௪

ஒலிவ லம்புரிச் சங்குமுந் துடிபுமிக் கொலிப்பத்
திலகந் தைவரு மலர்முகந் துளங்குறச் செவ்வி
மலிசந தந்தரு மணந்திசை தொறுங்கமி வழங்கப்
பொலிய ரம்பைநின் றுடுத லறுதொரு புறமே ரு

நலந்த ழைத்தபூ ரணியொரு புறந்தழீஇ நயப்பக்
குலம்ப டைத்தபன் முனிக்குழாம் வணங்குறக் குன்றா
வலம்ப டைத்துயர் சேவின்மே லுயர்ந்தெழீஇ வயங்கிப்
பலங்கொ ளத்தரு சம்புதோன் றுவதொரு பாங்கர் சு

படிமி சைப்பொலி பன்னியோ டிசைந்தெதில் படைக்கு
நெடிய வன்னியி னதிசய மொருபுற நீடுங்
கொடியி டைப்பொலி பெண்ணைநன் கலிபினங் கூடிக்
கடிம ணஞ்செயு மதிசய மொருபுறங் கவினும் ௭

மதலை மேம்படப் போதிகீழ்ப் புணர்வுற வயங்கி
நிதமு மில்லங்க ளதிசய மொருபுற நிரப்பப்
புதும ணிக்குழைப் பூவையைத் தழீஇயொரு புறத்துக்
கதுமென் றுணினஞ் சினைபடு மதிசயங் கவினும் ௮

திருவ மேம்படு பசும்பிடி சேவொடு திளைப்பப்
பெருநவி லாவொடு மத்திக மொருபுறம் புணரும்
வெருவு றுதெதிர் தோன்றிய வேங்கையுண் மெலிய
மருவி யாங்கொரு புறத்தத்தி யுட்பட மடுக்கும் ௯

தங்கு நேமியும் பாணமுங் களுமுழுஞ் சாரத்
துங்க மாம்பல குந்தமுந் துரோணமுந் தழுவப்
பொங்கு மத்தியும் பாடல நிரைகளும் புல்லத்
துங்க வாகையோ டச்சுதோன் றிடுஞ்சில துருக்கம் ௧0

முட்பு றக்கனி முழாவெடுத் தொருமந்தி முழக்கப்
பட்கு லம்பயி லளியினம் பாடல்யாழ் பயில
விட்பு லத்தெழு கழைமிசைப் பசுஞ்சிறை விரித்துக்
கொட்பு றச்சுழன் றுடுவ களிமயிற் கூட்டம் ௧௧

வேறு

பச்சிலை நிம்பத் தாரு பழுத்துகு சிவக்கு றிக்கு
நச்சுபூங் கோட்டுக் கொன்றை நளிமலர்த் தாமஞ் சாத்தப்
பொச்சமில் கண்ணீர் தூவிப் பூவன மளிது ளும்ப
வைச்சபே ரார்வ மூள மணிவிளக் கெடுக்குந் தோன்றி ௧௨

பூத்துறப் பொலிந்த வேங்கை பொங்கழற் றேற்றம் பூப்பக்
கோத்தசைந் தொழுகுங் கோடற் குலந்துடுப் பழகு கூட்டப்

போர்த்தனி தூமந் தோற்றப் பூசிய பூதி பூவா
மூத்தகாய் சடையாச் சூழ்ந்த முனிவர்சீர் முருங்கை மூட்டும்

நெட்டிலைக் கதலிக் காடு நெடியவே லுட்கொண் டோங்க
மட்டவிழ் தாழைக் காடு வாளுட்கொள் ளையக்க மாணக்
கட்டுளி யரும்பச் சோர்ந்து கடுக்கைபொன் காலக் கண்டு
மூட்டுறு புன்னைக் கான முத்தினை முருக்கு மன்றே க௪

கலம்படு மிடவக் கூட்ட நயம்படு பொன்னு குப்பக்
குலம்படு மிருந்தைக் கோலங் கொழுதளிக் குலந்தொ குப்பப்
புலம்படு செயலைச் செந்தீ பொதுண்டுறப் பொதுவி ரிப்பப்
பலம்படு கட்ட ளைக்கற் பாரைச்சண் பகம்ப மூக்கும் க௫

வெளிபடக் கிழித்து விண்ணை மேலெழு நெடுங்கொட் டால
நளிபடப் புதுக்க லங்க ணன்கமைத் துநுவச் செந்தேன்
றுளிபடு பசுவி ருல்லை சோறுகை தூவா தாக்க
முளிதயி ரவரைக் கான முகிழ்த்தழ கொழுக மொய்க்கும் க௬

வாண்முக மடந்தை நல்லார் மணிபடு தூநீ ராடிப்
பூண்முகக் குழல்வி ரிப்பப் புனலுகுத் தறவோர் செங்கைக்
கோண்முகம் விரிப்ப வேள்விக் கொழுந்தழல் புகைவி ரிப்ப
நாண்முகத் திருள்கால் சீத்து ஞாயிறு கதிர்வி ரிக்கும் க௭

அருமறை யொலிய ழற்க ணண்ணல்பூ சனையெ டுக்குந்
திருமணி யொலிவேள் விச்செந் தியொலி சமிதை கூட்ட
வருமொலி யவ்வ ளத்து வளந்தரு மாவும் புள்ளுந்
தருமொலி செவிப்ப டாது தாழமே லெழீஇத்த யங்கும் க௮

வேறு

விண்படத் தோன்றி யின்சுவை யிளநீர்
வெளிப்படத் தங்கின்பம் விளைத்துக்
கண்படக் கரவா தளிக்குமோப் புரவோர்க்
கடுத்திலாக் கலிபல கவின

மண்படப் புதைந்து வேரிடை நறுங்காய்
மல்குற வுள்ளது மறைக்கும்
பண்பிலார் நிகர விண்ணக மறையப்
படர்சினைப் பலாநிரை பல்கும் ககூ

பூத்தலை வேங்கை புலிநலம் பொருவப்
பொரியரை நெரிவுறப் பொருது
காத்தலை மலிபு மேழிலைப் பாலை
கனலெழ முறித்தறக் கறுவி
நீத்தகன் றேடி யுறுமதம் விளைந்து
நெட்டுடல் புதைபட நெருங்கு
மாத்திரட் கஞ்சிச் சம்பகக் காவுண்
மதாவளம் பகலெலா மல்கும் உ0

பந்தியிற் பொலிந்து பச்சிலை வாழை
படர்தழை நெடுஞ்சினைப் பலவை
மந்தியும் புள்ளும் வேண்டியாங் கருந்த
வள்ளியோ ரெனக்கனி வழங்கு
நந்துமுள் ளடர்ந்து புட்குலம் வீழா
நன்கனி வறிதுற நான்று
சிந்துற நீண்ட சினைவிளாக் கயவர்
திருவென வொருபுறஞ் செறியும் உக

வேறு

வளம்பட வின்ன வாறு வகுத்ததை மிசத்து வாழ்வா
ரிளம்பிறை முடித்த வேணி யிறைவர்தா ளிருத்து நெஞ்சா
ருளம்பயி றாய்மை வாய்மை யொருமையன் பறிவொ டுக்க
மளந்தறி வரும்பே ராற்ற லருட்செல்வத் தறவ ராவார் உஉ

வண்டுழாய் படலை தாழு மணிப்புயத் தண்ண லாதி
யண்டர்தம் பதமும் வாழ்வு மரைநொடிக் காக்க வல்லார்
விண்டருக் குலமு மானும் வியனிதி யாதி யாவுங்
கண்டெதி ரிரக்க வல்ல கடுந்தவப் பேற்றின் மிக்கார் உங

வந்துகு பனிக்கா லத்து மழைவள மலிகா லத்துஞ்
சிந்துவி னடுவ ணின்றுஞ் செறிபுலப் பகைமை தேய
நந்துசெங் கதிரோன் வீறு நகுவெயில் வேனிற் காலத்
தந்தழ லுப்ப ணின்று மருந்தவ மாற்று நீரார் உ௪

அருமறை புகன்று வாழ்வா ராருயிர்க் குறுதி சூழ்வார்
திருமலி யந்த ணாளர் தீத்தொழில் சிறப்பச் செய்வா
ரொருதொழில் செய்ய வுன்னா ருவந்தறு தொழில்வ ளர்ப்பா
ரிருமையு மெளிதி னீவா ரொருமையே யுள்ளத் தேய்வார் உ௫

வேறு

வலியழி கந்தை யுடையெனக் கொள்ளார்
வற்கலை தோலுடை வனைவார்
மெலிவொடு மையம் புகுந்துண வீழார்
மென்கனி கிழங்குண வேட்டா
ரொலிகெழு நறுநீர் சருகுநீ வார
முவந்துண விழைவருர் மனைவாய்
நிலமலி திண்ணை தொறும்புறந் துயிலார்
நெடுவனம் வேட்பாக நீத்தோர் உ௬

ஆக்கநல் குரவு கழிபிணி நெடுமூப்
பல்லகண் டங்களிப் பவனாக
தூக்குநூற் கவிஞர் காப்பியத் தொகுதி
துறுத்தவுஞ் சொற்படப் பிறர்தம்
வாக்கினுங் கண்டு தெளிவர்தாம் புணரும்
வாய்மையா னுணர்வுறூர் மயக்க
மேக்கெழு வெகுளி காமமா மூன்றும்
விரவுறு நெஞ்சரவ் விரதர் உ௭

இங்குமிவ் வனத்துச் சூதமா முனிவ
னுவந்துபல் புராணமு முரைத்துப்
பாங்குறப் புலியூர்ப் பெருமையும் புகன்று
பண்டைநா ளவ்வனந் துறந்து

நீங்கினன் முனிவ ரங்கணன் புலியூர்
    நெடுநகர் கைதொழு தேயத்
தாங்கெழுந் தருளி யந்தக ரொருசா
    ரமல னாடிதொழு தமர்ந்தார் உஅ

சிறைபடு செம்பொன் முறுக்கிவிட் டனைய
    நெடுஞ் சடைக் கற்றைய நெடுவெண்
பிறைபடு சடிலப் பிஞ்சக னீறு
    பெருகொளிக் கண்மணி பிறங்கப்
பொறைபடு மெய்யு மருள்வளம் பழுக்கும்
    புதுமலர் விழிகளும் பொலிய
மறைபடு செவ்வாய்ச் சூதனு மாங்கம்
    மாதவ ரெதிருற வந்தான் உகூ

அந்தில்வந் தருளுஞ் சூதனை யாங்கவ்
    வறவர்கண் டடிதொழு தன்பால்
வந்தனை முகம னின்னுரை வழங்கி
    மணமலி நறுமலர்த் தவிசு
தந்துவந் திருத்தித் தாளிணை போற்றித்
    தக்கன செய்துமா தவத்தோய்
முந்தைநாட் டவமே யிங்குனை யனுக
    முடித்ததென் றுவகையின் மொழிந்தார் ௩0

மடக்கொடி யிடப்பான் மருவுற மகிழ்ந்தோன்
    வகுத்தநான் மறைப்பொருள் வாய்மை
திடப்படு யாதை தெளிக்குநற் புராணஞ்
    சேரமுன் பன்முறை தெளித்தாய்
கடப்படு மடியேந் தெளியவண் புலியூர்க்
    காதையு மொழியெனக் கழற
முடப்படு மதியக் கண்ணியான் றிருத்தாண்
    முன்னியச் சூதனு மொழியும் ௩க

நைமிசாரணியப்படலம் முற்றிற்று

ஆக செய்யுள் ௩௰௧

பாயிரம்

உள்ளு வார்மன மாசொரீஇ யுவகையுள் ளூறத்
தெள்ளு மானந்த தாண்டவச் செல்வர் தஞ்சி றப்பு
விள்ளு மப்புலி யூர்ப்புரா ணத்திறம் வினவிற்
கொள்ள நின்றபத் தொன்பது படலமாங் கோளே ௧

ஓத நின்றபத் தொன்பதாம் படலங்க ளுள்ளுஞ்
சூத சங்கிதை யுட்படு முற்படச் சொல்லு
மேதந் தீர்வுறு மீரறு படலமு மென்பார்
மூதக் கோர்புகழ் வாசிட்ட லிங்கம்பன் மூன்றே ௨

மன்று ளாடுவா னூர்த்துவ தாண்டவ மாண்பு
நின்றி டும்பவி டியோத்தர புராணத்து நிகழ்ச்சி
நன்று பன்னைந்து காந்தத்து நவின்றது நயப்பா
லொன்று மேனைய நான்குமப் புராணத்து ளுறுமால் ௩

சென்னி யாறணி சிவன்புலி யூர்நகர்ச் சிறப்பிங்
கின்ன வாறுபற் பலபுரா ணத்துளு மெடுத்து
முன்ன ரான்றவர் தொகுத்தனர் மொழிந்தனர் முற்றும்
பன்னு மாற்றலென் போலியர் பாலினும் படுமோ ௪

மங்க லம்பொலி செம்பொனம் பலத்துறை வள்ள
லெங்கு மாயவன் யாவையு மியற்றிடு மிறைவன்
பொங்கு பேரருட் புனிதனைப் பிழைகளும் பொறுப்போ
னங்க வன்கதை புகல்வதற் கஞ்சுகே றனியேன் ௫

பாயிரம் முற்றிற்று

ஆக செய்யுள் ௩௱௧

முதலாவது

சிவலிங்கபூசனைப் பயனுரைத்தபடலம்

அருமறைத் துறை யாற்றி யந்தண
ரிருமை யின்பமும் வீடு மெளிதுறத்
தருசி வக்குறிப் பூசனை சாற்றென
வொருமை மாதவச் சூத னுரைசெயும் ௧

அறவிர் கேண்மி னருட்குறிப் பூசனை
பெறவ ழுங்கு பெரும்பயன் பேசுகேன்
குறைவில் போகங் கொளுத்துங் கொடும்பவம்
பறைய வீட்டிப் பரகதி நல்கிடும் ௨

நன்று தீதென்று நாடு நயமிலா
னொன்று புற்கச னுறலைத் தாருயிர்
கொன்ற ரும்பொருள் கூட்டிய பலபகல்
சென்று முற்றவுந் தீவினை தீர்கலான் ௩

வீங்கு மாமறை யோர்குலம் வீட்டினு
ணோங்கு மான்குல மொன்றறக் கொன்றனன்
றீங்கு செய்துயிர் யாவுஞ் செகுத்தன
ஞங்கு யாவர்க்கு மல்லகண் டனுசெய்தான் ௪

மனாந யந்த வறிப்பட் டொழுகுநாட்
டினாந யந்தரட் பாளன் செழுமறைக்
கனாந யந்த கணிகா பதிகொளத்
தனாந யந்தளித் தானத் தகவிலான் ௫

ஆன்ற வான்பொருள் கைக்கொளு மந்தணன்
மான்ற புற்கசன் மையன் மனங்கொளச்
சான்ற போகச் சருவரி சாயமேற்
றோன்று ஞானச் சுடர்விளக் கேற்றுவான் ௬

வாழி யாயுயிர் வல்வினைச் செய்திதான்
றாழு றாதுயிர் சார்வுழிச் சார்வுறு
மூழி யேரினு மூட்டா தொழிவுறா
தேழை யோயிஃ தென்செய்த வாறுநீ ௭

பழுத கன்ற கணிகா பதிபுகன்
மொழிகள் யாவையு முற்பக னல்வினை
வழிவ ரும்பயன் வாய்ப்ப நிரம்பலா
லழித கன்கேட் டஞர்க்கடன் மூழ்கினான் ௮

வேறு

கல்லாத புன்மடமுங் கழிபாவ வல்வினையும்
பொல்லாங்கும் பழியுமிகப் புரிந்துழன்ற புன்பிறப்பு
நல்லாரோ டுறவிணங்கி ஞானநெறி தலைப்பட்டு
நில்லாது வாளாங்கு நின்றேனுக் கென்றொழியும் ௯

பண்டைப் பிறவிதொறும் பயின்றதவப் பலனெதிர்வந்
தண்டப்பெற் றாங்கிவ் வருவினைக்கோட் பட்டேனைத்
தொண்டுட் படக்கூட்டத் தூயோய்வந் துற்றனையான்
மண்டு மழைக்குநிலம் வகுக்குமோ கைம்மாறே ௧0

கொண்டு பலவுங் குறிப்ப வெடுத்துரைத்துத்
தண்டு பொருவத் தரைமுகத்து வீழ்ந்திறைஞ்சி
மண்டு மறையோன் மலர்த்தா ளிணைதொழுது
விண்டுபவம் போங்கழுவாய் விளம்பென்று வேண்டுற்றான்

வெய்யபவச் செந்தீ விண்டொழியு நெறிவேட்டுப்
பொய்யகன்ற புற்கசன்வாய் புகன்ற செழுமொழிகேட்
டைய மகன்றகணி காபதியா மம்மறையோன்
செய்ய கழுவாய் சிறப்பப் புகல்கின்றான் ௧௨

பூக்குமணி முடிச்சோழர் புயத்தேந்திப் புரந்தோம்பத்
தாக்குமறம் பொருளின்பந் தொல்லைவீ டெனுநான்குந்

தேக்குதலை நிலைதோறுந் தினந்துறக்க மனம்புழுங்கி
யேக்கமுற நலந்தழுவி யிலங்குவது சோணாடு கங

வம்பேறு முலைமடவார் மழலைசெவி மடுத்துமலர்
கொம்பேறிப் பறிக்குநகக் குலங்கண்டு மினங்குறிக்குஞ்
செம்பேறு முகக்கிளிதஞ் செங்கைபுக வெளிதெய்தாத
தம்பேறு மகிழ்வேறத் தளிரேறுந் தடஞ்சோலை கச

அடுத்ததணைக்குந் தனதண்ட மாமெனவெள் ளனபயங்கி
யுடுப்புழுக் கொழுமுனைப் புழக்கதிர்மு[illegible]
மெடுத்தகல்விண் புகமதிகா விளங்கதிமென் றினைசாதி
மடுத்திளம்பீள் வளர்த்தேற வனப்பேறும் வயலெல்லாம் கரு

வந்தவிருந் தயின்றெழியா மடைக்குன்ற நெய்யருவி
முந்தநறும் பாலருவி முளைத்தெழுந்து பெருக்கெடுத்துப்
பந்தவிருந் தெதிர்நோக்கிப் பருக்குமுலை பரிந்தோழுக்
சிந்துபுனற் பெருக்கோடு திளைக்குமனைத் திருமுற்றம் கசு

வேறு

நெருங்கப்போந் திரப்பா ரின்றி நெடுவளம் படுமூ ரெல்லா
மொருங்கப்போய் விருந்தோமே டாக்க லுடையவா யாரு மொன்றாய்
முருங்கத்தம் பசிநோ யுண்டு முழுமகிழ் சிறந்த லைலே
சுருங்கச்சோ றுடைத்தென்றுரைதொடர்மொழிப்பொருள்விளக்கும்

வரையெறி வயிர வாட்கை மகபதி மனையோ டந்நா
ளுரையெறி துறக்கச் செல்வ மொன்றறத் துறந்து நீங்கிப்
புரையெறி செல்வ நோக்கிப் போந்தமா நாடா மென்மை
கரையெறி புனற்கா வேரி கட்டுரைத் தொழுகு மென்றும்

அறம்பொரு ளின்பம் வீடென் றறைபடை நான்கு முந்தி
நிறம்படு கவச மாக நேரிர்புகழ் பலவும் போர்த்துத்
திறம்படு சிவன்றாட் பத்தி செறற்கரு பரணைச் சேர்ந்து
புறம்படு காம மாதிப் பொருபகை கடக்கு மூர்கள் ககூ

வழுக்கற வேள்விச் செந்தீ வளர்ந்தவி புணர்வு நல்கி
யிழுக்கெனா தீஇக் தங்கண் வாழ்வுற் றிருப்பவென்றுந் தாங்கு
மொழுக்கங்கண் கூடாக் காட்டி புணர்ந்தவ போன்றா ரெல்லாம்
விழுக்குலைத் தெங்கு பூக மேல்வளர்ந் தகல்விண் டாங்கும் ௨0

நிரப்புற மெலிந்து சென்று நித்தறு நெஞ்ச மின்றங்
இரப்பவ ரில்லை யேனும் யாவையும வெறுத்து நீத்த
வரப்பறு செல்வச் சைவ மாதவர் பலிக்கில் லெங்குங்
காப்பறு தாள்வீ ழாது கங்குலுங் கதவ மெல்லாம் ௨௧

நெய்ப்படு முண்டி யெங்கு நீற்றொடு கண்டி யெங்குங்
கைப்படு யோக மெங்குங் கனற்படு யாக மெங்கு
மெய்ப்படு விரத மெங்கு மேம்படு பாத மெங்கு
மைப்படு சோலை யெங்கு மணம்படு மாலை யெங்கும் ௨௨

அருந்தவ மாட்சி யெங்கு மமர்சைவக் காட்சி யெங்குந்
திருந்துமன் பருளோ டெங்குஞ் சிறப்பொடு செல்வ மெங்கும்
பொருந்து நோன்படக்கமெங்கும்பொறையொடுமின்சொலெங்கும்
வருந்துறு நீதி யெங்கும் வளர்புக ழீகை யெங்கும் ௨௩

இல்லொடு மகளி ரெங்கு மீதலோ டேற்ற லெங்குங்
கல்லொடு பசும்பொ னெங்குங் கமலமுந் தடமு மெங்கு
மல்லொடு வென்றி யெங்கு மணத்தொடு முழவ மெங்குஞ்
சொல்லொடு வாய்மை யெங்குந் துறையொடு நறுநீ ரெங்கும்

கார்படு சோலை யெங்குங் கதலிமா வருக்கை பூகஞ்
சீர்படு நறுநீ ரெங்குஞ் சிவம்படு செவ்வித் தீர்த்தம்
பார்படு மூர்க ளெங்கும் பயிலறப் புறம்ப ரக்கு
மூர்படு கோயி லெங்கு மொலிபடு திருவி ழாவே ௨௫

பைத்தெழு பகுவாய் நாகம் பணிமதி பலவுங் கவ்வி
வைத்திருந் தாங்குக் கோடன் மழைவள ரடுக்கத் தேறிப்

புத்தலர் பலவி ரித்துப் பொருந்துதேத் தடைமேற் புல்லு
மைத்தவழ் குடுமிக் குன்ற வளந்தழீஇ யதுகு றிஞ்சி ௨௬

செழுமழைத் தாரைக் காட்சி சிறந்ததொண் டலம்பு ணர்ப்பக்
கொழுமுகிற் குலமும் வேழக் கூட்டமு முறழு மேனுங்
கழுமுவெள் புனலொ ழுக்குங் கழிமதக் கலுழி வீழ்வுந்
தழுவெறி யாலவ்வெவ் வேறுந தடமலைச் சார லெங்கும் ௨௭

காய்சடை பூதி வெண்பூக் கண்மணி கருவண் டாக
மாய்வொரீஇ யெழுமு ருங்கை மாதவ ராகக் குண்டந்
தோய்வுறு நீரில் கூவ லெருகுதழ விருப்பை வெம்பிற்
போய்விழு தளிராக் கொண்டு பொலிவது மெலிவில் பாலை ௨௮

அடர்தரு மம்புக் கூட்ட மரும்பென விருப்பை காட்டச்
சுடர்தரு நெடுவாட் கூட்டந் தொகுதளி ரெனமா நாட்டப்
படர்வழி பறிப்பா ளுங்கட் பயிலுறு மறவர் பண்பு
திடர்படு பரன்மு ரமபு செல்வுழி யெல்லாங் காட்டும் ௨௯

மாயவன் றேற்ற மொப்ப மணிமல ரவிழ்க்குங் காயா
தூயதா மரைப்பொ குட்டுத் தோன்றல்வந் தளவ ளாவி
நேயமொ டொருங்கு கூடி நிற்பது கடுப்பக் கொன்றை
பாயபன் மலர்வி ரித்துப் பரம்புவ புறவ மெங்கும் ௩0

ஆயர்தங் குலம்பி றந்து மான்குலம் புரந்தும் பண்டு
மேயநன் றிமைப மித்து விரவின ரேயோ வன்றி
நேபமார் திருமால் பண்டை நிகழ்ச்சிபா னோர்ந்தா னேயோ
மாயனு நொதாவர் தாமும் வனநகொது மருவி வாழ்வார் ௩௧

மலிதரு மோடை வெள்ளை வாரண முழக்கத் தானும்
பொலிமலர் முகத்த ரம்பை புணர்தரு பொம்பி னானு
மெலிவறு செல்வத தானு மேம்படு மருத வேலி
கலிகெழு துறக்க மொப்பக் கரியவன் களித்து வைகும் ௩௨

தடம்படு குவளை நீலத் தாதுவண் டுழக்கச் சிந்தி
யிடம்படு தோற்ற மெங்கு மிருள்படு மெழுவெ ளாடுங்கள்
குடம்படு பணில நாளுங் கோளுநட்பன் மணியின் கூட்டந்
திடம்படு பகலுங் கஞ்சந் திருந்துபல் விளக்க ருயபும் ௩௩

கருங்கட லுப்பு நீங்கக் கார்முகி னீரை கொண்டு
மருங்குகுத் தோம்பக் கார்கோண் மணிப்புனல் சுவற்றிப் போக்கி
நெருங்களத் துப்பே கொண்டு நிலவுநா ளிலத்தோ ருண்டி
யொருங்குறு சுவைநன் றாக்க வுமணர்போற் றுவது நெய்தல்

முல்லையுங் குறிஞ்சி தானு முந்துறு மிலஞ்சி யோடு
புல்லுதா மரைபொ ருந்தும் புனம்படு குறிஞ்சி யோடு
நல்வள மருத வேலி நயம்படு வேழம் புல்லுங்
கல்லொடு முல்லை நெய்தல் கலிக்குமவா ரணங்க விக்கும் ௩௫

காண்டகு பற்ப னூலுங் கற்குமவ் வளவை யாக
நீண்டெழு மறிவு கொண்ட நிலத்தவர் நெஞ்சம் போலத்
தோண்டுமவ் வளவுஞ் செல்லச் சுரக்குநீர் மணலங் கேணி
வேண்டுழி யெல்லாங் கொண்டு விளங்குறு நெய்தல் வேலி ௩௬

வான்றொடு நெடுவேய்ம் பாளை மான்செவி மலைக்கு றிஞ்சி
தான்றழீஇ யெடுத்துக் காட்டத் தடஞ்சினை நெருங்கப் பூவை
கான்றபூ மயிற்க ழுத்துக் கானகங் காட்டக் கண்டு
தேன்றுளித் தொழுகு முல்லை சிறுநகை விளக்கு மன்றே

மடவியர் விழிவ னப்பும் வார்குழல் வனப்புங் கொண்ட
கடனலந் தழுவி யெங்குங் கழிபடு நெய்தல் காட்டத்
தடமுலை வதனஞ் செங்கை தளிரடி விழிகட் கொப்பாம்
படர்புகழ்க் கமலங் காட்டிப் பழித்திடும் பழனச் சூழல் ௩௮

ஒருத்தரே யன்றி விண்ணு டோரீஇ யெழு தியாக ராசர்
திருத்தகு மெழுவர் தாமுஞ் சேரவந் தமர்ந்து வாழுங்
கருத்துற வணக்க மன்பு காமரு தவந்தா னுதிப்
பொருத்தங்கொண் டொளிர்சோ ணாட்டின் பொற்பெவர் புகலுநீரார்

அத்தகு புகழ்ச்சோ ணாடா மரிவைதன் வதனம் போன்று
சித்தமா ரொருவிப் போற்றுந் திருத்தொண்டர் சிந்தை யுள்ளே
வைத்தபே ரமுதம் போலு மாணிக்கக் கூத்த ராடும்
பொத்துபே ரொளிமன் றஞ்சேர் புலியூரென் றொரூ ருண்டாம்

தேம்படு பொழில்சூ ழேனைத் திருநகர்க் கூட்ட மெல்லா
மேம்படு புகழ்ச்சோ ணாடா மெல்லியன் மடந்தைவைத்தோள்
பாம்படு மருங்கு லாதிப் பலவகை யுறுப்பும் போலும்
நாம்புகல் புலியூர்க் காட்சி நகைமதி வதனம் போலும் ௪௧

அந்தணர் மறைமு ழக்கு மாகமத் துறைவ ழக்குஞ்
சந்தடு களிநல் யானை கலினமான் றேர்மு ழக்கும
பந்தமா மலர்ச் செங்கைப் பாவைய ராடல் பாடல்
வந்தழு மிசைமு ழக்கு மறுகெலா மாறு மாரும் ௪௨

இன்னிள வேனி லானு மெழிலிவிண் ணெழுங்கா ராக
வன்னியந் தணர்நன் றோம்ப வாவடு புகையு மட்டிற்
றுன்னுதீம் புகைம டுக்குந் தூமமுங் குழலுக் கூட்டு
மின்னனோர் புகையு மொன்றாய் விண்ணெலாம் விரியு மன்றே

பொரும்புனற் கிடங்கு வாவி புறத்துறு மிதழா நொச்சி
விரும்புமுள் ளிதழ்ச்சுற் றுகு மேம்படு மாட மாலை
யரும்பொகுட் டழகு காட்டு மானுயர்த் தவர்பொற் கோயி
லிரும்புலி நகர்வி ராட்டுக் கிருதய கமலம் போலும் ௪௪

படிமுழு தளப்ப நீண்ட பசுந்துழாய்ப் படலை மார்பர்
நெடியவன் றேற்றம் போலு நீண்டெழீஇ விண்கி ழிக்குங்
கடிமதி றுப்பட் போஞ்செங் கதிர்கவுத் துவமே போலுங்
கொடிபடு முடுவின் மாலை குளிருமுத் தாரம் போலும். ௪௫

உலகெலாம் பரவும் பொன்மன் றுகந்தவர் நடங்கண் டார்க்கு
மலமுழு தகன்று நீங்க வலியழிந் தொதுங்கி யோடி
யலமரு பிறவிக் கூட்ட மாமென வீதி யெங்குங்
குலநிலைத் தேர்கொ ளுத்துங் கோற்றலைக் கிடந்து சுற்றும்

அங்கயல் விழிநல் லாரோ டாடவ ராடி நீத்த
தொங்கலு மிழையுஞ் சாந்துஞ் சுண்ண முந் தூர்க்கும் வீதி
கங் குலும் பகலு மெங்குங் காமவேள் முரச நாண
மங்கல முழாமு ழக்க மலிவன மாட மெல்லாம் ௪௭

நறுமணப் பொடியு நாறு நற்கறிப் பொடியுந் [illegible]
யுறுகறி வருக்கங் கன்ன லொழுகு தேனிழு[illegible]ப்பு
மறுசினை நீக்கி யுண்ண வாலரிப் [illegible] யாதி
யறுசுவை யுண்டி வேட்டோர்க் கருத்துசத் திரம னந்தம் ௪௮

புளிபடு நரந்த நெல்லி பொருந்துசம் பளமுப் பிட்டு
வெளிபடு வெயிற்ப டுத்து வேட்டவர் பருகி யேகக்
களிபடு நறுமோ ராதி கலப்புறக் கரைத்து வாக்கு
மளிபடு தண்ணீர்ப் பந்த லகன்மறு கெங்கு மோங்கும் ௪௯

பொருவரு ஞானங் கல்வி புகழ்படு செல்வ மீகை
யொருவரு நோன்ப டக்க முண்மையோ டொழுக்க மூக்க
முருவரு காம நோக்கு முடம்பொடு பிறவு மெல்லா
மருவிய மாக்கள் வாழு மனைகளும் வரம்பின் றோங்கும் ௫௦

வருந்துமா லாதி யோர்க்கு மறைக்குமெட் டாதொ ளித்தங்
கிருந்தவர் புறத்தி ருத்தி னெகினு மேத வாவென்
றருந்தவ ருள்ளக் கோயி லம்பொறிக் கதவ டைத்துப்
பொருந்தகன் றிருத்தி வாழும் பொற்புறு மடங்கள் பல்ல ௫௧

அடுக்குமே னிலைமா டத்து ளாடிடு மடவார் கூந்தல்
கடுக்குமைத் தெழுந்த கொண்மூக் கழைபடு தோளார் மேனி
மடுக்குமின் னழகு செங்கை வளர்தரு சிவிறி தூவ
முடுக்கிய பனிநீர் வெள்ள முற்படு மழைநீ ரொக்கும் ௫௨

கந்துவெண் பிறைமு டித்த நாயகர் நடனங் காண்பா
னந்தரத் தன்னப் புள்ளா மயனிழிந் தணுக லொக்கு

முந்துவெண் கொடிநு டக்க முற்றிய நீல மாடஞ்
சுந்தர மாயன் வந்து தொழுதுநின் றிடுதல் போலும் ௫௩

வள்ளறன் னகந்து றந்து மன்றுபுக் காடக் கண்டு
வெள்ளிவெற் படுத்த நோக்கு மேம்படு வயிர மாட
முள்ளுறுபொன் மன்று கந்தா ரொண்பொனுந் தனையு மேருக்
கொள்ளுவ ரெனத் தாங்குக் கூடிநின் றொழும்பொன் மாடம் ௫௪

செழுமுகிற் கூட்டம் போர்த்துச் செம்மணி மாடஞ் சில்ல
கழுமளம் படையோ டோங்கல் காரியங் கடவு ளொக்குந்
தழுமணித் தரளப் பந்து தடங்கழைத் தோளா ராடக்
கொழுமணி வாயில் வீழ்தல் கோட்புகர் விழுங்கல் போலும் ௫௫

மான்மதஞ் சருஞ்சே றாக மணற்கறை பளித மாகக்
கான்மலி பனிநீர் வெள்ளங் கரைபொரு தெழுநீ ராக
மீன்மணி குயிற்றுஞ் செம்பொன் விளக்கிழைக் கூட்ட மாக
வான்மயங் குறுபன் மாட மறுகெலா நதியோ டொக்கும் ௫௬

பெருமனை முன்றி லெங்கும் பேரியம் பலமு ழங்க
மருமலர் மாலை சூட்டி மங்கல மருவப் பூட்டிப்
பொருவருஞ் சிறீர்தி ருத்தும் பூம்பந்தர் பொலியக் கூட்டித்
திருமணம் புணரும் பாவைச் சிறப்பொரு புறந்தி ருந்தும் ௫௭

கனிமொழிக் குடைகி ளிக்குங் களிக்குநா கணவாய்ப் புட்கு
நனிமொழிச் சுவையு ணர்த்து நயமென நறும்பா லூட்டி
வனிதையர் சிறைவைத் தாங்கு வயங்குபொற் கூடுள் வைத்துப்
பனிமொழி பலப யிற்றிப் பயினல மொருசார் வீறும் ௫௮

பரப்புமுன் னைகயோ டொப்பப் பலர்புகழ்ந் துரைக்கும் பான்மை
கரப்பறக் காண்பா ரெய்பக் கையொடு புணர்த்துக் காண
நிரப்புதங் குரலோ டொக்கு நீர்மைகண் டறிவா ரொப்ப
நரப்புயாழ் பயிலு நல்லார் நலமொரு மருங்கு நண்ணும் ௫௯

பட்டிகைக் கடங்காச் செங்கைப் பாவையர் பருமுத் தார
மொட்டவண் டடக்கை யாழி புலம்பொரு தோளா ரொட்டிப்

பட்டபொற் பலகை தேயப் பளிக்குநாய் பலப ரப்பிக்
கட்டழ கொழுகு மாடற் காட்சிமற் றொருசா ரோங்கும் ௬௰

மைப்படு கண்ணி லக்கை வழிப்பட நடப்ப மற்றைக்
கைப்பிடி யிறும ருங்குல் காப்பத்தண் ணுமைக றங்கச்
செப்பினைப் பொருவுங் கொங்கைத் திருந்திழை மடவா ராட
லைப்புவ னமும ருட்டு மிசைவள மொருபா லெய்தும் ௬௧

வேறு

போக்கு பூஞ்சிறைக் குக்குடம் பொருநெறி புணர்த்து
மூக்கு மாந்தர்த மொடுக்கமோப் பப்பெயர்ந் துருத்துத்
தாக்கு மேழகத் தகர்பொரு நெறிபல சமைத்தும்
வீக்கு பொற்கழல் வீரரார்ப் பொருபுறம் விரவும் ௬௨

வருமு றைப்படு பிற்றைநாட் புதுக்கடி மணந்தோர்
திருமடந்தையு முகுந்தனு முலாவரு திறம்போற்
பருமயானையும் பரியுமூர்ந் துலாவரும் பவனி
யிருவி சும்பினின் றேக்கறத் தலைத்தலை யிசையும் ௬௩

வேறு

தேம்படு கமலப் புத்தே டிருவடிப் பிறந்தா ரேனும்
பாம்பணைத் திருமால் பூந்தாட் படுகங்கை மரபே பற்றி
யோம்புமக் கங்கை நானு மொழுக்கமுந் தூய்மைப் பாடுந்
தாம்புணர் வேளாண் மக்கள் சார்தெருப் பலவுஞ் சாரும் ௬௪

மண்மகள் புதல்வ ரென்னு மரபினுக் கேற்ப மாருத்
திண்மையும் பொறையுங் கொண்டு திருந்துழு வரையுந் தாங்கி
வண்மைநாற் பொருட்கூட் டத்துண் மரீஇயபே ரறமேபோன் றங்
குண்மைநாற் குலத்துக் கீழ்ப்பட் டுயர்ந்தவ ரிருக்கை பல்ல ௬௫

அரும்பவஞ் செய்வார் மாட்டு மறஞ்செயா தமர்வார் மாட்டு
மிரும்பொரு ளில்லா தோடு மியல்புகண் டீட்டி யீவார்
விரும்புறு கணிகை மாதர் விழிக்கெதிர்ப் படவு மேவார்
வரும்பொரு ளீக்கி வாழும் வாணிகர் மறுகு பல்ல ௬௬

கோற்படு தடக்கை மன்னர் குலந்தமேற் கொண்டு [illegible]
ணூர்ப்படு வேளாண் மக்க ளேனைக்குலங் கொள்ளு நாய்கர்
மேற்படு மின்பங் கீழ்க்கண் விரவுபே ரறத்தோ டோங்கப்
பாற்படு பொருணின் றூங்குப் பயில்வுறு மிருக்கை பல்ல ௬௭

ஆம்பகை யின்றி ஞால மரசுகோல் செல்ல நோக்கித்
தாம்புணர் வென்றி யில்லார் தந்திவாம் பரிமா மல்ல
தோம்புறு மொருமை சேவ லுறுதகர்ப் படைபோர் வென்றி
மேம்படக் கண்டு வக்கும் வேந்தர்வாழ் வீதி பல்ல ௬௮

பொருபடை தரணி யீட்டும் பொருடபடு மின்ப மெல்லாம்
வொருநெறி வழாது கொண்டு வகுத்தாற் பொருந ளொன்றாத்
திருமலி யின்பம் போன்று திண்புவி யென்றும் வேட்ப
வொருதலைப் படுங்கோல் வேந்த ருறையுண்மற் றெண்ணி லாத

செவ்விய தட்பம் பூண்டு திருத்துநல் லொழுக்கத் தானுந்
திவ்விய மறையி னந்தஞ் சென்றுறு சிறப்பி னானும்
பவ்வநீர்ப் புவிகை கூப்பிப் பரவுமந் தணரா முன்னோர்
வெவ்வமொன் றானு மின்றி யிருந்துவாழ் வீதி பல்ல ௭௰

மன்னவர் வணிக மாக்கண் மண்மகள் புதல்வ ரென்ன
முன்னுமூ வருந்தம் பொற்றாண் முறையுளித் தொழுது போற்று
நன்னயப் பாடு பூண்டு நாற்பொரு ளீற்று வீடே
யென்னநன் றமரு முன்னோ ரிருக்கையு மெண்ணி லாத ௭௧

அங்கணீ ராயி ரம்வா யாயிர மாகப் பெற்ற
செங்கண்வா ளரவ வேந்தன் றிங்களங் கண்ணிச் செல்வர்
தங்குறு புலியூர் கண்டு சாற்றுவன் கேட்க வல்லா
வெங்குள ரவனே யன்றி யிராயிரஞ் செவியுள் ளாரே ௭௨

வேறு

கன்னியுமை கண்டுவப்பக் கதிர்மதிய முடிக்கணிந்தார்
தன்னலங்கைக் கொள்ளாது தடம்புலியு ணடநவிலு

நன்னலங்க ளொருங்கணுக நண்ணரியமர் நலம்வேட்டுப்
பொன்னுலக மடுத்ததெனப் பொன்மன்றம பொலிந்துயரும்

தூற்றுமதுப் பொற்கடுக்கைத் தொடையோடு செஞ்சடையு
நீற்றொளியோ டிளமதிகா ணிலாக்கதிரு மெதிர்ந்தாட
மாற்றுயர்பொன் மன்றேறி மாணிக்கத் திருக்கூத்தன்
கூற்றுவனைஞ் சங்கலங்கக் குரைகழற்ற னெடுத்தாடும் எச

மன்றுடையார் சந்நிதிமுன் வளர்களிற்றுப் படிமருங்கே
யன்றுரிக்கும் புலித்தலையோ டனுதுபுலி முகம்புலிக்கா
லொன்றியமர் நலங்கடிப்ப வொலிக்குமடற் றெங்கிளங்காய்
துன்றரம்பைக் கனிபலவுந் தொலையாது வளர்ந்தேறும் எரு

அங்கணர்பொற் கழலடிக்கீட் டருச்சனைசெய் கூவிளமுங்
கொங்கவிழு நறுமலருங் கொண்டுபுறஞ் செல்வாரும்
பங்கயக்கை தலைக்குவியப் பணிந்துள்ளாற் படர்வாரும்
திங்களணி கோபுரத்துட் சென்றடுத்து நெருக்குறுவார் எசு

தண்பனிநீர் நறுந்தாமஞ் சந்தனமஞ் சனம்பல்பூ
வெண்பளித மானைந்து விரைவருக்க முதற்பலவுங்
கண்பொழி முத் தொடுகொணர்வார் கைதொழுது களிப்புறுவார்
பண்பயிலுந் துதிமாலை பாடுவார் பலர்மலிவார் எஎ

கண்படுதாண் டவச்சிறப்புக் கண்டுதொழுந் தவமின்றி
மண்படவீழ்ந் தறிவழிந்து மதிநான்கு மவசமுறுந்
திண்புயமா யவனெழுந்து திருமுன்பு நிற்றல்பொருஉம்
விண்படுகோ புரமுயர்ந்து மேவியெதிர் விளங்கிடுதல் எஅ

மணிமுழவுங் குடவளையும் வங்கியமும் வார்முரசு
மணிபடுகா களப்பீலி யாதியவு மன்பர்குழாம்
பணிவொடுநின் றெடுத்தியம்பும் பலதுதியுந் தமிழ்மறையுந்
தணிவறுநான் மறைமனுவுந் தழங்கியெழு நெடுங்கடல்போல் எகூ

வேறு

என்றிவ்வகை புகழப்படு மெழின்மேம்படு புலியூர்
ஆன்றுந்தவ முனிவோர்பலர் தொகுதானவர் வானோ
ரொன்றிப்பணி வுறுகின்னர ருரகாதியர் போற்றி
நன்றிப்படு வரங்கொண்டிடு நலத்தோடுயர்ந் திடுமால் ௮௰

பழிமேவிடு கொடுவஞ்சகம் படுவன்கொலை சாமம்
பிழியூணொடு பிறர்மங்கையர் பெருந்தோணசை முதலாங்
கழிபாதக மலவாதனை கழுவும்புனற் றீர்த்த
மழியாதமெய் வீடுந்தரு மழகுங்கொளும் புலியூர் ௮௧

திருமேம்படு செஞ்ஞாயிறு செறிதிங்களஞ் செல்வ
னுருநாப்பணு றுங்காட்சியி னொளிதாம்முபொன் மன்றம்
பருவெண்சுதை மதில்சூழ்வரப் பட்டுப்பொலி புலியூர்
மருவிப்பல பகல்வைகுறின் வருதீவினை மடியும் ௮௨

நண்ணார்புரம் பொடிக்குங்குற நக்கயார்நட நவிலு
மண்ணோர்புகழ் புலியூர்நகர் வைகிக்கதிர் வருமுன்
தண்ணார்புனல் படிந்தாடுபு சந்திகடன் கழித்து
விண்ணோர்தொழு பொன்னம்பல மேவித்தொழு திடுவாய் ௮௩

வேறு

மொழியு நெறியிற் றிருவம்பல முன்னி யேத்தற்
கழியு மனமும் பயமும்பெறி னுமாங்க கன்று
கழியும் புறத்தைங் குரோசப்படக் காணு மெல்லை
விழியுட் படப்பொற் பொதுநோக்கி விழைந்து போற்றி ௮௪

செய்யுந் தவத்தர் மறையந்தணர் செங்கை யேற்பப்
பெய்யும் புனலோ டறத்தாற்றிற் பிழைப டாம
லுய்யும் வகைகைப் படுசெம்பொ னுவந்து நல்கி
னையும் பவம்போ மெனவேதிய னன்று சொன்னான் ௮௫

வெங்கட் களிறு மணிவீணை விழைந்து கேட்டாங்
கங்கட் புகலு மறையோன்சொ லமர்ந்து கேட்டுச்

சிங்கம் பொருவுத் தசனம்மறைச் செல்வனோடு
திங்கட் சடையார் புலியூர்நகர் சென்று சேர்ந்தான் அசு

காயம் புகலெங் கதிர்தோன்றுபு கங்குனீங்கத்
தோயம் படிந்து குடைந்தாடுபு தூய்மை யெய்தி
மாயன் பரவு புலியூரை வலங்கொண் டேத்தி
நேயம் பெருக வருபுற்கச னின்று தாழ்ந்தான் அஎ

புந்திப் படுமைங் குரோசப்பட் புற்க சன்ற
னந்திப் படுவெண் மதிமாமுடி யத்தர் மன்றம்
வந்தித் திறைஞ்சிப் பலவைகன் மருவி வாழ்ந்து
பந்தங் கழலுந் தவவாழ்விற் பயின்று நின்றான் அஅ

தேடு நிதிய மறையந்தணர் செய்த வத்தோ
ரோடும் புனலோ டுவந்தேற்ப வுதவி மன்று
ளாடும் பெருமா னடிபோற்றின னாக நீங்கி
நாடும் பரபோகமும் வீடு நயந்து கொண்டான் அகூ

உள்ளம் பயில நிறைந்தோடி யொழுகு மன்பின்
வெள்ளம் பெருகத் திருவம்பல மேவிப் போற்றிக்
கள்ளம் பயிலாக் கணிகாபதி காய நீங்கத்
தெள்ளம் புனற்செஞ் சடையாரடி சென்று புக்கான் கூ0

கந்தம் படுமா மலராதி கலப்பக் கொண்டு
சந்தம் பயிலு மறையோர்பலர் சைவ லிங்கம்
வந்தங் கிருந்து மறையாற்றின் வழுத்தி நோற்று
ரந்தம் படுநாட் பெருமுத்தியு மாங்க ணுற்றார் கூக

வீடு விரும்பி வழிபட்டுளம் வேட்ட வாறு
கூடும் வீடு பெறலன் றியுங் குன்ற வில்லி
யாடுங் கழற்சே வடிபோற்றி யளப்பில் போகம்
பாடும் புலியூர்ப் பெறுமந்தணர் பற்பலோரே கூஉ

பலவும் புகன்று பயனென்னை பணிவெண் டிங்க
ணிலவு பொருவுந் திருநீற்றொளி நீடு மெய்யீர்
கலைபிலிங்கத் தருபூசனை காணும் புத்தி
குலவு முத்தி யிரண்டுங்கொளக் கூட்டுங் கண்டீர் ௬௫

வேறு

திருந்துமா தலத்தீர் நீவிர் சிவலிங்க வழிபா டாற்றிப்
பொருந்துபொன் மன்று ளாடும் பூரணர் பொற்றாள் போற்றி
யருந்துயர் புத்தி முத்தி யடைதிரென் றுரைத்தான் சூதன்
வருந்தவ ரவனைப் போற்றி மரபுளிப் பூசை செய்தார் ௬௬

திங்களி னறுநீர் சாந்தஞ் செழுமலர் தூபந் தீபந்
தாங்குவெண் பரிதந் தாமுந் தணப்பறு நிவேதனங்கொண்
டாங்கவ ரீன்ற மைந்த ரவர்தரு புதல்வர் யாருந்
தேங்குறு கற்றத் தோடு சிவக்குறிப் பூசை செய்தார் ௬௭

மன்னுமே ழுலகைத் தாள்சேர் மணிகண்டர் வழிபா டொப்ப
முன்னுபுண் ணியமொன் றில்லை முடிமதிக் கண்ணி யண்ணல்
பன்னுபூ சனைக்கே யன்றிப் பாவைசூழ் ஞாலந் தன்னுட்
டுன்னுமற் றொன்றி னுக்குந் தோன்றிநற் கருணை செய்யான்

பண்ணவர் முனிவர் நாகர் பகலிர வேத்து முக்க
ணண்ணலைப் பூசித் தேத்தி னயனொடு நெடுமா லாதி
விண்ணவர் தமமை யெல்லாம் விழைந்துபூ சித்தப் பேறு
நண்ணுறு மென்று பல்கா லுன்மறை முடிமுழங்கும் ௬௭

சிவலிங்கபூசனைப் பயனுரைத்தபடலம் முற்றிற்று.

ஆக செய்யுள் ௬௮

இரண்டாவது

சிவபத்தர்பூசனைப்பயனுந்தலவாசப்பயனுமுரைத்தபடலம்

அவ்வுரை புகன்றவ ணமருஞ் சூதனைப்
பைவரு பாம்பணிப் பரமன் றொண்டரை
யெவ்வகை வழிபட லெய்தும் பேறவை
யுய்வகை புகறியென் றுறுவர் வேண்டினார் ௧

பொன்பொதி நெடுஞ்சடைப் புனித னன்பரை
யன்பொடு வழிபடு மாறு மாங்கது
நன்பயன் வழங்கலு நவிறுங் கேண்மெனத்
துன்பொழி பெருந்தவச் சூத னோதுவான் ௨

திங்களஞ் சடைமுடிச் செல்வ னன்பர்தா
மெங்கன மகிழ்வரவ் வியல்பு நாடுபு
பங்கயச் சேவடி பரவ லல்லது
தங்குபூ சனைவிதி தானொன் றில்லையால் ௩

நலம்படு தொண்டர்த நளினச் சேவடி
கலம்படு நீர்கொடு கழாலுங் கார்விளை
திலம்படு நெய்யுடற் செறிவித் தாட்டலும்
பலம்படு பூசனைப் பான்மை யெய்துமால் ௪

அருவழி நடந்திடு மயர்வுஞ் சோகமு
மொருவநற் றொண்டர்த முடம்பு தைவரன்
மருமலர்ச் சேவடி வருட லுட்பட
விருநிலம் பூசனை யியல்பிற் றென்னுமே ௫

அன்னமுஞ் செம்பொனு மணியு மாடையு
நன்னய மாலையு நயக்குஞ் சாந்தமுங்
கன்னியும் பூமியுங் கறவைக் கூட்டமு
முன்னுமெள் ளாதியு முவப்ப நல்கலும் ௬

பூசனை யாமெனப் புகலு நூலெலாம்
பேசருந் தொண்டர்தம் பெருமை நோக்கியவ்
வாசவன் மலரயன் வணங்க மன்றம
ரீசனும் வேண்டுவ யாவுஞ் செய்திடும் எ

வளைகடற் புடவிமேல் வணிகர் காவலன்
கிளைதழீஇ யொழுகிய கேடில் வாழ்க்கையான்
றளைபடு மன்பொடு தருமம் போற்றுவா
னுளைவறு நெஞ்சின னொருவன் வைகினான் அ

மருவுறு மன்னவர் மைந்தர் நால்வருட்
டிருமவி மூன்றெனச் செப்பு மெண்முறை
வருமவ னறநெறி வழுக்கி யீட்டுறு
மருநிதி யெனப்பவ மனைத்து மீட்டினான் கூ

அளகைவேந் தனுமழுக் கறுக்கும் வாழ்க்கையும்
பளகறு செல்வமும் பண்டை நற்றவத்
துளமகிழ் வணிகனுக் குறினு நெஞ்சக
மிளகுமன் புடனரு ளின்றி வாழ்ந்தனன் க0

அலகறு பிறவிதொ ருற்று மாதவம்
விலகரும் பயன்றர விரும்பும் வாணிகர்
திலகமே யனையவன் றிருந்து மன்புட
னுலகுபோற் றிடுபுலி யூரை யண்மினான் கக

வேண்டுறு மன்னமும் விழைவு மாடையும்
பூண்டரு சாந்தமும் புனையும் பூக்களு
மாண்டதாம் பூலமும் வணிகர் கோமக
னாண்டுமூன் றன்பருக் களித்து வைகினான் கஉ

படிமிசை யன்பரைப் பரவும் பேற்றினு
லடிதொழு மடியவ ரன்புக் கன்புசெய்
கடிபடு கடுக்கையங் கண்ணி சூடிய
முடியவர் பதநிழன் முத்தி பெற்றனன் கங

மொழிபல புகல்வதென் முக்கட் பண்ணவன்
வழிபடு மடியரை வழுத்து வார்வினை
யழியவந் தருள்செயு மவர்முன் றோன்றிநின்
றொழிவறு தாண்டவ முவந்து செய்திடும் கச

இன்னவை சூதனங் கியம்ப மாதவர்
மின்னகு பொற்சடை விமலர் தாண்டவ
முன்னியங் கவசமா யொருகணத் தெழீஇப்
பின்னரு மிவ்விசை பேசு கின்றனர் கரு

தத்துவ நூற்களைத் தவறின் றாய்ந்திடு
வித்தக நாவலோய் விருப்பு ஞானமே
முத்திதந் திடுமென மொழிகின் றார்சில
ரத்தகு கருமமென் றறைகின் றார்சிலர் கசு

அளித்திடு தானமென் றறைகின் றார்சிலர்
தெளித்திடு தவமெனச் செப்பு வார்சிலர்
களித்திடு நானிலை கைக்கொண் டோம்புதல்
விளித்தறன் கடைதரும் வீடென் பார்சிலர் கஎ

என்றெடுத் துரைசெயு மிவற்றுள் யாவரு
மன்றமர்ந் தாடுவார் மலரடித் துணை
கன்றுறு தியற்றிடிற் கடிதி னுய்த்திடு
மொன்றுரை செய்தியென் றுறுவர் வேண்டினார் கஅ

தூமறை யந்தணீர் சோறுங் கேண்மினோ
மாமறை யாவையும் வகுக்கு மந்தணன்
காமர்வை குந்தமேற் கலந்து பண்டைநாட்
டாமரைச் செங்கணோன் றாள்ப ழிச்சினோன் ககூ

பங்கயச் சேவடி பரவி யேத்திநின்
றிங்குநீர் வேண்டியாங் களிதின் வீடுற
லெங்கனம் புகறியென் றிரந்து வேண்டினன்
செங்கண்மா யவன்மகிழ் சிறந்தெ ழுந்தனன் உ0

ஆங்கவன் றன்னொடு மமரர் தம்மொடுந்
தேங்கமழ் பங்கயச் சிறுவன் றன்னொடும்
பாங்கமர் திருவொடும் பசுந்து ழாய்முகில்
வீங்கொளிக் கயிலைமால் வெற்பின் மேவினன் உக

வேறு

பூத்திகழும் பசுஞ்சோலை புறஞ்சூழ்ந்து பொலிதோற்ற
மீந்திகழ்பல் லுரகைசூழ் விசும்பேய்ப்ப வெள்ளிவரை
நாத்திகழும் பெருவனப்பு நனிமதியான் றதனடுவாந்
தேத்தணுகித் தேயாமே திகழ்கிடக்குந் திறம்பொருவும் உஉ

பரவுமொளி பாலாழிப் பரப்பாகப் பண்டமா
குரவசுர ரொருங்குகுழீஇ புறக்கடைந்து திரட்டுமருந்
தரவமலி வெள்ளிவரை யதுகவர்வா னணுகுமவர்
பொரவருவர் சுராசுரர் பூரணனைத் தொழும்பொருட்டே உங

செங்கையெடுத் தடுத்தெதன்றுந் தீராது போர்த்தணியு
நங்கள்பிரான் றம்பினமே நயந்தமைநன் குணர்ந்தவைபோற்
றங்குவன்மான் குலம்பலவுந் தருக்குபுலிக் குலம்பலவுமு
பொங்குமதக் கயம்பலவும் புணர்வனவப் பொருப்பெங்கும் உச

செங்கனல்வெற் படிமுடிமுன் றேடியுழ றிருமாலும்
பங்கயனுந் தினமேறிப் பரம்பரனைப் பணிந்தேத்தித்
தங்கண்மனக் குறையனைத்துந் தளர்வகன்று புகன்றகல
வங்கணொளி யகன்றன்று மலங்குவதவ் வான்கயிலை உரு

உலகமொரு மூன்றனையு மொருங்குவிலைக் கொளக்கிடந்தங்
கிலகுபெரு வயிரமணி யெனத்திகழு மிறைகயிலை
விலகொளியவ் வெள்வயிர மேதகவைத் துறப்போற்றும்
பலகவின்கூர் சிமிழாகும் பாங்குறச்சூழ் பகிரண்டம் உசா

வேறு

மலிபுக ழருணை வெற்பில் வந்தனம் போலு மென்ன
வலிகெழு முவணப் புள்ளூர் மாலயன் மருண்டு நோக்கப்

பொலிதழ லுருவம் பூக்கும் புடைபழு வேங்கைக் கான
மெலிவில்கார்த் திகைவி ளக்கம் விரிப்பன விரைப்பூங் கோடல்

தாழ்வரைப் பட்ட நீலத் தடமணித் தாறுகல் லேறி
வீழ்மலர்க் காந்தட் புல்லி வெற்பொளி துளங்கும் வீறு
கேழ்படு பலகை பற்றக் கிளர்வரைத் தோண்மேற் கொண்டு
பாழ்படு மரக்கன் றூக்கப் பண்டைநாட் டுளங்கல் போலும்

ஒருமுகிற் குலநி ழற்றின் மரகத வரையே போன்று
மருவினா யிறுநி ழற்றின் மாணிக்க மலையோ டொத்துந்
திருமதி நிழற்றின் வெள்ளிச் சிலம்பெனத் தானாய் நின்று
மருவிசூழ் கயிலைக் குன்ற மமருமுக் குணமுங் காட்டும் உ௯

செங்கண்மால் வெண்பொன் செம்பொன் செய்தசும் பமர்வெண் சாந்தங்
குங்குமக் கலவை கொட்டுங் கோளெனக் குழுமி விண்போ
மங்குலுங் கதிர்வி ரித்து வருசுட ரிரண்டு மேவா
வங்கணார் கயிலைக் குன்ற மற்பகற் பொற்பொ டோங்கும் ௩0

விண்புகு மதிவி ளக்கம் வெண்குடை விரித்த தொக்குங்
கண்படு கனலி தோற்றங் காட்டுசெங் குடையோ டொக்குந்
திண்புவி பரவும் வெள்ளிச் சிலம்பின்மேற் செறியு மேகந்
தண்படாத் தமைவி தானந் தாரகை தூக்குந் தாமம் ௩௧

புரிசடை யருவி மாலை பொலிமதி யிரவி நோக்கங்
கரியுரி போர்க்கு மாட்சி கருமுகில் சூழுங் காட்சி
விரியும்வெண் ணிறவி ளக்கம் விரவுநீற் றொளியா மேவி
யெரிதழல் விழியார் போலு மெழில்படு கயிலைக் குன்றம் ௩௨

வீங்குசெந் தளிர்ப ரப்பி விண்கிழித் துயரும் பன்மாப்
பாங்குறு தோற்ற முக்கட் பண்ணவ னிற்ற லொக்குந்
தூங்குறு கனிநெ ருங்கத் துணர்படு மலர்வி ரித்தங்
கோங்கிய மதலை சூழ்த லுருத்திரர் சூழ்த லொக்கும் ௩௩

முடித்துண்ட மதியஞ் சூடி முக்கண்ண னிருத்தாள் போற்றி
யொடித்துண்டு துன்பஞ் செய்யு முவாவெலா முயிரு லப்ப
மடித்துண்டு வீழ்க்கும் வேழ மருப்பள விறப்பப் பெற்றுங்
கடித்துண்டம படைப்ப மூக்கு மரம்பையங் கான மோங்கும் ௩௪

செஞ்சடைக் காட்டின் மேவச் சிறுமதி யொன்று கொண்ட
பிஞ்சகன் விரும்பு மென்று பிறைபல கறைய கற்றி
யஞ்சுநம் பாற்றி வீழ மருமணம் படக்கொண் டாங்கு
விஞ்சுதே மலர்விரித்து விண்ணொழீஇ முனிகி ளோக்கும் ௩௫

பருவரை மார்பந் தாங்கப் பறித்தணி பன்றிக் கோடு
தருநலம் விரும்பு மீசன் றம்மையும் விரும்பு மென்று
பொருவரு பன்றிக் கோடு புனைந்திடு காட்சி யொப்பத்
திருமலர் பலவிரித்துச் செறிவன நறிய வாகை ௩௬

செக்கரஞ் சடையுட் டாங்குந் திருமணிச் சூட்டு மானக்
கொக்கிற கொன்று பூண்ட குன்றவிற் குழகர் சென்னி
புக்கணி யாக நல்கப் போற்றுகொக் கிறகே போலப்
பக்கமெங் கணுநெருங்கப் பன்மலர் படுமந் தாரம் ௩௭

கொடுவரி யுரித்துடுத்தார் கொண்டுமெய்க் கணிதல் வேட்டாங்
கடுபுலி யுருவம் பூக்கு மவ்வரைச் சாரல் வேங்கை
விடுசுடர்க் கனல்கைக் கொண்ட வித்தகர் விரும்பல் வேட்டுப்
படுகனல் பொருவ விள்ளும் பராரையம் பிண்டி பல்பூ ௩௮

திருந்திடு புலரியன்றிச் செங்கதி ரத்தக் குன்றம்
பொருந்திடு மாலை யேனும் பொற்படு வண்டு பூந்தே
னருந்திடு குற்ற நீக்கி யருந்தவர் கொளமணத்தோ
டிருந்திடு பொற்பூ வேந்தி யிலங்கிடுஞ் செண்பகக்கா ௩௯

கூடிய புளிமா வீறு குறைப்பினு மாமாக் கூடு
நாடிய தேமா வாதி நந்தினு மாமா நண்ணும்
பாடிய வகத்தி யல்லி பயிலுமா மிரங்க ளெல்லா
நீடிய நடுக்கு றைத்து நீக்கினு மாமா நேரும் ௪0

அருவிமா முழவம் விம்மு மவ்வரைச் சார லெங்குந்
திருமலி தேமா வாமாத் திருந்துறு புளிமா வெல்லா
மொருமொழி யாகக் கொள்ளி னெவ்வெறு பொருளாய்ப் போகும்
வருதொகை மொழியாக்கொள்ளின் வான்பொருள் பலவாய்மன்னும்

பணிமுடிப் பரமன் பாத பங்கயம் பரவல வேட்டுத்
தணிவொரீஇ வருசெங் கண்மா லுமைக் கிழவ னாதி
யணிகெழு விண்ணோ ருள்ள மகிழ்ந்துநெக் குருக வீறு
மணிவரைச் சாரல் வைகு மாதவர் சாமகானம் ௪௨

வேறு

அடுக்கலென் றடுக்கு மமரர்பற் பலரு
மாங்குறு பாரி டமனைத்துந்
தடுக்கரன் கிழிந்து மேறியும் பலகாற்
றளர்வொடு தாழ்வரைச் சாரன்
மடுக்கவந் தீண்டி விலங்கலென் றநத
வரைமருங் குள்ளகம் வருந்து
மிடுக்கனென் றன்றி யெய்துவோர்க் காங்க
ணெய்துறு மிடுக்கனென் றில்லை ௪௩

முக்கணன் றிருத்தாள் வழிபடு மமைய
முற்றுவ தென்றென முன்னித்
திக்கமர் முகத்தோன் மாயவன் முதலாந்
தேவர்வா ழிடங்களுந் திருந்து
மக்கமா லையும்வெண் ணீறுமெய்ம் முழுது
மணிந்திடு மருந்தவ ரகமும்
பக்குவச் சிவபுண் ணியம்புரிந் தவர்தாம்
பயின்றுவா ழிடங்களும் பலவால் ௪௪

வண்டுழாய் மௌலி மாயனூர் கலுழன்
மலரய னூர்தியா மாளம்

கொண்டல்வா கனத்தூர் கோட்டுமா வருதிக்
குலபபடு விண்ணவர் கூட்ட
மண்டர்நா யகன்றன் றிருவடி வழுத்து
மருந்தவ ராதிய ரடைந்தார்
தண்டுறு தகன்று மவ்வரை வாழ்க்கை
தழுவியாங் குறுவதச் சாரல் ௪௫

உரைப்படுத் திவ்வா றெறுதிடு நலங்கொண்
டோங்கிடு கயிலைவெற் புச்சி
நிரைப்படு மணியுஞ் செம்பொனு மிழைத்து
நிறுத்திய மகுடமே நிகர்ப்பத்
திரைப்படு கங்கை யிடைச்சிறு தோணி
செறிந்தெனச் சிறுபிறை செறித்தார்
வரைப்படு கொங்கை மலைமக ளோடு
வாழ்திருக் கோயின்மன் னிடுமால் ௪௬

அத்திருக் கோயிற் காவல்பூண் டங்க
ணமர்சயி லாதிதன் னருளாற்
கொத்தலர் துளவத் தாமனுந் திருவுங்
குமரனும் வியாதனுங் குன்றாப்
பத்திமை யோடு பண்ணவர் சூழப்
பணிவொடு முட்புகப் படர்ந்து
தத்துவங் கடந்த நித்திய முதல்வன்
சார்திருச் சபையெதிர் சார்ந்தார் ௪௭

எங்கணு முறையு முக்கண னியற்கை
யாவருங் கண்டுழி யெண்ணப்
பொங்கொளி மணித்தூண் பித்திகைப் புறத்துப்
புனைந்திடு பன்மணி பொலிய
மங்கலமருவுந் திருமுக மைந்தும்
வரைக்குலம்பொருவு தோள் வனப்பு
மங்கமற் றையவும் வேறுவே றுயாங்
காங்குற நன்றுகின் றமைய ௪௮

அற்றைநா ளரியா யணுகுதம் பினத்தொன்
றகமகிழ்ந் துரித்தெடுத் தமர்தோட்
பொற்றைமே லணிந்த நன்றியுண் மதித்துப்
போந்துதாங் கிடுவன பொருவ
வெற்றிமேம் படுசெங் கட்பல சியம்
வியன்முது கேந்தமேல் விரவிச்
சுற்றமைத் திழைத்துப் பசும்பொனிற் செய்து
சுடர்மணிப் பீடமேற் றோன்றி ௨௯

மணிகொழித் தெறியுங் கங்கைநீர் முடித்த
வளர்சடை புகமண மதித்துத்
துணிவொரீஇ யெழுந்து வீழிரு கங்கைச்
சால்பென விருபுறஞ் சார்ந்து
பணிவொடு மமரர் செங்கையி னெடுத்த
பசுமணிக் காம்பின்மேற் பட்டங்
கணிபடு கவரி யெழுந்திரு பாலு
மலமந்து துள்ளிவீழ்ந் தசைய ௩௰

செக்கருஞ் சடைமே லேறிவீற் றிருக்குஞ்
சிறுமதி கண்டுளந் திருகித்
தொக்கபல் படமும் விரித்துமே லெழுந்து
சுலாய்நிமிர் பலபணித் தொகைபோற்
பக்கமெங் கணும்பன் மணிக்குலம் பதித்துப்
பருமுடிச் செம்பணி யியற்றித்
தக்கவெள் வயிரங் கால்சமைத் தெடுத்துத்
தழுவுசாந் தாற்றிக டயங்க ௩௧

திருமணிக் கடகச் செங்கையி னேந்துஞ்
செழுங்கனற் பொறிபுறஞ் சிதறி
வருசுடர் விரிப்ப வயங்குகால் கொளுவு
மாண்பெனப் பரியல வானோ

ஒருகையி னுடுக்கை தாளைநன் றெதுக்கி
யொருகையிற் சிவிறிமே லுயர்த்து
மருவுறு மிளங்கால் மெல்லவீழ்ந் தலவ
மருங்குசூழ்ந் தசைதொறும் வணங்க ௩௨

இளம்பிறை முடித்த நெடுஞ்சடை யிறைவ
னிணையுமுள் விழைவரென் றெண்ணிக்
களங்கமுற் றகன்று முழுமதி யொன்று
கதிர்ச்சடை யேறவிண் கலந்து
விளங்குறு மாட்சி நிகர்ப்பவெண் முத்தம்
விரவுறக் குயின்றவெண் கவிகை
யுளங்குளிர்த் துள்ளங் குளிர்ப்பமேல் விரவி
யுறுநிழல் பரப்பிமே லோங்க ௩௩

கைப்பிடி யுவமை மருங்குலுக் கென்றல்
கண்டறி வாரெனக் கருங்கண்
மைப்படி யரம்பை மாதரா ரொருகை
மருங்குன்மே லிருவகை யடுத்தும்
பப்பொளிக் கடக மணியுமற் றொருகை
பரமகா ரணமெனப் பகரு
மெய்ப்பொரு ளொன்றுங் காங்குமுன் னீட்டி
விழைநடந் திருமுன்பு வேட்ப ௩௪

குடம்படு வளையுந் துந்துமி பலவுங்
குலம்படு வீணையின் குழுவுந்
திடம்பட நிமிரும் வங்கிய நிரையுஞ்
சிலம்புறு தண்ணுமைச் சீருஞ்
சடம்படு காட்சி சிதலெலா மருவத்
தயங்குபல் லியங்களுந் தணவா
திடம்படு விண்ணோர் விஞ்சையர் முதலோ
ரிருசெவிக் கமுதமொத் தியம்ப ௩௫

கருவிவான் பொழியுஞ் சோனையு நாணக்
கயலேர் செங்கையுட் கவ்விப்
பொருவிலன் புருவாஞ் சிவகண நாதர்
புடையெலா முறமுறைற் போந்தங்
கருவிநீ ரிறைப்பக் கருங்கண்மெய்ப் புளக
மரும்பநின் றந்தரந் தடித்து
மருவிவீழ்ந் துயரப் பன்முறை தூவு
மலர்க்குலை திருமுன்பு வளர ௫௬

சிந்தனைக் கரியார் திருவருட் பேறு
செறியுநா ளென்றெனத் தியங்கி
நொந்தவுள் ளகமுஞ் சிரமிசைக் குவிக்கு
நோன்கையு நீர்பொழி நோக்குஞ்
சந்தமேம் படுபல் வகைப்படு மிசையபாச்
சாற்றிடு வாயுமாச் சார்ந்து
மூன்றுறு சூதர் மாகத ரோடு
முடுகுலை தாளிகர் மொய்ப்ப ௫௭

அருள்பொழி திருக்க ணோக்கமுஞ் செவ்வா
யரும்புபுன் முறுவலு மடுப்ப
மருவுறு மமரர் சித்தர்கந் தருவர்
மலர்க்கர முடிமிசை வைத்துக்
கருவுழைப் பிறக்கும் பலவகைப் பிறப்புங்
கடந்தன மெனமனங் களிய
விருவுமல் விரண்டு மெய்துறு தொழிந்தா
ரென்செய்து மென்றழு திரங்க ௫௮

மறைமுதற் பழுக்கு மந்திரப் பொருளா
மாட்சிமை தனக்கலான் மற்றை
நறைமலர்க் கிழவ னாதியோர்க் கின்மை
நண்ணுவோர் கண்டுள நயப்பக்

கறையறு செம்பொ னிதழியந் தொடையல்
கதிர்ச்சடை முடிமிசைக் கவினப்
பிறையுமிழ் நிலவு மெய்ம்முழு தணிந்த
பெருகொளி நீற்றொடு பிறங்க ௯

அங்கமே லணியும் பாந்தள்வெஞ் சினத்தி
னலங்கிடு மிருபிள வாகத்
திங்கள்வாய்ப் பெய்து கறித்துறு களங்கஞ்
சிறியவே றெடுத்தெனச் சிந்துந்
துங்கமார் காட்சி பொருவலார் சடைமேற்
றோன்றிடு முடமதி துலக்கந்
தங்கிடு கேழன் மருப்பணி மிடற்றுச்
சார்கரு நஞ்சொடு தயங்க ௧௦

மடங்கன்மா வுரிவை யுத்தரா சங்க
மருங்குல்சூழ் கொடுவரி மான்றோ
லுடங்கிடு தோற்றங் கண்டுள மஞ்சி
நோன்கைமேற் றுள்ளிமே னோக்கி
யடங்குறா தெழுந்து தயங்குமா றொப்ப
வண்டகூ டமுங்கிடக் கசையத்
தடங்கைமே லமரத் தாங்கிடு சிறுமான்
றுவிவின் னெழுந்துமேற் றயங்க ௧௧

பச்சைமா மேக மொருபுறந் தழுவிப்
பவளமால் வரையமர் பண்பின்
கச்சணி சிகரக் கொங்கைமென் மருங்குற்
கதிர்மதி முகத்துமை கலப்ப
மூச்சகம் பரவு முக்கணெம் பெருமான்
மூவுல குந்தொழு முதன்மை
யிச்சையின் றெனினு மெய்துமோ லக்க
மெதிர்கொண் டிசைதொழு திறைஞ்சி ௧௨

வேறு

செங்கைகுவித் தெதிர்சென்று திருமுன்பு தண்டமெனப்
பங்கயக்கட் டிருநெடுமால் பன்முறைவீழ்ந் திறைஞ்சியெழுந்
தங்கணார்முன் கண்ணருவி யாறாக வழிந்தோடத்
துங்கமலி பலதுதியுஞ் சொல்லித் தொழுதிடுவான் கூங

தந்தையிலா யீன்றெடுத்த தாயில்லாய் தழீஇயொழுக
வந்ததம ரில்லாய் மறவா தடிதொழுவார்
தந்தையா யீன்றெடுத்த தாயாய்த் தமருமா
மந்தமிலாய் நின்பெருஞ்சீ ராரறைய வல்லாரே கூச

முற்படுமெய்ப் பழம்பொருட்கு முற்படுமெய்ப் பழம்பொருணீ
பிற்படுமெய்ப் புதுப்பொருட்கும் பிற்படுமெய்ப் புதுப்பொருணீ
சொற்படுமெய்ப் பேருலகுந் துடைத்தளித்துக் காப்பாய்நீ
பற்பலவா நின்பெருமை யார்பகர வல்லாரே கூரு

தேவர் தொழும்பிரமன் றிருமால் சிவனென்னு
மூவரென நம்மோடு மூன்றுவாய் முற்பகலு
மாவலொடு தேடமறை தழுதுருவ மாய்நின்றாய்
காவலநின் பெருமையெவர் கட்டுரைக்க வல்லாரே கூகூ

வேறு

என்றுமால் பரவப் பின்ன ரெய்துவோர் யாரும் போற்றி
நன்றுதாழ்ந் தெழுந்து பின்னர் நகைமதிக் கண்ணி யண்ணல்
குன்றுறழ் குவவுத் திண்டோட் கோவிந்தன் வதன நோக்கி
யின்றுநீ யீண்டு வந்த தென்கொலென் றருளிச் செய்தான்

கேட்டுமால் பணிந்து ரைக்குங் கீற்றுவெண் மதிமுடித்தோய்
நாட்டமூன் றுடையாய் பண்டை நற்றவப் பேறி லாதேம்
பூட்டுறு விலங்கோ டொப்பப் பொருந்துறு பிறவி நீக்கி
வீட்டகத் தெய்து மாறு வினவுவா னடைந்தே மென்றான்

நன்றுநீ வினவா நின்றாய் நவில்வது கேட்டி யென்னக்
குன்றவிற் குழகன் கூறுங் குலமறை யந்த மெல்லா
மொன்றதன் றுரைக்கு ஞான மொன்றுமே வீடு நல்கு
மன்றிமற் றெனைய ஞான மடைவிக்கு மேது வாகும் ௬௯

பலவகைப் பிறவி தோறும் பயின்றிடு தவத்தின் பேற்றால்
நிலவுநம் மருள்கை கூட நிகழ்சிவ ஞான நேருங்
கலவுறு ஞான நன்னூல் கற்றிடு மதிகா ரந்தா
னலமலி வேதி யர்க்கு நவின்றிடு நன்னூ லெல்லாம் ௭0

அந்தண ரொருவர்க் கன்றி யரசர்க்கும் வணிக ருக்குஞ்
சந்தமா மறைநூற் கல்வி தருவதாஞ் சதுர்த் தருக்கு
முந்துமூ வரையும் போற்றி முயன்றடித் தொண்டு செய்த
னந்தமர் செங்கை யண்ணு லலமென நவில்வர் நல்லோர் ௭௧

இருபிறப் பாளர் மூவ ரியற்படு மடவார்க் கெல்லாஞ்
சுருதிநூ றகல்விப் பேறு சொல்வதுஞ் சிலநூற் கோளா
மருவுபின் னவர்க்கு மன்னோர் மகளிர்க்கும் புராணக் கேள்வி
யருநலந் தருவ தாமென் றறைவதுஞ் சிலநூற் கொள்கை ௭௨

இவ்வகை யன்றிப் பெண்டீர் யாவர்க்கும் பின்னோ ரெய்ப்பச்
செவ்விய மூவர் தொண்டு செய்வதே யுரைக்குஞ் சின்னூல்
பவ்வநீர்ப் புவிமேல் வேறு பாடையின் மொழிபெ யர்ப்பி
னவ்விய மிலாநூற் கேள்வி யனைவர்க்கு முரைப்ப ராய்ந்தோர்

அருமறை முதலாம் பன்னூ லமைவரக் கற்ற றிந்து
மருவுபல் பிறப்பி னீட்டு மாதவப் பேற்றா னன்றிப்
பருவம்வந் தெய்து றாது பருவமங் கின்றி ஞான
மிருநிலத் தெவ்வு யிர்க்கு மெய்துவ தென்று மின்றாம் ௭௪

முந்துநூற் கேள்வி ஞான முன்னைநாட் செய்த வத்தின்
வந்துகை கூடப் பெற்று வளம்படு பிரம ஞானஞ்

சிந்தையி னுதிக்கப் பெற்றோர் சிவகதி புகுவ ரேனோர்
பந்தமென் மேலு மேவப் பலவகைப் பிறவி சேர்வார் ௭௫

ஆகலின் முயன்று செய்யு மருந்தவப் பேற்றா னன்றிப்
பூதலத் தெவர்க்கும் வீடு பொருந்துவ தரிது நன்றாய்
காதரு முயற்சி யின்றிக் கடிதுவீ டளிப்ப தொன்றே
ஈதா சிந்தை நாடிச் செப்புதுந் தெளியக் கேட்டி ௭௬

மணியெறி திரைநீ ரடை மண்ணுல கத்து வானோர்
பணிவுறு நாம கிழந்து பயின்றமர்ந் துறையுந் தானம்
பிணியறு மின்ப முத்திப் பேற்றொடு செல்வப் பேறு
தணிவற வணங்கு வோர்க்குத் தருவன பலவா மன்றே ௭௭

அத்திரு நகரந் தம்மு ளணிகெழு புலியூ ரெய்தி
வித்தக நடனஞ் செய்யு மேவுநந் திருத்தாள் போற்றிப்
பத்துட னிரண்டு திங்கள் பயின்றவண் வைகு வோர்க்கு
முத்திவந் தெளிதி னெய்து முயற்சிமற் றொன்றும வேண்டா

என்றருள் செய்து முக்க ணீசனங் குரைப்பக் கேட்டு
நன்றடி பணியு மாறு நறுமலர்க் கிழவன் றானு
மொன்றிய திருவு மற்றை யும்பருந் தொழுது போற்றி
வென்றிவெள் விடையுயர்த் தோன்விடைகொண்டு மீண்டு சென்றார்

சிவம்படு நகரந் தம்முட் சென்றுவாழ்ந் தமருஞ் செய்தி
தவம்படு முத்திப் பேறு தளர்வகன் றெளிதி னெய்தப்
பவம்படு துன்ப நீக்கிப் பரவைநீர் ஞாலத் தோர்க்குத்
தவம்படு வாழ்க்கை வேட்டோர் தருவது திண்ண மாகும் ௮௦

மண்ணவ ரந்த ணாளர் மாதவ முனிவ ரேனோர்
விண்ணிமிர்ந் துயரு மிஞ்சி வியன்புலி யூருண் மேவிப்
பண்ணவர் பரவு முக்கட் பகவன்செய் நடனம் போற்றி
நண்ணரும் புத்தி முத்தி நண்ணினோ ரெல்லை யில்லார் ௮௧

அருந்தவ வியாதன் சொல்லா லணிகெழு தெருளுறு கைலைத்
திருந்துமோ ராண்டு வைகிச் செழும்பொழிற் புலியூர் மேவிப்
பொருந்துபொன் மன்று ளாடும் பூரணர் நடனம் போற்றி
வருந்துறா தாங்கோ ராண்டு மரபுளி மருவி வாழ்ந்தார் ௮௨

பண்ணவர் பரவிப் போற்றும் பழமறை யவராண் டுற்றே
நண்ணருங் காசி நண்ணி நாட்டிமோ ராண்டு வைகிப்
புண்ணியப் பேறு ஞானம பொருந்துமெய் வாழ்வு பெற்றே
கண்ணுதற் பெருமான் பாதங் கருதுமெய்க் காட்சி மிக்கீர் ௮௩

வேண்டுவார் வேண்டி யாங்கு மேம்பட நல்கு ஞானத்
தாண்டவ மூர்த்தி வைகுந் தடமதிற் புலியூ ரெய்தி
மாண்டகு நகருள் வாழ்ந்து வளம்படு புத்தி முத்தி
யீண்டுமா தவத்தீர் நீரு மெளிதுகைக் கோட னன்றால் ௮௪

சிவபத்தர்பூசனைப்பயனுமதலவாசப்பயனுமுரைத்தபடலம்

முற்றிற்று

ஆக செய்யுள் ௫௪௫

மூன்றாவது

குயதீர்த்தப்பெருமையுஞ்சிவகங்கைப்பெருமையு முரைத்தபடலம

ஊர்த்த லத்திடு மைம்புலக் கொடுநெறி யியங்காக்
கூர்த்த நுண்மதிச் சைவமா தவத்தாதங் கூட்டந்
தீர்த்த நீர்ப்படு சிறப்புரை செய்யெனச் செப்ப
வோர்த்த மாமறைச் சூதமா முனிவர னுரைக்கும் ௧

பாவ மாகிய பழுமரம் வேரொடு பறித்துத்
தேவ தேவர்தந் திருவடிக் கீழ்வைகுஞ் செல்வ
மேவ நல்கிடுந் திருத்தநீர் சுருக்கமா விளக்கி
யாவ னும்புகல் கின்றனன் கேண்மினென் றியம்பும் ௨

அந்தி வெண்மதிக் கண்ணியார் தாண்டவ மாடுஞ்
சுந்த ரங்கெழு திருப்புலி யூர்நகர் சூழ
வந்து தன்வயின் மூழ்குவோர்க் கருங்கதி வழங்குஞ்
சந்த மேம்படு சிவகங்கை யெனப்படுந் தடாகம் ௩

திரைக்கு நீர்ச்சிவ கங்கையாந் திருத்தநீர்த் தெனுது
கரைக்கு நேருறு கனகமன் றத்தழற் கண்ணார்
வரைக்கு நேர்முலை மலையரை யன்மகண் மகிழ
வுரைக்கு மானந்த தாண்டவ மென்றுநின் றுஞற்றும் ௪

பொழியுந் தேமலர்ப் பொகுட்டுறு நான்முகப் புத்தேண்
மொழியும் விண்ணவ ரியக்கர்கந் தருவரே முதலோர்
பழியும் பாவமு நீங்குறச் சிவகங்கை படிந்து
கழிய மேம்படு மானந்த தாண்டவங் காண்பார் ௫

மணிகொ ழித்திடு சிவகங்கை மாசிமா மகத்துப்
பணிவொ டாடுவார் பலவகைத் துயரமும் பாற்றிப்
பிணியொ ழித்தருள் கொழித்திடு முக்கணெம் பெருமான்
றணிவி லானந்த மாம்பெருஞ் சலதியுட் டாழ்வார் ௬

முற்று மாசியா மகத்திடைச் சிவகங்கை மூழ்கிற்
பற்று நீத்துமன் றாடுவார் பதமலர் பணிந்து
செற்ற வைம்புலச் செல்வரா தியர்கொளச் செம்பொ
னுற்று நல்குவோ ரொழிவறு வீட்டின்ப முறுவார் ௭

தீது முற்றவு மொழித்தரு டருங்குய்ய தீர்த்தங்
காது வெம்பவப் பெரும்பகை முழுவதுங் கடிந்து
யாது வேண்டினும் வேண்டியாங் கியாவர்க்கு மீந்தங்
கோது பல்புகழ் புலிநகர்க் குணதிசை யுறுமால் ௮

சீறு வெம்புலித் தோலரைக் கசைத்திடுஞ் சிவனு
ரூறு மானந்த தாண்டவஞ் செய்புலி யூர்க்கு

வீறு கீழ்த்திசைக் கருங்கட லீரோன விரவு
மாறு தீர்ந்துயர் குய்யதீர்த் தப்பெயர் வாரி ௯

மடுக்கு நீளமு மகலமும் வானவர் மலர்க்கை
யெடுக்கு மப்பெரும் புனற்கொரு யோசனை யென்பா
ரடுக்கு மூவருந் தேவரு மருந்தவர் யாரு
மிடுக்க ணீக்குமத் தெய்வநீ ரெய்திவாழ்ந் திடுவார் க0

மேக்கெ ழுந்துவீழ் நெடுந்திரைப் புணரிக்கு வேந்தன்
றாக்கு நல்லுணர் வழித்திடு கொடுஞ்சினச் சூழ்வாற்
றேக்கு நான்மறை யந்தண னொருவனைச் செகுத்து
மாக்கொ டுங்கொலைப் பாதகந் தீர்வது மதித்தான் கக

குன்ற நேர்வரு நெடுமதிற் புலிநகர் குறுகி
மன்று ளாடுவார் திருவடி யன்பொடு வணங்கி
யொன்று மானந்த தாண்டவந் தொழுதவ னுறையுங்
கன்று வெம்புலிக் கான்முனி வனைக்கண்டு கழறும் கஉ

அறையு மாமறை நான்குமா கமத்துறை யனைத்து
முறையி னுண்டருண் மழைபொழி பெருந்தவ முகிலே
நிறைபெ ருங்குண நிதியமே நின்னரு ளொரீ
னுறையும் விண்ணவர்க் காயினுங் குறையுமொன் றுண்டோ

ஆயு நான்மறை யந்தண னொருவனங் கனுக
வீயு மாறுயிர் செகுத்தனன் பண்டுசெய் வினையாற்
றோயு மப்பெரும் பாதகம் போநெறி சூழ்கேன்
பேயுஞ் செய்கலாப் பிழைசெய்தே னென்செய்கேன் பெரியோய்

என்று தெண்டிரைப் பரவைநா யகன்றொழு தியம்பக்
கன்று முப்புரஞ் சுட்டவர்ப் பணிபுலிக் காலோ
னன்று நாடியிந் நகர்குண திசைவயி னண்ணி
யொன்று குய்யதீர்த் தப்புன னின்வினை யொழிக்கும். க௫

ஆழ்ந்த காட்சியும் யாவர்க்குங் கடப்பரு மடலுஞ்
சூழ்ந்த போதமு மேம்படு மாக்கமுந் தூய்மை
வீழ்ந்த டுத்தவர் கைக்கொளு மாட்சியு மேவித்
தாழ்ந்த தூமொழி யறிஞரிற் பொலியுமச் சலதி ௧௬

போத மேற்படு மாக்களுண் மகிழ்தரு பொலிவுந்
தீத கன்றிடு பதிகமுங் காண்டத்தின் சிறப்பு
மோத ரும்பல பொருளணிக் காட்சியு முறுமச்
சீத வாரிதி யறிஞர்காப் பியநலந் திளைக்கும் ௧௭

மன்று ளாடுவா ரருட்கடன் மூழ்குமா மதித்தோர்
சென்று மூழ்குழி யவர்பவங் கழுவிய திறத்தா
லொன்று தன்னிறங் கறுத்ததோ வெனவுல குரைப்ப
வென்று மத்திரு வாரிதி நிறங்கறுத் திலங்கும் ௧௮

வேறு

கரிமுக மதலை புல்லிக் கந்தரங் கறுப்பக் கொண்டு
விரிமுக ஞால மாக்கி மேம்பட விரவிக் காத்துத்
திரிமுகங் கொண்ட ழித்துச் செறியுமுந் நீர்மை தாங்கி
யெரிமுக விழியார் போன்றவ் விருங்கட லழுவந் தோன்றும் ௧௯

வில்லொடு வேல்வாள் வேழம் வெம்பரி நெடுந்தே ராளும்
புல்லிருக் கயல்வெள் வாளை பொருசுறுத் தரங்கம் போத
மொல்லுமா றுகக் கொண்டாங் குறுமவர் பாவத் தெவ்வை
வெல்லுமா தானை கொண்டவ் வீரைகூய் விளிக்கு மன்றே ௨௦

புகைபடு கனலிற் றோன்றும் புனலெனப் புகலு முண்மை
நகைபடு பவளக் காடு நயம்படு மணியுங் கீழான்
மிகைபடு பொலிவுந் தெண்ணீர் மேற்படு பொலிவு மேவித்
தகைபடு காட்சி யோர்க்கச் சலதிகண் கூடாக் காட்டும் ௨௧

கண்டுழி யுவகை நல்குங் கதிர்மதி யகன்றே காமல்
வெண்டிரை நெடுங்கை நீட்டி மேல்விழத் தழுவ லெய்ப்பாக்

குண்டலைத் தெடுத்து வீசுங் குடவளைக் குலங்கு றிப்பத்
தண்டிரைக் கையி னேந்தித் தழுவுமச் சலதி தீர்த்தம் ௨௨

கிளையிடு நெடுவெண் முத்துங் கேழ்த்தகா ரீனு முத்தும்
வளையிடு பசிய முத்தும் வாலொளி யிப்பி முத்துந்
தளையிடு செந்நென் முத்துந் தாழ்ந்தன வாகித் தோற்பத்
துளையிடு முத்த மீனுந் தொகுமணற் கலிக்கும் புன்னை ௨௩

இரும்பவ மெவற்றி னுள்ளும் யாவருங் கொலைதீ தென்பார்
விரும்புமீ னினங்கொன் றுண்ணும் வேட்டைநீ ரொழிமி னென்ன
வரும்பும்வா லொளிகூர் முத்து மணிவளைக் குலமும் வீசி
வரும்பல புள்ளு மோப்பும் வரைமொரு திரைநீர் வாரி ௨௪

வேறு

மழையேறு நெடுங்காருங் கொடும்பனியும்
புனனின்று வளரும் வேனில்
விழைவோடைந் தழனின்றுந் தவஞ்செயா
தவையிரண்டு மேவச் செய்தங்
குழைமேவு மைந்தடக்கு மாமைபல
கொடிப்பவளத் துள்ளாண் மேவிப்
பிழைமேவா தருந்தவஞ்செய் துறுவனயோன்
றப்புனலுட் பிறங்கு மன்றே ௨௫

நெடுந்திரைக்கை யகடலைப்பப் பலநதியும்
வாய்மடுத்து நேர வுண்டு
கொடுந்தழல்கூர் வெந்தாக மேன்மேலு
மெழப்பசிநோய் குன்று தோங்கப்
படுந்தரணி மிசைவிழுந்து புரண்டிரங்கி
வஞ்சகமே பழுத்த நெஞ்சாற்
கொடுந்தொழில்செய் துறுந்துன்பங் குடைவாருக்
கக்கடனீர் கொளுத்து மன்றே ௨௬

நத்தேறி யுலவிடுமக் கடன் மருங்கு
கண்டவருண் ணயப்பத் தோன்று
முத்தேறு மணற்புளினம் பலராம
னடுத்தமரு முறைமை யொக்குந்
தொத்தேறும் பலமணியு மெதிர்ந்தேறத்
திரைசுருட்டித் தள்ளி வீழுங்
கத்தேறுங் கருங்கடனீ ரவனணியுங்
கருந்துகிலிற் கவினு மன்றே உ௭

அலப்படையோன் வந்தனுக்கு மதாகண்டங்
குடன்பிறப்பா மமைதி யுன்னி
நலப்படுமத் திருமாலு முடங்கமரு
நலம்வேட்டு நண்ணி யாங்கு
நிலப்படுமா னவரமார் நெடுநாகர்
குடைந்தாடி நினைந்த யாவும்
பலப்படப்பெற் றுய்வுறுமக் கடலேறி
மணிமேகம் பயிலு மன்றே உ௮

ஆர்த்திரங்கு மனையகட னெடும்பிறவி
யொக்குமவ ணலைந்து வீழு
நீர்த்தருகம பிணிக்கூட்ட நிகர்க்குமுயிர்த்
தொகைபன்மீ னிரையே யாகுங்
கூர்த்தபுனற் படுபன்மீன் கவர்பாக்குப்
புகுந்துலவுங் கொடுவாய்ப் பைம்புள்
சீர்த்துளிவந் தருத்தடுமத் தீவினையின்
கூட்டமெனச் செறியு மன்றே உ௯

வேறு

அன்பு மேம்படு மப்புனல் குடைந்தன ராடித்
துன்ப நீங்கவந் தருங்கரை சேர்ந்திடுந் தூயோர்
வன்ப வந்தரு பிறவியாம் பெருங்கடன் மாற்றி
யின்ப வீடெனுங் கரைபுகு வாரென விசைப்பார் ௩0

சிறந்து மஞ்சலை சென்மதி யென்னவத் தீர்த்தத்
துறுதி யாம்பயன் பெறுநெறி யானவை யுரைத்தா
னிறுதி யற்றமெய் வீடுபெற் றுங்கின்ப மெய்தி
யுறுதி கூடிய நெஞ்சொடும் வருணனுங் குற்றான் ௩௧

கொழிக்கும் வெண்டிரைக் குய்யதீர்த் தப்புனல் குடைந்து
பழிக்கு மப்பெரும் பாதக முழுவதும் பாற்றித்
தெழிக்கு நீர்க்கடற் செலவனல் வினையெலாஞ் சேர
விழிக்குந் தீவினை யேனவு மொழித்தின்பத் திறுத்தான் ௩௨

நேய மேம்படு மாசிமா மகமென நிகழ்த்துந்
தூய நாளினிற் குய்யதீர்த் தப்புன றோய்ந்தான்
பாய தெண்டிரைப் பரவைவேந் தகன்றனன் பாவங்
காய மேலெழுந் தருளிவந் தடுத்தனன் கபாலி ௩௩

நீல கண்டமு நெடுஞ்சடைக் கற்றையு நிலாக்கால்
கோல வெண்பிறைத் திங்களுங் கண்ணியுங் கொண்டங்
கேல வார்குழ லிடந்தழீஇ மூரிவெள் ளேற்றிற்
கால காலன்வந் தடுப்பக்கண் டிவ்வினை கழலும் ௩௪

வேறு

எறிமழுப் படையாய் போற்றி யினியெனைப் படையாய் போற்றி
செறிமலர்த் தாராய் போற்றி தீங்கொன்றுந் தாராய் போற்றி
யுறிவருக் கினியாய் போற்றி யடையலர்க் கினியாய் போற்றி
மறிவரு மேற்றாய் போற்றி வரும்பலி யேற்றாய் போற்றி ௩௫

நண்ணலர்க் குடையாய் போற்றி நான்குதிக் குடையாய் போற்றி
தண்மதிக் குடையாய் போற்றி தழலுநோக் குடையாய் போற்றி
கண்ணருட் குரியாய் போற்றி கந்தரக் குரியாய் போற்றி
வெண்ணிற மதியாய் போற்றி விரவாரை மதியாய் போற்றி

துணிநிறஞ் செய்யாய் போற்றி சூழ்துன்பஞ் செய்யாய்போற்றி
யணியணிக் கையாய் போற்றி யவிர்கடுக் கையாய் போற்றி

பிணிகெடப்பொருவாய்போற்றிபிறர்க்கென்றும்பொருவாய் போற்றி
பணிபடு குழையாய் போற்றி பகைக்குளங் குழையாய் போற்றி

வேறு

மதிச்சிறு கலையாய் போற்றி வளருமான் கலையாய் போற்றி
துதிப்படு கலையாய் போற்றி தோற்படு கலையாய் போற்றி
விதிப்படு கலையாய் போற்றி விரவும்வெண் டலையாய் போற்றி
நதிப்படு தலையாய் போற்றி நக்கம தலையாய் போற்றி ௩௮

விடுகங் கையாய் போற்றி வெறுத்தகங் கையாய் போற்றி
யோடுகங் கையாய் போற்றி யுழைபகங் கையாய் போற்றி
நாடுவ தந்தாய் போற்றி நயப்பவர் தந்தாய் போற்றி
பாடுசேர்த் தந்தாய் போற்றி பரவுமுத் தந்தாய் போற்றி ௩௯

கைப்படு மானாய் போற்றி கலையெலா மானாய் போற்றி
யொப்பரு மானாய் போற்றி யொருவரு மானாய் போற்றி
பொய்ப்பவ மலையாய் போற்றி பொருதனு மலையாய் போற்றி
செப்பரு மலையாய் போற்றி திருந்துக மலையாய் போற்றி ௪௦

வேறு

ஆயவெழுத் தெவைக்குமுத லமர்ந்தவையா
வையுமியங்கு மாறு செய்து
தூயநிலைப் படுமகர நின்றுங்குஞ்
சராசரங்க டோற்றி நின்று
மாயவமைக் குந்தொழிற்பா டுறப்புணர்ந்து
மூவுலகும் வணங்கி யேத்த
மேயதனி நாயகமா யமர்தருநின்
முழுமுதன்மை மேன்மை போற்றி ௪௧

திருவேறு நான்மறையா றங்கமுதற்
பலகலையுஞ் சேரக் கற்றுக்
குருவேறு மவையுரைக்கும் பொருள்பலகாற்
சிந்தனைசெய் துள்ளங் கொள்வோர்

ரிருவேறு வகைப்பயனு முத்தியுங்கைக்
கொளுமாற்று னென்று மேத்தப்
பொருவேறு பெறுதமருந் திருமேனி
கொள்வாய்நின் பொற்றாள் போற்றி ௪௨

எவ்வெவர்மற் றெவ்வழிச்சேர்ந் தெவ்வகையான்
வழிபடினு மீண்டுன் றில்லா
யவ்வவர்தா மகங்கொள்ளு மவ்வுருவ
மமைந்தவருக் கருளு மாறு
செவ்விபடு மெவ்விடமுஞ் செலவிரிந்து
தடையகன்று சிறப்பி னோங்குங்
கவ்வைநின் றுருவாகிச் சகசமா
மெய்ப்போதக் காட்சி போற்றி ௪௩

ஆங்கியற்றுந் தம்மானு மரியவுருத்
தொகையானு மமைய முற்றித்
தீங்கியற்றும் பலதெய்வச் செயலானு
மிடருழந்து சித்தஞ் சோர்ந்து
பூங்கழற்பூ சனைபுரிவார்க் கவைபோக்கி
யின்பருளும் பொருட்டா லென்று
நீங்கரிய முற்றறிவு கொண்டமரும்
பேரின்ப நீர்மை போற்றி ௪௪

அன்றுபடு மிருண்மலமு மாங்கியற்றுங்
கருமமுமற் றவைபோ யாறங்
கொன்றுபடு மாயையுமா மும்மலமு
முயிர்த்தொகுதி யொருவப் போக்கி
நன்றுபடு திருவடிக்கீ ழிருமாப்ப
விருத்திநல நல்கு மாற்றாற்
றொன்றுபடு மெய்ப்போதங் கொண்டமரு
முனதருளின் றொன்மை போற்றி ௪௫

அருநரகுந் திருநிலமுந் துறக்கமுமா
மூவுலகு மலமந் தோடிப்

பொருவருந்தன் புழுக்குமுயி ருய்யுநெறி
கடைப்பிடிப்பப் பொதுவே யாகத்
திருமறைசெய் தாகமமும் பலகலையுஞ்
சிறப்பாகச் செய்து நல்கு
மிருவருங்கா ணாமுதலே யெல்லையிலா
நின்னருளி னியல்பு போற்றி ௪௬

அடுக்குமுட னெடுங்கரணம் பெரும்புவனம்
பலபோக மமையச் செய்து
மடுக்குமுயிர் காத்தழித்து மறைத்தருளின்
வழிநிறுவி வரம்பி லாற்ற
லொடுக்கமுறு மெண்குணத்து ளொன்றாகத்
தழீஇயுலக முவந்து போற்ற
விடுக்குமொளிப் பொன்மன்று ளானந்த
தாண்டவஞ்செய் விழுப்பம் போற்றி ௪௭

நீங்கலரு மிம்மையொடு மறுமைவீ
டெனமூன்றுஞ் சேர வெய்தும்
பாங்குபெறு மக்களுயிர் பொருளின்பப்
புணரியிடைப் பட்டுத் தாழா
தோங்குமற நெறியுய்த்தவ் வொருமூன்று
முறப்புணர்த்து முறுதி கொண்டு
நீங்கருநல் லறமிழைக்கு முருவாக்கொள்
பேரின்ப நீர்மை போற்றி ௪௮

செழுங்கமல மலர்பொருநின் றிருவடிதா
ழாதமருஞ் சிரங்க ளென்று
மழுங்கலறு நின்புகழை வகுத்தெடுத்துக்
கூறாத மணிவா யென்று
மழுங்குபவத் துன்பகல வடித்தொண்டு
புரியாத வாக்கை யென்று

மொழுங்குபடு மணிப்பவளக் கொடியனைய
கதிர்ச்சடிலத் தும்ப ரேறே ௪௯

திருவேறு மணிமார்பன் றேனேறு
மலர்ப்பொருட்டுச் செறியும் வேத
உருவேறு மறிஞர்பலர் தொழுதேத்து
நின்கருணை யுறரு லன்றி
மருவேறு நறவிதழி நறவொழுகுஞ்
சடைமுடியாய் மன்னு யிர்க்குக்
கருவேறு நெடும்பிறவிக் கரையேறு
முத்திநெறி காட்டு வார்யார் ௫௦

வேறு

இன்ன வாறுபற் பலதுதி மாலைநின் றியம்பி
முன்னர் வீழ்ந்தடி பரவுறு மாக்கடன் முதல்வன்
றன்னை வேண்டுவ தியாதுகொ லுரையெனத் தழலும்
வன்னி நோக்கினார் வினவலு மவனிவை வகுப்பான் ௫௧

தேறு நான்மறை யந்தணற் கொலைசெயுந் தீமை
பாறு மாறுமற் றிப்புனற் பலபகற் படிந்து
பேறு பெற்றனன் மற்றினிப் பெறுவதென் பிறையுஞ்
சீறு நாகமு முறவுகூர் திருச்சடைத் தேவே ௫௨

அன்ன தாயினு மாசிமா மகத்தினி லணுகி
யின்ன றீர்ந்திடு மித்திருத் தம்படிந் திகவா
தன்னு நின்னடிப் பூசனை யுஞற்றிநின் றொழியா
நன்ன யம்படு சொன்னதா ணுதிக ணயப்பேர் ௫௩

தேறு முன்னவ ராயினு மாருக சிறப்பக்
கூறு பின்னவ ராயினு மாருக குன்றாப்
பேறு பற்பல பெற்றின்ப முத்தியும் பெறுக
வீறு மாதியு மின்றியெஞ் ஞான்றுநின் றிடுவோய் ௫௪

பரவி யிவ்வகை பரவைவேந் தினனவை பகர
வரவ மேகலை யண்ணலா ரங்கன மாகப்
புரவு பூண்டதென் கடலினா யெனவெதிர் புகன்று
விரவு வெள்விடை மேற்கொடி விண்ணெறி மீண்டார் ௫௫

மருவு மேம்படு குய்யதீர்த் தப்பெயர் வாரி
பருவ நாட்படிந் தரும்பொனா திப்பொருள் பலவுந்
திருவ மேம்படு மந்தணர்க் களிப்பவர் செல்வம்
பொருவில் வீட்டொடும் பெறுவர்தம் வினையெலாம் போக்கி ௫௬

ஆற்றுமாதவ முனிவர்பற் பலரும்வந் தணுகித்
தோற்று மப்பரு வந்தொறு மப்புன றோய்ந்து
காற்று தீவினை முழுவதும் வேரொடு களைந்து
போற்று மன்றுறை பூரணர் திருவடி புக்கார் ௫௭

மறைய ருங்கலை யாகம நெறிப்பட வகுத்தங்
கறைய நின்றன புண்ணியப் புனற்சிறப் பனைத்தும்
பிறையுங் கங்கையுஞ் சூடிய முக்கணெம் பெருமா
னிறைபு போரு ளோடுமக் குரைத்தன நெறியால் ௫௮

கேட்டி ளங்கொடு மம்பிகை யறுமுகன் கேட்ப
வேட்டு ரைத்தனள் விதிக்கவ னுரைத்தனன் விருப்பாற்
றேட்டு முண்டக மலரவன் வியாதற்குச் சொன்னா
னாட்டு நந்தரு நம்மனோர்க் கருள்செய்து நவின்றான் ௫௯

நலிபு மைம்புலப் பகைகடிந் தருந்தவ நவின்று
மெலியும் யாக்கையீர் நீருமித் திருக்கதை விரவுங்
கலியும பாவமுங் கருங்கட லுலகொரீஇக் களிப்பப்
பொலியும் வாழ்வெலாம் பூப்பதன் கருள்செய்து புகல்வார் ௬0

இரவி கண்டழி யிருளழிந் தோடுமா றென்ன
விரவு மிச்சிவ தீர்த்தநீர் மான்மியம் வினவாப்
பரவி யோதுவார் தீவினை நொடியினிற் பாற்றி
யரவ மாமுடி யண்ணலா ரடிநிழ லமர்வார் ௬௧

அன்பு முற்றிடு திருத்தநீர் மூழ்குதி யடுக்குந்
தென்பு லத்தவர் தங்கட னோம்புழிச் செவியா
நன்பு லத்தமைத் திக்கதை கேட்பவர் நலியுந்
துன்ப மாரிலம் பாடொரீஇத் திருமகட் டோய்வார் ௬௨

கருணை முற்றிய தெய்வபூ சனைசெயுங் காலத்
தொருமை முற்றுமித் திருக்கதை செவிமுகந் துவப்பின்
கருமை முற்றிய திருமிடற் றிறைவனுங் கமலத்
திருவி னாதனும் விரிஞ்சனு மவர்க்கருள் செய்வார் ௬௩

சூத மார்ந்திடு மூலத்திரு நிலமக டொழுது
பாத பங்கயம் வருடவெண் பாற்கடற் பள்ளி
மீத மர்ந்திடு மாதவ னொடொறும் விழைவா
லோது மித்திருக் கதைசிவ னருள்பெற லுன்னி ௬௪

உண்டி யாவையுந் துறந்தமர் விரதத்தி னுலர்ந்த
பிண்டி யாமெனப் பொலிவழி மெய்யினீர் பெட்பா
லண்டர் நாயகன் மகிழுமித் திருக்கதை யனைத்துங்
கொண்டு நீவிரு நாடோறு முறைசெய்து கொண்மின் ௬௫

அன்று முப்புரஞ் சுட்டவ ரருள்பெறு மாற்ற
னென்று ரைத்திரென் றருந்தவர் யாவர்க்கு நவின்று
கொன்றை வேணியர் திருவடி திருவுளங் கொண்டு
வென்ற வைம்புலச் சூதமா தவன்றுதி விளம்பி ௬௬

இருநி லம்படு தண்டமே யென்னவீழ்ந் திறைஞ்சி
யருவி நீர்பொழி கண்ணொடு முடற்புள கரும்ப
விருவு சித்திரப் பாவையொத் தாங்கொன்று மியம்பா
தொருமை மாதவச் சூதன்வா ளாங்கவ ணுறைந்தான் ௬௭

சூய்யதீர்த்தப்பெருமையும் சிவகங்கைப்பெருமையு
முரைத்தபடலம் முற்றிற்று

ஆக செய்யுள் ௪௧௨

நான்காவது
சிவஞானப்பேறுடையார் பூசனைப்பயனுரைத்தபடலம்

நெடிதுளத்திற் றாழ்ந்திருந்து நீண்ட கருணை வளம்பழுத்தும்
பொடிதுவன்றும் பொன்மேனிப் பொற்பார் சூதன் முகநோக்கிக்
கொடிய வினைபோய்ப் பேரின்பங் கூடும் வீடு புகறியென
மடிவி லாதோர் வேண்டுதலு மகிழ்ந்து சூதன் வகுக்கின்றான் க

பண்டொருநா ளுயிர்பு ரக்கும் பதுமை கொழுநன் பாற்கடனீத்
தெண்டகுபன் மெய்ப்பூணு மிலகக் கயிலை சென்றெய்தித்
தொண்ட ரன்புக் கெளியாரைத் தொழுதுள்ளிருத்தி மூன்றாண்டு
வண்ட லம்புந் துழாய்முடியோன் வருந்தித் தவஞ்செய் தாங்குறைந்தான்

நறையூறுங் கடுக்கைமுடி நாதர் திருவுளஞ்செய்து
கறையேறுந் திருமிடறுங் கைம்மான் மழுவுங் கவினறப்
பிறையேறுஞ் சிறியநுதற் பிராட்டி யோடு மெதிர்தோன்றி
மறைகூறுஞ் செவ்வாயார் மாயோ னிருக்கு மருங்கணைந்தார் ங

சங்க லம்புங் கடலாடைத் தரணி புரக்கு மதுகையினாய்
யங்க நோவப் புலனடக்கி யகத்தே யெம்மை யமர்வுறவைத்
திங்க ணடைந்த ருந்தவஞ்செய் தியாதுபெறுவா னிருத்தியெனத்
திங்கண் முடியா ரெதிர் வினவத் திருமா லெழுந்து கைதொழுது

மும்மு றையான் வலம்வந்து மொழியுமுறைபின் வீழ்ந்திறைஞ்சி
யம்மை பாகர் திருவுருவத் தருக சிறிது விழிபருக
மம்மர் கூரு முள்ளத்தான் மயங்கித் திருமால் வைகினனா
லெம்மை யாளு முழுமுதல்போ லெவரும் யாங்கு மிலரன்றோ

சிறிது போழ்து தாழ்ந்தெழுந்து சிந்தித் தறிய வாச்செல்வர்
வறிதி னிருவி னையீட்டி மாயும் வாழ்க்கை மதிக்கலன்யா
னறிய விழைவ துமுத்தி யதற்கா முபாய மரும்பாசம்
பிறிவு மன்ன துறுநெறியும் பிறிது முரையாய் பெருமானே .

வேறு

திருவிற் றிருக்கு மணிமார்பன் றெரிந்திவ் வாறு செப்புதலு
மொருவாற் றானும் யாவருக்கு முணரா வரிய பெருமுதல்வன்
மருவார் கூந்தற் பெருமாட்டி வதன நோக்கி நகைகோட்டிக்
கருவீழ்த் தின்ப முறும்வீடுங் காணு முபாயங் கட்டுரைத்து எ

கட்டு நீக்க மதுவருவாய்க் கருவி வகையும் புகன்றுரைத்து
மட்டு விரியு நறுந்துளவ மாலை மாயோன் மனமகிழ
வட்ட மவுலி கிடந்தசைய மதிக்கீற் றணியு முழுமுதல்வர்
பெட்ட வாறு மாயோற்குப் பிறிது புகலத் தொடங்கினர் அ

மணிச்சூட் டரவ நெடும்பாயன் மாயோ யுள்ள மாசகன்று
பிணிப்பார் பாசத் தளைமூன்றும் போகக் கழன்று பேரின்ப
நணிப்பா ரகத்து ளுடல்வீழு நாள்கா றமர்வோர் தமைப்பரவுங்
கணிப்பார் பேறு நனிவிளங்கக் காதை யொன்று கட்டுரைப்பாம்

எல்லு மிரவா மெனக்கருக விருண்டு நெய்த்து வார்ந்தொழுகி
வல்லிப் பவளம் வெண்பணிலம் வாளை சுறவ மணிமுத்தம்
புல்லி வாரி நீர்பருகிப் பொன்னங் குன்ற முகட்டேறி
வில்லிட் டெழுந்து பொழிகொண்மூ விழையப் பொலியுங் கருங்குழலாள்

மொழியு மாறுங் கீழ்வீழ முற்று தமரு மவதாம்போல்
விழியுஞ் செவியும் வார்கழுத்தும் வெண்ப னிரையுஞ் செவ்வாயு
மொழிவி லழகு பங்கதுப்பு மொளிரு நுதலும் பணைமுலையும்
பழிமுற் றகன்று நலம்படைக்கும் படிவத் தமைசெம் மணிப்பாவை

கூழை மேக மழைபொழியுங் குன்றத் தெழுந்த நெடுவேயுந்
தாழு மலர்க்கோ டலும்பொருவத் தயங்குந் தோளாண் மலர்க்காத்தாண்
மாழைச் சிலம்பின் மழைபொழிய வார்ந்து பெருகு மருவிநலம்
வீழ வயிற்றி னெழுங்குபட விரவுமு ரோம நிரைப்பூவை கஉ

பெருகு மருவிச் சுழிநிகர்ப்பப் பிறங்கு முந்திச் சுழியணங்கு
பொருதவ் வருவி போய்வீழும் புணரிநிகர்க்கும் போல்குற்

தெரிவை யணைய கடன்மருங்கு திகழும் புளினத் திருவென்ன
மருவித் திகழும் வாழையென வார்ந்த குறங்கின் மடமாது கரு

தெரிக்கும் பரவைத் திரையெறியச் சிதறி வீழு ஞெண்டுவரால்
பரிக்கு மாமை மூன்றுமெனப் பரவு முழங்கால் பயில்கணைக்கால்
விரிக்கும் புறங்கா லெனுமூன்றும் வேறு முருக நலப்படைப்பக்
கரிக்குந் தெரிக்கு மடைந்தெரிவை காமங் கனியு மலந்தரிவை கசு

அணங்கு சபகை யெனுகாமத் தழுந்து கனியுந் திருமடந்தை
யிணங்கு மைந்தர் வேள்பாகழிக் கிளையா தென்று மெதிரேற
மணங்கூர் குமுத வாயமுத மாறு தூட்டி வைகறேறும்
வணங்கு மவர்க்கப் படுமமுதம் வாங்கு மொழுக்கந் தலைநின்றாள்

பாக மருவாச் சிறுபருவப் பாலர் தாமும் பயின்றுணர
மோக நஞ்சு தலைக்கொள்ள மூட்டுங் காமக் கனல்கொளுவிப்
போக வகையுஞ் செயல்வகையும் புகன்று காட்டி மதயீர
ஞாக மத்தி னடைவனைத்து மறியக் கொளுத்துங் கருங்கண்ணாள்

பூட்டு நெடுநா ணின்றியும்வெம் புருவ நெடுவில் வளைவித்துக்
கூட்டுங் கருங்க ணம்புகைத்துக் குமரர் தமது நெஞ்சிலக்க
நாட்டு முருவ மிலதெனினு நன்று வீழ்த்தி ஞாலமெலாம்
வேட்டுத் தன்கீழ்க் குடியாக விழைவிற் புரக்கும் பெண்ணரசி

கொங்கைக் குவட்டின் மொத்துண்டு குலவு மலருற் கடல்வீழுஞ்
சிங்கம் பொருவுந் திறல்வீரர் தியக்கந் தீரச் செங்கனிவாய்த்
தங்கு மருந்து தந்தளித்துந் தடந்தோ ளணையிற் றுயில்வித்து
மங்கை பலகாற் றழிஇக்கொண்டும் வைகறேறும் வாழ்விக்கும்

கையப் படைகொண் டெழுங்கருவே ளணித் தோற்றுப் புறங்கொடுப்பத்
தையல் கொங்கைக் குவட்டரணுஞ் சாரு மல்குற் றடந்தேரு
மெய்ய வுதவித் தனைச்சரண்புக் குற்ற வீரர் வென்றிகொடு
மெய்யே மருங்குன் மடங்கலணை மேல்வீற்றிருப்ப விட்டுவைக்கும்

சனத்துப் புடைத்து வீங்கியெழுங் கதிர்ப்பூண் முலையக் கன்னிமனஞ்
சினத்திற் கறுப்பிற் புறத்தோடிச் சிவக்கு மைந்தர் செழுமலர்த்தாள்
வனத்துப்புகுந்து முயிர்பிழைபார்மறித்தும்புகுந்து மறுகுறுவார்
புனத்துப் படருந் துழாயலங்கல் புராணுந்தடந்தோண் மாயவனே

வீறுங்கருங்கண் மணிக்கொங்கைவெங்கட்களிற்றுக் குளமசையார்
சீறுஞ் சினத்துச் சிறுமருங்குற் சிங்கங் கண்டு தேம்புறுவா
ரேறு முயிரா வதப்பாக னின்பக் கலவி மடநல்லார்
தேறுஞ் சுபகை மனமுவப்பச் செய்பு மேவற் சிலதியரே   உக

அணியார் வயிற்று மயிரொழுக்க மடையப் பிணிக்கும் வாசுகியா
மணியார் கதிர்ப்பூ ணணிகொங்கை மதிக்க நிறுத்து மந்தரமாப்
பணிநே ரல்குல் பரவையெனப் பலகால் வீரர் பலர்கடைந்து
பிணிபோ மமுதம்வாய்மடுப்பப் பேதையின்பம் பெருக்குறுவாள்

மையுண் டெழுந்து குழைகிழிக்கும்வடிவேற்கருங்கண் மடநல்லா
ணெய்யுண் கூழைக் கருங்கான நிழலு மழலைக் கழைக்கரும்புந்
தையல் கொங்கை யிளநீருந் தண்ணங் கொடிற்று நீர்த்தடமும்
வெய்ய காமத்தழல்விளைக்கும்வெம்மைபோக்கும்விழைந்தோர்க்கே

பைவா ளல்குற் பாம்புயிர்க்கும் பருநஞ் சுள்ளஞ்சுடப்பதைத்து
நெய்வார் கூந்த லாரணங்கை நெஞ்சப் பதுமத் தமர்திருவே
யுய்வா னருளா யெனத்தாள்வீழ்ந்துறுமாடவர்தாமுள்ளுவப்பச்
செவ்வா யூறன் மருந்தூட்டித் தெரிவை மயனோய் தீர்விக்கும்

பைத்த மாலைக் குழனெடுங்கார் பரவக் கண்டு நகைத்தரும்பு
வைத்த தளவ நெடுஞ்சூரான் மடந்தை யடுத்த மைந்தரொடு
மொய்த்த கதிர்ப்பூண் முலைக்களிறு மொழிபோல்குற்றடந்தேரு
முய்த்துக் கருங்கண் வாள்வீசி யுலவாக் கலவிப் போர்விளைக்கும்

தொடுக்குமலங்கற்கருங்கூந்தற்சுணங்கேர்முலைப்பெண்ணணங்காசி
படுக்கு மமளி மேற்றழுவப் படுவா ரகலர் பலகையிசை
மடுக்குங் கொங்கைச் சூதேற்றி மைந்த ருயிராம் வான்பணைய
மடுக்குந் தோறுங் கவர்வாள்போ லங்கை தழுவி யகமகிழும்

அங்கை வளைநின் றார்த்துலம்ப வணைமதத்தோன் புழவமவை விம்மக்
கொங்கை யானைசெலத் திகம்பூக் கொடிநேர் பொனம் [illegible] திர்ந்துலைவச்
சிங்கம் பொருமா டவரோடுந் தெரிவை கலவி செய்மாட
மங்கை மணஞ்செய் யகமேபோன் றலங்கு மிரவு நெடும்பகலும்

ஊடித் தோற்று நெஞ்சழுங்கு முவரே வென்று முணர்ப்புவரக்
கூடிக் களிக்கு மடமங்கை கொழுநர் தார் புனையுங் குழலழகு
மாடப் பொருவுங் கதுப்பழகு மலங்கும் பவள வாயழகும்
வீடிய புனைந்த நெடுங்கோல வித்தமுக தோற்கு மெல்லியலே ௨௮

கரிய விழிக்கஞ் சனமெழுதிக [illegible] தாந்தசிலரே
புரிபுங் குழை முடிக்கழுந்து புரிபு [illegible] சிலரே
தெரியு மழகுரைப பஞ்சிமூழ்ச் சிதைந்த கரியபோ தாந்தசிலரே
வரிமேற் றழுவிக் கரிகோட்டி [illegible] ௨௯

வாடி யிளைக்குஞ் சிறுமருங்குன் மருங்கு காணுஞ் சிலபுனைவார்
தேடி நானத் திலகந்தற் றிளைப்பத் தைத்தது சிலமகிழ்வா
[illegible] பொருந்து மெய்யினறு கனைகதுங் காட்டி மகிழ்வார்சிலர்
[illegible]

[illegible] மகிழ்ந்து பொருவரொடு மூவகறு [illegible]
ஆடி மகிழ்வு பொருவரொடு நகைத்து மகிழ்வு [illegible]
பாடி மகிழ்வு பொருவரோடும் பயின்று மகிழ்வு பொருவரோடும்
கூடி மகிழ்வு பொருவரொடு கொடியேர் மடப்பைங் குழலவரு

வான முளவும் பசும்பொழிலின் மைந்தர் சிலரோ டைந்தொடிய
கானம் பயிலுஞ் சிலரோடு கள்ளுண் மகிழ்ந்து [illegible]
மீனம் பயினீர்த் துறைபடிந்து விளையாட் டயர்ந்து சிலரோடு
யானஞ் சிலரோ டேறுவக்கு மில்லா மணிப்பூ [illegible]

அடியிற் புனையுஞ் சிலம்பிரக்க மன்னக் குரலா [illegible]
மடியின் மழலை குயிற்குரலா [illegible] சாத்த [illegible]

பழியிற் கொழுநர் பற்பலரும் பகலு மிரவும் பயின்றாழல்வார்
தொழியிற பொலியும் வெய்துற்ற தோட் சுபகை யமரும் தொன்மனைக்கே

அணையுங் கொழுநன் றகிலுபற்ற மங்கை விலக்கியாங்கொருபாற்
பிணையிற் படுத்துக் கொடாக் கொடிய பினபாலைவருவோனுருநீழல
கணையிற் கொடிய கோரசெந்தீச கனிறு நிலையா டியிற்கதிர்பத
துணைபறற்றுத் [illegible] களந்துயரங்கூருஞகடாதகொடியே

ஒருவாக கொழுநர் தழீஇயென்மை உள்ள முவையப வொன்றொடிக்குத
திருமா முகத்துப் பவளமணி சிதைபு மெனினுஞ் செயபவளத
துருமேமைபடுமாப [illegible] வெங்களத்தர [illegible] மெனினும
வருமால் வேறு பணிமாலை [illegible] வணணுறு ௧௫

டாரி [illegible] ஆசைகை மைமகதருள
ராரிய தீரா வசையிபுத்து [illegible] பொருளபறிப்ப
மூரிக் கடந்தோ [illegible] முறைமைபொனச்
சேரிய பாத்தைத் மால்லை [illegible] சிங்கநதனவே ௧௬

இல்லத நயரு மறுக்கிழத்தி யிகலுக [illegible] யிருள் புலர்ந்துஞ்
செலைத் தனியார் பயணர்முகற [illegible] வாயி றேடிடுவா
ரலைறு பகினா [illegible] கிடைத்துமங்கணுகார்
கொலை [illegible] வெறுப்பார் மலமெலாம்

நாடுநெ [illegible] தொந் பொருத்தமுறக்
கூடிய [illegible] குன்று வருவழுகும்
[illegible] பொருந்செலாக கியமபெற்று
மனிக [illegible] நாக்கு நெடுமாலே

இன்ன வாறு பலபகலு மொழுகா நிற்ப [illegible] டுதல்போ
லென்ன [illegible] பேழை [illegible] நுகாவுற்றுள்
மன்னு நடக்கா [illegible] வன்பின் மனைக்கிழத்தி
யனை [illegible] மகிழவுற்றுள்

பிழையா நெறியி னீட்டுபொருள் பெட்ட வாறே பிறர்க்கூட்டிக்
கழையார் தடந்தோட் காரிகைதன் கருத்திற் கேற்ப நுகர்ந்தாங்கே
விழைவாற் பல்பா ண்டிவ்வாறு மெல்லக் கழிந்து போயகல
மழைநே ருருவாய் தீவினைநோய் வாட்டும் பருவம் வந்தனவே

கொடிய வினையின் பயன்கூடக் கோடமணனைக் கோட்பட்டாள்
படிமேற் பலநோயவாய்ப் பட்டாள் பசியா றுள்ளமயக்கத்தழிவா
ணெடிதே துயிலா தலமருவா ணெஞ்சம் பொலச்சுழன் றழன்றுள
வடிவா டண்டு சுடர்நேமி வளைவில் லேந்து மதுகையாய் ௪௬

அல்லல் வினைகட் கிருப்பிடமா மருநோய் பெருக்குந் திருப்பிடமாம்
பல்ல வூழி கழிந்தொழியப் பலவா நரகம் பயின்றிடினு
மெல்லை காணப் பரிதாகு மீறு மிலிர்ந்த பிறப்புத்தவு
நல்ல வுணர்வு முழுதொழிக்கு நயவா நறிநொ கொடுங்காமம்

இன்ப மெனமுற் றோன்றுமவை யெவையு மீற்றிற் றுன்பமே
துன்ப மெனமுற் றோன்றுமவை தொலைவின் முழுது மின்பமே
யென்பதுணரா புல்பாகைக்குளிடைந்து பவஞ்செய் திடருழப்பா
ரொன்ப தனையு நெடுவாயி லுடம்புற் றுழலு மடவோரே

அரிதா மக்கட் பிறப்படைந்து மருநோய் வறுமை யாதியொழி
பெரிதாம் வாழ்வு தலைப்பட்டும் பெட்பா னறஞ்செய் துய்யகிலா
ரெரிவாய் நரகக் குழிவீழ்வா னென்றும் பவஞ்செய் துழிதருவா
ரிரிநீர்க் கடல்சூழ் நிலவுலகின் விரவிப் பிறந்து விளிவோரே

அழியாத் திருவிற் பெரியவரு மதுபோ யிரக்கு மதுகண்டு
மொழியா நின்ற பேரிளமை முழுது மகன்று மூப்புவரப்
பழியா ராக்கைச் சுழன்றுவிழும் பரிசுகண்டும் பாழ்நரகக்
குழிபோய் வீழ முனைவோ குறையா வறிவின் றலைநின்றோர்

வேறு

இன்ன வாறுபல வைகல் சென்றொழிய
வேனழ மாதுபல விடருழந

தன்ன வூர்திவிதி யீது போலுமென்
வஞ்சி நொந்தழு தரற்றுவாள்
முன்னை நல்வினையி னுக்க மாமென
முந்துகற் றுறைந்தவொரு மாதவன்
கன்னி மைக்குமனை வாயின் மேவவெதிர்
கண்டு கைதொழுது போற்றினாள்

பண்ணடை நல்வினை பலித்த தென்னவிரு
பாத தாமரை பிடித்திரு
கண்ணடை யன்னவிழி முத்து றைப்பவொரு
கேக யம்புராண தென்னிலைத்
தொண்டொ டிக்கைமட மங்கை வீழ்ந்தன
ளுலப்பி லாத்துதி யோதினள்
விண்ட தாமரை விளக்க மென்னவிரு
விரைமலர்ப்பதம் விளக்கினாள்

பாச முன்னனைத்து மறுத்த மாமுனிவர்
பனிமலர்ப்பதம் விளக்கிய
வாச நீர்தனை யேற்று வாங்கினன்
மடந்தை வாய்ப்பட மடுத்தனள்
மாச கன்றவழி யொளிமிக் கவினு
மணியு மாலையும் வயங்கலம்பர
நஞ்ச முற்றுடலி னேய கன்றொழிய
நங்கை பேரழகு கண்ணினள்

அடியொ டேடுநிழ லாமெ னத்தொடரு
மலைகை யானையு மகன்றனை
பிடிநடைக்குயி லுறக்க நீங்கியெழு
பெற்றி யென்னநினை வெய்திடப்
பொடியி டைப்படியு மேனி யோனையெதிர்
போற்றி னாமலர்க டூற்றினா

ளாடிக ளிஙகளுக யானசெய் மாதவ
மனந்த மேகொலென வழுதனள ௪௯

மதிமுக கத்திரு மடநதை யினனண
மனதகி னுளளுவகை மலிவுற
வதிச யத்தினொடு மனபு பொங்கியெழ
வடிக ணீரென தநன்மனை
வதிதல வேண்டுமென வேணட வமமுனி
மறறு சென்றுமனை வைகினை
கொதிப சிததழ றணிககு நோககமொடு
கோதை வாயின்முதல் குறுகினை ௫௦

ஐமபு லபபகை யொறுதத மாமுனிவ
னுஙக மாநதுறைய மாதனரு
செமபொ னுடையணி யமளி யாதியவை
தேவர் நாடுமில வாமென
வமபு லாவுமலர் சநத னுதியொடு
வாயககு பாறுசுவை யுணடியு
மும்பா போகமும வெறுபப நலகின
ளுவபபு றபபணி யுஞறறினள் ௫௧

தாழ்ம் வெணமல ரளிபப தெனனவொளி
தாஙகு வெளளிலை யணிசசுருள் .
வாழை மாவொடு வருககை யாதிபல
வானசு வைபபழ வருககமும
பீழை நோயினொடு பேய்செ யுநதுயா
பிழைதது நனனெறி பிடி தநவவ
வேழை நாடொறு மளிபப வமமுனிவ
னினிது கொணடவ ணிருநதனன ௫௨

காலை யுசசியொடு மாலை யெனனுமொரு
கால முஙகுறை வுறுமலவ

சேலை யென்றகண் மடந்தை தன்மனை
விருந்து வந்தவ ருவப்புற
சோலை யாதிபல சிற்று ணவ்வகையு
நொய்யு மிட்டு நுகர வித்தனள்
மேலை நல்வினை யினை விளைவு போலுமென
மேவி வைகினன வீர திகேய ௫௩

முறைவ ழாதுபொறி முனைதி றம்பணி
முயன்று செய்துகிள மொழிபிற
னறைவ ணின்றுநது கண்ட மாதரினை யி
னைவில் லாவையு மகன்றனை
மறையி னக்குறு சிந்தை போயினை
வருந்து முணர்வையு மடிந்தவெ
யிறைவ னிடமனையி னின்று போலவினி
யென்று மவாழ்வுட னிருந்திடேய ௫௪

விளைச்சி மிழ்ப்பினி வியங்கும யாக்கைபுவி
வீழு மட்டுமிவ வியனபனை
யனைத்து நின்னுடைய வாமம் னக்கருதி
யைய போகவகை நுகர்கென்க
கனைத்து வண்டிமிர கருங்கு ழற்சுபகை
கட்டு ரைத்தமொழி கேட்டன
னினைத்த வாற்றவைபு நீயி யற்றுகென
நெஞ்சு வந்தவனு சொற்றனன ௫௫

முனை நூழ்வினையி னன்ன மாமனையின
முற்றி யினபநுகா முனிவனங
கனனி யனபினொடு பணிசெ யுமபரிசு
கண்டு வபபினொடு வைகினா
னனன மனனவளு டனபி னோடுபலி
யாண்டு மொனறுசெய தமாநதனள

பொன்னுறத் தமர்வைத்து வாழ்வுய
புனைந்து தூயபூப் புனைந்தனன் ௫௬

பெருகு மன்பினொடு பூசனை பின்னர்க்கை
பேணி நின்றுபல பணிசெய்யா
வருந்து வைத்துநா ளிப்படி நிக
ரந்த மாமுனிவ னருளினுற
கருகு வலைவிருள் குழந்தை மேவுவார்
கடிந்து சுற்றினரு சகித்திணைத்த
இருகு முனைவினாய் மையைப் புகழ்ந்து
சிந்து ஞானமுந்து மெத்தினே ௫௭

வேறு

செங்கதிர் நடுச்சுடர்ந்து சாலழிந்த தீயிரவிக்க
மங்கல மகனும் போயங் கமலமெய்ஞ் ஞானதேசிகப
பொங்கிடு மலர்கள் எல்லாம் பொன்றினப் புனிதமெய்ப்பதி
மங்கைசும் பதும பாத மலரடைந் தின்ப முற்றாள் ௫௮

இத்தாரி நெடுங்கட் செவ்வாய்த் தேமொழிச் சுபகை நந்தம்
பத்தமலர் குழுக்க மற்றப் பாவைதன் புதல்வராம்ப் பொறா
புதல்வரா நட் பாளர் சுற்றம் பொருந்துறு சிவத்தலம் னை
யிதமொடு துறக்கம் புக்கார் செய்தினைரிகளார் வினைப்பம் ௫௯

அரும்பெற்ற சிவன் முற்ற நாயவாக கன்னன் மாடை
விரும்புவ யாவுந் தந்து நல்வணப் பாங் கேவல் செய்தும்
பெரும்புவனத்து முந்தி பெற்றவ பெண்ணெலாங்கொர்
வரும்பெரு வீட்டையன்றி மனனுயிர்க காக்கம் யாத ௬௦

மொழிதரு சிவன் முற்றா முறைதினை கமழ்ந்தந் தேத்தும்
கழிமகிழ் சிறப்ப யாழுங் காதலித் தமரோ வங்கணாய
பழிதபு மனத்தோ செய்யமை பட்டவதிந் தி வடமபனளொள
வழிசெல நடந்தி னோத்தும் வணங்குதன் பாப்புமார்க ௬௧

மாந்தினை யொன்றென றுணு மற்றத் தனையென் றுணு
மெத்தரு மனனோ சென்றுறு கிருக்குமவ விடங்க ளெங்குந்
திரந்தமற றெவையும வைகுஞ செகஇரு படந்தை கேள்வ
சாறறுமிவ வுரையி னையந் தாமொரு சிறிது மினறே ௯௨

நமமொடு கலந்து வைகு நாயகி யைசல மினற
கொமமைமெம முலையாண மீது கொளுறுமன பினுந மகத்துச
செமமைசோ சீவன முத்தா திறந்தனபு சிவனுறு மாயோ
ரமயின வேறலல ரனனோ ருருவிலத திருந்தா ரேனும

எங்கணு மெனறு நாஞ்சோந திருந்துளே ஞசீவன முத்த
ரஙகண மனறிப பொலலா வாகமையோ டோபாங குறறுத
தங்குறு மாறு கண்டு தனையினவே றெனறு கொளவோா
வெஙகலி தொடர நொந்து வீந்திடும பேதை யோரே ௯௪

முறபடு வேத நானகு மொழியுமவே றாநத முறறுஞ
சொறறிடு பொருளைந தொருத்தனைக கண்டு வைததாம
பறபல வாகு மறறைப பருபபொரு ளாலப யினறு
மெறறொடு வைகசோ னீக்கு மாமைமெபா னீக்கு மனறே ௯௫

கைபபொரு ணீருள வீழ்ந்தோன கடிமபுனற குளித்து நீந்தி
யபபொருள கொணட பினனை யகனபுன லகனறு நீஙகு
மெயபபொருள கணட பினபு மேததகு நனனூற கேளவி
யெயபரி சானும வேணடா ரியறபடு முணாவின மேலோர்

வசமபற பிறவி நீத்து மகக்ளாய மாசு நீஙகி
நிரமபுநல லறிஞா வைகு நெடுநில வரைபபிற றென்றிப
புரமபொடி படுக்கு நமமைப போறறுநற குலத்து மேவிச
சிரமபடு நனனூ லாய்ந்து தெளிதனமற றெளிய தனறே ௯௭

அறிவரும் பலநூல் கேட்டு மமலவே தாநதக கேள்வி
செறிவரி தது தான கேட்டுச் சிநதித்துத் தெளிதன முறறிக

குறியுண்மை யறிவா னந்தங் கூடுமவ வறிஞனா ரேனா
நெறிவழா வின்ப முத்தி நோயடப் பெறுவன மாதோ ௬௮

பற்பல வுலகந் தோறும் பற்பல பிறவி தோறு
முறபடு புண்ணி யங்க ணுயனறுசெய் தவருக கிற்றில
வெறபடு முலைமா தோடு மேவுநழ பருளவி ராவத
தறபர ஞானு னநதந தலைப்படுஉத தனனுட னொன்றும் ௬௯

அருட்படு ஞான மேவு மவாகளுடல வீழுங காறும
பொருடபடு முலகக காடசி புணாநதிடும புவியின மீதே
யிருட்படு மலபபற றெலலா மிரிதலின யாககை வீழ
மருடபடு முலக்க காட்சி மருவுறு தகனறு மாயும ௭0

பறறிய மலம்பற றுதது பததியா னமமைய பற்றும
பெறறியோக குலந மெநதப பெறறியாற பெயாததுந தோன்று
மறறிழுந தம்மை நமமை யறிவிககு மமல ஞான
முறறுமிஃ துண்மை யென்று மொழிநதனன முககணமூாததி

உரைதத பினமல மூாததி யொனறுமங குரையா ஞைகத
தரைததலை விழுநது கஞசத தாளிணை தலைமேற றொணடான
விரைததனை டுளவ மாயோன விடைபுயர்த தவாகளுகெகாற
புரைததகு பநதம வீடப் பொருநதினன றிருநது ஞானம் ௭௨

வேறு

வெள்ளன்னம பள்ளிகொள மெனகஞச மலாவிழககுந
தெளளம் புனறபணைசூழ திருததிலலை மனறுறைவா
யுளளங குளிரவுனை யுளகுவா ருறுமினபம
விளளருஞசீா மேனறூடு விணணோரு மேவாரே ௭௩

சிறறம பலததாடுஞ செலவாநீ செபபுமறை
முறறவுநின புகழபாவ முடடைகளந தோதேறா,
மறறும பகலே வளாவிளகக மாடடி டினு
முற்றகொத்தை கணடொன் றுணருமா றுணடாமோ ௭௪

அண்டர்தொழுஞ் சிற்றம் பலத்தாடு மழகாவுன்
றொண்டுவிரும் பாதமுன்றன் சுழலுமனப் பித்துடையார்
வண்டுமூசக் மதுப்பொழிந்து மணநாறு மலர்க்கடுக்கைக்
கொண்டணியு முன்குறிப்புக் குறித்துணர மாட்டாரே ௭௫

அல்லும் பகலு மடியிணைகை தொழுமடியார்
செல்லல்களைந் தைம்பூதஞ் செறிக்கு மிருளகடிவாய்
பல்லுலகுந் தொழுமம்பலத் தாடும் பரமேட்டி
கல்லெனுநெஞ் சகத்தாருங் கழற்கமலங் காண்பாரோ ௭௬

அள்ளற் பணைத்தில்லை யம்பலத்து ளாரமுதே
யுள்ள முருக விராமஞ் சிவாயவுரை
தள்ளி நினைந்தழுமன் றமர்க்கல்லா லுன்றணைத்தாள்
கள்ளம் பெருகுமனக் கலதிகளுக் கெட்டாதே ௭௭

அழற்பகுவாய்க் கரும்பாம்பு மதிக்குசிறு பிறைக்கொழுந்துங்
குழற்சடைமா முடிக்கணியுங் குழகாவுன் றிருப்பாதம்
நிழற்புகுவா ரிரவுபக லினைத்தழுவார் பற்றறுத்தோர்
கழற்கமல நீயெடுத்துக் காட்டிநின் றாடுவதே ௭௮

வேறு

கைதொழு திவ்வா றேத்துங் காவலன் றனக்கு வப்ப
மையணி கண்டத் தெங்கோன் மகிழ்ந்துதாண் டவம்புரிந்தான்
றெய்யவினை வதைத்துக் கொட்டுந் தேவர்பற் பலருஞ் சூழப்
பையணற் பாந்தட் பூணோன் படர்ந்தன்ன புலியூர்ப் புக்கான் ௭௯

சீர்படு புட்ப சாதி செழும்புனற் சந்த னாதி
பார்படு பலவுங் கொண்டு பயில்கண நாதர் பல்லோர்
வார்படு மணிப்பூட் கொங்கை மலைமக ளோடெங் கோனை
யோர்படு புலியூர் மன்றி னெய்தினா ரருச்சனை செய்தார் ௮0

பாயவே தாந்த முற்றும் பரம்பர னுரைப்பக் கேட்ட
மாயவ னீசன் பொற்றாண் மனங்கொண்டு மகிழ்ச்சி கூர்ந்தான்

றாயசிந் தையினீ ரென்று சூதனன் றுரைப்பக் கேள்வி
நேயமென மேலு நெஞ்சி னிரம்பூற மகிழ்ந்தார் நீத்தோர் ௮௧

சிவஞானப்பேறுடையார் பூசனைப்பயனுரைத்தபடலம்
முற்றிற்று ஆ செய்யுள் ௯௮௰.

ஐந்தாவது

தேவருக்கு ஞானோபதேசஞ் செய்தபடலம்

வண்டு பாண்செயுங் கருந்துழாய்த் தொடைமுடி மாயோ
னண்டர் நாயகன் றிருக்கயி லாயமேற் பகத்து
விண்டு ரைத்தமெய்ஞ் ஞானமுற் றியபின்பு மேலோய்
கொண்டு செய்தன யாவையும் விளங்குறக் கூறாய் ௧

என்று சூதனை வினவின ரவனுமங் கியம்பு
நன்று கூறினீர் கேண்மினமற் றனைத்து நவில்கேன்
குன்ற வில்லியை விண்டுவு மிறைஞ்சினன் கொழும்பொன்
மன்ற மேம்படு திருப்புலி யூர்சென்று வணங்கி ௨

விரியு மாமறைத் துதியினு முலகத்து விளம்பு
மரிய பல்வகைத் துதியினும் போற்றிசெய் தருளசீ
ருரிய வாற்றினிற் பெற்றன னங்ககன் றுருவிக்
கரிய மேனியோன் வைகுண்ட மாநகர் கலந்தான் ௩

செம்பு ளோர்ந்தனன் வைகுண்ட மாநகர் சேர
வம்பு யாதனந் தமாதரு பிதாமக னாதி
யும்பர் யாவரு மொருங்குசென் றவ்வயி னுற்றார்
கம்ப மாலகளி றட்டவற் றொழுதுளங் களித்தார் ௪

உச்சி மேற்றம திருகையுங் குவித்தன ருரைப்பார்
நச்ச ராவணி வேணியன் றிருக்கயி லைமே னண்ணி

யச்சு தாவவன் கூறிட யாவையு மறிநதா
யிச்சை யாலெமக கனனவை யாவையு மிசைத்தி ௫

அறிதல வேடடனந தொகுநதுரை செய்யெனு மவர்ககு
வெறிம லாததுழாய விணடுவு நயநதுரை விளமபு
நெறியி னீரைனை விஞயது நெடுஙகட னிலமேற
செறியு மனனுயி ரெவைககுமின பநதருளு செயபின ௬

அன்ன தாயினும விளஙகுமா றஃதெடுத தறையும
வனமை பெறறிலேன சிவபிரா னொருவனே வகுககு
மனனு மறறது பெறநெறி கேணமினோ மயஙகா
தினன நீாததிடுந திருபபுலி யூாகத தெயதி

பொருநது நாளொடு பககமே மாசமே புணாத
திருநத வநதிடு மயனமே யாணடெனச செயபய
வருநதி றத்துளான றிடைககணடு மனனுயிா வழுததின
மருநது போறபவப பிணியறுத தருஙகதி வழஙகும ௮

பாவ முறறவும போககிடும போகமும படைக்கும்
யாவா வேண்டினு மபபெருந திருநகரியமபின
மேவ ருமபுலி யுறுபபெனக கொணடமா விராட்டுக
காவ வநநக ரீதபபாங கயமென வறைவார் ௯

அஙகண மேவிரீ ருநதவ முயனறுசெய் தமர்மின
மஙகு ருததிரு வருசெழுத தருளுசிததி வழஙகுந
தங்கு மநதிரத தஃதெயப தொனறிலை சாறறின
றிஙகட கணணியோன சதவுருத திரநுசெ மசெரும ௧0

முற்ற வனனதோ ரிலககமே யாயினு முறையாற்
பறற கனறுற வெணணுதி பசுமபொனம பலததுட்
கறற வாறெறி யோபபுவாா கைதொழுங கடவு
ணிறற ஞெககீ ரனபொடு மவவயி னொமின்

சாந்த மாமறை யாகம விதிமுறை தவாமல்
ஐந்தெ ழுத்தினு லவனடி யர்ச்சனை யாற்றிக்
கந்த மாமலர் நிவேதனங் கருப்பூர நல்லவை
முந்து றக்கொடு முந்துசெய்து பணிந்தின்று முறையால் கஉ

சருவனை யங்கட வும்பிகை நாயகனைக் கருத்தாந்
தெருணை யும்படு மானந்த தாண்டவச் செல்வனை
திருவி ளங்குறு வடநிழற் பயின்றுறை சீரானை
பொருவி னீறணி புராதனன மதிமுடிப் புனிதனை கங

விள்ளங்கு முச்சுடர் விழியினை நொடிவிட மிசைந்து
களங்க றுத்தவனை மறைப் பூணுநூல் கஞலித்
துளங்கு மார்பினனை கங்கையஞ் சடைமுடித் தூயோ
னுளங்க வார்ந்திடு குறுங்கைக் கோட்டுவா யுரவோனை கச

உரகப் பூணினோன் றடநெடுந் தோளினோ னொளிப
பரவு பார்வையோன் றிங்களு மகிழ்தரு பகலவன்
விரவு தண்கதி ராரமங் கதமுதல் விளம்பு
புரவுப் பொன்னணி பற்பல பூண்டிடு புராணன் கரு

செங்கண் வாளராக் குழைகளின் செய்திடு செவியோன்
மங்க லம்படு மரகதப் பசுந்திர ளலாக்கை
யங்க ணன்சிலம் பலம்புறு திருவடி யண்ணல்
பொங்கு சுந்தர வுருவினைப் பொருவறப் பொலிவோன் கசு

ஒருகை யாருயிர்க் கபயநன் களித்திடு மொருகை
பெருகு மனையவை பற்றலர் போல வீசிடும் பட்டா
லொருகை மேம்பட்ட தாங்கிடு நாதமா ருடுக்கை
யொருகை யங்கினன் கேந்திடுங் கண்டவ ருவப்ப கஎ

முற்று மானந்த வடிவுடை யப்பெரு முதலவனை
மற்றி யாவரு மறிவரும் பொருளெலாம் வகுக்குஞ்
சொற்ற வாறுநீ ரவ்வுழிச் சென்மெனச் சுரரைக்
கொற்ற நேமியோன் கூறின னவ்விடை கொடுத்தான் கஅ

அம்பு யாதனந் தமர்ந்து தகைதேய யாதி
யும்பர் யாவருந் திருப்புலி யூர்நக ருற்றார்
நம்பு பூதியுங் கண்மணி மாலையு நயந்தார்
வெம்பி டுங்கொடு விரதமுந் தானமும் விழைந்தார் ௧௯

குழையு மன்பொடு பிரணவ முறப்படக் கூட்டி
விழையு மைந்தெழுத் தோதின ருந்தவம் வேண்டித்
தழையு நன்னெறி முயன்றன ருமறை சாற்றும்
பழைய மூர்த்திக்கட் பூசனை முறைப்படி பயின்றார் ௨௦

பிரம னிந்திர னாதிவிண் ணவரெலாம் பெட்பாற்
பரம னம்பலத் தானந்தத் தாண்டவம் பயிலும்
வரம விந்திடு மூர்த்தியைத் துதிசெய்து வழுத்திக்
கரவி லன்பொடு மகிழ்வுறச் செய்துளங் களித்தார் ௨௧

பாத பங்கயம் பரவுறு மமரர்தம் பாவம்
வேத நாயகன் றிருவருணோக் கத்தின் விளியக்
காத ரந்தபு மறைப்பொருட் சாரமாக் கழறு
மோதி முற்றவும் புலப்படத் தாண்டவமு வந்தான் ௨௨

எங்கு மாயவ னுயிர்க்குயி ராயுவ னியற்று
மங்க லம்படு தாண்டவங் கண்டுள மகிழ்ந்தா
ரங்க முற்றவும் புளகெழப் பரவின ரமரர்
தங்க ளாக்கைவிட் டவரெனச் செயலெலாந் தவிர்ந்தார் ௨௩

சிறிது போதினி லைவறி வுற்றிடைச் சேரப்
பொறிவ ழிப்படு முணர்வொடு மெழுந்தனர் புராரி
நறும லர்ப்பதம் போற்றிவாய் குழறிலா நடித்தார்
கொறிகொ றுத்தழல் வினைகெடத் துதிப்பது குறித்தார் ௨௪

வேறு

கனக மணிப்பொதுவுட் சண்டவருட் கனிந்தருக
வனகனள விலலாதோ ரானந்த வடிவழகன

பனகமணிப் பூணினானைப் பணிந்து நடங்கண்டு
மனமொழிமெய் களிறப் போற்றா வாழ்வென்ன வாழ்வே
வந்தனைசெய் தய்யாதார் வாழ்வென்ன வாழ்வே உரு

கறைநீடுங் கண்டத்தானைக் கடுக்கைபலாத் தொடையானைப்
பிறையாடுஞ் சடைமுடியானைப் பிறந்திறவாப் பெருமுதல்வனை
மறைநாடுந் திருத்தாளானை மாணிக்கத் திருக்கூத்தனை
முறைகூடிப் புகழ்பாடா முதுக்குறைவாற் பயனென்னே
முற்றறிவன் புகழ்பாடா மூதறிவாற் பயனென்னே உசு

இருளார் மலத்தழுந்தி யிடர்ப்பட் டுழல்வேமை
மருளாரு மாயையொடு வல்வினையுட் படவைத்துத்
தெருளாரு நல்லறிவு சிறிதுசிறி தாச்செறிவித்
தருளார்மெய் வீடுதரு மனகனை யடைக்கலமே
யம்பலக்கூத் துகந்தபிரா னளியேமுன் னடைக்கலமே உஎ

வேறு

என்றுதுதி பற்பல விசைத்தனர்கள் விண்ணோர்
கொன்றைமுடி யாரெதிர் குனிந்தன ரெழுந்தி
மன்றினட மாடுமெய வாழ்வுதரும வள்ளா
வின்றுனை வினவியறி வானிவ ணடைந்தேம் உஅ

வேதமுட னாகம விதங்கலை விதங்கள்
யேதுகருதின் பொருள விளக்கியிடி னல்லா
லோதியுணர் தற்கெளிய வல்லவுவை முற்று
மேதமறு முன்னடி யிரண்டினு ளடங்கும் உகூ

ஆங்கவை விரித்தபொருள் யாவையு மடக்கி
யோங்கலை வளைத்தவுர வோயுணரு மாறுற
றீங்குறு பொருட்டுருவு தேக்குபல வவ்வய
நீங்குற வுரைத்தியென நேர்தொழு துரைத்தார் ௩0

ஓதுமுழு தும்புலியி னுறறநில வசசெய
யாதிசுந பனூதைறயு மநதமுத லிலலோ
னீதியி னுனைத்தமரா ரோதொழு திரபப
வேதியா தொழுயபரம மேவதியன விளயபும ௩௧

ஓங்குசமை யம்பல வுரைசகுமனைவ யாவும
நீங்குபல பொய்யுணா விடுத்தொழுக வேதம
பாங்குற விரிபபது பராநதுரைசெய கினறும
யாஙகெனினு நீவிரஃ தெயதவெளி தனறால ௩௨

மூன்றுபொரு ளென்றுமுள முனுபதி பாச
மேனறபசு வெனபன வியபபுபெய ராமா
லானறபதி யெஙகுநிறை வாயெவையு மாறறித
தோனழியு மபொருள்க ளோடுதொடா பின்றி ௩௩

அறிவுருவ பசுயளவி லாறறலொடு மனனிச
செறியவரு பொருள சிறபபுற விளஙகிப
பிறிவரு முதனமையமை பெறறிபெறு மமனுங
குறிகுண மிறநதது குறிபபரிது கூறின ௩௪

பாசமென வோதுவது பணபுறு மவிசசை
பேசரிய மாயைவினை பெடபுறுமா யேயந
தேசவிரு நூலபுக றிரோதமென வைநதா
நாசமக லபபசுவை நனறுபிணித தொனறும ௩௫

ஐவகைய பாசமொ டகனபுவி துறகக
முய்வரு மிருடடுலக முற்றுற வுழனறு
செவ்விமலி யபபதி திருககருணை செயய
விவ்வகையி னீஙகுவ தியமபுபசு வாமே ௩௬

முறபுக லவிசசையது முறறுப சுவாகக
முறறதொழி னஞானமுழு துமபுறமு றமமே
கறறைபிரு ளாயமறைவு செயதுகடை நாளி
னிறறழிவ தேனுமஃ தென்றுமுள தாமால ௩௭

முற்றிடு மவிச்சையிடை மூழ்குதொழி னானஞ்
சற்றுவெளி யாகநனி சார்ந்துற விளக்கி
யுற்றவுடல் போகமுந்த வுள்ளபொரு ளாகிப்
பற்றியு மயக்குவது பந்தமுறு மாயை ௩௮

மூன்றுறு மவிச்சையொடு முற்றவரு மாயை
தன்னொடு முயிர்த்தொகுதி சார்வுழி விளைந்து
பொன்னுட னிரும்புசெய புனைத்திற நிகர்ப்ப
வின்னலவிளை விக்குமஃ தியற்றுவினை யென்ப ௩௯

ஏற்றுரைசெய் மாயையி னியைந்தவைமா யேயம்
போற்றுபசு தன்னொடு பொருந்தியமா சந்தி
யாற்றுவினை யின்பய னருத்துவது தானே
தேற்றுசிவ ஞானமொழி திறத்தமைதி போதம் ௪0

வேறு

புனைவுறு பாசத் துள்ளாற் புகுமுன்ன றிவு மாயத்
தினைவுறு யோனி பேத நிலையுடற் பாரந் தாங்கி
யினைபதோ ரளவிற் றென்னு மெல்லையி லூழிச் செல்ல
வினைவழித் தட்டுழப்பு மேவிடு முயிர்க ளெல்லாம் ௪௧

பொறிவழிச் சென்று புகுப் புலந்தொறு மறிவு மூழ்க
வறிவது கனவே யாக வலமந்து தலைம யங்கி
நெறியறி கலாது துன்ப நெடுந்துயத் துழலு மன்றே
செறிதரு யோனி தோறுஞ் சேர்தரு முலகந் தோறும் ௪௨

திகைப்பற வெங்கு மேவிச் செறியறி வுருவ மாகி
நகைப்படு போரா னந்த நயத்தொடு மேந்த ஞானந்
தகைப்பறு தனைந்த தன்றற் சார்ந்தறி சாலபிற் றுருக்கும்
பகைப்பறு மறிஞ ரானோ பலத்துமோ ரத்து ணருமானமா ௪௩

மலிதரு விகார மொன்று மன்னுறு வியலபிற் றுருபுங்
கலிகெழு மாயை யோடு கலந்துகா லத்தி னூற்று

பொலிவுறு முலக மெல்லாம் புணர்த்தவற் றுட்புகுந்து
வலியழிந் தறிவு மாழ்கி வலவினை பற்று மான்மா ௪௪

அறிபொரு ளறிவே யாகி யருங்கரு வனைய காட்சி
நெறிவழி மயங்கி யென்று நோவுறு மின்பத் துன்பத்
துறுவன யோனி தோறு முழன்றுழன் றிளைக்கு மன்றே
வறிதரா தளப்பின் மோக வலைப்பட்டு மயங்கு மான்மா ௪௫

ஒன்றினை யொன்று பற்றி யுண்டிடு முணப்ப டாது
நின்றவு முண்க லாது நின்றவு மென்று மில்லை
யொன்றினை மறந்தொன் றினைந்தங் குளமகிழ் வோடு காக்கு
மென்றுமித் திறத்துத் தோன்றி யிறந்திடு முயிர்க ளெல்லாம்

மறப்பொடு நினைப்பு மாறி வருதுவந் தொழிதல் போலப்
பிறப்புட னிறப்பு மேவிப் பெரிதிரு வினையி யற்றிச்
சிறப்புறா னூற்றுந் தனைச்செ யிழக்கு மந் தாழிகப்ப
விறப்புறு முயிர்கள் யாவுமை யுறவே றுடலவி னைக்கும் ௪௭

திரைக்கடற் பொலியு மொக்குட் டிறமென மாயை தன்னு
ளுரைக்கடங் காத பல்வே றுலகங்க ளுளவ வற்றுட்
டுரைக்கடங் காது தோற்றஞ் சாரா வுயிர்வாழாத் தானம்
விரைக்கம ழலங்கற் றோன்றா விளம்புறி னியாங்கு மில்லை ௪௮

இத்திறம் பிறவி தோறு மீட்டுகல் வினைவி ளைப்பத்
தத்துவ ஞானக் காட்சித் தலைப்படு மியல்பிற் றாகி
முத்தலை கொழிக்குந் தெண்ணீர் முரிதிரைக் கடற்பார் மேவி
யத்தகு மக்க ளியாக்கை யடையுமா றுயிர னைத்தும் ௪௯

செல்வமு மீகைப் பேறுந் திறலொடு பொறையின் வாய்ப்புங்
கல்வியு மொழுக்கச் சீருங் கட்டழ காண்மை ஞான
நல்வய தாதி யாக நவில்வுறு நலப்பா டெய்திப்
புலனுநல் வினையின் பேற்றாற் பொருந்துவர் மக்க ளெல்லாம் ௫௦

அருமறை விதியி னாற்று லறம்பயின் றாக்கை செல்வந்
திருமலி யிளமை யாதி செறிநிலை யாமை நோக்கி
வெருவுப் பிறப்பு வேண்டார் வீட்டினை யடைய விழைவ ரஃது
வருதிறம யாதோ வென்ன மறையெலா மாய்ந்து காண்பார் ௫௧

உயிரொடு முடனின் றாகு மொற்றுமைப் பாடு கண்டு
செயிரறு பதியை நாடிச் செயுமவழி பாடி யற்றி
யுயிருறு பாச நீங்கி யொப்பரு ஞானம் பெற்றுத்
துயரொரீஇ யழிவி லாத சுகமுத்தி பெறுவர் மக்கள் ௫௨

மேம்படு ஞான மொன்றே வீட்டிற்கு நேரே வாயில்
லோம்புமற் றனைத்து மன்னை துறுத்தற்கு வாயி லாகும்
வேம்பான விடயம் யாவும் வெறுத்திடு சாந்தி யாதி
தாம்பல ஞான மேவுஞ் சாதன மாவ மன்றே ௫௩

மறிதிரைக் கங்கை சூழும் வளமலி யவிமுத் தாதி
செறிதரு நமது தானஞ் சேர்ந்துயிர் விடுவ ரென்னி
னறிவரு கொடியோ ரேனு மறநெறி நின்ற ரேனு
நெறிவரு ஞானப் பேறு நேர்பட்ட பெறுவர் கண்டா ௫௪

விளம்பிடு மவிமுத் தத்து மேவுதண் டகவ னத்து
முளம்படு திருமலைக்கு மோதிடு புலியூர்த் தேத்துங்
களங்கமுற் றொழிய வைகிக் காயம்விட் டகன்றோர் ஞான
மிளம்பிறை முடிக்கு நம்மா லெளிதினெய் திடுவ துண்மை ௫௫

கற்பக மாலை வாசங் கமழ்தரு தோளீர் கேண்மின்
விற்பொரு நுதலி யோடு மேவிநா மருவுங் காசி
நற்குருக் கேத்தி ரஞ்சீர் நலம்படு புலியூ ரென்னச்
சொற்படு மூன்றி டத்துந் தூயரே யமர்ந்து வாழ்வார் ௫௬

ஆங்கொரு சிறிதென் றானு மறநெறி பிழைக்கு மாந்தர்
தாங்கலந் தென்று மவைகார் சாற்றுமத் தான மூன்றி
னீங்குறு ராக்கை ஞான நேர்படப் பெறலு மில்லைத்
தீங்கறு மின்ப வீடு சேர்தலு மில்லை கண்டீர் ௫௭

மன்னிய புலியூர் மேவி வாழ்வது புத்தி முத்தி
யென்னவு மாங்கோ ராண்டி னீந்திடும் பாசண் டத்தோ
ரன்னது விரும்பா ரிவ்வா றாதலின் முத்தி வேட்டோர்
முன்னியா மமருந் தேத்து முறையுளி வதிதல் வேண்டும் ௫௮

அன்பொடு யாமெஞ் ஞான்று மமலையோ டமருந் தானந்
தன்பொரீஇ வாழ்வோ ராகலை தொலைவுழித் தார கப்பே
றின்பொடு மடைவ ரென்று மெமபெருங் கருணை யாலே
மன்பதை நிலஞ்சான் றாக மற்றிது சாற்ற மாதோ ௫௯

வேறு

திருந்து மமரர்க் குத்தமனை யான் றில்லை நகரஞ் சிவத்தளிக்குட்
பொருந்துமகிமைமறைமனுவுட் புணரைந்தெழுத்தேபொற்புடைத்தாம்
வருந்துந் துயர்தீர் சமயத்து மாட்சி சைவம் வைதிகமே
மருந்து பொருவு மெய்வீடு மன்னும் பேற்றுண் மாட்சிபெறும்

என்று மகிழ்வால் யாமிருக்கு மிடத்துட் காசி காளத்தி
நன்றி தழுவுந் திருச்சயில நாக ரேத்து முதுகுன்ற
மன்றம் பொலியுந் திருப்புலியூர் வளமார் பழனத் திருவாரூ
ரன்று பவந்தீர் மறைக்காடு காட்ட லாகாச் சிறப்பினவே ௬௧

அவ்வை முன்னு மவிமுத்த மாங்குத் தமமாந் திருப்புலியூர்
செவ்வை நமது மனமகிழச் சிறந்து விளங்குந் திருத்தலமா
மைவா ரிதிசூழ் நெடுநிலத்து வளங்கூர் புத்தி முத்தியெலா
முய்வா னடுத்து வேண்டுநருக் கொல்லை யுதவு மியல்பினவே

பொற்பொழிலங்குந்திருப்புலியூர்போந்துவணங்கவெல்லிதன்று
லற்போ டிபையு மனத்தினரே யதுபெற் றிடுவ ராதலினு
னற்பார் மேலிவ் வுடைந்து ஞான முழுது நாநெகுத்துக்
கற்பா டழித்த தடந்தோளீர் கழறப் பெற்றீர் கருணையினால் ௬௩

பொருளார்பன்னூற்கரைகண்டபுனிதமனத்தானமைப்போற்றி
யிருள்ளார் பாசந் தெறுந்தவத்தோர் யாவ ரானு மிறுதியிலாத்

தெருளார்முத்திபெறும்பொருட்டுச்சென் றுபணியப்படுமன்றே
யருளாலென்று நாமகிழவுற் றமாநது வைகுந திருப்புலியூர் ௯௪

பொன்னங்கடுக்கைமதுக்கங்கைப்புனலூடிழிந்துபோய்த்தொழுனை
யென்னப்பொலியுஞ்சடைமுடியாரிவ்வா றுரைப்பவிமையவர்தா
மன்னுங் கருணை யார்கழலை வாழ்த்தி வணங்கி மறையானு
முன்னு மெழுத்தோ ரைந்தானு முளளங் களிப்பப் பூசித்தார்

தேவருக்கு ஞானோபதேசஞ் செய்தபடலமுற்றிற்று
ஆக செய்யுள் ௭௪௯

ஆறாவது

வியாசர்முதலியோர்க்குத் திருத்தாண்டவங் காட்டிய படலம்

வேத முதல்வன் மெய்ஞ்ஞானம் விண்ணோர் தமக்கு விளம்புகதை
சூத விரித்துத் தெரிக்குத்தெ மககுச் சொற்றாய் கேட்டுத் தொல்லைவினைக்
கேத மகன்றே மூலகிறநது கிளரு ஞான வொளியுருவா
நாத னியற்றுந் திருநடன நாங்கண் டுவக்கு நசையுறறேம் ௧

ஓது நடனங் காண்பதற்கு குபாயம் புகறி யெனவுரைத்துப்
பாதம் பரவு முனிவருளம பற்றச் சூதன் பகாகின்றா
னேதந் தவிர்செள் நகமுனிவ னெங்கோன் கயிலை யிருஞ்சிலம்பிற்
போதமபொலியுந திருநந்திபொன்னங்கழற்றாள்போய்த்தொழுதான

பொற்றாமரைத்தாள்பணிநதெழுந்துபொருவின்மறையாகமமனைத்துங்
கற்றோ யுயிருக் குயிராகிக் கலைகளுப கரைமிடறனோன்
வற்றாக் கருணைக் கடன்மூழ்கும வரதா சிறியேன் மனநசையான்
முற்றாவிளவெண்பிறைமுடித்தமுதல்வனடங்காண்பது முயன்றேன

வெம்பும் புலித்தோ லுரைக்கசைத்த விமல னியற்றுந திருநடன
மும்பர்ச் சேனுங காண்பரிதா மூறுமா றுபாய மூரைத்தருளாய

நம்பி யெனக்கைக் கொழுமத்தத நந்தி யுள்ள நனிமகிழ்ந்து
தும்பை முடித்தார் கழற்கமலந் தொழுது புகலத் தொடங்கினான்

வானம் பரவு திருக்கயிலை மலைமேற் சாலை மாலையெலா
ஞானம் பரவு திருக்கூத்து நாத னியற்றி நின்றிடினுந்
தானம் பரவு களிற்றுரியோ னானைக் காணும் பிறர்காணார்
ஏனம் பரவு கடற்புலியூர்ப் பேறப் பிறருங் காண நடஞ்செயுமால் ௫

வண்டு வீழ்ந்து பாண்முரல மதுவூற் றெடுக்கு மலர்ச்சோலை
யண்ட மளக்குந் திருப்புலியூ ராங்கத் தென்று பாடிடுவான்
கண்டு பணிவோர் கணநாதனை கந்தன் வடுகன் கவுரியென்போர்
தொண்டு படாதார் பிறவெல்லாந் தொழுவா ரல்லா துகளற்றோய்

காணு மவர்க்குக் கறைக்கண்டன் காட்டுங் கருணை சிறிதன்றாற்
பேணுமன்னோ னிருக்கருணைபெறுவான் முயறிபெருந் தவத்தாற்
றூணு வியற்று மானந்த தாண்டவம்போய்த் தரிசிப்பான்
பூணு மொழுக்கஞ் சிலவுள்ள புகலுங் கேட்டி பொருவிலோய்

முத்தம் பொருவும்புனற்பொன்னிமுழுநீராப்பணைவாய்முதுமேதி
நத்த நெரிய மிதித்துழக்க நகுவெண் டாளந் தெறிதெழுந்து
பைத்த செந்நெற் குரல்கவரும் பறவை கடிந்து புறம்போக்கு
மொய்த்த வளங்கூர்திருப்புலியூர்முன்னிமுறையாற்பணிந்தேத்தி

சீர்மார் கழியி னிறையிற் செங்கேழ்க் கதிரோ னுதிக்குமுனம்
வார்நீ ராடித் தூபோனைப் வானோ ராடுஞ் சிவகங்கைப்
பேர்நீர் மூழ்கிக் கடன்முடித்துப் பெரியோர் தானம் பெறவழங்கிப்
பாராவா ரொருநா ளுபவசித்துப் பகலவன் கோயிற் பாலெய்தி ௯

மூலட் டானத் தமர்ந்தவரை முழுவ லன்பின் வலம்வந்து
ஞாலத் துறவீழ்ந் தெதிரிரைஞ்சி நயப்பாலொருபாற்போயமர்ந்து
கோலத் திருவைந் தெழுத்தபுங்க குறித்துக் கணித்து நாடோறு
மேலப் புகலு மிம்முறைபா லியற்றிப் பயிறி யாண்டொன்று

ஆண்டின் முடிவி னீராடி யமரர் தொழுதேத் துடனாந்
தாண்டு நெடியசடாவிலைகளைத் தொழுதுப் போந் தயோர
வேண்டும் பரம வேதியனா வினைமுந்து நடிக்குந் திருமன்றம
பூண்ட முறையான் மூன் றுவலம்புரிந்து புவிவீழ்ந்தெதி ரிறைஞ்சி

முன்னங்கழறுமுறைபேணி மொழியைந் தெழுத்துங் கணித்துத்தி
யின்ன முறையாலங் கோராண்டியற்றியிறுதி னியனறபொருளை
பொன்னங்கடுக்கைத்தொடை முடித்தபுராணர்க்குதவிப் பூசனைபு
ரின்ன றவிர்க்கு மைந்தெழுத்தா லியற்றி யன்பி னிறைஞ்சிடுதி

மறையி றறியா மாமறையோன் மற்றிவ் வாறு நீ போற்றி
குறையாக் கருணை சுரந்தளிக்குங் குணத்த தலைத்து முனிவரபவர்
பிறைசேர்மவுலிப் பெருமானைச் செய்பெருநாடகங் கண்டுளங்களித்து
நிறைவால் வேண்டுமனைவயெல்லா நிரம்பப்பெற்று நெஞ்சவந்தார்

வேறு

நந்திபிரா னுரைத்தமொழி நயப்போடுங் கேட்டுவந்து
வந்தனையால் விடைபெற்று வழிக்கொண்டு சவுனகனு
முந்துபல மலைக்குலமு முளரிகளும் பலகடந்து
சிந்தையினுங் கடிதெய்தித் திருப்புலியூர் மருங்கணைந்தான் கச

மதிசூடுங் கோபுரமு மாமதிலு மாளிகையு
மெதிரேதோன றக்கண்டு மறுஞ்சி யிகவாத பேரன்பாற்
றுதிநீடு செவ்வாயான் றொழுதேத்திய மலர்க்கையான்
கதிநாடு முளக்கருத்தான் கடிதினக நகர்புகுந்தான் கரு

வண்டுறக்க முறக்குடைந்து மதுத்தூற்று மலர்வாவி
கண்டுகுடைந் தினிதாடிக் கடன்கழித்துக் கறையகற்றி
மண்டுமன மாசகன்ற மாமுனிவன் மரபுளிப்போ
யண்டர்புகழ் சிவகங்கை யகன்புனலப் புக்காடினான் கசு

வெண்பொடிமெய் முழுதணிந்து மேவியகண் மணிமாலை
பண்பொடுபூண் டைந்தெழுத்தும் பயினறுரைக்கு மலர்வாயான்

கண்பொழிநீர்க் கடன்மூழ்கிக் கறைமிடற்றோன் றிருக்கோயில்
மண்படிய வீழ்ந்திறைஞ்சி மாபுளிய மேபாய் வலமவந்தான் ௭

கன்றாலங் குடித்தன்று கடவுளரா ருயிர்காத்தா
னன்றால நீழலமர்ந் தறமுரைத்தா ரகமகிழ்வா
னின்றால நீழலமர்ந் திருப்பத்தகண் டகமகிழ்வான்
வன்றாலம் படவீழ்ந்து வணங்கியன்பின வழுத்துவான் ௧௮

ஆரிருளா ணவமூழ்கி யழுந்துநமை யருமாயை
சாருநெறி புணர்த்தருளித் தனுகரணம் பலபுவனஞ்
சீரியவாம் பலபோகத் திறந்தந்து காத்துவக்கும்
பேரருளின் வருங்கடலை பிழைபொறுத்தாட் கொள்ளாயோ

சென்மம் பலபலவாய்ச் சென்றுகழிந் தொழிய
முன்னை வினையாற்றான மூவுலகும் புகுழன்றேம்
பொன்னங் கடுக்கைப் புரிசடையெம் பூரணனே
யின்னங் கருணைசெயா திருப்பதுனக் கழகாமோ ௨௦

திருமா லயன்முதலாந் தேவாதி தேவர்க்கும்
வருமா முதன்மையுன்றாள் வழுத்தவரும் பேறன்றோ
குருமா மதிமுடித்த கோவேயுன் குரைகழற்று
ளொருநாண் மறந்தேனை யுய்புநெறி யாதுமுண்டோ ௨௧

பழியார் முடையாக்கைப் பப்பாத்துட் படப்புகுத்திக்
கழியாத பண்டைவினைக் கயிற்றிற் பிணித்தாட்ட
வொழியாமே யென்று முழன்றிளைத்தே னினியமையும்
பொழியாயோ நின்கருணை புரமபொடிக்குஞ் சிறுநகையாய் ௨௨

தன்னுளத்துத் தோன்றுவன தான்சாற்றி யின்னவகை
பன்னிப் பரவிப் பழமறையாற் பூசித்து
மன்னிப் பணிந்துவரான் முறையா லஞ்செழுத்து
முன்னியவ ணோராயுத முறையாற் கணித்திட்டான் ௨௩

ஆன்றமுறையண்டொன்றுங் ககன்றெழியப் பைம்பொன்மணி
யென்றமுறை யந்தணருக் கீந்துபவம் போக்கினான்
றேன்றழுவு மலர்பொழுதுஞ் சிவகங்கை படிந்தாடிச்
சான்றமுறை யான்முன்போற் றவாதெனவையுந் தான்முடித்தான்

உள்ளன்பு புறம்பெருகி யுவட்டெடுப்ப தெனக்கண்ணீர்
வெள்ளமபாய்த் தருகண்ணான் வேதமுடி வறிவரியோன்
கள்ளநதி ருளத்தார்க்குக் காட்டாக்க களைகண்ணும்
வள்ளற்கோன் றாண்டவஞ்செய் மணிமன்றஞ் சென்றடைந்தான்

பொன்னனைய நெடுஞ்சடிலப் புராதனரைத் தொழுதுதிரு
முன்னர்விழுந் திறைஞ்சினான் மும்முறையான் வலம்வந்தா
னென்னதவஞ் செய்தேனென் றெண்ணுதொறு முளமகிழ்வா
னன்னமுடி யறியாரை யைந்தெழுத்தாற் பூசித்தான ௨௬

பந்தவினைக் கடல்மூழ்கிப் பதைப்பார்க்குப் பற்றுபுணை
தந்தருளி யாங்கெடுத்த தாள்கண்டு போற்றினான்
சந்தமறை நான்றேடச் சதுமுகன்மா லோன்றேட
வந்தில்வெளி நின்றாரை யகங்குழைந்து போற்றுவான் ௨௭

ஆராத வன்பாலடி தொழுவா ராருயிர்மேற
சாராது கூற்றுவனைச் சாடுந் திருவுளமோ
வாரார்பூட் கொங்கை மலைபரைசி மணவாளா
சோராமே பொருதிருத்தா ளெனக்கீ யாவென்ற ௨௮

கடம்பொழிபு கால்வாய்க் களிற்றுரிவை மேற்போர்த்து
மிடம்படவா னேர்மெய் யெலும்பணிந்து மெஞ்ஞான
முடைப்படுக்கும் வாலாமை பொழிப்பதறக் காவுந்தமனே
தடம்படுநீர்க் கங்கை சடைமுடிமேற் றரித்தனையே ௨௯

வானோரு மண்ணோரு மகந்தனைத் தாளபணிவார்
தேனொருங் கொண்டைமுடிச் செங்கைவைச் சிறமதித்தா
ஊனோவ வனருள் ளோடளித்துத் தாளதிணைந்தோ
வேணுவன் றிருமுடிமேல் றிப்புவந் திருப்பதுவே ௫0

பூம்பவளச் சடைமுடியும் பொன்னனைய கழற்றுணையு
மாடம்பரிசா றெழுந்து நடம்போர்த்துக் காட்டிடுவாய்
தேமபடுபொற் சமலமலர்த் தேசவிறைநி நிருகெடுமா
ருமபரிவி னண்ணுவதே பரிசுவாடுசப் பதையாதே ௫௧

என்றிவ்வா றேதகடுத்துத்தாங் கிறைஞ்சுஞ் சவுனகன்முன
மன்றுடையா ரெதிரேதானோ மணிச்சிலம்பு கலகலப்பப்
பொன்றுணர்த்தப் பூங்கடுகைமா புத்தகமேத் தென்றுவற
வென்றிவிடைக் கொடியுயர்த்த வேதியா தாண்டவஞ்செய்தார்

அந்தரத்துத் துரிமுழங்க வானந்தத் தாண்டவஞ்செய்
சுந்தரனைக் கைதொழுது தொழுதுபாடினை
சிந்தனையொன் றிலாது சிறிதுபொழு தவசமுற்றான்
பந்தனையோன் றிவொர்நடனம் பரிசோர்பி கண்டுவந்தான் ௫௩

வேண்டுவார் வேண்டுவன விளைத்தளிக்கும் விடையூர்தி
தாண்டவங்கண் டெதிர்நிற்குஞ் சவுனகனுக் குரைசெய்வார்
மாண்டபெருந் தவமுனிவா மகிழ்ந்தபெருந் தருளா
னீண்டமுதன் மறையினைநீ நிருவாகஞ் செய்திடுதி ௫௪

கறையறுமம் மறைப்பகுதிக் கல்வியமா முபநிடத
நிறைபுணர்வும் பெறுதியென நின்மலனா ரருளிச்செய்தார்
மறைமுனியு மெதிரிறைஞ்சி வாழ்த்திவிடை பெற்றேகின்றான்
பிறைமுடியா ரருள்செய்யும் பெரும்பேறு பெற்றுய்ந்தான் ௫௫

ஆங்கவன்றன் மாணாக்க ரேசுவலா யனமுனியு
மீங்குரைத்த முறைவழுவா தெம்பெருமான் பதம்போற்றித்

நீங்கநற்று மணிமன்றுட் டிருநடனங் கைதொழுதா
ணெங்குமறை யவர்க்கெல்லா முத்தமனு யுயர்வுற்றான் ௩௬

பொறிவழியாற் புறம்போகா புந்தியினீ ரிங்குரைக்கு
நெறிவழியான் மணிமன்ற நீர்சென்று வழிபட்டுக்
குறியறியா முழுமுதல்வன் குனிக்குநடங் கும்பிடுமின்
செறிவொழியா விருவினையுந் தெரிசனமாத் திரத்தொழியும் ௩௭.

மலையரையன் றிருமடந்தை வடிவேற்கண் ணானேக்கக்
கொலைகடியு நன்னெறியீர் கூறுதைத்தநார் செயுநடன
மலைகடற்பா ரகந்துறக்க மருங்கசைய புகுந்தூழலு
முலையகற்றி மெய்வீட்டி னுறவைக்கு மொருகணநதே ௩௮

ஈங்கெடுத்து மொழிந்தவெலா மெக்கலையு மெமக்குணர்த்தித்
தீங்ககற்று முதற்குருவாஞ் செய்தவத்து வியாதமுனி
யாங்குரைத்த முறைவழுவா. தறைந்தனமென் றச்சூதன்
பாங்குறுவோர்க் காங்கொன்றும் பகராது வைகினன் ௩௯

தேற்றரிய மறைமுழுதுஞ் செகமிசைநான் கெனவகுத்த
வாற்றலறி வுடைமுனிவ னடியிணைநெஞ் சகத்தழுத்தி
வேற்றுரையொன் றும்புகலான வேண்டிவழுத் தினன்சூதன்
போற்றியிடு முனிவனுமப் பொழுதங்கட் போந்துற்றான் ௪0,

வேறு

மருமலி செழுங்கமல மானுமிரு நோக்கும்
பொருவரிய மேனிமிசை போர்த்தபுலித் தோலுங்
கருவுயி ரளைவக்குமருள காட்சியொடு யாரும
வெருவருநல் லாற்றலுடை யானெனல் விளம்ப ௪௧

கொண்டவொரு கைமமலர் குலாவியப லாசந்
தண்டொடு பொருந்தமெய் தயங்கவணி பூதி

யெண்டிசையும் வைகுமிருள் யாவையுமி ரிப்ப
முண்டமிசை மேவுதிரு முண்டமொளி செய்ய ௪௨

தாங்குதிரு முண்டமது தண்பிறையி னாக
வீங்குநில வாகமெய்ம யிசைப்பொலியும வெண்ணீ
றாங்கெதிர் வணங்குமவ ரங்கைகுவி தோற்றந்
தேங்கமல முன்குவி திறந்தழகு செய்ய ௪௩

ஆலமமு தாக்கியவ ரருள்வி ழைந்து
சாலவணி கண்மணி தபங்குதொடை மெய்யின்
மேலனை கிடந்தழகு மேம்படவி ளைப்ப
மூலமறை யாய்ந்துணர முதுக்குறைவு தோன்ற ௪௪

ஐந்தெனு மெழுத்துட னமைந்தருள்கொ ளிக்குஞ்
சிந்தையொடு தற்பரவு சேடர்புடை சூழச்
சந்தமறை யந்தமுறு சாலபுடைவி யாதன்
வந்தன னெதிர்ந்தவர் வணங்கியெதிர் வாழ்த்த ௪௫

வேறு

கண்டுசூத னாதியாங் கறையகன்ற முனிவர்தாம்
மண்டுமன்பு தலைசிறப்ப வாழ்த்தினார் வணங்கினார்
புண்டரீக மனையதாள்கள புனலினால் விளக்கினார்
கொண்டசித நீருளங் குளிர்ப்புறக் குடித்தனர் ௪௬

வாசமேவு மலர்சொரிந்து மறைவகுத்த முனிவனை
நேசமேவு பூசையாற்றி நெஞ்சுவந்து நின்றனர்
பேசநின்ற வாக்கியங்கள் பெரிதுவந்து கேட்டன
ராசகன்ற சூதனாதி யறவாயாரு மவ்வழி ௪௭

ஓதுசூதன் முதலினோ ருவப்பினோடு சூழ்வுறத்
தீதிர் வியாதனுந் திருந்துதில்லை யூர்புகா

மோதுதெண் டிரைக்கடன் முளைத்தியங்கு ஞாயிறு
காதுசாப ராசியிற் கலந்தியங்கு காலையே ௪௮

செங்கையோ டியைந்துதிங்கள் சேர்நா ளினிற்சிவ
கங்கைதோய்ந்து நியதியாய கடனெலா முடித்தபி
னங்கணைந்த னாளருக் கருமபொனுள்ள நல்கினார்
நுங்குமுண்டி யின்றியன்று நோன்பியற்றி வைகினார் ௪௯

மூமையாய தானம்வைகு முதல்வனாரை மும்முறை
யேலவே வலங்கொடேத்தி யெதிரின்வீழ்ந்த திறைஞ்சினார்
சாலுமா றெழுத்தினாற் றயங்குறும மந்த்ரமனுச்
சீலமேவு மயுதமுக் தினங்கணித்து வைகினார் ௫0

மொழியநின்ற முறைவழாது முற்றியாண்டு சென்றுபோய்க்
கழியுமீற்றின் முனைபுகன்ற கங்கைநீர் படிந்தெழீஇப
பழியகன்ற தூயவேத பாரகர்க்கு நன்பொரு
ளொழிவிலாத வன்பினோ டுவந்தளித்த பின்பரோ ௫௧

மன்றினாடு நித்தனாரை வைகலும் வணங்குவா
ரென்றுமொவ்வொ ராயுதமா யியம்புமா றெழுத்தினாற்
சென்றொராண்டு கழிவுறத் திருந்துமைந் தெழுத்தினாற்
குன்றவில்லி பாதபூசை குறைவுறாது செய்தனர் ௫௨

பூசனைக்கு மகிழுமையர் புனிதமேவு முனிவர்கட்
கோசரப் படப்புகுந்து கோதகன்ற தாண்டவ
நேசமோ டியற்றலோடு நீத்தமா தவத்தரும்
பேசருங் களிப்பினோடு பெரிதுகண்டு நின்றனர் ௫௩

கோடிகோடி கதிரினங் குழுமினென்ற காட்சியி
னாடிநின்ற வையர்மேனி யழகுநோக்கு மறவர்தாம்
வீடினா ரெனப்புலம்பி மெய்தளர்ந்து வீழ்ந்தனர்
கேடிலார்செய் கருணையிற் கிளர்ந்தெழுந்து போற்றினார் ௫௪

மங்குலவானு ளோர்திரண்டு மலரின்மாரி சிந்தினா
ரெங்குமங்கலந் தழைப்ப வியமாங்கு லித்தன
தங்குவா னரமைமாதர் தாங்களிப்பி னாடினா
ரெங்கணாக ரந்தவேலை யிமயவல்லி தனைநேனிடம் ௫௫

மறைபுகன்ற விதிவழாது மலர்நிகர்த்த செங்கையி
லுறையநின்ற காப்புநா ணணிந்துதேவ ராதியோர்
நிறைபுமுள்ள மகிழவின் னிரம்புறும விழாவணி
யிறைவர்கொண்டு விடையிவர்ந் தெழுந்துவீதி யெய்தினார் ௫௬

தில்லையெல்லை வலமுறைசென் றுசூழ்ந்து மீண்டனர்
கலிலெனுந் திரைசசிவ கங்கைவீழ்ந்து மூழ்கினா
ரெல்லையற்ற வுயிர்கள்யாவு மின்பமோடு கைக்கொள
வில்லிடும் பசும்பொனமாரி வேண்டியாங்கு வீசினார் ௫௭

அண்ணலாரொ டவ்வழி யணையமேவு மமரரு
முண்ணிலாவு மோகைவீற வொல்லைவீழ்ந்து மூழ்கினார்
புண்ணியப் பயனபெறூஉப புனிதராகி யேறினார்
தெண்ணிலா விரிசடைச் சிவனையேத்து நெஞ்சினார் ௫௮

தத்தமக் கியன்றவா தனத்தினோடு தானியம்
வத்திரந் திலம்பசு வயங்குபூமி மற்றவு
முத்தமர்க் குவந்தளித்து யும்பராதி யோரெலா
முத்தனார் மகிழ்ந்திட முயன்றுசெய்து போற்றினார் ௫௯

தீர்த்தராகி நின்றவர் திருவுருத் திரத்தினு
லார்த்தியோடு போற்றினா ரமலனு மவ்வழிக்
கூர்த்தபே ரருட்டிறங் குறைவிலாது காட்டினார்
பார்த்துளோர் விழிப்புலப் படாதுபோ யகன்றனர் ௬0

கறங்குநீர்த் திரைசசிவ கங்கையின் சிறப்புட
னறங்குலாவு முக்கணத்த ரருள்கொழிக்கு நாடகம்.

பிறங்குதில்லை மேவிடும பெருமைநாடு மறிவிரேல்
திறங்குலாவு மின்பமுத்தி சேரமேவு வாரகேள் சுசு

முற்றியோது மிக்கதை முயன்று கேட்கு மாக்களுஞ்
சொற்றவாறு கேட்டுளத் துரிசகற்று வோர்களும
பெற்றமூர்ந் துலாவரும பிரானருட் டிறத்தினு
லற்றவேட்கை யாளரா யமலவீடு நண்ணுவார்

வியாசர் முதலியோர்க்குத் திருத்தாண்டவம் காட்டியபடலம்
முற்றிற்று.

ஆகச் செய்யுள் அகக.

ஏழாவது

அருண்முறையு மருட்சிறப்பு முரைத்தபடலம்.

குன்ற வில்லாள ருட்டிறங் கூடிற யாவரையும யாங்கணு
மென்றும புணர்கரு மியல்பின விச னருண முறை போதக
னன்று சனற்கும ரப்பெய ரார்கரு மாமுனி யானவன
மன்றல் கமழுந்திரு பங்கய மலராய ணை விறைவினை க

ஆங்கவ னெறிமொழுந்து போ யச்சுத னை வினவினன்
றேங்கமழ் பங்கய னவ்வழிச செங்கண னங்கவர் தமமொடும்
பாங்கொரு பூவை பயின்றிடு பகவனை நாடி வினவுவா
னேங்கு கயிலை விலங்கலபோ யுமபர் பிரானை வணங்கினன் உ

எங்கணும யாவையு மாகிய விறையவ னீயறி யாதவை
யங்க ணுலகிடை யில்லையென னுரு முருத்திர மாமனுப்
பங்கைய வாய்திறந் தேத்தினர் பரமனு மவ்வழி யோதினர்
பொங்கு புலப்பகை யாவையும போக்கிய மாதவ வாழ்கையீர்

ஆங்கது கேட்டிடு விண்டுவென் றயனொடு கூறினன் அன்னவ
னோங்குசனற் குமரபெய ருத்தம னுக்குரை செய்தனன்
றீங்கறு வேதவி யாசனைச் சோதனுரை செய்தன னம்முனி
பாங்கொடி யானவைப் பெற்றிறற் பராசரன் செய்சொலக் கேட்டனன்

காண்டகு மெய்ப்பொருட் காட்சியிர் கதையறு காதலின் யானுமக்
கீண்டுரை செய்குவன் கேண்மினி னென்று மியற்றுகண மத்தினன்
மாணொடு விழிநதிடு முன்செய வாத கொடுவினை மாசெலா
மாண்டு விழுங்குறு மங்கைநெக் கரும்பெற்ற றாய்மை யகத்தரோ

வேறு

*பனிமதியின் றிருவருளா லுலகநிறை யுயிர்த்துன்பப் பாகு பாடு, தனிவிளங்கு மதன்பினனர் பிராகமுள நனுகுமந்த நயத்தி னாலே, கனிபனைய செந்துவர்வாய் நாமகளார் கொழுநனருள் கலந்து கூட்ட, முனிவகலச் செய்யுங்கருமத் தியாகமது வழிமுறை யான முற்று மன்றே ௬

அன்னதனாற் சாந்திமுத லாயசா தனந்தோன்று மமல வீடு, மன்னியிடும் பேராசை விண்டுவினாற் றோன்றியிடு மாரி யென்னப், பண்ணுமருட் குருபாதப் பேறுவிநா யகனருளாற் பலிக்கும் பின்னை, நன்னயங்கூர் தருயோகஞ் சிவஞானந் தருங் கருவி நண்ணு மாலோ ௭

மலைமகளா ரருளாலே சாங்கியஞா னந்தோன்று மற்றவ் வேலே, புலைவுதந பவபாசம் விடுவிக்குஞ் சிவன்கருணை யுதித்த பின்னே, நிலையகன்ற பிறப்பொழிந்து வீடெய்துஞ் சிவன்றானே நிமல வீடு, மலைவகலத் தருமூர்த்தி மற்றையோர் வெறும்போக மருவச் செய்வோர் ௮

தண்டுளவத் தாமத்தோன் றாமரையோ னிரவியெனச் சாற்று மூவர், றெண்டிரைஞா லத்துயிர்க்குச் சிலபாவந் தீர்த் தொழிக்குஞ் செய்கை யுள்ளோர், பண்டடுத்த பலபிறப்பின்

யப்பண்கண்டோர் நால்வேதப் பகுதிதோறு, மண்டிபல விருத்திதோ
றும விதித்தகரு மச்செய்கை மாற்று மாறே ௯

படிமுறையான் மயக்கொழிந்து பரம்பரனை மெய்வீட்டிற்
பயிலவேட் டோர், மடிவகலப் பூசிப்ப ரெனவேத முழுதுமையா
வகுக்குந் தண்டோர், முடிவறவே யின்பமுத்தி முறைவரு கார
ணத்தின் முதன்மைத் தாகும், படியின்றிசைப் பிரணவந்தெய்
வதங்களுள்ளே விண்டுவெனப் பகர்வர் சான்றோர் ௧௦

ஆதலினான் மெய்வீடு பெறவிரும்பு மவரெல்லா மமரோங்
கார, மேதமறு விண்டுவெனு மிவர்செய்யுங் கருணையினா லெந்த
ஞான்றும், வேதமொழி மந்திரனைப் பூசிக்கும் விருப்புறுவர்
விழைவாற் பூசை, யோதமலி கடற்புவிமே லுஞற்றியதனு வித
ஞான முறுவ ரன்றே ௧௧

அத்துவித மெய்ஞ்ஞான மடைந்தவரே யின்பவடி வாகித்
தோன்றுஞ், சுத்தமுறு பரப்பிரமச் சோதியொடு கலந்திடுவர்
துயர்போய் நீங்கத், தத்துதிரைக் கடலாடை நெடும்புவிமேன்
ஞானமொன்றே தவறு வீடு, சித்தியுறத் தந்தளிக்கு மற்ற
வையம் மெய்ஞ்ஞானஞ் செறிபச சொக்கும ௧௨

ஒன்றுமுருத் திரனருளா லத்துவித மெய்ஞ்ஞான முதிக்
கும் பார்மேற், சென்றொழுகுந் தெய்வவழிச் செலவுமா யோன
ருளாற் சேர மேவு, மன்றல்கமழ மலர்வேதன் றிருவருளா லந்த
ணாள மாட்சி யெய்தும், பொன்றலிலாப் புகழெல்லாம் வெண்
மதியின் றிருவருளாற் புணரு மாதோ ௧௩

செங்கதிரோன் றிருவருள்வை ராக்கியமே வுறச்செய்யுஞ்
சிசுத்தியுள்ளம், பொங்குமரு ளெவ்வையிலாச் சிறப்புதவும் யமன
ருளாற் புணருமவாழ்நாள், கொங்கவிழ்க றபகநாடன் றிருவரு
ளாற் பாக்கியங்கள் கூடுமெய்யிற், றங்குபெரு வலிமையெல்லாம
வாயுசெய நல்லருளாற் சாருமாலோ ௧௪

கயமுகவன் றிருவருளாற் காரியங்க ளெதிர்நின்றிக் கைமேற்
கூடு, நயமலியு மறுமுகவன் றிருவருளாற் சித்தியெலா நன்று
மேவும், புயலனைய கருங்கந்தர்ப் பாரதிதன் றிருவருளாற் பொரு
ந்துமெ வாக்குச், சயமனைத்துந் தூய்மைசெயுந் தண்ணளியா லெவ்
வெவர்க்குஞ் சாருமாதோ க௫

திருமகளார் செயுமருளாற் செல்வமெலா மெய்தும்
தேவ ரெல்லா, மருவுறுமப் போகவிருப் புடையார்க்கப் பய
னெல்லாம வழங்கு மன்றோ, திருமலியு முத்திவிருப் புடையார்க்
கத் தேவரெலாஞ் சித்தசுத்தி, தருநெறியான் மாதேவன் றிரு
வருட்குக் காரணரா தகைமை யோராவார் க௬

திங்களணி சடைமுடியார் திருவருள்கா ரணமாகச் சோதி
யார்க்கு, தங்கியிடு மம்முத்தி தானையா மவனருடான் றரணி
மீது, பொங்குபலபுத்தியொடு முத்திவிளைந் ததுவியிடும் புனித
மூர்த்தி, யங்கணன்செய் திருவருளுந் தொப்பாகச் சொலத்தக்க
தறிகிலோமே க௭

விண்டுபத மவனருளே விரிஞ்சபத மவனருளே விண்
ணோர் நாடு, கண்டுயிருக் குதவுவது மவனருளே வைதிகர்க்குங்
கழறு மற்றை, யெண்டருநண் ணோரெவர்க்கு முத்திசிவன்
றிருவருளா லெய்தா நிற்கும், பண்டைமறை யோரரசர் வணி
கர்சிவன் றிருவருளாற பயில்வர் வீட்டில் க௮

ஏற்றமையுங் குலத்தவர்சங் கரசாதி யாளரொடு மியற்பா
சண்டர், சீற்றமதி யணிந்தபிரான் றிருவருளான் மெய்வீடு
கிடைப்ப ரென்னி, லேற்றமைவை திகர்மறையோர் மகளிரேனு
மிவரெல்லா மெய்து மாலு, சாற்றியிட வேண்டுவதோ தவநெ
றியாற் பவங்கழிந்த சார்பி லோரே க௯

கழுதைநெடுங் கழுத்தலொடு தருவினமுஞ் சிவன்செய்யுங்
கருணை யாலே, வழுவறுமெய் வீடடையு மையமொரு சிறிதே

று மன்கொ ளாதீர், செழுமறையீ ரன்னைவயிற் றுறுஞ்சிசுவு
முத்திபெறுஞ் செகத்தின மீது, பழுதகலப் பிறந்தசிறு குழவி
யுமெய் வீட்டினுறும் பான்மைத தாமால் ௨0

பாலரொடு யௌவனரே விருத்தர்முத லாகிலையோர் பாசங்
கடந்தோ, ரேலமுத்தி பெற்றிடுவர் சிவனருளால் வைதிகர்தா
மெழுவராயாக, ஞாலமிசைக் கழுதையிறு வாயாகு மவையெல்லா
நயக்கு முத்தி, கோலவனு மலைபாக மலையனுமாஞ் சிவன்கரு
ணை கூடு மாற்றால் ௨௧

பிறைமுடியா ரருளாணைப் பெற்றிபிற லெஞ்ஞான்றும்
பிரமன் மாயோ, னிறைமையொடு தோன்றிடுவ ரழிந்திடுவ
ரவனிறைமை யாதுந் தேறார், மறையுமொரு சிறிதேனு மறிய
கில தெட்டுணையு மயங்கு றுதீர், நிறைசிவனா ரருட்பெருமை
மண்ணுலகோ ரறிவரோ நிகழ்த்துங் காலை ௨௨

நல்லாற்றிற் சென்றொழுகு மருமறையீர் சிவன்கருணை
நண்ணு மாற்றாற், றொல்லாற்றிற் குருபாதத் துணைப்பதுமம்
பூசிப்பீர் சூழ்ந்து தேவ, ரெல்லாரும வணங்குதிருத் தில்லை
மன்றி னடமாடு மிறைவி பாகத், தல்லாருங் கறைமிடற்றோன்
றனையென்றும் வழிபடுமி னமையு மாற்றால் ௨௩

தெய்வவழி பாடெல்லாஞ் சிவன்கருணை பெறும்பொருட்
டே, தேருங் காலை, யுய்வுதரு மவன்கருணை யுறும்பொருட்டே
கருமமெலா முஞற்று மாறு, நைவகற்றுந் தெய்வநிலை யவன்கரு
ணை நண்ணுதற்கே ஞால மேலாற், றெய்யவுரைத் தனவெல்லா
மவன்கருணை பெறற்கெனவே தெளிந்துகொண்மின ௨௪

ஆங்கவன்ற னருளின்றித் தெய்வமிலை யாத்திகரு மறையி
னில்லைத், தீங்ககலு மவன்கருணைக் கொப்பாக வேறொன்று
செப்பற் கில்லை, யோங்குமவன றன்னையெதிர் தருவதுமற் றவ

னருளை யுயிர்க்குச் சுத்தி, பாங்கினுறத் தருவதுமற் றவன
ருளே யெனமறைகள் பகருமாதோ ௨௫

அருளோடு புணர்ந்தார்க்கு வைதிகமென் பதுமில்லை யறை
யுங் காலை, யருளோடு புணர்ந்தார்க்குத் தாந்திரிக மதுவுமில்லை
யவனி மீதே, யருளோடு புணர்ந்துளோ னச்சிவனே யாயமர்வ
னருளி னாலே, தெருளோடு புணர்தவத்தி னருட்சிறப்புப் புகல
வின்றுந் தெளியக் கேண்மின் ௨௬

வேறு

பண்டு துர்க்கட னென்றொரு பாவிதான்
மண்ட லத்து வருணக கடையினோ
னெண்ட குலகொலை யாதி யியற்றுவான்
றண்டு றுமெய் வலியிற் றளர்விலான் ௨௭

அந்த ணாளர் பலரை யழித்தன
னந்து மானபல ஞாலத் தழித்தனன்
முந்து கற்று முழுதுந் தொலைத்தனன்
சிந்தை சென்றழித் தீயவன் செல்லுவான் ௨௮

தேடு மக்கள் திருடிக் கவர்ந்தனன்
நாடு மந்தணர் நற்குல மங்கையர்
பாடு நோககலன் பற்றி வலிதினிற்
கூடு வானவர் கோசரட் பட்டுழி ௨௯

வாவி மாசு மருவக் கலக்குவான்
கூவ முற்றுங் குழப்பி மலக்குவான்
றாவி லாத தடாகஞ் சிதைத்தனன்
றூவ தீமை யனைத்து மியற்றினோன் ௩0

ஓது நாலவரு ணத்தி னொழுக்கமும்
வேத மாகிய பிழைபடச் செய்தன

னீதி யாய நிலையொரு நான்குடங்
கேத மாக வியற்றின னேழைமை ௯௧

முன்றயி றந்தவன் முற்றுசெம் பொன்சிறி
தறையு மாயிர மாம்பிறப் பின்முன்பு
பிறைமு டித்த பிரானடி போற்றிடுங்
குறைவில யோகி கொளக்கொடுத் தானரோ ௯௨

அன்ன புண்ணிய மாங்குவந் தெய்தலான
மன்னு மோக மனத்தி னகன்றது
நன்ன யம்படு ஞாயிறு தோன்றுறப்
பன்னு பேரிருள் பாறிய வாறுபோல் ௯௩

மோக மேவ முழுப்பவஞ் செய்துளோ
னாகம் வீழ்வுழி யப்பவப் பேற்றினாற்
சோக முற்றுந் துயர்நச கெய்துமென்
றாக மேவு மறிஞ ருரைப்பரே ௯௪

செய்த பாவஞ் சிதைவதற் கேதுமற்
றெய்து மாறெவ னென்றிங் கறிகிலேன்
கைத வத்தினே னென்று கலங்கினான்
பைதல் கூர்தூர்க் கடனெனும் பண்பிலான் ௯௫

ஆத்தி சத்துறை யாயவை தேறினோன்
மாத்து மிக்க மறையோ னொருமகன்
சீத்தை யோனைத் தெருட்டின னனையவாற்
பாத்து ணர்ந்து பவங்கடி பான்மையே ௯௬

வாரி சூழு மகிதல வைப்பிடைச்
சீரி யன்ற திருப்புலி யூரெனப்
பேரி யம்பு பெரும்ப தியுண்டரோ
வாரி யன்செயு மாங்கரு ணாடகம் ௯௭

இனிய பேரரு ளீசன் பெருங்குணை
நனியு ணர்ந்து நயந்த வுளத்தினர்
முனிவர் பல்லோர் முதன்மை படைத்தனர்
புனித மேனியர் புந்தி மயக்கிலாய் ௩௮

தீம்பு னற்சடைத் தேவன சிறப்பெலா
மேம்ப டத்தெரி வித்தக மேவினோன்
பாம்ப ணைத்துயில் பண்ணவ னிவ்வுல
கோம்பு மேன்மையங் குற்றுவந் தானரோ ௩௯

வெற்ப ளித்த விமலையங் கானனோர்
முற்ப டுஞ்சீர் முழுது முணர்ந்தோர்
கற்ப கத்தருக காவல னிந்திர
னற்ப கற்றவ மவ்வழி யாற்றினான் ௪0

வெங்க யத்துரி மேற்படப் போர்த்தவர்
துங்க நாடித் துணையடி யுட்கொளாப்
பங்க யத்தமர் பண்ணவ னாதியோ
ரங்கண் மேவி யருந்தவ மாற்றினார் ௪௧

மங்க லம்படு வானவர் கின்னரர்
தங்கி யக்கர் முதற்பல சாதியோர்
கங்கை சூடுங் கறைமிடற் றோன்சிறப்
பங்க ணோக்கி யருந்தவ மாற்றினார் ௪௨

யாண்டு வேத னிறைவனைக் கண்டனன்
வேண்டு பேரருண் மேவுறப் பெற்றனன்
றூண்ட வஞ்செயு தற்பர மூர்த்தியை
யாண்டு நீசென் றடுத்து வணங்குதி ௪௩

யாண்டு யாக பதியை யிறைஞ்சினான்
வேண்டு பேரருண் மேவின னிந்திரன்

ஞூண்ட வஞ்செயுஞ் சந்திர மௌலியை
யாண்டு நீசென் றடுத்து வணங்குதி ௪௪

இயக்கர் தம்மோ டரக்க ரிசைவலோர்
மியக்க நீங்கிய சித்தர்விச் சாதரா
மயக்கொ ரீஇயரன மாணருள் பெற்றுழித்
துயக்க நீங்கத் தொழுது வணங்குதி ௪௫

அந்த ஞானிவ் வாறரு ளம்பலத்
தெந்தை யாரரு ளெய்து முறைபொடு
பந்த நீக்கு பரிசு புகன்றனன்
சிந்தை சோத தெருட்டி யகன்றனன் ௪௬

பண்டி யற்றிப் பலித்திடு புண்ணியங்
கொண்டு கூட்டக் குறுகினன் றாககடன்
றொண்டா கைதொழுத் தூமதி சூடிய
வண்டர் நாத னமர்புலி யூரகம ௪௭

மூன்று வார முறையின் வலமவரா
வென்ற வாறெறட டெனுந்தொகை யெய்தற
வான்ற வைநதெழுத் தனபினி லோதிரு
ஞான்ற செஞ்சடை நாதனை யேத்தினன் ௪௮

அவனி மேல்விழுந் தம்பலத் தாடுறுஞ்
சிவனை யன்பிற் றினமும் வணங்கினன்
புவன மேற்படு பொய்கொலை யாதிய
பவமி யற்றிய பழிப்படு தூர்க்கடன் ௪௯

பூதி பெய்யிற் புனைந்து சிவனடி
நீதி யோடு நினைதரு நெஞ்சினோர்
நாத னாரருண் ஞான நெறியினோர்
வேத பாரகர் வேண்டுவ நல்கினன் ௫0

செம்பொ னாதி திருமறை யோர்கொள
நம்பி நல்கினா னன்றி மகிழ்ந்துளா
னென்று வாய்மை யுரையொடு தூய்மையு
மன்ற மேவி மயக்க மகற்றினான் ௫௧

காம மோடு கடிய வெகுளியு
நாம நோய்தரு ஞாய முணர்ந்தனன்
றீமை யாவுஞ் சிதைவுற யாண்டுமுன்
சேம மன்ற மிறைஞ்சினன் வாழ்ந்தனன் ௫௨

கருணை யாலுருக் காட்டுசிற் றம்பலப்
பொருளை யந்தருள பூதத்துந் தூக்கட
னிருள கன்றனன் யாவையும் யாவுமாந்
தெருணை யந்த சிவமுத்தி பெற்றனன் ௫௩

அருணமுறையும அருட்சிறப்பு முரைத்தபடலம் முற்றிற்று.

ஆகசெய்யுள ௮௬௪

எட்டாவது

சிவாலயச் சிறப்புரைத்த படலம்.

மன்னு மாதவ வாழ்க்கை நயந்துளீ
ரின்னி னிச்சிவ னெம்பெரு மானருண்
மன்னு தானம் வகுத்துரைக் கின்றன
னென்ன வோதுமி யற்படு சூதனே ௧

அன்று காரண னம்பிகை பாகனு
மொன்று கைலை யுயர்வரைச் சாரல்வாய்ச்
சென்று கூடினன் செய்தனன் மாதவங்
குன்ற வில்லி குரைகழல் போற்றினான் ௨

நீறு மெய்யி னிறையப் புனைந்தனன்
கீறு புண்டரக் கேழ்கிளர் நெற்றியான்
வீறு கண்மணி மேவிய மாலையான்
கூறு வான்சடை கூடிய சென்னியான் ௩

வற்க லத்தொடு மன்னு மருங்கினான்
சிற்ப ரன்றனைச் சிந்தனை செய்துளான்
மற்பு யத்திரு மாறவ மாற்றினான்
கற்ப காலங் கழிந்தன செல்லவே ௪

பொடிய ணிந்தமெய்ப் பூரணன் மால்செயு
நெடிய மாதவ நீர்மை நினைந்தனன்
வடிநெ டுங்கண் மலைமக டன்னொடு
நெடிய மாதவ னின்றுழி யெய்தினான் ௫

துண்ட மாமதி சூடு முதல்வனைக்
கண்டு மாயவன் கைதலை மேற்படக்
கொண்டு தோத்திரங் கூறி வழுத்தினா
னண்டர் நாத னருட்டிற நாடுவான் ௬

நிலத்தின் வீழ்ந்து நெறியின் வணங்கினான்
வலத்து யர்ந்திடு மாதவ னின்றனன்
புலத்து ரூதுறு புந்தி யொடுக்கினீர்
சொலத்தொ டங்கினர் தூமதி வேணியார் ௭

யாது வான்பய னெய்த விழைந்தனை
சீத ராவுரை செய்யெனச் செப்பினர்
நாத ரன்னது கேட்டு நளினைகோன்
பூதநாதரைப் போற்றிப் புகலுவான் ௮

அத்த நீயிருந் தாரருள் செய்திட
மைத்த வாரிதி சூழ்தரு மாநிலம்

வைத்த தானம் வகுத்துரை செய்யென.
மெத்து மன்பின் வினவினன் விண்டுவே ௯

என்று மாய னியம்புரை கேட்டனர்
வென்றி வெள்விடை மேவிய விள்ளுவார்
கன்றெ றிந்து கனியுகுத் தோய்நமக்
கொன்று தான முறைபயி லெனப்பில ௧௦

வேறு

பொருந்துறு லோகந் தீரப் புவனமேற் பொருந்துந் தான
மருந்தவ மாயோய் கேட்டி யத்தியாத் துமத்து மேனைத்
திருந்திடு மதியூ தத்துஞ் செப்புவ பலவாந் தேரின்
வருந்துறு வீடு வேட்டோர் வழிபடப் படுவ மன்றே ௧௧

சீர்ப்பிர மரந்தி ரத்துட் சேர்சிவத் தானமே யாக
ரார்த்தியிற் போற்ற மெய்வீ டளிப்பத்தா மானவத்துப்
பார்ப்படு சைவத் தானமு பயின்றிடு புத்தி முத்தி
நீர்ப்படு முவரி யாடை நிலத்தவாக் கவிபடர் தாகும ௧௨

இருவிழி செவிமூக் கென்னு மிடங்களு முத்தி தந்தும்
வருமிடஞ் சிறந்த வொரு மலர்க்கரமு பாத மாகத்
தருமிடஞ் சாந்தி யாவுஞ் சாற்றுந் தயங்கு மேனைப்
பொருவின்மங் கலத்த வாகும் பூத்தபுண் டரிகக் கண்ணாய் ௧௩

முன்னிடு மிரண்டு பக்க முதுகொடு கொப்பூழ் நெஞ்ச
மென்னுமத் தானந் தாமு மியற்படு மூலா தாரம்
மன்னுபூ ரகத்தி னோடு பகர்ந்த கதமவி சுத்தி
யுன்னிடு மவையுஞ் சித்தி யுற்றவாக் குதவு மன்றே ௧௪

திருமலி வாரணாசி திருமலை யெனுமி ரண்டு
மருவுவ தலையின் மேலால் வளர்பிறை பொருந்து தற்கண்
பொருவரு கேதா ரந்தான் பொருந்திடும் புணருமூக்கும்
புருவமுங் கூடுஞ் சந்தி பொலிந்திடும் வாரணாசி ௧௫

புருவமு மூக்கு மென்னப் புகன்றிடு மிரண்டுங் கூட
வருமிடஞ் சந்தி யென்ன மறைப்படு சாபா லந்தான்
பெருகல மெடுத்துக் கூறும் பெற்றிமை யறிதி மாயோய்
வருகுருக் கேத்தி ரந்தான் வளர்குச தான மேவும் கசு

வளம்படு மிதய கஞ்சம் வான்பிர யாகை மன்னுங்
களம்படு கறையா ராடல் கண்டிடு சிதம்ப ரந்தான்
றளம்படு மிதய நாப்பட் சார்தரு மாதா ரத்தி
லுளம்படு மாரூர் மேவு மூலகம் யாவை யும்புரப் போய் கஎ

சந்தமா மறையி னந்தஞ் சார்ந்தசாந் தோக்கி யந்தான்
சிந்தைசேர் தகர கஞ்சஞ் சேர்ந்திடு மீண்டு ரைக்கப்
புந்திசேர் பிரம மாய புரமெனப் புகலு மம்மா
கந்தமார் துளவத் தாமக் கார்முகி லுருவ மாலே கஅ

மறைப்பிர ணவக்கூ றாக வருவிந்து நாதஞ் சத்தி
முறைப்படு பீசத் தான மொழிமயி ருகிரே யாதி
யிறைப்படு மெமக்குத் தான மெண்ணில யாவ ருக்குங்
கறைப்படு பாவம் போக்கிக் கதியளித் தளிக்குங் கண்டாய் ககூ

அத்தியாத் துமமே போல வதிபூத மதுவும் யார்க்குஞ்
சித்தியு முத்திப் பேறுஞ் சேரநன் குதவா நிற்கும்
வித்தகத் தானந் தாமு மிகப்பல விண்ணோர் போற்று
முத்தமக் கயிலை யோங்க லோதுமேன் கயிலை யோங்கல் உ0

மண்ணுளோ ருயிர்போங் காலை வான்கதி யுதவிக் காக்கும்
புண்ணிய வாரணாசி புகழ்படு சோம நாதந்
திண்ணிய மதிற்கே தாரந் திருமலை சேர்ந்தோர் பாவ
மண்ணிவீ டளிது நல்கு மத்தியார்ச் சுனமா மூதூர் உக

குயிற்குல மிரங்குஞ் சோலைக் குடந்தைபூந் துருத்தி யாரூ
ரயிற்படு விழியா ராடு மகன்புன லானைக் காவே

மயிற்குலந் துயிலு மாட மாமறைக் கானம் வான
மெயிற்குலங் கிழிக்குஞ் சீர்சா லியற்றமி ழால வாயே உஉ

சுந்தர மலியி ராமேச் சுரமுநந் தான மாகும்
புந்திசேர் புண்ட ரீக புரமிவற் றுயர்ந்த தாகும்
வெந்தழ லென்னத் தூய்மை மேவிய விமல வைப்பா
மந்தமின் ஞான யோக ரளப்பிலா வழிபட் டுய்ந்தோர் உங

புத்தியு முத்தி தானும் புணர்ப்பது புராண மாகி
நித்தமா நிலைமைத் தென்று நின்றொடு யானு மேனை
மத்தவா ரணத்தோன் கஞ்ச மலரவன் மாமு கத்தோ
னைத்திறத் தவரு மெய்தி யிருந்துள மகிழ்வ தவ்வூர் உச

முன்னிய சுராட்டென் றோது முதல்வன திதய கஞ்ச
மன்னுமந் நகரம் வேத மனுமுத லவற்று ளென்றுந்
தன்னியல் பறிந்து சாற்றுந் தகைமைய தன்று கண்டா
யென்னருள் பெற்றோ ராங்க ணெய்திடப் பெறுவர் மாதோ

பெருகுறு மழகெ லாமப் பெருநகர் மருவி வைகு
மருவுநற் குணமெ லாமவ் வளநகர் வளரா நிற்கு
மொருமையா னந்த வெள்ள முறுவதற் கேது வாகுந்
திருமலி யனலி கோடி திரண்டெனத் திகழ்வ தவ்வூர் உரு

பண்டைநல் வினையின் பேற்றாற் பணிபவர் மோகம் போக்கி
யண்டர்யா வருக்கு மேலா மருங்கதி யுய்க்கு மாற்றாற்
றண்டுழாய் மௌலி யோய்முன் சமைத்தன மெமக்கவ் வூர்மேற்
கொண்டுள மகிழ்ச்சி யேனைக் கோநக ரங்கட் கில்லை உஎ

என்றுநா மற்றவ் வூரு ளியற்றிடு தாண்ட வந்தான்
றுன்றுமெய்த் திருவி னோடு சுகோதயஞ் செய்த லாலே
யொன்றுமெய் யன்ப ருள்ளத் தோவற விளங்கா நிற்குங்
குன்றமன் றெடுத்து மாரிக் குலந்தடைப் படுத்த கோவே உஅ

அம்பிகை யுடனே ரம்ப னாடுமு கனைத்தி யாரேனோர்
நம்பெரு நடனங் கண்டு நாடொறு மாங்கண வாழ்வா
ரும்பரார் பரவு சீயு மூர்த்திவந் தவனும மேவந்து
நம்புறு நளினி யோடு நாமக டானு மென்றும உ௯

ஆடுறு நாம்ளிக்கு மருட்கண் ணேற்கண்டு வப்பார்
நீடுறு மிலக்க ணத்தா னெறிபபடு தருக்கத தன்னன்
மூடுறு மறிவி னேரு மொழிதிரு நடனங் காண்பார்
நாடுறு மன்பி லோரு நன்றுகண் டுறுவ ரன்றே ௩0

சொற்படு நடனங் கண்டு துறக்கமும் புகுவர் மண்ணேனோர்
சிற்பர முத்தி தானுஞ் சிதம்பர நடனங் காணா
கற்பன கல்வி யாலே காண்பரோ கதியை நாடி
யற்பக லவர்செய் நன்று மல்லவை யாகு மாலோ ௩௧

திருமலி சிதம்ப ரத்துச் செயுநடங் காணு றோர்தார்
மருவிய பிறப்பும் யாதும் வான்பய னுறுதா மண்மே
லொருவரு மயக்க மேவி யுழிதரு கிறப ரன்னோர்
வருமொழி பலபு கன்றெனை மற்றிது சாத மாமால் ௩௨

அழிவரு மூர்த்தி வேட்டோ ரமருநல் வினைசெய் துள்ளோர்
கழிமகிழ் சிறப்பப் போற்றிக் கடும்பவம் யாவும் போக்கி
யொழிவரு மின்ப மெய்வீ டுறுவ தற்கே துவாகும்
விழிபல பெற்றோர் காணும் விசித்திர முடைத்தம் மூதூர் ௩௩

என்றுரை வழங்கி யீச னெல்லையொன் றில்லோன் யாண்டு
நின்றுளோ னந்த ஞானநி லையமா முதல்வ னின்றான்
பன்றியாய் நெடும்பார் கீண்ட மாதவன் வனிதை பாக
னென்றுமெய் யழகு நோக்கி யுவகையுண் மலிய நின்றான் ௩௪

வென்றிவெள் விடையு யர்த்த வேதியர் விளம்பு கின்றா
ரென்றுநா மமர்ந்து வைகு மிடமெவை யென்னக் கேட்டாய்

நன்றவை யெடுத்து ரைத்தாம் ஞாலமேல் வீடு கூட
நின்றிடு முபாயந் தானு நிகழ்த்துது நெஞ்சங் கோடி , ௩௫

நலமலி பேரா னந்த நாடக நாத விற்றும்
புலமலி புலியூ ரென்னப் புகன்றிடுங் கோயி லுண்டே
வலவலி யவ்வூர் மேவி னைசனு நம்மைக் கண்டு
பலமலி யைந்தெ ழுத்தும் பதநிலை யோடு மெண்ணி ௩௬

பன்னிரண் டுறழச்சி கொண்ட பதிற்றுப்பத் தைந்தெ ழுத்து
முன்னுறக் கணிப்பின் முத்தி முற்றுமென் றுரைப்பக் கேட்டுப்
பொன்னணி மருமப் புத்தேள் பூரணன் பொற்றாள் போற்றித்
தன்னம ரிருக்கை புக்குத் தாழ்வறு வாழ்வின் மிக்கான் ௩௭

முன்னிய பாக்கியத் தான் முனிவர்நீர் முக்க ணெங்கோன்
மன்னிய தான மெல்லா மாமுத்தி மருவு மாற்று
லின்னண முரைப்பக் கேட்டீ ரிவற்றினு ளொன்றின் மேவித்
துன்னிய வவிச்சை நீங்கத் தொழுதுவீ டெளிது சேர்மின் ௩௮

அம்பிகை பாகன் வைகு மாருட் டான மென்னு
மிம்பரி னுமக்குச் சோறு மின்பவீ டெளிதி னெய்த
நம்புறு முபாய முன்பு நவின்றில நவிறு மின்னே
வெம்பவக் கொடுமை போக்கும் விரதமா தவத்து மிக்கீர் ௩௯

ஐம்பொறி முழுத டக்கு மாற்றல்சா லருளின் செல்வன்
வெம்பவ வேர றுக்கும் விரதயோ கத்து மேலோன்
செம்பொரு டெரிந்து கொண்ட சிந்தையோன் றிருந்து வானோர்
தம்பத நரகென் றெண்ணுஞ் சைமினி யெனுந்த வத்தோன் ௪௰

சீதநாண் மலரோ னேத்துஞ் செய்தவச் சிறப்பின் மிக்கோன்
வேதவே தாந்த மெல்லாம் விசாரித்த மிகுமே தாவி
யேதமில் பராச ரன்ற னிருந்தவப் பேறா மைந்தன்
பாதபங் கயங்கள் போற்றிப் பத்தியாற் பகரா நின்றான் ௪௧

மம்மகன் றேறுதிப் பன்னீ ராயிர மமைய வெண்ணி
னிம்மையே சீவன் முத்தி யெளிதுனை கூடும் யார்க்கும் சஅ

ஐயமொன் றில்லை யென்று வலைகடற் றுயின்மா யோற்குப்
பையரா முடிக்கி டந்த பாருளோ ருய்யு மாற்றுற்
றெய்வநா யகனிவ் வாறு தெரித்துரை செய்தான் கண்டீர்
பொய்கொலை களவு போக்கிப் புரிதவப் புநிதி யீரே சகூ

அன்றுமா மாயன் கேட்ப வகிலநா யகன்செவ் வாயாற்
பொன்றியும் பிறந்தும பாவம் புரியுமண் ணவர்பொ ருட்டா
னன்றுரை செய்த வெல்லா நாமும கெடுத்துச் சொற்று
மன்றுளார் கருணை யெய்தி வாழுமின் மாத வத்தீர் ருO

சிவாலயச் சிறப்புரைத்தபடலம் முற்றிற்று.

ஆ. செய்யுள் கூகச

ஒன்பதாவது

கழுவாயுரைக்குமுகத்தாற் சிவாலயச்சிறப்பும் சிவகங்கைச் சிறப்பு முரைத்தபடலம

மண்ணவர் பாவங் கழுவுறு மாறு வகுக்கின்றுந்
திண்ணிய பத்திமை நெஞ்சொடு கேண்மின் றிருமிக்கீர்
தண்ணிய வெண்மதி சூடிய முக்கணர் தானங்க
ளெண்ணில தீவினை யாவு மகற்ற விசைத்தனவே க

திருமலை யென்னப் புலியிசை யொருநகர் சீர்த்திமிகும்
வருமுறை யவ்வழி வைகு பிரானறனை மாதேவி
யுருவொடு பூசை யுஞற்றினர் வெம்பவ மொருவிப்போய்க்
கருவிடை வீழ்கில ரழிவறு மெய்க்கதி காண்பரே உ

விரவு துருத்தி யெனப்பெயர் பெற்றிடு வியனகரம்
மரவ மணிக்கட லவணி மிசைத்தொழு மன்பினருக்

குரவு படப்பொலி பாதக முற்று மொழித்தென்றும்
பரவுமெய் வீட்டிடை வைத்தருள் செய்திடு பான்மைத்தே ௩

சீரவி முத்த மெனப்படு மாநகர் சேர்ந்தென்றும்
வாரமொ டேத்துநர் பாதகம் யாவையு மாய்விக்குங்
கோரவி னைப்படு பலபிற வித்துயர் கூடாமே
நேரறு முத்தியி னென்று மிருந்திடு நீர்மைத்தே ௪

குரைகடல் சூழ்தரு மாநில வைப்பிற் கோகன்னம்
பரையொடு சிவனைப் பத்தியொ டேத்தும் பண்பினரை
விரைகமழ் கமலத் தயன்முத லோர்க்கு மேலாகக்
கரையறு மின்பக் கதியி னிருத்துங் காட்சித்தே ௫

புரையறு புலியூ ரென்றுரை செய்யும் பொன்னகருட்
கரையறு பேரொளி யம்பல மேவிக கருணையிறை
னுரைவிடை யூர்தி யருட்டிரு நாடக நவில்கிற்கு
முறைசெறி யன்பர் தமக்கருள் செய்யு முவப்பாலே ௬

சீரரு ளம்பல வாண னுவந்து செயுநடத்துப்
பேரரு மன்பொடு கண்டு பணிந்தவர் பிறவியெலாஞ்
சேர வொழிந்தனர் சிவகதி மேவச் சேர்கிற்பா
ராரணி முடியவ ரத்தி யுரித்தவ ரருளாலே ௭

பொன்னம் பலமிசை நாடக நவிலும் பூரணனைப்
பன்னுந் தினமொரு பத்துங் கண்டு பணிந்தோர்தா
மன்னு பெரும்பவ பந்த மடிந்து வரம்பில்லா
வின்ன லகன்றநல் வீட்டினி லெய்தி யிருப்பாரே ௮

ஆடக மன்றிடை நாடக மாடு மப்பன்றன்
பீடுடை மேனியை யாங்கொரு மூர்த்தம் பிழையாமே

நாடுறு முள்ளத் தவரழி யாக்கதி நண்ணிடுவா
ரேடவிழ பொன்மல ரிதழி யணிந்தவ ரின்னருளால் ௯

சாற்று மறைகளெனு மாக மனைத்துந் தண்மதியக்
கீற்றணி யீசனை திருவுரு வெண்ணுங் கிழமையினோர்
மாற்றரும வெம்பவம யாவையு நிலதிசை மாய்விப்பார்
கூற்றுவ னுவி குடித்தவர் தாண்மலர் கூடுவரே ௧0

சங்க மெறிந்து மறிந்தலை வாரித் தரைமீதே
திங்க ளணிந்தவர் வைகுறு நகர்பல சேர்தருமா
லங்கவை தமமுளு மிபபுலி யூர்நக ராமெனனத
தங்கிய மாடசிமை பெற்றுள தானந தாமிலையே ௧௧

அவ்வழி யீநதவை யாவுதி செய்தவை யரியவெபம
மிவ்வள வென்பதொர் சஙகையி லாகருண மேறிடுமாற்
றிவ்விய மேவிடு மநநக ரதனுட் சிவகஙகை
யெவ்வ மகற்றிடு தீர்த்த தடாக மெனபபொலியும் ௧௨

அத்திரு வாவித் தென்றிசை நாயக னுடல்செயு
நித்தமு மத்தட மூழகுபு சிரசனை நேர்தொழுது
பத்தியி னோடெட் டுடனு யிபயாம பரிசாலே
வைத்திடு மோரா றக்கர மோதும மாண்புள்ளோன் ௧௩

எத்திற மாகிய பாவமு நீஙகுவ னிதுவனறிச
சுததமு மும்பரு வத்தொடு கதிர்நா டொருகாலைத்
தததுதி ரைசசிவ கங்கையின் மூழகுஞ சால்புள்ளோன்
மெததிய மாபா தகமெனும் யாவையும விண்டொழியும் ௧௪

செங்கதிர் மேடஞ் சேர்தரு பருவஞ் செங்கையொடு
தங்கிடு நாளி னித்தட மூழகுந தகைமையுளோன்
பொஙகிய பாவம் யாவையு நீஙகிப போயொழியுங
கஙகையொ டப்புலி தஙகுறு முடியவர் கருணையினால் ௧௫

வெங்கதிர் விடையொடு மேவுறு பருவம் விடையுதயந்
தங்கிடு வேளையி னித்தட மூழ்கித் தக்கோருக்
கங்க ணுவப்பொடு செம்பொ னளித்திடு மன்பாளர்க்
கங்க ண்கன்றொழி யாப்பா தகமெனு மனையிலவே ௧௬

கலைகட லெழுதரு கதிர்மிது னத்துறு காலத்து
நிலைவரு பேரிருண் மேவிய பக்க நிகழ்தவெட்டாப்
புனைதரு திதியி னித்தட முழகும் புனிதத்தோ
ரனைவரு நீஙகுவர் வெம்பவ மெனறிடு மத்திறமே ௧௭

சீர்மலி கடகத் தலர்கதிர் ஞாயிறு சேர்காலைப்
பார்வரு வல்லிருண் மேவிய பக்கப் பதிணொன்றி
னீர்வரு நித்தட மூழ்குறு பத்திமை நெஞ்சத்தோன்
சேர்தரு வெம்பவ மானவை யாவுஞ் சிதைதருமே ௧௮

சிங்கத் தலர்கதிர் சேர்தரு பூரணை சேர்காலைப்
பங்கத் தெழுதரு செந்தா மரையிற் பயிலன்னந்
திங்கட் கதிரொடு சேர்வ தெனத்திகழ் சிவகங்கை
யங்கட் படிபவர் பாதகம் யாவையு மகல்வாரே ௧௯

துலையிடை யிரவி கலந்துறு பூசஞ் சுடுகதிர்நா
ளலையெறி யிச்சிவ கங்கை படிந்தவ ரம்புவிமேற்
கொலைமுத லாகிய பாதகம் யாவுங் குறுகாமே
சிலையென மேரு வளைத்தவர் சேவடி சேர்வாரே ௨0

மாக மதிப்படு மகநா ளித்தட மலிநீருள்
ளாக நனைத்தவ ரந்தண ராதிய ரகமகிழப்
போக மிகுத்த பொருட்குவை நல்கினர் புவிமீதே
சோக மொழித்தா ரூர்கயி லைப்பதி துன்னுவரே ௨௧

பங்குனி யுத்தர நாள்வயி னிந்தப் படுகர்புகுந்
தங்க நனைத்தனர் நாட்கட னாற்றி யருமபொருள்க

டிங்க ளணிந்தவ ரன்பர் கொளத்தரு செம்மையினோர்
பங்க மொழித்தா ருர்கயி லைப்பதி பற்றுவரே உஉ

மூன்றுல கத்தினு மித்தல மொப்புறு மொழிதருசீர்
சான்ற தலம்பிறி தில்லை யிதன்கட் சார்ந்துள்ளோர்
மான்ற வினைத்தொகை யாவு மடிதருடன் மடியுங்காற்
கான்ற சுடர்க்கயி லாய நெடும்பதி காண்பாரே உங

இப்பதி யாதனை ருட்கொளு மன்ன மிசைந்துதவு
மப்பெரு வாழ்க்கையர் பாதகம் யாவு மறுப்பாரே
யொப்பறு நன்மனை மாமட நீர்நிலை யோகியர்தங்
கைப்பட நல்கின ரம்பல வாணன் கழலடைவார் உச

கூறிடு மிப்பதி யாருயிர் செய்யுங் கொடுவினைநோய்
மாறிடு மாற்றுள வாரிதி யாகிய மதிமுடியோ
னூறிடு மிதழித் தாமத் தோளவன் ஞாலத்தே
யாறிடு மைம்புல வேட்கையி னீரன் றமைவித்தான் உரு

பற்பல கற்பந் தோறு மியற்றப் பட்டமண்டு
முற்றிய நல்வினை யாலித் திருநகர் முன்னிடுவா
ரற்புறு புத்தியு முத்தியு மெய்துவ ரகிலத்தோர்
பற்றிய பாவம யாவையு நீங்குவர் பழிபொழிவார் உசு

எய்தரு நன்றிகள் யாவையு மெய்திடு மிந்நகரம்
பொய்தவிர் நன்னெறி போநதிடு தூய்மைப் புந்தியினீர்
செய்திடு புண்ணிய மாட்சிமை யுடையோர் சேர்ந்தென்று
முய்தி தலைப்பட வேத்தத் தருவது வப்பாலே உஎ

கழுவாயுரைக்கு முகத்தாற் சிவாலயச்சிறப்பும் சிவகங்கைச்
சிறப்பு முரைத்தபடலம் முற்றிற்று.

ஆ செய்யுள் கூசாக

பத்தாவது

அரிட்டபேதழு மவற்றிற்குக் கழுவாயுங் கூறுமுகத்தாற் புலியூர்ச் சிறப்புரைத்த படலம்

வாரிதி சூழ்தரு மண்ணவர் தமதுயிர் மடிவைக
றேரிய வென்று முணர்த்து மரிட்டரு சிலபுகல்வாம்
பாரிய நற்றொகை யாற்றி னெடுத்துப் பகர்கின்றுங
கூரிய நுண்மதி யீர்விரி யாமுறை கூறுகிலேம் ௧

வேறு

மாமதி நீழ றன்னை வளர்தரு துருவன் றன்னைச்
சேமமா பதத்தை விண்ணிற் சேருந் ததியைக் காணிற்
றாமவ ராண்டொன் றின்மேற் சலதிசூழ் தரையின் வாழா
ரேமமா மறலி வைகு மிருக்கையி னேகு வாரே ௨

சீர்படு மொளியி ழந்த செங்கதிர்ச் செல்வன் றன்னைப்
பார்படு மொளிப டைக்கும் பாவகன் றன்னைக் காணி
னேர்படு மதியன் றொன்றி னிந்தமண் ணுலக நீங்கி
நேர்படு மறலி வைகு நீணகர் நண்ணு வாரே ௩

பொன்வெள்ளி மலநீ ராகப் பொலிதரு வாந்தி செய்யி
னன்புலிக் கனவி னேனு நனவினி லேனுங் காணின்
மன்பதை யுலகி னுள்ளோர் மதியொரு பத்து வாழ்வா
ரென்பது சாதம் பின்ன ரியமனூ ரெய்தி வாழ்வார் ௪

பேசிடு பூதமொடு பிரேதபை சாசக் கூட்ட
மாசில் கந்தருவர் வைகு மாநக ரெனுமி வற்றைத்
தேசமை நிறஞ்சி வப்பச் சேர்கன வதனிற் காணி
னாசமொன் பதுமா தத்து நவில்வர்நா லுணர்ந்த நல்லோர் ௫

வேறு

தன்னுடல் பருப்பக் காணினல் லதுதான் சாலவுஞ் சிறுத்
திடக் காணின், மன்னுதன் னுடலங் கருகுறக் காணின் மாச
மோ ரெட்டுயிர் வாழுவான், பின்னரே யெனினு முன்னரே
யெனினும் பெருகுநீர்க் கூவத்துட் குழியுட், பொன்னவிர்
தனது காலறாஉ வீழிற பொருநதுரை னெழுமதி புவிமேல் ௬

கருங்கொடி கழுகு கபோதமே யெனினுங் கரிக்குரீஇ முத
லவை யெனினு, நெருங்குதன் றலைபின் வைகுறக் காணி னில
த்துவாழ் வோராறு மாத, மருங்குறு புழுதி மழைக்கருங் கொ
டியை மாற்றமாந் தனதுடை னிழலை, வருங்கனாக் கண்டோ னன்
றுடனைந்தாய் வகுத்திடுந் திங்களின் மடிவன் ௭

கருமுகி லின்றித் தென்றிசை யதனிற் கனருசி மேவுறக்
காணிற், பெருகுநீர்க் கிடக்கும் வானவில் விளக்கம் பிறங்குகீழ்த்
திசையிடைப் பெரிது, மருவுறக் காணின் மூன்றுதிங் களினு
மன்னுறு திங்களொன் றினிலு, மிருநில வாழ்வு துறந்துயி
ரகல்வா னியமனூ ரெய்தி வாழ்நதிருப்பான் ௮

உற்றநீ ரகத்து மாடியி னகத்து மோங்குதன் னிழறலை
யின்றி, மற்றையர் விழியின் வழிப்பட வரினு மருவுதன் விழிப்
பட வரினும், பெற்றதன் வாழ்நா ளொருதிங்க ளளவே பேசிடு
வசம்பொடு பிணமவேவம், பொற்றுமை யாகத் தன்னுடனுறி
னுலகவாழ் வவர்க்கொரு பக்கம் ௯

அகத்துறு மிதயந் துடித்திடப் புறத்தி னமர்தலை புகை
யுடனுகி, மிகத்தளர் வெய்தி நடுங்கிடக் காணின் மேவுநாட்
பத்தென விதிப்பார், சகதநிடை மருமத் தானத்தின் வாயு
தலைதடு மாறிடத் தண்ணீ, ருகப்பொடு தீண்ட மகிழ்ச்சியின்
றுயி னொழிந்தது வாழ்வென வுரைப்பார் ௧௦

எண்கொடு குரங்கு பூண்டதே ரேறி யமன்றிசை யெய்
திடக் காணின், மண்களி கூரும் வாழவகன் றதுவே வனைதுகில்

கரியன பசிய, பெண்கடாம் புனைந்து சூழ்ந்திடத தென்பாற் பெரிதுசென் றிடப்புனை யாடை, கணபடக் கறுப்ப நக்கனை சமணன் கலந்துறக் காணினன் றிறப்பான் ௧௧

பந்தியாம் விண்மீன பகலிடைக் காணிற் படுசிசி வானவிற் பார்க்கி, னந்தியின் மதியங் கருதுறக் காணி னலரிமண் டலஞு சிவப் பாகின், முநதுமண் டலங்க ளிரண்டினுந் துவார முற் றுறி னுதிரமா மாலை, வந்துறக காணி னன்றுயிர் விட்டு மறலி யூர் மேவிவாழ் வுறுவான் ௧௨

செந்தழற் சுடலைச் சாம்பரின் மூழ்குஞ் சென்னியோர் தம்மையுஞ் செலுநீர், நநதுமாற் றினையும் வாளராக் களையு நன்கணு வதனிடை நண்ணி, னநதின்மற் றவன்வாழ வசுலு மெய் கறுத்தோ ரஞ்சிகை யில்லவ ரடிப்ப, முநதுகல் லெறியக் கனவிடைக் கண்டோன் முடிவனென் றுரைப்பர்மூ தறிஞர்

ஊனுநீ ரற்று நாவொடு தந்த முரைப்படு மிருதய மூன் றும், வேறுபட் டிடுமே லவனுடல் வீழும வெருவொடு வீரவு மெய் நடுக்க, மாறுபா டின்றி யடிக்கடி விரவின் மன்னிய சோகமா மோக, மீறுமே லென்று மன்னவ னுயிர்மேல் வெய் யகூற் றெய்திடும விரைநதே ௧௪

நலம்படு தலையி னுறுமயிர் விரித்து நயப்பொடு பாடியு நகைத்து, வலம்படு தெனுது திசையிற்றுன் செலல வருகனுக் கண்டுளோன் மரிககு, நிலமபடு தெனுது திசையிடை வெள் ளை நிறப்பரி கரும்பரி யிமிருங், குலம்பாடு மிருவெண் ணிறப் பரி கண்டோன் கூற்றுவன் வாழநகர் குறுகும ௧௫

ஒட்டகங் கழுதை பூண்டதே ரேறி யுறுகனுவி னிடைநம னுரைக், கிட்டினே னவ்வூர் கெழுமுவ துண்மை கிளர்செவி செவிடெனக் கிடப்ப; முட்டறு விழிகள் குருடெனப் பொலிய முன்னுசொப் பனத்திடை முற்றின், விட்டுட லகன்று கூற்றுவ னகர மேவுவ னன்னவன் விரைநதே ௧௬

சேரமே னோக்கும் பார்வையும் பிறரைச் செறுவது போல்
விழி சிவப்பு, மாரவெப் பகனற மேனியு முடையோ னவனி
மே லாருயி ரகல்வான், சீரமர் கொப்பூழ் நெஞ்சகங் குழியிற்
றிகழும்த திரம்வெப்பஞ் சேரிற், பாரமர் வாழ்க்கை துறந்
துயி ரகன்று பற்றுவன் கூற்றனூர்ப் பற்றே கள

பார்தநிடு கனவி னனவினிற் சிவன் பற்றுவின் டகலினும்
படியிற், சீர்த்திடு தழலிற் கனவிடை வீழச் செறியினுந் தென்
றிசைச் சேர்வோ, ரார்த்தியி னுரைக்கு மொழிகள் கேட்டி
டினு மமர்தரு சுக்கிலப் பெருக்கம, போர்த்திடு மிரண மிரத்
தமே கருமை பொருநதிடு கருங்குடங் காணின் கஅ

ஆங்கவ னுயிர்தா னகல்வது திண்ண மரிட்டமற் றிவை
யிவை யணுகிற் றீஙகுவந் தணுகு மென்றிடு நெஞ்சத் திடத்
தொடு காசியிற் சென்று, தேஙகுநீர்க் கங்கைத் திருத்தநீர் படிந்
து சீர்விசு வேசுரன் றிருத்தாள், பாங்கொடு பணிநது, பத்தி
மை வழாது பரவுமைந் தெழுத்தொடு பயிலக் கக

அல்லது சோம நாதமாங் செய்தி யலைகடற் சோமதீர்த்
தத்துச, செல்லநீரா தகலப் படிநதநத நகரிற் சேர்தரு சோம
நாதப்பேர், வல்லிருட் கண்டன் றிருவடிபரவி மறைப்படு மெழு
த்தைந்தும் பரவிச, சொல்லரு மரிட்டத் தொகைகொலோ வுயிர்
மேற் றுன்னிய துரிசெலாந் தொலைக்க உ0

திருமலைக் கேனு மல்லிகார்ச் சுனமாச் செப்புமூர்க் காயி
னுஞ் சென்று, பொருவரு நீறு புனைந்தெழுத் தைந்து போற்
றுக காளத்திப் பொற்றை, மருவியாங் கொழுகுஞ் செம்
பொன்மா முகலி வாரியுட் படிநதெக்கை மலர்த்தாள், வெருவுத
னீங்கத் தொழுதெழுத் தைந்து விடாதென்றும் பயின்றவண்
மேவ உக

சொற்பக மலையு ளமர்சத்தி நாதன் றுணையடிக் கமலங்க டொழுது, விற்படு நீறு மெய்க்கெலா மணிந்து விளங்குக வெழுத்தைந் தும் விடாதே, பொற்புறு விருத்த சயிலத்துண் மேவிப் பொலிமணி முத்தமாம் பொன்னி, யற்புட னாடி யமலனைப் பரவி யமர்ந்தெழுத் தைந்துமாங் கறைக உஉ

திருமலி பிரமேச் சுரப்பதி சென்று திரையெறி மகோததி படிந்து, பொருவறு பிரம நாதனைப் பணிந்து பொற்புட னெழுத்தைந்தும் புகல்க, மருமலர்ப் பொழில்சூ ழாலவாய் மேவி வள்ளலுக் கரும்பொருள் வழங்கி, யிருமையு முதவு மெழுத் தைந்து மெண்ணி யிராப்பகல் விடாதவ னிருக்க. உங

பொருந்துவன் மீசு புரத்தினை யணுகிப் பொலிதரு கீர குண்டத்தாடித், திருந்துநீ ராடிச் சிவனடி தொழுது செப்புக வெழுத்தைந் தைச் சிறப்பால், வருந்துய ரகற்று மாணிக்கா வெய்தி வளர்பொன்னி படிந்தங்கண் மருவி, யிருந்தவெம் பெருமான் பதமலர் பரவி யெழுத்தைந்தும் புகன்றவ னிருக்க உச

வளமலி சத்தேபச் சுரநகர் மருவி வளர்பொன்னி படிந்தவண் வைகு, முளமலி கருணைப் பிரானபத மிறைஞ்சி யோதுக வெழுத்தைந்து முவப்பா, விளமதி முடித்தார் தெக்கிணா வருத்த மெய்துபு காவிரி யாற்றுத், தளமலி நன்னீர் படிந்தெழுத் தைந்துந் தணப்பறச் சாற்றுக தரித்தே உரு

குலமலி குடந்தைக் கோயிலை யடைந்து குளிர்புனற் காவிரிக் குடைந்து, நலமலி யமலன் பதமலர் தொழுது நவிற்றுக வெழுத் தைந்து நயப்பால், வலமலி புகழ்சே ரிடைமரு தெய்தி மன்னுகா விரியெனும வாரி, நிலமலி பாவங் கெடக்குடைந் தாடி நிகழ்த்துக வெழுத்தைந்து நினைந்தே உசு

அக்கினீச் சுரமே கோடிகா விண்ணோ ரடைதரு துருத்தி வெண்காடு, தொக்கசீர்ப் பிரம புரமெனு மிவற்றுட் டுவன்றிய

திருத்தநீர் தோய்ந்து, தக்கவரா ருகத் தானிய தனங்கள் சாற்று
மெண் முதலன தந்து, நக்கனேந் கொன்றை யணிந்தவர்ப்
பணிந்து நவிற்றுக வெழுத்தைந்து நயப்பால் உஎ

விண்ணகம் பரவுந் திருப்புலி யூரை விரைவொடும் விழை
வொடு மேவித், தண்ணறுங் கமல மலர்சிவ கங்கைத் தடம்ப
டிந் தருந்தவர் தமக்குப், புண்ணியம் பெருகப் பொற்குவை யுத
விப் பொன்னினம் பலத்திடைப் போந்து, பண்ணவ ரிறைஞ்சு
மம்பல வாணன் பதம்பணிந் தெழுத்தைந்தும் பகர்க உஅ

இப்புலி யூர்சென் றியாவனே யெனினும் பிறந்தவ னின்பவீ
டெய்துஞ், செப்புமிவ் வுரையி லையமொன் றில்லைச் செய்தமா
பாதகத் திறங்க, ளொப்பறு மிந்த வூர்புக வொழியு முற்றகாட்
சியின்முத்தி யுறுமே, யெப்புவ னமுமகை தொழுநடங் கண்டா
ரினைக்கிடு பவபந்த மிறுமால உகூ

மன்னுமிந் நகரக் காட்சிமாத் திரையால் வரம்பிலோர் முத்
தராய் மகிழ்ந்தார், பொன்னினம் பலத்து ணடங் கண்டோர்
பொருந்திடு பேறினிப் புகன்றெ, னன்னாவான கங்கை சூழ்வி
முத்த நகரினு மிந்திரு நகர, முன்னுறு சிறப்பு மேவிடு மைய
முற்றறி தியாம்புகன் மொழிகவே ௩0

இத்திரு நகரு ளெம்பிரா னடன மியற்றிடு மென்றுமஃ
தியற்று, னத்திரு நகருட் டிருநடக் காட்சி யருமுத்தி யிவ்வழி
யாக்குஞ், செத்தவ ரன்றே யத்திரு நகருட் சிவகதி சேர்ந்திடு
திறத்தோ, ரெத்திறத் தானு மிந்நகர் சிறப்பா மென்பது தெ
ளிகமற் றிதனால் ௩க

இமயமீன் றெடுத்த மடக்கொடி வித்தை யெவற்றொடு மி
யைந்திடு மிவ்வே, சமயமூ வாறும் வளர்த்தவ ளருளாற் றங்குவ
தன்மையாற் றானு, முமையவள் வித்தைக் குறைவிட மாஞ
ஞுவந்தென் று முறைதலி னானு, மறைதரு மிந்தத் திருப்புலி
யூர்தா னருஞ்சிறப் பாகிடு மன்றே ௩உ

கூறுமித் திறத்தால் யாவையும் விடுத்துக் குற்றங்கள் யா
வையுங் குன்றத், தேறுமெய் யன்பா லிந்திருப் புலியூர் சென்
றினு சதாசிவன் றிருத்தாள், பேறுற வணங்கி யவனருட்
டிறத்தாற் பெறத்தகு முத்தியும பெறுமின், மாறுற மயக்கும்
பொறிவழிப் புகாது மடங்கிய மனத்துமா தவத்தீர் ருரு

அரிட்டபேதமு மவற்றிற்குக் கழுவாயுங் கூறுமுகத்தாற் புலி
யூர்ச்சிறப்புரைத்த படலம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் கூஎச

பதினோராவது

விண்டுமுதலிய தேவர் புலியூரடைந்தமை யுரைத்தபடலம்

தேவரோ டசுரர் சித்தர்கின் னரரே திருந்திடு முனிவர
ரியக்கர், பாவரு மேன்மைக் கந்தரு வரதோர் பலபுவ னத்து
யிர்ப் பகுதி, யாவரும் புத்தி முத்தியெய் திடுவா னிறைஞ்சிடுந்
தனிமுத லெவனோ, நாவலர் பரவுந திருமறையாளர் நவில்கென
முனிவரர் நவின்றார் க

பேரறி வுடையீர் வினவிய வாறு பெரிதுநன் றுருயிர்ப்
பெருககங, தாரணி மீதிவ வுரையினு லின்பந் தழைத்திடப் பெ
றுமது சாற்றல, சீரணி பாச பதமெனு மவிரதஞ் சேரிரு பிறப்
பினோர் தெளிவர், பூரண மாகு முறையினு லென்னப் பொலி
தரு மாமறை புகலும் உ

அன்பினு லதுநீர் கேண்மினீங் கென்னு வருமறைச் சூத
னுங் கறைய, முனபொரு ஞான்று மாயையான் மயங்கி முராரி
தான் பரமென முன்னி, யென்பொரு முதல்வர் யாவரு மிலரா
லியானுல கியற்றிடு மிறைவன், மன்பதை யுலக மென்வயின
விளங்கு மற்றியா ரென்னினும் வலியார் ரு

என்னுடைச் சத்தி! விலாசமே யுலக மியங்குவ நிற்பன யாவு, மென்னுடைக் கழலே வணங்குறத் தகுமென் றெண்ணின னின்னுயி ரெவைக்கு, முன்னுறு முயிரா மம்பிகை பாகன் முழுமுத லென்றுள முன்னான், வன்னவா ரிசத்தோ னாதி வானவர்க்கு மற்றிவை வகுத்தனன மாயோன் ௪

பொருளெலாம் விளக்கும் வியஞ்சக மாகிப் பொலிதரு வடிவுடைப் புனித, னருணய மறந்தா ரவன்பெரு மாயை யாலுள மயங்கின னமரர், தெருளுயா றில்லார் நானமுதன் முதலேனர் சித்தமா யூரந்தனா திகைத்தார், குருவருணந்தி யவ்வழி யடைந்து கூறுவா னிவ்வினை குறித்த ௫

மூன்று கண்ணுடை ஞானநா யகனே முழுதுலகாக்கிடு முதல்வ, னென்றவா றுயிர்தஞ் செயற்கெலாஞ் சான்று யிருந்திடு மானந்த வியல்போன், சான்றவர் பரவு மதகளி முதலே சகலர்க்கு ஞ் சகலமுந் தருவோன், மான்றனை துளவத் தாரினோ யன்றோன் வகுத்ததன் வாழ்வென மதியாய் ௬

கருணையங் கடலா மப்பெரு முதல்வன் கண்டவிவ் வுலகெலா மறைதீர், பொருளவன படைசகுங் காக்குமற் றழிக்கும் பூரண வாழ்வினும் புலாகரு, தெருணையம் படாது மயங்கினை யாயோய் சிவனடி பூசனை செய்தி, யிருளகன் றெழுதி யெனநனி யியம்பி யேகினா னாதியெம மிறையே ௭

ஆங்கதற் பின்னர் விசுவா திகளு யமருருக் திரன்றனை யமரர், தேங்கபழ துளவத் தாரவன முதலோ செந்திரு முதலவர் செறிந்து, பாங்குறப் பூசை புரிந்தன ரதுப பண்ணவ னம்பிகை பாகன், யாங்கணு முறைபு மிறையவ னவர்த மெதிரெழுந் தருளினனெற்றில ௮

தேம்படு துளவத் தாரவன் முதலாந் தேவர்தங் குழுவெலாஞ் சிவனைப், பாம்பணி மேனிய பகவனைக் கண்டு பன்முறை

பணிந்துகை குவித்துக், காம்பன நெடுந்தோட் சவுரியங் காளன்
கறைமிடற் றிறையவன் கழல்க, டாம்புகழ நெடுந்தத் தோத
திர முரைத்தார் தயங்குமெய்ப் பத்தியிற் றவிரார் ௯

கேட்டுள மகிழ்ந்து முக்கணெம பெருமான் கெடலரு முவ
கையுட் கிளர, நாட்டியங் காட்டி யமரருக் கருளி நளினைகோன்
முதலவர் நயப்பப், பாட்டளி முரலும் பொதும்பர்சூழ் புலி
யூர்ப்படர்ந்தன னவ்வழிப் பலரும், வேட்டனர் காண விருந்த
வாக் காடல் விளங்குறக் காட்டினன் விமலன ௰

வேறு

புத்தி யாயினு முத்தியே யாயினும் பொருந்துஞ்
சித்த மற்றுமக் குண்டெனிற் சிவகடிச சேவை
சுத்த மாகிய வுளத்தொடு செய்மெனச் சூத
னத்த வத்தினோர் தேறுமா றுயங்கெடுத் துரைத்தான் ௧௧

சொற்ற சூதனை முனிவரர் யாவருந் தொழுதார்
பெற்ற மூர்ந்திடு முக்கணன் யாவர்க்கும் பிரானே
மற்ற வனபதப் பூசையே யிருமையும் வழங்கு
முற்று மாமெனத் துணிந்தனர் பெருந்தவ முதல்வர் ௧௨

அந்த மாமுனி கணத்தர்மா ணாக்கரு மவர்க்கு
வந்த மைந்த மாணாக்கரு மிப்பெரு வாய்மை
சிந்தை யையமுந் திரிபுமற் றுணர்ந்தனர் தெளிந்தார்
எந்த வாற்றினுஞ் சிவபிரா னிறையவ னெனவே ௧௩

விண்டு முதலிய தேவர் புலியூரடைந்தமை யுரைத்தபடலம்
முற்றிற்று.

ஆக செய்யுள் ௲௮௭

பன்னிரண்டாவது

தேவர்கள் திருத்தாண்டவக் காட்சி உரைத்தபடலம்.

யாங்கும் யாவையு மாய்ப்பல படவிரிந் திருந்து
மோங்கு மற்றவற் றேடுதோய் வின்றினி னுலக
மாங்கி யற்றியுந் தாங்கியு மழித்திடு மமலன்
பூங்க முற்றுணை போற்றுது மவிடுறு பொருட்டே க

முன்னை நாளுமை யின்றிடு மம்பிகை முதல்வன்
பொன்னை டுங்கழல் போற்றிநின் றிறைஞ்சியெம் பொருட்டாற்
சென்னி யாறணி வோய்பவம் போவதெத் திறமோ
பன்னு வாயென வினவினள் பகவனும் பகர்வான் உ

அல்லல் வல்வினைக் கோட்படு மாருயி ரனைத்தா
மெல்லை யில்லதோர் வீட்டின்ப மெய்துமா றீச
னல்ல ருட்டிறத் துமையவள் கேட்புற நவிலவான்
சொல்ல ருமபொருள் வேதத்தின முறைமெலாந் தொகுத்தே ங

கங்கை சூழ்தரு மவிமுத்த மெனும்பெயர் கழறத்
தங்கு றுமபதி பவமெலாம் வீழ்வுறச் சாய்க்கு
மங்கி றந்திடு மெவ்வுயிர்க் காயினு மருளாற்
பொங்கு தாரகப் பிரமநாஞ் செவியிடைப் புகல்வேம் ச

மற்று மாங்கொரு திருப்பதி கடனில வரைப்பில்
வற்று றுநெடும் பவககடல் குடிததிடு மாதே
பொற்ற நாமமுந் திருப்புலி யூரெனப் புகல்வா
ரற்றை நாண்மனத் தானினைந் தமைந்தன மதுவே ரு

மன்னு மற்றைய பதிதொறும் வதியினு மடவா
யன்ன வான்பதி தன்வயி னுசைநெஞ் சுறுமே
யென்னை நாடொறும் வசஞ்செயு மாட்சிமைத் தென்று
ளன்னி லத்திடை யெப்பதி யொப்பதங் நகர்க்கே சு

கண்ட மாத்திரத் தெவ்வுயிர்க் காயினுங் கறைதீர்த்
தண்டர் போற்றிடும் பதவியு முத்தியு மளிக்கும்
விண்டு வேமுதற் றேவரும் யாவரும் வேண்டி
மண்டு மன்பினிற் றொழுவதத் திருப்பதி மடவாய் ௭

ஆண்டு யாஞ்செயு மானந்த தாண்டவ மதுதான்
காண்ட ருமபொருட் டிந்திரை நாயகன் காதல்
பூண்டி சண்டெனு மாண்டவ னருந்தவம் புரிந்தான்
றாண்டு வெஞ்சர நிகர்தரு வாள்விழித் தோகாய் ௮

ஆயி ரந்திரு நோக்குடை யமரருக் கரசன்
மாயி ருங்கடல் சூழ்நிலத் தப்பதி வதிந்து
மேய வாண்டுமே னருந்தவஞ் செய்தனன் விழைவாற்
றாய வானந்த தாண்டவங் காண்பது துணிந்தே ௯

அம்பு யத்தம ருமறை யாளனன் றடைந்து
நம்பு றுந்திரு நாடகங் கண்டிடு நசையா
லிம்ப ராண்டொன்று சென்றிடத் தவமுயன் றிருந்தான்
கொம்ப ராமென வழகுறு சிற்றிடைக் கோதாய் ௰

வானம் போற்றிடு வசுக்களோ ரெண்மரு மண்மே
லீனந் தீர்திருத் தாண்டவங் காணுமா றெண்ணி
யூனந் தீர்தவம பலபக லுஞற்றியாங் குற்றார்
நானஞ் சேர்தரு கருமுகில் பொருகுழ னங்காய் ௧௧

இருள்க டிந்திடு கதிரவன் றொகையிற்பன் னிருவ
ரருள்பொ ழிந்திடு திருநடங் காணவுள் ளமர்வார்
மருள்க டிந்திடு தவஞ்செய்து பலபகல் வதிந்தார்
சுருள்க ருங்குழல் வாணுதற் றுடியிடைத் தோகாய் ௧௨

எண்ணி டைப்படா விராக்கத ரியக்கரோ டியாழோர்
மண்மி சைப்பொலி தாண்டவங் காண்பது மதித்து

நண்ணு நற்றவம் பலபகன் முயன்றவ ணயந்தார்
பண்ணி டைப்படு பசுந்துயி னிகர்மொழிப் பாவாய் ௧௩

கற்பு மேம்படு சத்திய வதிதருங் காதற்
பொற்பு மேம்படு மகன்பல பகற்றம் புரிந்தா
னற்பு மேம்படு நாடகங் காணுமா றகமுகந்தான்
வெற்பு மேம்படு கொங்கையா யப்பதி மேவி ௧௪

கற்ப சூத்திர நெறிப்படு பற்பலர் காண்பா
னற்ப கற்றவ மாற்றின ரப்பதி யமர்ந்தார்
வெற்ப விதத்திடு மடநலாய் தாண்டவம் விருப்பி
யற்பு நீங்குறு மனத்தினர் பற்பல ராங்கே ௧௫

தரும நூலவழி செல்லுநர் தாண்டவந் தரிசித்
தொருமை வீடுறு கருத்தினு ளுத்தலை யுற்று
மருமை மாதவ மாற்றினர் பல்பக லெய்தி
கருமை யுண்டணி குழையிழுத் தெழுதரு கண்ணாய் ௧௬

கண்ணு வன்மதற் புகன்றிடு மருமுனிக் கணத்தோர்
நண்ணு மங்கபி லாதியர் பற்பலர் நணுகி
யெண்ணு றும்பல பகற்றவ மாற்றின ரிருந்தார்
விண்ணு நாடருந் தாண்டவங் கண்டிடும் விழைவால் ௧௭

அரிய வாக்குமுன் னாகிய தேவிய ரடைந்து
தெரிவ ருந்திரு நாடகங் கண்டிடு திறத்தாற்
கரிகு ழைத்தவேற் கண்ணினாய் பற்பல காலம்
பெரிய மாதவ மாற்றின ரவ்வழிப் பேற்றால் ௧௮

வேங்கைக் காலனும் பதஞ்சலி முனிவனும் விடையு
மோங்கு சிம்புளுந் திருநடக் காட்சியாங் குறுவான்
மாங்கு யிற்குரன் மடநல்லாய் தவஞ்செய்து வதிவார்
யாங்கு மப்பதி யொத்திடு திருப்பதி யிலையே ௧௯

அந்த வான்பதி தனிலெமை யன்பொடு மணுகிப்
பந்த நீங்குற நாடொறுங் கண்டனர் பணிவோர்க்
கெந்த வான்பய னயினு மதியொன் றினெய்துஞ்
சிந்து ரந்திகழ் நுதலினு யிஃததன் சிறப்பே உ0

சாற்று மப்பெரும் பதியில்வாழ்ந் தெந்தமைச் சார்ந்து
போற்று கின்றவர் மதியொன் றினருங்கதி புகுவார்
வேறு வாசகம புகன்றிவண் புகழவிதன் மின்னே
கூற்ற னார்புகார் நடபதங் குறுகுவர் கோதாய் உக

அப்பெ ருப்பதி யையமேற் றொருமதி யருந்தி
யெப்பெ ரும்பவஞ் செய்தவ ராயினு மிருந்தோர்
செப்ப ரும்புகழச் செலவரா யிம்மையிற் சிறப்பா
ரொப்ப ருங்கதி மறுமையிற் பவநதொலைந் துறுவார் உஉ

நிறைம லர்ப்பொழில் சூழ்தரு மப்பதி நேர்ந்து
மறையு ணாநிதிடு மநதணர்க் கரும்பொருள் வழங்கிற்
குறைவில செலவரா யிம்மையில வாழ்குவர் கோதாய்
பிறைய ணிந்திடு நம்பத மறுமையிற் பெறுவார் உங

பிரம நிட்டையோர்க் கவ்வழிப் பெறுமுறைப் பிச்சை
தரவு வந்தவ ரொருகுடை நீழலிற் றங்க
வுரவு நீர்க்கட லுலகெலாம் புரந்திடு முவராய்
விரவு வார்சிவ கதிபுகு வாருடல் விழினே உச

அறத்து றந்திடு பிரமநிட் டையர்தொழு மாற்றுற்
பெறத்த குமபெரு மடமவ ணுதவிய பெரியோ
னுறத் தகுமபல செலவமு மிம்மையி னுறுவா
னிறத்த னுக்கைவிட் டின்பவீ டறநினி லெய்தும் உரு

மேவு மத்திருப் பதியிடை மங்கல விழவு
பாவ நீங்குற வொருமுறை கண்டிடும படிசேர்

தேவர் யாவரு மணுகரும் பரகதி சேர்வார்
காவி மாமலர் கடிதருங் கயல்பொரு கண்ணாப் ௨௬

மாக மாமதி மகத்தினும் விடுவத்து மற்றும்
வாக மார்ந்திடு மயனங்க ளிரண்டினும் வளையா
வேக வில்லிடை யாதிரை நாளினு நிசையுஞ்
சோக நீங்குறப் பருவத்து மிருட்பக்கத் தொடர்பால் ௨௭

சாரு மட்டமித் திதியினும் வியதிபா தத்து
நேரு மோரிரு கிரகண காலத்து நீவாழ்
சீரு லாவிய கோயின்முன் சிவகங்கைத் தீர்த்தம்
பாரு ளோர்படிந் தரும்பொருள் வழங்குபு பலர்க்கும் ௨௮

மன்று ளாடுறு நம்மைவந் தன்பொடு வணங்கிற்
கன்று தீவினை யகன்றிடும பாதமுங கழியு
மென்று மிப்பதி யொத்திடுந திருப்பதி யிலலைத்
தூன்று தீவினை யாவையு மொழிபபது தோகாய் ௨௯

இன்ன வாற்றினான் மற்றைய பதியெலா மிகந்து
மன்னு மிப்பதி வணங்குக வெனவுரை வகுத்துச்
சென்னி யாறணிஞ ரானந்த தாண்டவஞ் செயதார்
கன்னி மாதுமை தாளமொற் றினடிருக் கையால ௩0

ஆடு மத்திரு முதல்வனை யமலையை யகத்து
நாடு மாற்றினா னினைப்பவர் சிவகதி நயப்பார்
கூடு மம்பல வாணனைக் கண்டுளங் குளிர்வோர்
வீடு மேவுவ ரையமொன் றிலையிது மெய்ம்மை ௩௧

பொருந்து சேய்மையின் மேவினு மத்திருப் புலியூர்
வருநதி யாயினு மண்ணுளோர் செலத்தகு மரபாற்
றிருநது மன்றினு ளானந்த நாடகந் தெரிசித்
தருந்து யர்க்கடல் கடப்பர்நாற் பயனுமங் கடைவார் ௩௨

திருவின் மேம்படு மப்புலி யூர்தனிற் சிவன்றா
ளொருவு றாதராப் பகன்மகிழ்ந் தாடலுள் ளூவக்கு
மருவ நின்றிடு முதுகிரி வைகிடு மன்றிற்
கருவ கன்றிடு வீடுறு முயிர்க்கெலாங் காணின் ௧௩

நாடு செம்பொனம் பலத்திடை நாடக நவிற்றி
வீடு தந்திடு மவனுரு வுளத்திடை விரவ
நீடு மன்பினிற் போற்றிடு மன்பரை நெருங்கிக்
கூடு துனபெலா மகன்றிடச் சிவனருள் கொழிக்கும் ௧௪

தேவர்கள் திருத்தாண்டவக் காட்சியுரைத்தபடலம் முற்றிற்று

ஆ செய்யுள் ௧௦௨௧

பதின்மூன்றாவது

காளிக் கருள்செய்த படலம்

விரியும் பிரம மேன்மையு, மெரியுங் கனலி னிடைப்படப்
புரியு மாவுதி பொற்பொடு, சொரியு மொன்றிற் றுகளொரீஇ ௧

மறமே செய்த மன்னவ, னறமே தருவி டணுகுறுந்
திறமே செய்திடு செகன, னுறவாம வேள்வி யுயர்ச்சியும் ௨

மீதவ யானுஞ் சென்றலக், காவல் வேந்து கமலமேன்
மேவு தநதை வியனுல, காவ லோடு மணைவுறா ௩

கொன்றை வேய்ந்த குழகனார், நன்று வைகு நல்லுல
கொன்றி யின்ப முற்றபி, னன்று நற்சிவ மாயதும் ௪

இன்ன யாவு மெனக்குநீ, சொன்ன வாறு துணிந்தன
னன்ன வூர்தி யயனெனப், பன்னு மேன்மை படைத்துளாய் ௫

போற்று கல்வியின் பொற்பினுந், தேற்று கேள்வி சிறந்தத்
யாற்றல் சேர்தவத் தந்தணு, மாற்றி யாது வழங்குவேன் ௬

இன்னு நற்கதை யேற்குமா, றுன்னி டைப்பெற வுன்னினேன்
பன்னு பேரருட் பண்பினாய், மன்னு மென்னுண் மகிழ்வுறும் ௭

வேறு

பொன்னார் மாட நெடுவீதிப் புலியூ ரகத்துப் புகுந்தன்று,
கொன்னார் காளி செய்தபிழை குறிக்கின் யாதோ கூத்தனார்க்
கென்றோ காளி பிழைப்பதனுக் கேது வடா னியற்றியதென்
பின்னை யீசன் மகிழ்வெய்தப் பிரானங் களிக்குமா பேறெதுவோ

இன்னயாவு மொழிந்தருள்வா யென்று சூத னிணைமலர்த்தாள், மன்னு மனபிற் பணிந்திட்டான் மயக்கும பொறியின் வழிச்செலலா, நன்னர் வாழ்க்கைச் சௌனகன்ற னயந்து சூத னவிலகின்றான், சென்னி மதிய முடித்தபிரான் றிருத்தாண்டவத்தின் சிறப்பெல்லாம் ௯

செழுந்தா மரையின் மலரேறிச் செங்கா லன்ன மடைகிடக்கும், கொழுந்தார் திரைநீர்ப் பணைப்புலியூர் குறுகி முனிவர் குழாம்பலவு, மருந்தா நெஞ்சத் தவாவினரா யணியம பலத்து ளமரரெலாந், தொழுந்தாண் மலரோன் றனைநினைந்து தூய தவத்தின் றுறைநின்றார் க0

செய்யுந் தவத்தான் மனமகிழ்ந்து சிவன்ற னங்குச் சென்றடைந்து, பொய்யில் கருணைத் தாண்டவந்தான் புரியு மாறு புந்திசெய்தான், வைய நடுங்குங் கொடுங்காளி வாய்கருஞ் சிவசத்தியுளொன்றாந், தூய்ய நிலையாள் சிவனமாயைத் தொடர்பாலகந்தை தோயவுற்றாள் கக

மன்னு மயனுந் திருமாலு மறைபுந் தேட மறைந்தருள்வார்
முன்னே நிற்ப வெதிர்கண்டு மோகத் தாற்றன வுளமயங்கித்

தன்ன தாற்ற லறியாது தானுஞ் சிலசெய் தருமென்ன
வின்ன வுமெம்பிரான் கேட்ப வேழை யெதிரே யிசைக்கின்றாள்

செம்பொற் பாத மலர்பரவுந் திருமா முனிவர் சேவிப்ப,
வும்பர்க் கரசே தாண்டவநீ புரிந்த மாறு தானிதனையே, வம்பு
யனேகம் பிரதநியங்க நவிற்று முபாங்க நயங்கெழும, விம்பர்த்
திருத்தாண் டவஞ்செய்வா னெண்ணி யானு மிசைந்துள்ளேன்

திருவார் கமல மலர்முகத்துத் தெரிவை மாதர் தம்மோடு,
மொருவார் நல்லோ ரியைந்துநட முஞற்று வாரென் றுரைக்கு
னால், குருமா மதிய முடிக்கணிந்தோய் கூத்தென் னோடுங் குறித்
தியற்றாய், வெருவா நிற்பி னொழிதியென விளம்பி நின்றாள்
விறற்காளி ௧௪

என்று காளி யின்னவகை யெடுத்துக் கூறு மொழிகேட்டுக்
கொன்றை யணிந்த முடிக்கூத்தர் குறித்திவ் வாறு கூறுவார்
நன்று மடவாய் நீயுள்ள நயந்த வாறே நவிற்றுவாம்,
வென்றி தோல்வி கண்டுரைப்பார் விரத முனிவ ரிவராக ௧௫

அறுகால் வண்டு பாட முறுக் கவிழுங் கமல மலர்க்கிழவ,
னுறுமா முறையிற் சிறுதாள மொற்றுந தொழின்மைத் தலை
நிற்க, மறுவார் திருவின மார்பினேன் வளவார்ப் படக மியம்பி
டுக், பெறுமா வீணை மலைமடந்தை பெட்பா லேந்தி மூரன்றிடுக

செய்ய கதிரும் வெண்மதியுஞ் சீர்வேங் குழல்கைக் கொடு
குமிககத், தெய்ய நந்தி மத்தளங்கை தேர்ந்து முழக்குந் திறஞ்
செய்க, வைய மகிழ்தும் புருவோடு வாய்ப்ப வருநா ரதாகிதம்
பைய விசைக்க பிறரேனைப் பலவாத் தியமும் பயிற்றிடுக ௧௬

சீரா வர்த்த முதலாகச் செப்பும் பரத முறைப்பேதங்,
காரார் களத்தோன் பலபலவாக் கண்டு புரிந்தான் றிருநடனஞ்
சூரார் காளி மனமயங்கத் தூய முனிவர் தமக்கெதிரே
பேரா வேறு முறையெடுத்துப் பிறரு மயங்கப் புரிந்தான் ௧௭

ஒருகா லெடுத்துப் பாதலத்தி னூன்றி யொருகால் விண்கி ழிப்பத் திருவார் புயங்கள் திசைவீசிச் செய்ய கதிரும் வெண் மதியு முருவார் சடையி னிடைக்கிடப்ப வுவந்து நோக்கு வார்ம னத்துப, பெருகா வியப்பு மீக்கொள்ளப் பெருமான் றிருத்தாண் டவஞ்செய்தான் ௨௧

ஐந்து புலத்து நெறிப்படா தடங்கு முள்ளத்து முனிவரர்முன்
சந்த மறையீ றறியாத தலைவர் செம்பொற் சபைநடுவே
சிந்தை மகிழ்ந்து திருக்கூத்துச் செய்திவ் வாறு முடித்ததற்பி
னொந்துட் கலங்கி யெதிர்நிற்கு நுடங்கு மிடைக்காளிக்குரைப்பான்

என்றோ வுண்டு நாடகத்தா னியற்று மதுதா னெமக்கியம் பாய், குன்றேர் முலையாய் நாமியற்று கூத்து நன்றோ குறித்து ரையாய், கன்று வுளத்தா யெனவெம்மான் கழறக் கேட்ட கரு ங்காளி, நின்றாள் கவிழ்ந்து நிலநோக்கி நெஞ்ச நாணு நிலையினாள்

காலி னகத்து நகநுதியாற் கண்டோர் நாண நிலங்கிளைத்துச்
சீல மிகந்த கொடுங்காளி திகைத்து நிற்குந் திறநோக்கி
யால மணிந்த மிடற்றிறைவர்க் கந்தோ தோற்று நாணினாய்,
சீலமிழந்தாய் மானம்போய்ச் செய்தாய் பிழையுந் தெரிபிழையாய்

தக்கோர் முன்பு செருக்கேறித் தன்னைப் புகழிற் றன்கெடுவான்
ஒக்கா நின்ற தழனெடுங்கட் கருநா கத்தின மணிவாயு,
னெக்காலத்துங் கைவையா ரிரங்குந் திரைநீர்க் கடற்புவியோர்
மைக்கா ரனைய மேனியாய் வாளா செய்தாய் பெருந்தவறு ௨௫

சுத்த மலியுஞ் சிவஞானத் தொடர்பி லாதோன் றுகளகன்ற
முத்தி பெறுவ தெவ்வாறோ மோகத் தானீ முக்கணுடை
யத்தன் றனக்குப் பிழைசெய்தா யையமிலலை யாகவனைச்
சித்த மகிழ விரைந்துநீ செய்யக் கடவாய் திருநிழையாய்

அந்தி மதிய முடித்தபிரா னகில மீன்ற வம்மையொடு
வந்த பேத முனக்கில்லா மாண்பு மனத்து மதித்தன்றே

யிந்த வரையும் பொறுத்துள்ளா னின்றே லீசன் பொறுப்பனோ
வந்தோ மோக மாயைவலி யார்க்கு மகற்றற் கரிதன்றே உரு

எங்கு மானோன் றிருவடிக்கீ ழெய்தித் தாழ்ந்து பணிந்திரப்பாய்
நங்கை மடமை யாலீது நவிற்றி னையா னெனக்கருதுஞ்
சங்கை சிறிது மிதற்கில்லை தலைவ ரடியார் பிழைபொறுத்த
லங்க ணுலகி னியற்கையே யமல னலகு முனக்கபயம் உசு

ஈசற் பிழைக்கி னிவ்வுலக மெவ்வா றுளதா மேழையாய்
யீசன் றனக்குச் செய்தபிழை யீசன் றுணை யிகப்பிக்கு
மாசங் கொருவாச் சேற்றினிடை வந்த நீரே வளர்சேற்று
மாசங் கொருவச செய்தொழிக்கு மாறறி யாதோ மாற்றுவதே

கரிய மேனிக் காளிக்குக் கறைதீர் முனிவ ராயிரவ
ருரிய முறையா லிவ்வண்ண முயர்ந்த கழுவா யுரைத்திட்டார்
தெரியு மெழுத்தைந் தெடுத்தோதித் தியான மிரவு பகற்செய்யு
மரிய காட்சி யுடைத்தவத் தந்தப் பதிவாழ்ந் திடுமறிஞர் உஅ

முனிவ ருரைத்த மொழிகேட்டு மூவா முதல்வி காளியுள
நனிவா டுற்று மிகவருந்தி நாதா யானசெய் பிழையனைத்து
முனியா தின்று பொறுத்தருளி முழுத்த கருணை புரிகுதியென்
றனைய விறைவன் பாதமிசை யன்பி னெடும்வீழ்ந் திறைஞ்சினளே

தன்றாள் விழுந்த கருங்காளி சாற்று மொழியைக் கேட்டருளிக்
குன்றாக் கருணைக் கடலனையான் குணங்கள் கடந்த பெருமானும்
பொன்றா வலிமை குறைந்துமிகப் புந்தி யொடுங்கிப் பொலிவழிந்து
நின்றா யஞ்ச லெனக்கூறி நிமலன் பின்னு முரைத்திடுவான்

பேதை நிலைமை பெரிதுடையாய் பிழைத்த வாறு பொறுத்தோமே
மேது மச்ச முளங்கொளலே லென்று முள்ள மகிழ்ந்திருத்திச [ம்
சீதப் புனற்கா விரிவடபாற் றிருவார் பிரம புரமென்ன
மேதக்கார் சொற்றிடுந் தானம் விண்ணோர் பரவ மேவிடுமால்

மெய்ம்மைப் பிழைத்தோர் பலராங்க ணெய்திப் பூசை யியற்றினோர்
வெய்ம்மைப்பவங்கள் பலநீங்க மேன்மை யடைந்தார் மெல்லியலாய்
செம்மை மனத்தோ டொருநீயுஞ் சென்றங் கணுகித் திருவாய்ப்ப
ளொம்மை முலையா ளெமதுகுறி குறித்துத் திருத்தி வழிபடுதி [க்

தூய தீர்த்த நிலையிட்டுத் தோகை யனையா யான்மார்த்த
நேய மலியப் புரிந்திடுதி நிமிரும பிரமப் பேரிலிங்க
மாய முறையாற் பூசித்தி யாயி னடைதி யருந்தூய்மை
தீய பவமு மகன்றொழியுஞ் சித்த மயங்கே லெனச்செப்பி ௩௩

கொடிய பாவம் பலவுள்ளுங் குன்ற வில்லி பதப்பிழைத்தல்
படியிற் பெரிதா மனனதுவும பாற்றி யிந்தத் திருநகர
மடியின் முதநி வழங்குமெனின மறறியாது வகுத்துரைக்கேன்
நெடிய மதிற்சூழ் காளிபுர நிகழ்த்த லாகா நீர்மைத்தே ௩௪

தேவன் றனக்கு மேற்றிசையிற் றிருந்த முழுகு மாத்திரைக்கே
பாவம் பிரமக் கொலைதானும் பாறு மதியந் தொறுபரிதி
மேவச் சலத்து செழுந்திங்கண் மேவு நாளின் விதிப்படியே
யாவன் மலிய வத்தடநீ ராரு முழ்க லறபாமால் ௩௫

வேறு

பெற்றிடு வாத்திறற் பெரிது முண்மகிழ்ந்
துற்றன டிருப்புலி யூரி னோர்புறந்
கொற்றவை யிக்கதை குறித்துக் கேட்டவர்
நற்றலந் தெய்துவர் நயந்த யாவையும் ௩௬

என்பது கேட்டவ னிருந்த சௌனக
னன்பொடு மைந்தெழுந் தமரக் கொள்வதற்
கின்புள திருப்பதி யாவை யென்றனன்
றுன்பகல் பெருந்தவச் சூத னோதுவான் ௩௭

முற்படு பிறப்பெலா முயன்ற புண்ணியத்
தற்பொடு சிவனக ரடைந்தி டப்படும்

சொற்சுவா யம்புவந் துதிக்கு மாரிட
மெற்படு சைத்தமென் றியம்பு நூலெலாம் ௩௮

நலம்படு புண்ணிய நதிம ருங்கினும்
வலம்படு கங்கையின் மருங்குங் காவிரி
நிலம்படு கரையினு நேரு மற்றவை
புலங்கொளச் சிலசில புகலு கின்றனம் ௩௯

கங்கைசூழ் கிடந்திடு காசி மாநக
ரெங்கணும் புகழ்பிர யாகை யேகயை
யங்கரோ பிதிர்க்கெலா மளிகரு முத்தியென்
றிசைகுள நூலெலா மியம்பு கின்றவே ௪௦

திருமலை தன்னொடு தேறு காளத்தி
பொருவரு காஞ்சியாம் புண்ணி யத்தல
மருவுமோத் தூரொடு வருசம பாதியூர்
தருசத்த காளமே கமகண் டத்தலம் ௪௧

மேக்குய ரருணையே விருத்த வத்திரி
தூக்குசீர்க் கோமலை துலங்குசீ முட்டம்
பாக்கியப் பயனெனப் படியி னோங்கிடு
மாக்கவின் மலிபுலி யூர்வ ரைப்பரோ ௪௨

அவ்வழிச் சிவபிரா னடல் செயதிடக்
திவ்விய மலிசிவ கங்கைத் தீர்த்தமு
மெவ்வயில் குமாரதீர்த் தமுமி யைந்திடு
முவ்வழி யனந்ததீர்த் தமுமொ ளிர்ந்திடும் ௪௩

உலகெலாந் தூய்மைசெய் தோமறு தானத்து
விலகலா மனுப்பெறல் வேண்டு நூலெலா
மிலகுமந் தணர்முத லியம்பு மூவரு
நலமலி நந்நகர் நண்ணி வாழுவார் ௪௪

அவ்வழிக் குரவர்வா யருண்மொ ழிப்பெறல்
செவ்விதென் வாக்கியந் திருந்து முண்மையே
நொவ்வரு பொய்மையே னுவலி னென்றலை
யிவ்வழி யிப்பொழு திற்று வீழ்கவே ௪௫

இவ்வண மியம்புதற் கேது வொன்றுள
தவ்வயி னிகழ்ந்ததஃ தறியக் கேட்டிநீ
செவ்விய காட்சியிற் றெளிந்துளே னியான்
றெவ்வடு பெருவலிச் சிங்க வேறனான் ௪௬

கரும்பெழு கழனிசூழ் கவுட மன்னவன்
விரும்புமோர் வாணிகன் வீட்டின் மேவினு
னரும்புசெஞ் சுவைமொழி யறையும் பைங்கிளி
யிரும்பியல் கூட்டிடை யிருப்பக் கண்டனன் ௪௭

அக்கிளி யைந்தெழுத் தறையக் கேட்டன
னிக்கணத் தென்செவிக் கேறு மிம்மனுச்
செக்கரஞ் சடைமுடிச் சிவனமொ ழிந்தது
தக்கதென் றுளங்கொடு தான்ம கிழ்ந்தனன் ௪௮

அத்தலத் தவ்வெழுத் தைந்து மெண்ணினன்
பொத்துதீ வினைத்திறம் போக்கி யுய்ந்தனன்
சித்தமா சொருவினன் செய்த தீவினை
வித்தையி னொழித்தனன் விமல மேவினன் ௪௯

அன்னவ னீற்றினி லமலன் வாழ்ந்திடு
கன்னியங் கையிலையிற் கலந்து வாழ்ந்தன
னின்னதோ பராசர னெனுமு னிக்கும்ப்
பொன்னகர் மாட்சிமை பொருந்தச் செய்ததே ௫0

காளிக் கருள்செய்தபடலம் முற்றிற்று

ஆ செய்யுள் க0எக

பதினொன்றாவது

பதஞ்சலிக்கு வெள்ளியம்பலத்துத் திருநடனங்காட்டியபடலம்.

அருள்வளர் பெரும்புக ழால வாயினான்
றெருள்வள ருயிரெலாஞ் சித்த மாசொரீஇப்
பொருள்வள ரானந்தம் பூப்ப வாடினான்
மருளறு ஞானமுண் மலியுந் தாண்டவம் ௧

பொருபுலிக் கான்முனி யோடும் போற்றினான்
றிருவரு பதஞ்சலி சிவபி ரான்பத
மருமலர் வீழ்ந்தனன் வணங்கி வாழ்த்தினா
னொருவருங் காதலோ டுரைத்து வேண்டுவான் ௨

பங்கயன் சிரங்கொயும் பதுமச் செங்கையாய்
தங்குமா ருயிர்க்கெலாந் தந்தை தாயனா
யெங்கணு முத்தொழி லியற்று மீசனே
சங்கர நின்னடி சரணஞ் சார்ந்துளோன் ௩

அம்பொனம் பலத்திடை யாடுந் தாண்டவ
மும்பருங் காணரு முயற்சி மேயது
நம்பிரான் கண்டரோ நாளு முண்ணுளே
னிம்பர்மற் றஃதில தென்னை செய்குவேன் ௪

என்றிடு பதஞ்சலிக் கீச னாலவா
யொன்றிய சுந்தர னுவந்து கூறுவா
னன்றியாம் வைகிட நயக்கு மாலவாய்
மன்றவே தூயது வைய கத்தரோ ௫

சீர்தரு விசுவமாச் செப்பு மாட்சிமை
சேர்விதா தாவது சென்னி மேற்படச்
சார்தரு துவாதசாந் தத்து மேயது
பார்புக ழாலவாய்ப் பவனம் பார்மிசை ௬

வியந்திடு விசுவமா மேவு நல்லுரு
நயந்தவே தாவெனு நாத னார்க்கரோ
பயந்தவி ரிதயவா காசப் பான்மையே
வயந்தரு சிதம்பர மருவ நிற்பது எ

வெள்ளியங் கிரிமுதல் விளம்பு பஃறல
முள்ளுமா தாரத்தி னுளவ வற்கெனப்
புள்ளிமா னேந்திய புனிதன் பொள்ளெனத்
தெள்ளுமா றெடுத்துரை செய்து நின்றனன் அ

ஆங்கது பதஞ்சலி யமரக் கேட்டனன்
வீங்குமார் வத்தொடு வேண்டிக் கூறுவான்
ருங்குமா தாரமாந் தான மேவியங்
கோங்குறு சிவனக ருரைத்தல் வேண்டினேன் கூ

திருமலி கதம்பகா னனத்துச் சேர்தரு
முருமலி சுந்தரா வுள்ளந் தேறுறக்
கருணையா லெனக்கவை கட்டு ரைத்தியென்
றிருபத மறுவலு மிறைஞ்சி யேத்தினான் க0

அடிதொழு பதஞ்சலிக் கமலன் கூறுவான்
கடிதுநீ வினயது கழறு கின்றனம
படிமிசை யவர்க்கிதம பலவு நல்கிடு
மடிவொரீஇப் பெரியவர் மனத்துக் கொள்வரே கக

வேறு

பங்கயற்குப் பிரமாண்டம் படிவமெனப் பகர்தருவ
ரங்கவன்ற னருங்கடிக்கீ ழமர்தரு மேழ் பாதாளந்
தங்குமதன மேற்புலத்துச் சார்ந்தமரு மேழுலகஞ்
சிங்கலறு நல்லறிஞர் செப்புவா ரிதுதெரிந்தே கஉ

உரியவிரல் புறங்கான்மற் றேறுதுபாட் டொடுகணைக்கால்
தெரிமுழந்தா ளூருநடுச் சேருரு மூலமெனப்

...ரியுமே ழேழ்வகையாம் பாதலங்கள் பயிலுமிடம்
விரியுலக மோரேழு மேவியிடு மிடமுரைக்கின் ௧௩

ஆங்கமரா தாரத்து மமர்பிரம ரந்திரத்து
மோங்குவமற் றவையுவற்று ளுரைப்படுமூ லாதாரம்
பாங்குறுபூ வுலகத்துப் பகருலகெல் லாங்கலப்ப
வீங்கியிடு நம்மிலிங்கம் விழைவொடுபோற் றுவரடியார் ௧௪

ஓதிடுமா தாரத்து ளுரைப்படுபூ முதலாக
மேதகுமே ழுலகுள்ளும் விளங்கிடுநம் மருட்குறியைத
தீதறுதன் னுடலகத்துச் சேர்தருமா தாரத்தும்
போதமலி மெய்யறிஞன் போற்றுவது வழக்காமே ௧௫

திருவாரூர் விரிஞ்சனுடற் சேருமூ லாதாரம்
பெருவாய்மைத் தியாகரெனப் பேசுறுமத் தலம்வதிவே
மருவுசுவா திட்டான மலரோனுக் கானைக்கா
வருசமபு நாதனென வாழ்கின்ற மத்தலத்து ௧௬

மணிபூர மருணகிரி மற்றாங்கு வான்பரவத்
துணியருணை நாதனெனச் சொலநின்ற மனமகிழ்வாற்
பணியடியர் மனநினையப் பரகதியு மனநினைவுந
திணிநிலத்தே சித்திப்பச் செய்திடுமத் திருநகரே ௧௭

இருதயமாம் புண்டரிக மேதுசிதம பரமென்பர்
பொருவரிய விராட்டென்னும் புருடனுளக கமலமதா
மருவுமஃ திரண்டாகும் வளருமகங காரமில
தொருவலரு மகங்கார முளதென்ன வுறும்பகுப்பால் ௧௮

மற்றிதுதான் முன்னுரைப்ப வந்தவகங் காரமில
தெற்றுதிரைக் கடலுலகோ ரிசசிறப்புக் கண்டன்றே
நற்றவர்சேர் சிதமபரமா நாமமெடுத் திசைத்திடுவார்
கற்றைநெடுஞ் சடையோனுங் கடவுளர்கை தொழுநடிக்கும் ௧௯

அத்தகுபூள் ளக்கமலத் தடியாரை யாளிறைவ
னித்தியவா னந்தநட நெடிதியற்று நின்மலன்றன்
சுத்தமலி தனதிச்சை தோற்றுவிக்குந் திருவுருவம்
பத்தியொடு கண்டவர்தாம் பரவைநிலத் திடைப்பிறவார் ௨0

தெள்ளுதிரை நெடுங்கங்கைத் திரைக்கரையி னுறுங்காசி
கள்ளவிழு மலரோன்மெய்க் கவிறுஞ்சை யெனப்படுமா
லள்ளனெடுங் கடற்புவியோ ரமர்விசுவ நாதனெனக்
கொள்ளவவ னுறைகின்றான் குறிப்பார்க்கு வீடளிப்போம்

பொதிவிரியு மலர்க்கமலப் புத்தேடன் னுடம்பகத்து
வதிபிரம ரந்திரத்து மன்னுவது கயிலாயந்
துதிமலிசீ கண்டனெனச் சொலநிற்பே மத்தேத்து
விதியுளியா றாதாரம் விளம்பினு முனக்கிண்டே ௨௨

அவ்வழியா யினுமிதயத் தாயினுநீ யருச்சித்தி
செவ்விமலி யன்பவெனச் சீரால வாய்ப்பகவ
னெவ்வமறு திருநடன மியற்றினன் பதஞ்சலியாம்
பவ்வநெடுங் கடலாடைப் பாருலகந் தொழுமுனிக்கே ௨௩

தேவர்தொழப் பொலிநதோங்குந் திருவெள்ளி யம்பலத்து
மூவர்தொழு முக்கண்ணோன் முழுமணிப்பீ டத்திவர்ந்தாங்
காவலொடு பதஞ்சலியா மருமுனிவ னகமகிழத்
தாவறுபே ரானந்தத் தாண்டவங்காட் டினனசம்பு ௨௪

பதஞ்சலிக்கு வெள்ளியம்பலத்துத் திருநடனங்காட்டியபடலம்
முற்றிற்று.
௫ செய்யுள் ௧0௯௫

பதினைந்தாவது

திருமாலுக்குச் சிற்றம்பலத்துத் திருநடனங் காட்டியபடலம்

அந்தணர் கோசிக னடிவ ணங்கினர்
வந்திடு விண்டுவீ சதநின மாயவன்
முந்தருச் சனைசெயு முறைமை யாவையு
மெந்தைநீ யியம்புகென் றியம்பி வேண்டினார் க

ஆங்கது கேட்டன னறையுங் கௌசிக
னோங்கிடு விசுவமா முருவ மாயவன்
றூங்கிடு மனந்தனுஞ் சயன மேவினன்
வாங்குதெண் டிரைக்கடல் வழிதது யின்றனன் உ

அம்பலக் கூத்தனா ராடுந தாண்மலர்
வம்பவிழ் துழாயவன் மனததுக் கொண்டனன்
வெம்பொறி யடங்குற மேவும் யோகத்துப்
பம்பிய மகிழ்ச்சியான் பயின்று வைகினான் ௩

அன்னவ னிதயமா மம்புசா தந்தான்
மன்னுகீழ் முகமதா மருவு மாயினு
முன்னுநா பியின்மிசை முற்றி நின்றிடு
மின்னதே விண்டுவுக் கிதய மென்பது ௪

மற்றத னுளத்து மருவி டுந்துளை
யுற்றுமேற் புறத்தெழீஇ யோங்கு வன்னியின்
கற்றையம் பிழம்புபல் கவைகொண் டோங்கிடும்
பெற்றிமைத் ததனடுப் பிழம்பின் மேலரோ ௫

எங்குமா யாவையு மியற்று மெம்பிரான்
றங்குறு மதன்மிசைச் சகல வேதமு
மங்கவன் மெய்ப்பொரு ளமருங் கார்நிறப்
பிங்கள வுருவின னென்னப் பேசிடும் ௬

அப்பெரு மூர்த்தியின் றாடுந் தாண்டவத்
தொப்பரு மானந்த வுததி மூழ்கினான்
மைப்புயல் பொருநிற மாயன் மெய்யெலாஞ்
செப்பருங் கம்பிதஞ் சேர நின்றதே எ

மாயவ னடுங்குறு வண்ணங் கண்டனர்
தூயசீர்ப் பதுமையுந் துலங்கு செம்புளும்
பாயலா மனந்தனும் பரிச னத்தரு
நாயனுக் குற்றது நாடி நெஞ்சினார் அ

தம்முளே பற்பல சாற்றி யாய்ந்தனர்
விம்மித மெய்துழி விண்டு யோகநீத்
தம்மணிப் பாயலி னாங்கெழுந்தனன்
செம்மலா நாயகி சேட னாதியோர் ௯

என்கொலோ நிகழ்ந்ததிங் கெமக்குக் கூறுதி
முன்பொரு ஞான்றினு முற்றக் கண்டிலே
மன்புளே மற்றஃ தறிதல் வேண்டினோம்
பொன்பொலி யாடையாய் புகறல் வேட்டனம் ௧0

என்றனர் மாயனை யிரந்து வேண்டினர்
ஆன்றினர் சூழ்ந்தனர் தொழுது நின்றன
ரொன்றுசெந் திருமுக னுற்றவர்க் கெலா
மன்றலந் துழாயவன் மகிழ்ந்து கூறுவான் ௧௧

மோகமுற் றகன்றிட முதிரு மாதவ
யோகநன் முனிவரு முறுவ தன்றரோ
வேகநா யகனரு ளாழி யெம்பிரா
னேகமெய்ப் பூண்டவ னடனக் காட்சியே ௧௨

அத்தகு தாண்டவ மமலன் காட்டினான்
பொத்துமுண் மகிழ்வினாற் பொருந்து மென்னுடல்

மெத்தவு நடுக்கமே மேவ நின்றதா
வித்தரோ துயிலிடை யெய்தும் வண்ணமே ௧௩

எடுத்திடு முடற்பய னெய்தி னேனினி
னடுத்திடு மையமொன் றுளு மின்றென
விடுத்தகோ விந்தனை வினவு கின்றனர்
வடுத்தவிர் திருமுதன் மன்னி னோரெலாம் ௧௪

பொன்னிம யந்தரு பூவை பாகனார்
நன்னய நாடக நாமுங் காண்பதற்
குன்னின மதுபெறு முபாயம் யாதரோ
பன்னுதி யென்றனர் பரவி வேண்டினர் ௧௫

ஆங்கவர் வேண்டலு மச்சு தன்சிவன்
பூங்கழல் சிந்தையிற் பொருந்த வுன்னின
னீங்கிஃ தவன்மகி ழெய்திற் றப்பொழு
தோங்குறு மாலுமங் குரைப்ப தாயினன் ௧௬

வாக்கினு மனத்தினு மருவ ரும்பொரு
ளாக்கிடு முருக்கொடு தோற்ற மாதவர்
பாக்கிய மெனும்பொனம் பலத்து ளாடிடுந்
தேக்குமா னந்தமாந் திருந்து நாடகம் ௧௭

அத்தலை யாமெலா மடைந்த வன்பதஞ்
சித்தமே வுறவிரீஇத் தியானம் செய்குவேம்
பத்தியின் வலைப்படு பகவ னெங்களுக்
கெத்திறத் தாயினு மிரங்கு முண்மையே ௧௮

திருந்துபற் பலபகல் செல்லு மாயினு
மருந்தவத் துண்மகிழ்ந் தமல னாடகம்
பொருந்துறக் காட்டிடும் போது மென்றவ
ணிருந்தவர் யாவரு மெழுந்து நின்றனர் ௧௯

ஆங்குறு திருமக ளாதி யோரொடுந்
தேங்கமழ் துழாயவன் றில்லை யெய்தினா
னோங்குசிற் றம்பலத் துற்ற மூர்த்திதன்
பூங்கழல் சிந்தையிற் பொருந்தக் கொண்டனன் ௨0

பற்பகல் யோகத்துப் பயின்று வைகின
னற்புத மூர்த்தியு மவன்முன் றோன்றினா
னெற்பெற விருந்தவ மியற்றி நின்றனை
வெற்புறழ் தோளினாய் விளம்பு கென்றனன் ௨௧

அருந்தவ யோகரு மடைவு றாலந்
திருந்துமுன் றண்டவா தெரிசித் துய்யுமா
றிருந்தனன் பலபக லித்த லத்திடைப்
பெருந்தகை யானது பெறுதல் வேண்டினேன் ௨௨

என்றலும் பிறைமுடி யிறைவன் கூறுவா
னன்றது பெறுவது நயந்து ளாயெனிற
றுன்றுசீர்க் காஞ்சியுட் டுனையச் சென்றவ
னொன்றுற நங்குறி யுறவி றுத்துதி ௨௩

அன்பொடு மக்குறி யதனைப் போற்றுதி
யின்பமேம் படமகிழ்ந் தியற்று தாண்டவம்
பின்புநாங் காட்டுதும் பின்னை கேள்வனே
துன்பிலா மகன்றிடத் துனைந்து செல்லுதி ௨௪

என்றனன் கரந்தன னிறைவன் சென்றனன்
மன்றலந் துழாயவன் வழிப்பட் டேகினா
னொன்றுசீர்க் காஞ்சியி னொருக ணத்துறு
துன்றுமே காம்பரச் சூழற் றென்புறம் ௨௫

தன்பெயர்ச் சிவக்குறி தாபித் தவ்வழி
யன்புட னேத்தின னருளின் மீண்டனன்

பொன்பொலி சிதம்பரம் புக்கு வேண்டின
னின்பநா டகஞ்சிவ னினிது காட்டினன் ௨௬

மற்றவன் றன்பரி வார மாய்வரு
பெற்றியோர் தமக்குமெம் பிரானி யற்றிடு
மற்றமி ழுண்டவ மமரக் காட்டினன்
பெற்றன ரவனடி பேணி யுய்ந்தனர் ௨௭

ஆடிய கூத்தர்செய் யருளி ஞானயா
னீடிய வானந்த நிருத்தஞ் செய்வுழிப்
பாடியல் படிகமாம் பறைமு ழக்கின
னாடிய பெரும்புகழ் நயக்கு மாதவன் ௨௮

இன்னது விண்டுவீ சத்தி னேற்றமென்
றுன்னியிவ் வுலகெலா முவக்க நின்றது
மன்னுமா வடிநிழன் மருவு மோர்புறம்
பொன்னக ராங்கவன் புதிதிற் செய்தனன் ௨௯

அவ்விலிங் கத்துறை யமலன் றண்மலர்
தவ்வரு மருச்சனை தவாது செய்தனர்
செவ்வுருக் கலுழனே சேடன் செந்திரு
வெவ்வரு நாடக மினிது நோக்கினர் ௩0

மற்றவர் தம்மொடு மகிழ்ச்சி மேம்பட
வுற்றனன் சிதம்பரத் துறையும் வாழ்க்கையும்
பெற்றனன் பிறைமுடிப் பிரான ருட்டிற
மிற்றென வுரைதரு மெல்லைத் தாகுமோ ௩௧

திருமாலுக்குச் சிற்றம்பலத்துத் திருநடனங் காட்டியபடலம்
முற்றிற்று

ஆ செய்யுள் ௧௧௨௬

பதினாறாவது
சிற்றம்பலத்துப் பெருமை உரைத்தபடலம்

அவைகெழு புலவ ருள்ள மறிந்தறிந் துவகை யாரச்
சுவைகெழு தமிழின் பவ்வஞ் சொரிமுகி லனைய தூயோய்
நவைகெழு பிறவி போக்கு ஞானவா னந்தக் கூத்தர்
சவைகெழு பெருமை யீண்டுச் சாற்றுதி தமியேற் கென்று ௧

மற்படு குன்றத் திண்டோள் வசுவகத் தியனை வேண்ட
வெற்படு குறியோன் கூறும் வேதமுற் றறிந்த தூயோன்
சொற்படு முலக முத்தா லகனெனச் சொல்லு நாம
மிற்படு குழவி யின்றி யிடருழந் திளைய செய்வான் ௨

மறைமுடி வறியா முக்கண் வள்ளலார் கமலப் பொற்றா
ளிறைமலர் கொடுபூ சித்து நிட்டையி னெடுநா ணின்றான்
குறைவறு மமலன் மேனி குறித்துநோக் குவதே யன்றி
யிறையினும் பிறிது நோக்கா னெத்திசை யகத்து மாதோ ௩

கேட்பது மமலன் சீர்த்தி கிளப்பது மவன்சீ ராகத்
தாட்பது மத்து வைத்துத் தளர்வறு சிந்தை யோனாய்
நாட்பல கழிய நின்ற நயங்கண்டு ஞான மூர்த்தி
யாட்படு மவர்க்கெட் டாண்டே யாயுள்பெற் றுடைய னாகி ௪

அறநெறி வழுவா தோனா யகிலமு முணர்ந்தோ னாகுந்
திறமுறு தனையற் றந்தான செங்கண்மால் காணாச் செல்வன்
புறமுறு முலக நாமம் போற்றிடு சுவேத கேது
வுறவுகூ ரைந்தா மாண்டி னுபநய னமுமாங் குற்றான் ௫

முந்தையாம் பிறவி தோறு முயன்றிடு தவத்தி னாலு
மெந்தையா ரருளி னாலும் யாவையு மெளிதிற் கற்று
வந்தமுற் றறிவ னாகி வைகினன் சுவேத கேது
நந்தியெம் பெருமா னென்ன ஞாலத்தோர் நயக்கு மாறே ௬

மறையொரு நான்கு மாங்கே வகுத்திடு மங்க மாறு
முறைபொரு ளனைத்துந் தேர்ந்தா னுறும்வே தாந்த நூலின்
முறைபடிந் துணர்ந்தா னங்குச் சொற்றிடுந் தகர வித்தை
முறையுற வறிதல் வேட்டான் முன்வினைத் தொடர்பு மூள ௭

யாதையா தகர வித்தை யென்னநீ யியம்பிற் றென்று
தாதையை வணங்கிக் கேட்டான் சாற்றுமுத் தால கன்றான்
றீதுமுற் றகல நீக்கிச் சிவகதி யளிக்கு மஃது
பேதையோ ரறிய மாட்டாப் பெற்றிய தாகு மைந்த ௮

ஆங்கம ரிதய மென்னு மாகாய மதுவே யாகு
மோங்கிய தகர மென்னு முரைபெய ருரைத்துக் கொள்வார்
ஈங்கது மஃதி ரண்டி னிறப்படு மொன்று செப்பிற்
பாங்குறப் புகலு மாதி பவுதிக மென்ப மன்றே ௯

நேர்தரு விராட்டி னுள்ளச் செங்கம லப்போ தாகும்
பார்தரு புலியூ ரென்னப் பன்மறை புணர்ந்தோர் சொல்வர்
கார்தரு மணிமி டற்றுக் கடவுளக் கனக மன்றுட்
சீர்தரு பேரா னந்தத் திருநடஞ் செய்யா நிற்கும் ௰

படிபுனர் பிறவி தோறும் பயின்றிடு கொடிய பாவ
நொடியினிற் புவிமேல் யார்க்கு நூறிடுந் தூய தீர்த்தம்
வடிபுனற் சிவகங் கைப்பேர் வாவியு மருவா நிற்குங்
கடிகெழு புலியூர்ச் செல்வக் காமரு நகரது மாதோ ௧௧

கொம்பன சிறுமருங்குற் குயில்பொரு குதலைச் செவ்வா
யம்பிகை யறம்வ ளர்த்தா ளடிதொழு மன்பர் செய்யும்
வெம்பவம் வீட்டி ஞான வீடுதந் தருளு மாற்று
லும்பர்சூ ழநக ரக்க ணொருமருங் குறையு மன்றே ௧௨

ஆனந்த கூப மென்னு மரும்பெயர்ப் புனலுட் கொண்ட
வானந்த ரங்க கர்க்க ணெம்பிரான் பதுமப் பொற்றண்

மோனஞ்சேர் ஞானா னந்த மூழ்குறக் கண்டோர் முன்னி
வானந்தாழ் தருமெய் வீட்டின் வதிவது சாத மன்றே ௧௩

கண்டமாத் திரைக்கே முத்தி கலப்புறத் தருவ தாகு
மண்டர்கோ னுங்கி யற்று மானந்த நடன மாங்குத்
தொண்டருக் கன்பு நல்குந் தூயபே ரறிவே யாகி
மண்டுசிற் சபையெஞ் ஞான்றும் வானவர் பரவ மன்னும் ௧௪

அத்திருச் சபைகண் டாருக் ககம்விழை பொருள்க ளோடு
முத்தியு மெளிது வாய்கரு முன்னியாங் கொருநாள் வைகின்
மெத்துமா யிரமாங் கோடி வேள்விசெய் பயனுண் டாகு
மித்திறத் தஃதா மாதி பவுதிக மியம்பின் மைகத ௧௫

ஆதியாத் துமிக மாவ ததனினு முயர்ந்த தாகுந்
தீதறு தன்ச ரீரஞ் செறிமணக் கமல மாகு
மோதிடு மிரண்டி டத்து முமையொரு பாகங் கொண்டோன்
கோதிறுண் டவமி யற்றுங் குறிப்பவர்க் கருளு மாற்றால் ௧௬

ஆதலி னதுகண் டோருக் கரும்பெரு முத்தி மேவு
மீதடை தரும்பொ ருட்டா லீண்டுமவ் வடிவ மாசு
மேதகப் பாவித் தேத்தல் வேண்டுமவ் விமல மூர்த்தி
போதுபௌ திகத்து நின்றுங் குற்றவான் மிகத்து மூள்க ௧௭

பாவனைப் பரிபா கத்தாற் பரமனு ராடல் காண்பார்
யாவரு மஃது மென்று மிருதிற முடைய தாகு
மேவரும் வாச கத்தின் விளங்குவ தொன்றெஞ் ஞான்று
மோவரு மனத்தின் மேவி யுறுவதொன் றாகுங் கண்டாய் ௧௮

சொல்லுரு வாகு முன்னர்ச் சொற்றவர் சகம்பொ ருட்டாற்
புல்லுரு வாகு மேனைப் புகன்றமா னதந்தா னஃது
மெல்லையில் சகள மாதி யியம்பிடு வேறு பாட்டா
னல்லவ ரிருதி றத்து நவிற்றுவர் வேறு பாடே ௧௯

வருமெழுத் துருவ மாக வகுப்பரச் சகள மாட்சி
மருவுமற் றிரயதா னந்த வானுரு மருவா நிற்கும்
பொருவுமொன் றிரண்டு மூன்றாப் புகன்றிடும் வேறு பாட்டாற்
றிருவெழுத் துருவும் பற்றல் திறமுடைத் தெனப மன்றோ ௨௦

நாதமா தியவாம் பேத நயம்படு திறத்தா னாதி
மேதகப் பலவா மற்றும் விளம்பிய விரண்டு தானே
நீதறு பரமா னந்தத் திருநட வியல்பிற் றாகு
மோதிய மூன்று சுத்த மோம்புகே வலமா மற்றும் ௨௧

அறிவுரு வாமற் றஃதே யகண்டமா யெங்கு மாகுஞ்
செறியுமத் துவித மாகத திருநதிய வடிவிற் றாமாற
குறிகொளு மிரண்டி டத்துங் கூடுதாண் டவங்காண் பார்க்குப்
பிறிவரு முள்ளக் காதல பெருகுமை யாகக கொண்டு ௨௨

சித்தமாஞ் சுவர்ப்பு றத்துச் சிந்தனை யெழுது கோலா
வைத்திடு மன்பு தோன்ற மருவுமை வகைநி றத்தா
னித்தன துருவங் கீறி நீடுபா வனையி யற்றன்
மெத்துபா வனைதான் முற்றின் விழைதரு நடனங் காண்பான்

ஆதலின் யாவ ரானு மத்தியான் மிகமென் றோது
மேதகு தகரந் தானே விழைந்துசெய் தகக தாகு
மோதுறு சித்திப் பேறாங் குறுவதற் பொருட்டா மென்று
வேதநூன் முடிபு ணர்ந்தோர் வெளிப்பட விளம்பா நிற்பர் ௨௪

நன்றுணர் ஞானக் கேள்வி நயக்குமுத் தால கன்றா
னென்றெடுத் துரைக்கு மாற்ற மியாவையுஞ் சுவேத கேது
வொன்றிய வுளத்திற் கேட்டவ் வுறுவனை யுவந்து போற்றி
மன்றவிவ் வுலக வாழ்க்கை மருவிய பற்றொ ழித்தான் ௨௫

அடியினிற் கட்டும் வாழ்நா ளந்தமா மாற றிந்து
படியினிற் றீர்த்தந் தோறும் படிந்திடு பயனைத் தோனாய்

மடிவறு தசர மாய வழிபாடு மனத்துட் கொண்டு
கடிமதிற் றனது தொல்லூர் கடந்துசெள ராட்டி ரம்போய் ௨௬

அத்திரு நாட்டின் மேவு மலைபுனற் றீர்த்தந் தோறுஞ்
சித்தமா சொருவ மூழ்கிச் செல்கின்றோன் சைய மென்னு
மத்திரி யடைந்தா னாங்க ணலையெறிந் தோங்கும் பொன்னிப்
பைத்தநீர் படிந்தி ரண்டு பாற்படு நகரும் போற்றி ௨௭

சென்றுளோன் புண்ட ரீகத் திருநகா சேர வந்தான்
ஞான்றிய சிவகங் கைப்பேர்த் துணிபுனற் றடம்ப டிந்தான்
நன்றுறத் தேவர் யார்க்கு நயத்த ருப்பண நவிற்றி
மன்றுளார் நீற்றோ டக்க மாலைமெய் வயங்கப் பூண்டு ௨௮

மாசுமுற் றகலா தூய்மை மருவிடு மனத்தோ னாகி
நேசமுட் கிளா நெஞ்சி னிலைப்படு மூலட் டானத்
தீசனை வலங்கொண் டேத்தி யெழுத்தைந்து நூற்றெட் டோதி
யாசைமன் றத்து ளாடு மண்ணலை யடுத்தி றைஞ்சி ௨௯

ஆங்கொரு சிறிது வைகி யளியனேன் கூற்றன் றூதர்
நீங்கவுன் றுய்தி கூடுந் திறனுள தாமோ வென்று
தாங்குறு மோகத் துன்பச் சலதியுட் படுநெஞ் சத்த
னீங்கிவை தனது நெஞ்சி னெண்ணிய தொடங்கி னானே ௩0

தன்னுடல் வீழுங் காலந் தானுணர்ந் தறிந்த வேந்தன்
மன்னிய சுவேத னென்ன வழங்கிடு நாமம் பூண்டோன்
முன்னொரு காலத் தெய்தி முற்றுகூற் றுவனை வென்று
னின்னதோ முனிவர் தேவர் யாருமங் கவனை வென்றார் ௩௧

அஞ்சறே னினியான் கூற்றுக் கணிகெழு வெண்கா டெய்தி
நெஞ்சினி னினைந்த வெல்லா நேர்படப் பெறுவ னென்னுச்
செஞ்செவே யெழுந்து போந்து திருவெண்காட் டகம்பு குந்தா
னஞ்சணி கண்டர் செய்யு நல்லருட் கிலக்க மானோன் ௩௨

அருமறை விதிவ ழாமை யாங்குறு தீர்த்தந் தோறுந்
திருமலி சுவேத கேது சித்தமா சொருவ மூழ்கிப்
பொருவிலி யிலிங்க பூசை பொற்புற முடித்துப் போற்றி
வருமுறை வலங்கொண் டேத்தி வள்ளலை மகிழச் செய்தான்

வினையறு தகர வித்தை மென்மெலப் பழகா நிற்கு
நினைவின னின்ன வாறு நிந்தலு மியற்றா நின்று
னினையநா ளெட்டெண் றேது மாண்டுவந் துற்ற காலைச்
சினவிடைப் பாக னாரைச் சிறப்பொடும் பூசை செய்தான் ௩௪

கூற்றுவற் கஞ்சி யஞ்சிக் குலைந்திடு நெஞ்ச கத்தா
னீற்றணி யழகர் பொற்றா ணெஞ்சினு நினைவ றாதா
னாற்றல்கூர் தவமு யன்றாங் கமர்ந்தன னனைய காலைச்
சீற்றமார் கொடுங்கூற் றெய்திச் சினவலிப் பாசம் வீசி ௩௫

அருந்தவச் சுவேத கேது வருங்கழுத் திடைப்பி ணித்துப்
பொருந்துபஃ றுன்பஞ் செய்யப் பூரணா னதுபொ றாதே
வருந்துறேன் மைந்த வென்னா வந்தவன் றனைக்க டிந்து
திருந்துபே ரருள்சு ரப்பச் சிறுவனு மகிழ்ச்சி கூர்ந்தான் ௩௬

அவ்வனத் தடைந்த வாறு மருந்தவ முயன்ற வாறும்
வெவ்வினைக் கூற்றஞ் செய்யும் வேதனை யகன்ற வாறுஞ்
செவ்வனஞ் சுவேத கேது சிந்தித்து மகிழுங் காலை
யிவ்வுரை வான வாணி யினிதெடுத் தியம்பு மன்றே ௩௭

மைந்தவென் மாற்றங் கேட்டி வானவர் யார்க்கு முன்னா
மெந்தைவீற் றிருப்ப தன்றே யித்தல மிறையோ னுக்கு
நந்தலை கடன்ஞா லத்து நற்றலம் பலவு முள்ள
வந்தவான் றலத்துண் மண்ணோ ரடைந்துகண் டேத்து வாரேல்

அருங்கதி யெளிது நல்கு மாக்கநன் குடைய தாகு
நெருங்குசீர்ப் புலியூர் யாரு நேர்ந்திறந் திடின்மெய் வீடு

தருங்குண முடைய தாகுஞ் சங்கரன் மகிழுங் காசி
தருங்கதி பிறந்து ளோர்க்குத தடம்பணை சூழு மாரூர் ௩௯

நினைத்துழி முத்தி நல்கு நின்மல னருணைக் குன்றங்
கனைத்துவண் டிமிருஞ் சோலைக் காளத்தி கதிய ளிக்கு
மனத்திடை விடைய மாயின் வருத்திடுங் காசி யாதி
யனைத்தினுஞ் சிறந்த தாகு மகனபதி யீது காணாய் ௪௰

எம்பிரா னென்ப தாட லியற்றுமங் கணம தாகு
நம்புவெண் காடு முன்னர் நவிற்றலா னந்தக் கூத்து
வெம்பிய காளிக் கூத்து விளம்பிரண் டாவ தாகு
மும்பர்தாள் கவுரிக் கூத்தங் கோதுமூன் றாவ தாகும் ௪௧

மாமுனிக் கூத்து நான்கா மரபது சந்திக் கூத்துத்
தோமறு மைந்தாங் கூத்துத் தொலைந்தநங் காரக் கூத்தே
யாமுறை யாறு திற்கு மமர்திரி புரத்துக கூத்து
நாமறு மேழா மென்ன நவிற்றிடு முறைமைத தாகும் ௪௨

எட்டது புயங்கக் கூத்தே யியம்பிச் சாட னந்தா
னெட்டிடு மொன்ப தாமென றூறுவ ருணர்ந்தா ரெல்லா
மட்டறு மெல்லைத தென்ன வதுபபாமற் றவற்றின் பேத
மிட்டமா மிவையொன் பானு மெவற்றிற்கும பொதுவா மென்ப

ஆலங்காட் டொடுகை லாய மமர்தரு திருவெண் காடு
கோலமார் புலியூர் கூடல் குடந்தையே தேவதாரு
மேலவாம் வனமே மற்றும் விளம்புமப் புரத்தோர் காப்பு
ஞாலமெய் யாசா டப்பேர் நவிற்றிடுத தவத்தோர் பள்ளி ௪௪

என்பன முதல வாக வியம்பிடு நகரம் பல்ல
பொன்பொலி சடையோன் கூத்துப் பொலிதிரு நகர மாமா
லன்பொடு கவுரிக் கூத்தய காடுவன் திருவெண் காட்டின்
மன்பதை யுலக முய்ய வைத்திடுங் கருணை யாலே ௪௫

அன்பர்தம் விருப்பிற் கேற்ப வமலனு நடனஞ் செய்யு
முன்புறு கற்பந் தோறு முக்கணன் முயன்று செய்தா
னின்பமா ரானந் தக்கூத் தினிதென்பர் சிலர்தா மென்றும்
வன்புறு கவுரிக் கூத்து மகிழுவர் மற்றை யோரே ௨௬

ஆற்றுபிச் சாட னந்தா ணழகிதென் றுவப்பர் சில்லோ
ரேற்றது புயங்க மென்றே யிச்சிப்பர் சில்லோ ரென்று
மாற்றருந் திரிபு ரந்தான் வாய்ப்பதென் றுரைப்பார் சில்லோர்
போற்றிடு மன்ப ரிவ்வா றெனவும் புகன்று கொள்வார் ௨௭

அன்னவ ரன்பிற் கேற்ப வண்ணலுந் திருவெண் காட்டு
ளன்னயக் கூத்தொன் பானு நவிற்றுவ னன்ன வாறே
யின்னவுங் கருணை யாள னிறையவன் வானோர் போற்று
முன்னவன் கருணை யாலே மூர்த்தியா யாங்கு வைகும் ௨௮

பொருவரும் புண்ட ரீக புரத்திடை முக்கண் மூர்த்தி
மருவுமுக் குணநி றைந்த வடிவுகொண் டாடல் செய்யு
மொருமுறை யதுகண் டோர்தா முள்ளுவ யாவு முற்றுப்
பெருமைகூர் தருமவ் வீடும் பெற்றுய்வர் பிறப்பு நீங்கி ௨௯

அண்டகோ ளத்தி னேனு மத்திரு நகருக் கொப்பா
யுண்டுகொல் பிறதா னங்க ளும்பரு முனிவர் தாமுந்
தொண்டுறு கணமு மேனைத் தூமறை யோரும் யாருங்
கொண்டவான் குணத்த ளாகக் குறித்துமுன் போற்றி செய்தார்

தத்துவ குணமே பற்றித் தரணிகாப் பதன்பொ ருட்டு
நித்தியன் றிருவெண் காட்டு னிருத்தமங் கியற்று நின்றான்
வைத்திடு குணமா மேனி மருவிடுந் திருவெண் காடு
சுத்தமாங் குணமி றந்த தொல்லுரு மருவுந் தில்லை ௩௧

காப்பது மருட்சி றப்புங் கருதிடு குணத்தி னுண்டா
நீப்பறத் தருமெய் வீடு நிலைக்குண மில்ல தற்காங்

தூப்பொலி தில்லை யோடு சொலப்படு திருவெண் காட்டுக்
யாப்புறு வேறு பாடிங் கில்லையிங் கிணைய வாற்றால் ருஉ

ஈங்குநீ பலநாள் வைகி யாவையும் பெற்று வாழ்தி
யோங்கிய தகர வித்தை யுறப்பயின் றிறைவன செய்யுந்
தீங்கரு நடனங் காண்டி யெனுமுரை செவியிற் கேட்டான்
றூங்குசீர்ச் சுவேத கேது தங்கின னத்தா னத்து ருஙு

மறைபயில் சுவேத கேது வாணிசொ லுவந்து கேட்டு
முறைபுரித் தகர வித்தை முயன்றனன் பயின்று வைகிப்
பிறையணி மௌலிக் கூத்தன் பேரருண் டனங் கண்டாங்
கிறையவன் றிருத்தாள் சேர்ந்தா னென்றனன் கும்ப யோனி

சிற்றம்பலத்துப் பெருமை உரைத்தபடலம் முற்றிற்று
ஆக செய்யுள் ககஅ0

பதினோழாவது
திருவாதிரை விரதப்படலம்

மாதவ நெறிமுறை வாழாத வாழ்க்கையீர்
தீதகன் மங்கலஞ் சேர நல்கிடு
மாதிரை விரதநன் கறைதுங் கேண்மெனச்
சூதனங் கோதிய தொடங்கி னனரோ க

செஞ்சுடர்க் கதிரவன் சிலையிற் சென்றுறீஇத்
துஞ்சிடு மதியினிற் றுவன்று மாதிரை
யஞ்சுடர்த் திங்களோ டமரு மப்பக
னெஞ்சுணர்ந் தெழீஇத்துயி னீத்துத் தூய்மையாய். உ

அலங்குபொன் னம்பலத் தாடு நாயகன்
கலங்கெழு திருவுரு நயக்கு நெஞ்சிடை

மலங்கெட விருந்துபு வழுத்தித் தன்மனைப்
புலங்கழிந் தேகுபு புறத்துச் சென்றரோ ௩

சுத்தநீர் தோய்ந்துடற் றூய்மை யெய்துபு
நித்தமுள் செய்திடு நியமஞ் செய்தபி
னத்தனு றுறைந்திடு மால யத்திடைப்
பத்தியின் வழாதுபோய்ப் பணிந்து போற்றியே ௪

விதியுளி மஞ்சனம் விமலற் காட்டியங்
குதவுபு பலவகை யோத னத்திற
மெதிரற நெய்யினா லேற்றிப் பற்பல
முதிர்சுடர்த தீபங்கண் முயங்கு மன்பினால் ௫

நன்றரு நாடக நாதன் செய்திடு
மன்றகத் தெய்தியவ் வள்ள லானந்த
மொன்றிடு தொல்லுரு வுவப்பிற் போற்றிப்பின்
றன்றனி மனையகஞ் சார்ந்து வைகியே ௬

அற்றைநா ளுபவசித் தறிஞ னாகியோன்
மற்றைநா ளிருள்புலர் வைக றைப்பொழு
துற்றதன் றுயிலுணர்ந் தொருவித் தூயனைப்
பற்றலர் புரஞ்சுடு பகவற் சிந்தியா ௭

நித்தியக் கடனெலா நிரப்பி முக்கணான்
பத்தருக் கறுசுவை பலவு மூட்டிப்பி
னத்தனா ரனைய யாலடிசி லுண்டிடல்
வைத்திடு நான்முறை வகுத்த தாமரோ ௮

மேம்படு மாதிரை விரத மிவ்வகை
யோம்பினோர் முத்தியு முயரும் புத்தியுந்
தாம்பெறு வாரிது சரத மாகுமா
லாம்புலப் பகைகடிந் தமரும் வாழ்க்கையீர் ௯

முஞ்சகே சப்பெயர் முனிவன் பண்டைநாண்
மிஞ்சுமிவ் வாதிரை விரத நோற்றன
னஞ்சணி கண்டனார் நடனங் கண்டன
னுய்ஞ்சனன் முத்தனா யுவகை கூடினான் க0

பண்ணவர் புகழ்தரு பதஞ்ச லிப்பெய
ரண்ணல்கார்க் கோடனா யமரும் பாப்பர
செண்ணுமிவ் விரதநோற் றிறைவ னாடகங்
கண்ணினிற் கண்டனர் காலற் செற்றனர் கக

பிறப்பிறப் பெய்திடாப் பேறு பெற்றனர்
கறுத்தெழு கொடுவரிக் கால னாமுனி
யறத்திறத் திந்தநோன் பாற்று மாண்பினாற்
சிறப்புறு புத்திரச் செல்வம் பெற்றனன் கஉ

மறப்பகை கடியுப மன்னி யுப்பெயர்
பெறப்பொலி புதல்வனைப் பெற்ற தொன்றுகொல்
சிறப்புறு மீசனார் செய்யு நாடக
முறப்பெறீஇப் பிறப்பிலா வுறுதி பெற்றனன் கங

இரும்புலங் கொன்றவ ரெழுவர் மாதவர்
பெரும்புலி யூரமர் பிரானை யேத்தினர்
விரும்புகோள் களுக்கெலா மேற்ப தத்திடை
யரும்பொளி யொடுமம ராக்கம் பெற்றனர் கச

எற்றினில் வீடுமங் கெய்த நின்றனர்
சாற்றுமிந் நோன்பது தவாது நோற்றரோ
வாற்றல்கூர் விபுலனென் றறையு மாதணன்
வீற்றுறு விண்ணவர் விமான மேறியே கரு

சிறுபிறை முடித்தவர் திருக்கை லாயமேன்
மறுவறு வளமெலா மாயிற் றுய்த்தன

னிறுதியிற் றன்மனை யெய்தி னானரோ
பெறலருங் காதலி யோடும் பெட்பினால் கசு

பின்னரும் விமானமேற் பெயர்ந்து கைலையில்
மன்னினன் றெய்வமா மாதவத் தர்தாந்
தன்னிரு மருங்கினுந் தாழ்ந்து வாழ்த்துற
நன்னகர் வளமெலா நயந்து துய்த்தனன் கஎ

பற்பக லித்திறம் பயின்று துய்த்தபின்
வெற்புறழ் குவிமுலை மெல்லி யர்க்கிடம்
பொற்புறக் கொடுத்தவர் பூங்க ழற்றுணை
யற்பினிற் புலவின னந்த ணானனே கஅ

வரம்பறு கருமியான் வாய்ப்பச் செய்துள
நிரம்புமச் செயற்பல நிகழ்த்தி யாவையோ
திரம்பெறு மெய்ப்பயன் சேரச் செய்தன
னரம்பினை னென்னமா லயர்ச்சி யெய்தினான் ககூ

அத்திறக் குற்றமுற் றகற்று மண்ணுளான்
பொத்திய பேரொளி பொன்னவின மன்றிடைப்
பத்தருக் கருள்செயும் பரம னாமெனச்
சித்தமேன் மயலறத் தெளிந்து கொண்டனன் உ0

வான்றொடு மிமயநேர் மன்று ளாடிய
தோன்றலைச் சென்றடி தொழுது பூசித்து
மான்றவல் வினைத்திற மாசு நீக்கினான்
றேன்றவழ் துழாய்முடித் திகிரிச் செங்கண்மால் உக

ஓங்குசீர் மலிபுலி யூரி லீசனைப்
பூங்கண யிரமுடைப் புரந்த ரன்றொழு
தாங்கனங் கணங்களுக் கதிப னாயினான்
வாங்குநீர்க் கடலுடை வைய மேதகவே உஉ

பொருபுலிக் காண்முனி புதல்வற் பெற்றனன்
றிருநட னோககினன் றிகழு நித்திய
வுருவமு முற்றன னும்பர் கோனருட்
பெருமையிற் றென்றெவர் பேச வல்லரே உ௩

இத்திரு விரதநோற் றெண்ணி லாதவர்
தத்தம நினைவெலாஞ் சாரப் பெற்றபின்
முத்தியும் பெற்றனர் முக்க ணாயக
னத்தனெங் கோனசெயு மருளின் பேற்றினால் உ௪

ஆருயிர்ப பொருட்டினு லமல னாருட்
சீருறு நாடகஞ் செயுஞசி றப்பினு
லோருமிந் நோன்பிவ ணுயர்ந்த தாழரோ
சாருறு மனமய றவிர்தத கொள்ளுகயீர் உ௫

திருவாதிரை விரதப்படலம் முற்றிற்று.

புலியூர்ப்புராணம் முற்றுப்பெற்றது.

ஆ செய்யுள் கஉ0௫

திருச்சிற்றம்பலம்

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1